ஓ

சிவமயம்.

சைவசமயாசாரியர்களில் முதல்வராகிய

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்

திருமுறைமூன்றும்.

விநாயகர் - காஞ்சிபுரம்

சபாபதிமுதலியாரவர்களால

ஆராய்ந்தெடுத்து பிரதிசெய்யப்பட்டது;

மு-ரா-ஸ்ரீ திருமழிசை-சந்தசாமிமுதலியார் குமாரரும்,

சொ.விஸ்வநாதமுதலியாரவர்களால் பரிசோதிக்கப்பட்டும்,

சென்னை

வீரசைவசமயாபிவிர்த்திசபாப்பிரசங்கியாதுமாகிய

வடிவேலுமுதலியாரவர்களால

பார்வையிடுவிக்கப்பட்டு,

பால்குரிகி.

குமாரையரவர்கள்

பௌத்திரர்

சிவலிங்கையரவர்களது

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஜயஞ ஆனிமீ



சம்பந்தர்.



உ

சிவமயம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்.

V. B. SUBRAHMANIYASARMA
தமிழ்ப்பண்டிதர்
TAMIL-PANDIT.

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிப்பூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (க)

மூற்றலாமையினாகமோடேன முளைக்கொம்பவையூண்டு
வற்றலோடுகலனுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (உ)

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (ங)

விண்மகிழ்ந்தம்மதிளெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவலைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (ச)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூருமிவனென்ன
வருமையாகவுரைசெய்யவம்மந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (ஞ)

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்.

கறைகலந்தகடியார்பொழில்நீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (சு)

சடைமுயங்குபுனலன்னனலன்ளெரிவீசிச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமரவோடுழிதக்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழிசூழ்குளிர்கானல்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (எ)

வியரிலங்குவனையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (அ)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியங்கிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்ம்மகளிர்ம்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (கூ)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறுநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வரிபோர்த்ததோர்மாயமிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (கo)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் - சோழநாட்டிலுள்ளது.
ஸ்வாமிபெயர் - பிரமபுரீசர், தேவியார் - திருநிலைநாயகி.
திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

திருப்புகலூர் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குறிகலந்தவிசைபாடலினனைசையாலிவ்வுலகெல்லா
நெறிகலந்தொருசீர்மையனையெருதேறும்பலிபேணி
முறிகலந்தொருதோலனைமேனுடையானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில்சூழ்ந்தயலேபுயலாரும்புகலூரே. (க)

சாதிலங்குகுழையன்னிழைசேர்திருமார்பன்னெருபாகம்
மாதிலங்குதிருமேனியினன்கருமானின்னுரியாடை
மீதிலங்கவணிந்தானிமையோர்தொழமேவும்மிடஞ்சோலைப்
போதிலங்குகண்ணியால்வரிவண்டிசைபாடும்புகலூரே. (உ)

பண்ணிலாவுமறைபாடினிணைசேரும்வீணையங்கைப்
பெண்ணிலாவவுடையான்பெரியார்கழலென்றுந்தொழுதேத்த
வுண்ணிலாவியவர்சிந்தையுணீங்காவொருவற்கிடமென்பர்
மண்ணிலாவும்மடியார்குடிமைத்தொழில்மல்கும்புகலூரே. (கூ)

நீரின்மல்குசடையன்விடையன்னடையார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலையேசிலையாகமுனிந்தன்றுலகுய்யக்
காரின்மல்குகடனஞ்சமதுண்டகடவுள்ளிடமென்ப
ரூரின்மல்கிவளர்செம்மையினுயர்வெய்தும்புகலூரே. (சு)

செய்யமேனிவெளியபொடிப்பூசுவர்சேரும்மடியார்மேற்
பையநின்றவினையாற்றுவர்போற்றிசைத்தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெருமானுறையும்மிடமென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத்தார்பிரியாதுபொருந்தும்புகலூரே. (டு)

கழலினேசைசிலம்பின்னெலியோசைகலிக்கப்பயில்கானிற்
குழலினேசைகுறட்பாரிடம்போற்றக்குனித்தாரிடமென்பர்
விழவினேசையடியார்மிடைவுற்றுவிரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினேசைமுந்நீரயர்வெய்தமுழங்கும்புகலூரே. (சு)

வெள்ளமார்ந்துமிளிர்செஞ்சடைதன்மேல்விளங்கும்மதிசூடி
யுள்ளமார்ந்தவடியார்தொழுதேத்தவுகக்கும்மருள்தந்தெங்
கள்ளமார்ந்துகழியப்பழிதீர்த்தகடவுட்கிடமென்பர்
புள்ளையார்ந்தவயலின்வினாவால்வளமல்கும்புகலூரே. (எ)

தென்னிலங்கையரையன்வரைபற்றியெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிரலாலெனரிவித்திசைகேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடையான்மடமாதொடுமேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணிமாளிகைமேன்மதிதோயும்புகலூரே. (அ)

காகம்வைத்தமுடியானடிகைதொழுதேத்தும்மடியார்க
ளாகம்வைத்தபெருமான்பிரமன்னெடுமாலுந்தொழுதேத்த
வேகம்வைத்தவெரியாய்மிகவோங்கியவெம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழிலின்னிழலான்மதுவாரும்புகலூரே. (கூ)

செய்தவத்தர்மிகுதேரர்கள்சாக்கியர்செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழியைத்தவிர்வார்கள்கடவுள்ளிடம்போலுங்
கொய்துபத்தர்மலரும்புனலுங்கொடுதூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல்வாருயர்வானகமெய்தும்புகலூரே. (கo)

புற்றில்வாழுமரவம்மையார்த்தவன்மேவும்புகலூரைக்
கற்றுகல்லவவர்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றுமிசைபாடியமாந்தர்பரமனடிசேர்ந்து
குற்றமின்றிக்குறைபாடொழியாப்புகழோங்கிப்பொலிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - புக்கிலீசுவரர், தேவியார் - சுந்தார்குழலிபிங்ளை.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருவலிதாயம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே. (க)

புடையிலங்குகரமெட்டுடையான்படிறுகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசுமவலிதாய
மடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே. (உ)

ஐயனெய்யனணியன்பிணியில்லவனென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடையேந்தவல்லான்றிருமாதோடுறைகோயில்
வையம்வந்துபணியப்பிணிதீர்த்துயர்கின்றவலிதாய
மூய்யும்வண்ணங்கினமின்னினந்தால்வினைதீருங்கலமாமே. (ங)

ஒற்றையேறதுடையானடமாடியொர்பூதப்படைசூழப்
புற்றிணாகமையார்த்துழல்கின்றவெம்பெம்மான்மடவாளோ
டெற்றகோயிலுலகத்தெளிமல்கிடவுள்ளும்வலிதாயம்
பற்றிவாழும்மதுவேசரணுவதுபாடும்மடியார்க்கே. (ச)

புத்தியொன்றினினவர்வினையாயினதீரப்பொருளாய
வந்தியன்னதொருபேரொளியானமர்கோயிலயலெங்கு
மந்திவந்துகடுவன்னெடுகூடிவணங்கும்வலிதாயஞ்
சிந்தியாதவவர்தம்மமிம்வெந்துயர்தீர்தலெளிதன்றே. (ஞ)

ஊனியன்றதலையிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரியின்னுரிபோர்த்துழல்கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறைவைத்தவெம்மாதிமகிழ்ம்வலிதாய
தேனியன்றமுமாமலர்கொண்டுநின்றேத்தத்தெளிவாமே. (கூ)

கண்ணிறைந்தவிழியின்னழலால்வருகாமனுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொருபால்மகிழ்வெய்தியபெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ்கொண்டடியார்கள்வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான்கழலேத்தநம்முண்மைக்கதியாமே. (எ)

கடினெஞ்சமமுதுண்டிமையோர்தொழுதேத்தகடமாடி
யடலிலங்கையரையன்வலிசெற்றருளம்மானமர்கோயில்
மடலிலங்குகமுகின்பலவின்மதுவிம்மும்வலிதாய
முடலிலங்குமுயிருள்ளளவுந்தொழவுள்ளத்துயர்போமே. (அ)

பெரியமேருவரையேசிலையாமலவுற்றசெயில்மூன்று
மெரியவெய்தவொருவன்னிருவர்க்கறிவொண்ணவடிவாகு

மெரியதாகியுறவோங்கியவன்வலிதாயந்தொழுதேத்த
வுரியராகவுடையார்பெரியாரெனவுள்கும்மூலகோரே. (கூ)

ஆசியார்மொழியாமண்சாக்கியரல்லாதவர்கூடி
யேசியீரமிலாய்மொழிசெய்தவர்சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடியார்க்கருள்செய்துவளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடையாரடியாரெனப்பேணும்பெரியாரே. (கo)

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருமாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தத்தலம் தொண்டைநாட்டில் பாடியென வழங்கப்பட்டிருக்கின்றது.

சுவாமிபெயர் - வலிதாயநாதர், தேவியார் - தாயம்மை.

ஸ்ரீபுகலியுந் - திருவீழிமிழலையும் - வினவுரை - பண் - நட்டபாடை.

திருச்சிற்றமபலம்.

மைம்மருபூங்குழற்கற்றைதுற்றவாணுதல்மான்விழிமங்கையோடும்
பெய்ம்மொழியாமறையோர்களேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
யெம்மிறையேயிமையாதமுக்கணீசவெனேசவிதென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழிநான்மறையோர்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (க)

கழன்மல்குபங்கோடம்மானைமுற்றில்கற்றவர்சிற்றிடைக்கன்னிமார்கள்
பொழின்மல்குகிள்ளையைச்சொற்பயிற்றும்புகலிநிலாவியபுண்ணியனே
யெழின்மலரோன்சிரமேந்தியுண்டோரின்புறுசெல்வமிதென்கொல்சொல்லாய்
மிழலையுள்வேதியரேத்திவாழ்த்தவிண்ணிழிகோயில்விரும்பியதே. (உ)

கன்னியராடல்கலந்துமிக்கசுந்துகவாடைகலந்துதங்கப்
பொன்னியல்மாடமெருங்குசெல்வப்புகலிநிலாவியபுண்ணியனே
இன்னிசையாழ்மொழியாளோர்பாகத்தெம்மிறையேயிதுவென்கொல்சொ
மின்னியல்தண்ணிடையார்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.[ல்லாய்

நாகபணந்திகழல்குல்மல்குநன்னுதல்மான்விழிமங்கையோடும்
பூகவனம்பொழில்சூழ்ந்தவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
ஏகபெருந்தகையாயபெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
மேகமுரிஞ்செயில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (ச)

சந்தளறேறுதடங்கொள்கொங்கைத்தையலோடுந்தளராதவாய்மைப்
புந்தியினர்மறையோர்களேத்தும்புகலிநிலாவியபுண்ணியனே
எந்தமையாளுடையீசவெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
வெந்தவெண்ணீறணிவார்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (ஞ)

சங்கொளியிப்பிசுறுமகரந்தாங்கிநிரந்துதரங்கமேன்மேற்
பொங்கொளிநீர்சுமந்தோங்குசெம்மைப்புகலிநிலாவியபுண்ணியனே
எங்கள்பிரானிமையோர்கள்பெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்
வெங்கதிர்தோய்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.[லாய்

காமனெரிப்பிழம்பாககோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருதான்முகன்போல்வரேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
ஈமவனத்தெரியாட்டுகந்தவெமபெருமானிதுவென்கொல்சொல்லாய்
வீமருந்தண்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (எ)

இலங்கையர்வெந்தொழில்வாய்த்ததிண்டோளிற்றலறவ்விரலொற்றியைந்து
புலங்களைக்கட்டவர்போற்றவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
இலங்கெரியேந்தின்றெல்லியாடுமெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
விலங்கலொண்மாளிகைசூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (அ)

செறிமுளரித்தவிசேறியாருஞ்சேற்றதில்வீற்றிருந்தானுமற்றைப்
பொறியரவத்தணையானுங்காணாப்புகலிநிலாவியபுண்ணியனே
எறிமழுவோடிளமான்கையின்றியிருந்தபிரானிதுவெனைகொல்சொல்லாய்
வெறிகமழ்பூம்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (கூ)

பத்தர்கணம்பணிந்தேத்தவாய்த்தபான்மையதன்றியும்பல்சமணும்
புத்தருன்றலர்தூற்றவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே [லாய்
யெத்தவத்தோர்க்குமிலக்காய்நின்றவெம்பெருமானிதுவென்கொல்சொல்
வித்தகர்வாழ்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (கo)

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்வித்தகமென்கொலிதென்றுசொல்லிப்
புண்ணியனைப்புகலிந்நிலாவுபூங்கொடியோடிருந்தானைப்போற்றி
கண்ணியகீர்த்திகலங்கொள்கேள்விகான்மறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணியல்பாடல்வல்லார்களிந்தப்பாரொடுவிண்பரிபாலகரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இவ்விரண்டுஞ் சோழநாட்டிலுள்ளவை. புகலி என்பது - சீகாழிக்கொருபெயர்.
வீழிமிழலையில் சுவாமிபெயர்-வீழியழகர், தேவியார் சுந்தரகுசாம்பிகை.

தீருக்காட்டுப்பள்ளி - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

செய்யருகேபுனல்பாயவோங்கிச்செங்கயல்பாயச்சிலமலர்த்தேன்
கையருகேகனிவாழையின்றுகானலெலாங்கமழ்காட்டுப்பள்ளி
பையருகேயழல்வாய்வைவாயப்பாம்பணையான்பணைத்தோளிபாக
மெய்யருகேயுடையாணையுள்கிவிண்டவரோடுவர்மேலுலகே. (க-உ)

திரைகளெல்லாமலருஞ்சுமந்துசெழுமணிமுத்தொடுபொன்வரன்றிக்
கரைகளெல்லாமணிசேர்த்தரிஞ்சிக்காவிரிகால்பொருகாட்டுப்பள்ளி

யுரைகளெல்லாமுணர்வெய்திநல்கவுத்தமராயுயர்ந்தாருலகி
லரவமெல்லாமடையார்த்தசெல்வர்க்காட்செயவல்லலறுக்கலாமே. (கூ)

தோலுடையான்வண்ணப்போர்வையினுன்சுண்ணவெண்ணீறுதுதைந்தில
நூலுடையானிமையோர்பெருமானுண்ணறிவால்வழிபாடுசெய்யுங் [ங்கு
காலுடையான்கரிதாயகண்டன்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
மேலுடையானிமையாதமுக்கண்மின்னிடையாளொடும்வேண்டினனே. (சு)

சலசலசந்தகிலோடுமுந்திச்சந்தனமேகசைசார்த்தியெங்கும்
பலபலவாய்த்தலையார்த்துமண்டிப்பாய்த்திமிகாளிரிப்பாங்கரின்வாய்க்
கலகலகின்றதிருங்கழலான்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளிச்
சொலவல்லதொண்டர்களேத்தநின்றசூலம்வல்லான்கழல்சொல்லுவோமே.

தளையவிழ்தண்ணிறநீலநெய்தல்தாமரைசெங்கழுநீருமெல்லாங்
களையவிழுங்குழலார்கடியக்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளித்
துளைபயிலுங்குழலியாழ்முரலத்துன்னியவின்னிசையாற்றுதைந்து
அளைபயில்பாம்பனையார்த்தசெல்வர்க்காட்செய்யவல்லலறுக்கலாமே. (சூ)

மூடிகையினற்றிருடுமோட்டுழவர்முன்கைத்தருகைக்கரும்பின்கட்டி
காடிகையினலெரிகாட்டுப்பள்ளிகாதல்செய்தான்கரிதாயகண்டன்
பொடியணிமேனியினனெயுள்கிப்போதொடுநீர்சுமந்தேத்திமுன்னின்
றடிகையினற்றிருழவல்லதொண்டரருவினையைத்துரத்தாட்செய்வாரே. (எ)

பிறையுடையான்பெரியோர்கள்பெம்மான்பெய்கழலடைறும்பேணியேத்த
மறையுடையான்மழுவாளுடையான்வார்தருமால்கடனஞ்சமுண்ட
கறையுடையனுன்கனலாடுகண்ணுற்காமனைக்காய்ந்தவன்காட்டுப்பள்ளி
குறையுடையான்குறட்பூதச்செல்வன்குரைகழலேகைகள்கூப்பினோமே. ()

செற்றவர்தம்மரணம்மவற்றைச்செவ்வழல்வாயெரியூட்டிநன்றுங்
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றருள்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
யுற்றவர்தாமுணர்வெய்திநல்லவும்பருள்ளார்தொழுதேத்தநின்ற
பெற்றமருமபெருமானையல்லால்பேசுவதும்மற்றோர்பேச்சிலோமே. (கூ)

ஒண்டிவராரதுகிலாடைமெய்போர்த்துச்சிகொளாமையுண்டேயுரைக்குங்
குண்டர்களோடனைக்கூறையில்லார்கூறுவதாங்குணமல்லகண்டீ
ரண்டமறையவன்மாலுங்காணுவாதியினனுறைகாட்டுப்பள்ளி
வண்டமரும்மலர்கொன்றைமாலிவார்சடையான்கழல்வாழ்த்துவோமே. ()

பொன்னியல்தாமரைநீலநெய்தல்போதுகளாற்பொலிவெய்துபொய்கைக்
கன்னியர்தாங்குடைகாட்டுப்பள்ளிக்காதலனைக்கடற்காழியர்கோன்
றுன்னியவின்னிசையாற்றுதைந்துசொல்லியஞானசம்பந்தனல்ல
தன்னிசையாற்சொன்னமாலிபத்துந்தாங்கவல்லார்புகழ்தாங்குவாரே. (கக)

இதவுஞ் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆரணியச்சுந்தரர், தேவியார் - அகிலாண்டநாயகி.

ஆக பதிகம் - இ.

அ திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருமருகலுந் திருச்செங்காட்டங்குடியும் விளவுரை - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுவாரந்தணர்காளுமடிபரவ
மங்குல்மதிதவழ்மாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கங்குல்விளக்கெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (க)

கெய்தவழ்மூவெரிகாவலோம்புகோபுரிநூல்மறையாளரோத்த
மைதவழ்மாடமலிந்தவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செய்தவநான்மறையோர்களேத்துஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கைதவழ்கூரெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (உ)

தோலொடுநூலிழைசேர்ந்தமார்பர்தொகுமறையோர்கள்வளர்த்தசெந்தீ
மால்புகைபோய்விம்முமாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சேல்புல்குதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கால்புல்குபைங்கழலார்க்கவாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ங)

காமருகேள்வியர்வேள்வியோவாதான்மறையோர்வழிபாடுசெய்ய
மாமருவும்மணிக்கோயில்மேயமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
தேமருபூம்பொழிற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காமருசீர்மகிழ்ந்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ச)

பாடல்முழவும்விழவுமோவாப்பன்மறையோரவர்தாம்பரவ
மாடமெடுங்கொடிவிண்டடவுமருகல்நிலாவியமைந்தசொல்லாய
சேடகமாமலர்ச்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காடயலேயிடமாகவாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ஞ)

புனையழலோம்புகையந்தணாளர்பொன்னடிகாடொறும்போற்றிசைப்ப
மனைகெழுமாடமலிந்தவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சினைகெழுதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கனைவளர்கூரெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (கூ-ஏ)

பூண்டங்குமார்பினிலங்கைவேந்தன்பொன்னெடுந்தோள்வரையாலடர்த்து
மாண்டங்குநூல்மறையோர்பரவமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சேண்டங்குமாமலர்ச்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காண்டங்குதோள்பெயர்த்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (அ)

அந்தமுமாதியுநான்முகனுமரவணையானுமறிவரிய
மந்திரவேதங்களோதுகாவன்மருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செந்தமிழோர்கள்பாவியேத்துஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கந்தமலிற்புகையேகமழுங்கணபதீச்சரங்காமுறவே. (கூ)

இலைமருதேயழகாகநாளுமிதுவர்க்காயொசுக்குத்தின்னு
நிலையமண்டோளரைநீங்கனின்றுதீதரல்லார்தொழுமாமருகல்

மலைமகள்தோள்புணர்வாயருளாய்மாசில்செங்காட்டங்குடியதனுட்
கலைமல்குதோலுடுத்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (௫0)

காலுங்குலைக்கமுகோங்குகாழிஞானசம்பந்தனலந்திகழு
மாலின்மதிதவழ்மாடமோங்குமருகலின்மற்றதன்மேல்மொழிந்த
சேலுங்கயலுந்திளைத்தகண்ணார்சிர்கொள்செங்காட்டங்குடியதனுட்
சூலம்வல்லான்கழலேத்துபாடல்சொல்லவல்லார்வினையில்லையாமே. (௫௫)

திருச்சிற்றம்பலம்.

இவைகளுஞ் சோழநாட்டிலுள்ளவை.

திருமருகலில் சுவாமிபெயர் - மாணிக்கவண்ணர், தேவியார் - வண்டுவார்குழலி.

திருச்செங்காட்டங்குடியில் சுவாமிபெயர்-கணபதிசுவரர்,தேவியார்-திருக்குழல்காயகி.

திருநள்ளாறுந் திரு ஆலவாயும் - வினவுரை - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாடகமெல்லடிப்பாவையோடும்படிணைக்காடிடம்பற்றினின்று
நாடகமாடுநள்ளாறுடையாரும்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கள்துணைவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
வாடகமாடுதெருங்குகூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (க)

திங்களம்போதுஞ்செழும்புனலுஞ்செஞ்சடைமாட்டயல்வைத்தகந்து
கங்கள்மகிழுநள்ளாறுடையாரும்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
பொங்கிளமென்முலையார்களோடும்புனமயிலாடநிலாமுளைக்கு
மங்களகச்சுதைமாடக்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (உ)

தண்ணறுமத்தமுங்கூவிளமும்வெண்டலைமாலையுந்தாங்கியார்க்கு
நண்ணலரியநள்ளாறுடையாரும்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
புண்ணியவாணருமாதவரும்புகுந்துடனேத்தப்புனையிழையா
ரண்ணலின்பாடலெடுக்குங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ங)

பூவினில்வாசம்புனலிற்பொற்புப்புதுவிரைச்சாந்தினிறைத்தோடு
நாவினிற்பாடனள்ளாறுடையாரும்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
தேவர்கள்தானவர்சித்தர்விச்சாதரர்கணத்தோடுஞ்சிறந்துபொங்கி
† யாவினிலுந்துகத்தாட்டுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ச)

செம்பொன்செய்மாலையும்வாசிகையுந்திருந்துபுகையுமவியும்பாட்டு
நம்பும்பெருமைநள்ளாறுடையாரும்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
உம்பருநாகருலகுந்தானுமொலிகடல்சூழ்ந்தவுலகுந்தோரும்
அம்புதநால்களானீடுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ஞ)

பாகமுந்தேவியைவைத்துக்கொண்டுபைவிரிதுத்திப்பரியபேழ்வாய்
நாகமும்பூண்டநள்ளாறுடையாரும்பெருமானிதுவென்கொல்சொல்லாய்

† ஆவினிலுந்து - பஞ்சகவ்வியம்.

போகமுகின்னேமனத்துவைத்துப்புண்ணியர்கண்ணும்புனர்வுபூண்ட
வாகமுடையவர்சேருங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (சு)

கோவணவாடையுநீறுபூச்சுங்கொடுமழுவேந்தலுஞ்செஞ்சடையு
ஞாவணப்பாட்டுகள்ளர்புடையுமம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
பூவணமேனியிலீர்யமாதர்பொன்னுமணியுங்கொழித்தெடுத்த
தாவணவீதியிலாடுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (எ)

இலங்கையிராவணன்வெற்பெடுக்கவெழில்விரலூன்றியிசைவிரும்பி
கலங்கொளச்சேர்ந்தகள்ளாறுடையுமம்பெருமானிதுவென்கொல்சொல்லா
புலன்களைச்செற்றுப்பொறியைநீக்கிப்புந்தியிலுனைச்சந்திசெய்யு [ய்
மலங்கணல்லார்களமருங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (அ)

பணியுடைமாலுமலரினேனும்பன்றியும்வென்றிப்பறவையாயு
ணுணுகலரியகள்ளாறுடையுமம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
மணியொலிசங்கொலியோடுமற்றைமாமுரசின்னெலியென்றுமோவா
தணிகிளர்வேந்தர்புகுதுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (கூ)

தடுக்குடைக்கையருஞ்சாக்கியருஞ்சாதியில்தீங்கியவத்தவத்தர்
கடுக்குறின்றகள்ளாறுடையுமம்பெருமானிதுவென்கொல்சொல்லா
யெடுக்கும்விழவுங்கன்னல்விழவுமிரும்பலியின்பிணைடெத்திசையு
மடுக்கும்பெருமைசேர்மாடக்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (கo)

அன்புடையானேயரனேக்கூடலாலவாய்மேவியதென்கொலென்று
கன்பொனாகதனகள்ளாற்றுனேயம்பெறப்போற்றிகலங்குலாவு
பொன்புடைசூழ்தருமாடக்காழிப்பூசுரன்ஞானசம்பந்தன்சொன்ன
வின்புடைப்பாடல்கள்பத்தும்வல்லாரிமையவரோத்தவிருப்பர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருகள்ளாறு - சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - தெர்ப்பாரணியேசுவரர், தேவியார் - போகமார்த்தபூண்முலையம்மை.

ரீரு ஆலூர்ப்பசுபதீச்சரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர்பூதரதர்புடைபடுவார்தம்மனத்தார்திங்கட்
கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்தவிருந்தவூராம்
விண்ணுயர்மாளிகைமாடவீதிவிழாகமழ்சோலைசுலாவிவெங்கும்
பண்ணியல்பாடலறுதவாலூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (க)

மூத்தியர்மூப்பிலராப்பிலுள்ளார்முக்கணர்தக்கன்றன்வேள்விசாடு
மத்தியரென்றென்றடியரேத்துமையணங்கொடிருந்தவூராம்
தொத்தியலும்பொழில்மாவெண்டுதைத்தெங்குந்துமதுப்பாயக்கோயிற்
பத்திசைபாடலறுதவாலூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (உ)

பொங்கிவரும்புன லஞ்சென்னிலைத்தார்போம்வழிவந்திழிவேற்றமானு
சிங்குயர்ஞானத்தர்வானேறுசேர்த்துமிறையவரின்றுமிருந்தவூராந்
தெங்குயர்சோலைசேராலைசாலிதிளைக்கும்வினைவயல்சேரும்பொய்கைப்
பங்கயமங்கைவிரும்புமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (கூ)

தேவியோர்கூறினாறேறுதேறுஞ்செலவினர்கல்குரலென்னோக்கு
மாவியரந்தணரல்லல்தீர்க்குமப்பனாங்கேயமர்ந்தவூராம்
பூவியலும்பொழில்வாசம்வீசப்புரிகுழலார்சுவடொற்றிமுற்றப்
பாவியல்பாடலறுதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (ச)

பந்தணையுஞ்சடையார்விடையாரிப்பிறப்பென்னையறுக்கவல்லார்
வந்தணைந்தின்னிசைபாடுவார்பால்மன்னினர்மன்னியிருந்தவூராங்
கொந்தணையுங்குழலார்விழவிற்கூட்டமிடையிடைசேரும்வீதிப்
பந்தணையும்விரலார்தமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (டு)

குற்றமறுத்தார்குணத்தினுள்ளார்கும்பிடுவார்தமக்கன்புசெய்வா
ரொற்றைவிடையினர்நெற்றிக்கண்ணுருறைபதியாகுஞ்செழுகொள்மாடஞ்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடகிதானகல்கப்
பற்றியகையினர்வாழுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (சு)

நீறுடையார்நெடுமால்வணங்குநிமிர்சடையார்நினைவார்தமுள்ளங்
கூறுடையாருடைக்கோவணத்தார்குவலயமேத்தவிருந்தவூராக்
தாறுடைவாழையிற்கூழைமந்திதகுகனியுண்டுமீண்டிட்டினத்தைப்
பாறிடப்பாய்ந்துபயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (எ)

வெண்டலைமாலைவிரவிப்பூண்டமெய்யுடையார்விறலாரரக்கன்
வண்டமர்பூமுடிசெற்றுகந்தமைந்தரிடம்வளமோங்கியெங்குங்
கண்டலர்சிந்தைக்கருத்தின்மிக்கார்கதியருளென்றுகையாரக்கூப்பிப்
பண்டலர்கொண்டுபயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (அ)

மாலுமயனும்வணங்கிநேடமற்றவருக்கெரியாகிநீண்ட
சீலமறிவரிதாகிநின்றசெம்மையினரவர்சேருமூராங்
கோலவிழாவினரங்கத்தேறிக்கொடியிடைமாதர்கள்மைக்தரோடும்
பாலெனவேமொழிந்தேத்துமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (கூ)

பின்னியதாழ்சடையார்பிதற்றும்பேதையராஞ்சமண்சாக்கியர்கள்
தன்னியலுமூனைகொள்ளகில்லாச்சைவரிடத்தளவேதுசோலைத்
துன்னியமாதருமைந்தர்தாமுஞ்சுனையிடைமூழ்கித்தொடர்ந்தசிந்தைப்
பன்னியபாடல்பயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுகவே. (கூ)

எண்டிசையாரும்வணங்கியேத்துமெம்பெருமானையெழில்கொளாவூர்ப்
பண்டிரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதீச்சரத்தாதிதன்மேற்

கண்டல்கள்மிண்டியகானற்காழிக்கவுணியன்ஞானசம்பந்தன்சொன்ன
தொண்டினிதாவிசைபாடியாடிக்கூடுமெவருடையார்கள்வானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பசுபதீச்சுரர், தேவியார் - மங்களநாயகி.

திருவேணுபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வண்டார்குழலிவையொடும்பிரியாவகைபாகம்
பெண்டான்மிகவானன்பிறைச்சென்னிப்பெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளங்கெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே. (க)

படைப்புங்கிலேயிறுதிப்பயன்பருமையொடுகோர்மை
கிடைப்பல்கணமுடையான்கிறிபூதப்படையானூர்
குடைப்பாளையின்கமுகின்னெடுபுன்னைமலர்காற்றம்
விடைத்தேவருதென்றல்மிகுவேணுபுரமதுவே. (உ)

கடந்தாங்கியகரியையவர்வெருவவுரிபோர்த்துப்
படந்தாங்கியவரவக்குழைப்பரமேட்டிதன்பழவூர்
நடந்தாங்கியநடையார்நலபவளத்துவர்வாய்மேல்
விடந்தாங்கியகண்ணுர்பயிலவேணுபுரமதுவே. (ங)

தக்கன்றனசிரமொன்றினையரிவித்தவன்றனக்கு
மிக்கவ்வரமருள்செய்தவெம்விண்ணோர்பெருமானூர்
பக்கம்பலமயிலாடிடமேகம்முழவதிர
மிக்கம்மதுவண்டார்பொழில்வேணுபுரமதுவே. (ச)

நாணுவிதவுருவாய்நமையாள்வானணுகாதார்
வானுர்திரிபுரமூன்றெரியுண்ணச்சிலைதொட்டான்
றேனுர்ந்தெழுகதலிக்கனியுண்பான்றிகழ்மந்தி
மேனைக்கிரின்றிரங்கும்பொழில்வேணுபுரமதுவே. (ஞ)

மண்ணோர்களும்விண்ணோர்களும்வெருவிமிகவஞ்சக்
கண்ணுர்சலமூடிக்கடலோங்கவ்வுயர்ந்தானூர்
தண்ணுர்நறுங்கமலம்மலர்சாயவ்விளவாளை
விண்ணோர்துதிகொள்ளும்வியன்வேணுபுரமதுவே. (சு)

மலையான்மகளஞ்சவ்வனையெடுத்தவ்வலியரக்கன்
றலைதோளவைநெரியச்சரணுகிர்வைத்தவன்றன்னூர்
கலையாரெருசெருதித்தொகைகற்றோர்மிகுகூட்டம்
விலையாயினசொற்றேர்தருவேணுபுரமதுவே. (அ)

வயமுண்டவமாலும்மடிகாணுதலமாக்கும்
பயனுகியபிரமன்படுதலையேந்தியபரனூர்
கயமேவியசங்கந்தருகழிவிட்டுயர்செங்கெல்
வயன்மேவிவந்துறங்கும்பொழில்வேணுபுரமதுவே. (கூ)

மாசேறியவுடலாரமண்கழுக்கள்ளொடுதேரர்
தேசேறியபாதம்வணங்காமைத்தெரியானூர்
தூசேறியவல்குற்றுடியிடையார்துணைமுலையார்
வீசேறியபுருவத்தவர்வேணுபுரமதுவே. (கo)

வேதத்தொலியானம்மிகுவேணுபுரத்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்றனபாட
லேதத்தினையில்லாவிவைபத்தும்மிசைவல்லார்
கேதத்தினையில்லார்சிவகெதியைப்பெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேணுபுரம் - என்பது சோழிக்கொருபெயர்.

நீரணிணுமலை - பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணுமுலையுமையாளொடுமுடனுகியவொருவன்
பெண்ணுகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணுர்ந்தனவருவித்திரண்மழலம்முழவதிரு
மண்ணுமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (க)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதிண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுநுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணுமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (உ)

பீலிம்மயில்பெடையோடிறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதாமேனிறைசொரியும்விரிசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணுமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (ங)

உதிரும்மயிரிடுவெண்டலைகலனுவுலகெல்லா
மெதிரும்பலியுணலாகவுமெருதேறுவதல்லால்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிடமண்ணுமலையதுவே. (ச)

மரவஞ்சிலதாளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செயமுரவம்படுமண்ணுமலையண்ண
லிரவஞ்சடையுலவும்புனலுடனுவதுமோரார்
குரவங்கமழ்தருமென்குழலுமையுல்குதல்குணமே. (ஞ)

பெருகும்புனலண்ணுமலிபிறைசேர்கடல்நஞ்சைப்
பருகுந்தனதுணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாவே. (சு)

கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டில்
கரியாடியகுகவெண்டலையுதையுண்டவையுருள
வெரியாடியவிறைவர்க்கிடமினவண்டிசைமுரல
வரியாடியகண்ணுளொமெண்ணுமலையதுவே. (எ)

ஒளிறுபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டாற்
பிளிறுகுரல்மதவாரணவுதனம்பிடித்துரித்து
வெளிறுபடவிளையாடியவிகிர்தன்னிராவணனை
யளறுபடவடர்த்தானிடமண்ணுமலையதுவே. (அ)

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனு
மளவாவணமழலாகியவண்ணுமலையண்ணல்
தளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. (கூ)

வேர்வந்துறமாசூர்தரவெயில்வின்றுழல்வாரு
மார்வம்புதைமலிசீவரமறையாவருவாரு
மாரம்பர்தமுரைகொள்ளன்மினண்ணுமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானலகழல்சேர்வதுகுணமே. (கo)

வெம்புந்தியகதிரோனெளிவிலகும்விரிசார
லம்புந்திமுவெயிலெய்தவனண்ணுமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுள்ஞான
சம்பந்தனதமிழ்வல்லவரடிபேணுதல்தவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அருணசலேசுவரர், தேவியார் - உண்ணுமுலையம்மை.

ஆடு பதிகம் - கo.

நீநவீழிமிழலை - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சடையார்புனலுடையாளொருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையானெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே. (க)

ஈருய்முதலொன்றுயிருபெண்ணுண்குணமூன்றுய்
மாறுமறைநான்கியல்வருபூதம்மைவையைந்தா

யாழுர்சுவையேழோசையொடெட்டுத்திசைதானுய்
வேழுபுடனுனிடம்வீழிம்மிழலையே. (உ)

வம்மின்னடியீர்காண்மலரிட்டுத்தொழுதுய்ய
வும்மன்பினேடெம்மன்புசெய்தீசன்னுறைகோயில்
மும்மென்றிசைமுரல்வண்டுகள்கொண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில்சூழ்தண்வயல்வீழிம்மிழலையே. (ஊ)

பண்ணும்பதமேழும்பலவோசைத்தமிழவையு
முண்ணின்றதோர்சுவையும்முறுதாளத்தொலிபலவு
மண்ணும்புனலுயிருமவருகாற்றுஞ்சுடர்மூன்றும்
விண்ணும்முழுதானுனிடம்வீழிம்மிழலையே. (எ)

ஆயாதனசமயம்பலவறியாதவர்தெறியின்
றுயானவனுயிர்கட்குமுன்றலையானவன்மறைமுத்
தீயானவன்சிவனெம்மிறைசெல்வத்திருவாரூர்
மேயானவனுறையும்மிடம்வீழிம்மிழலையே. (ஙு)

கல்லானிழற்கீழாயிடர்காவாயெனவாளே
லெல்லாமொருதேராயயன்மறைபூட்டிநின்றுய்ப்ப
வல்வாயெரிகாற்றீர்க்கரிகோல்வாசுகிநாண்கல்
வில்லாலெயிலெய்தானிடம்வீழிம்மிழலையே. (சு)

கரத்தால்மலிசிரத்தான்கரியுரித்தாயதொர்படத்தான்
புரத்தார்பொடிபடத்தன்னடிபணிமூவர்கட்கோவா
வரத்தான்மிகவளித்தானிடம்வளர்புன்னைமுத்தரும்பி
விரைத்தாதுபொன்மணியீன்றணிவீழிம்மிழலையே. (ஏ)

முன்னிற்பவரில்லாமூரணரக்கன்வடகயிலை
தன்னைப்பிடித்தெடுத்தான்முடிதடந்தோளிறவூன்றிப்
பின்னைப்பணிந்தேத்தப்பெருவாள்பேரொடுகொடுத்த
மின்னிற்பொலிசடையானிடம்வீழிம்மிழலையே. (அ)

பண்டேழுலகுண்டானைவைகண்டானுமுன்னறியா
வொண்டீயுருவானுனுறைகோயில்நிறைபொய்கை
வண்டாமரைமலர்மேன்மடவன்னங்கடைபயில
வெண்டாமரைசெந்தாதுதிர்வீழிம்மிழலையே. (கூ)

மசங்கற்சமண்மண்டைக்கையர்குண்டக்குணமிலிக
ளிசங்கும்பிறப்பறுத்தானிடமிருந்தேன்களித்திரைத்துப்
பசும்பொற்கிளிகளிமஞ்ஞைகளொளிகொண்டெழுபகலோன்
விசும்பைப்பொலிவிக்கும்பொழில்வீழிம்மிழலையே. (கo)

வீழிம்மிழலைம்மேவியவிகிர்தன்றனைவிரைசேர்
காழிக்கர்க்கலிஞானசம்பந்தன்றமிழ்பத்தும்

யாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரொல்லா
மூழின்வலிவினைபோயிடவுயர்வானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நிநழதுதன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மத்தாவனைநிறுவிக்கடல்கடைந்தவ்விடமுண்ட
தொத்தார்தருமணிநீண்முடிசுடர்வண்ணனதிடமாங்
கொத்தார்மலர்குளிர்சந்தகிலொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ்தருமுதுகுன்றடைவோமே. (க)

தழையார்வடவியவீதனிற்றவமேபுரிசைவ
னிழையாரிடைமடவாளொடுமினிதாவுறையிடமா
மழைவானிடைமுழவவ்வெழில்வளவாளுகிரொளிகண்
முழைவாளரிகுமுறும்முயர்முதுகுன்றடைவோமே. (உ)

வினையாததோர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டனையாயினதவிரவ்வருள்தலைவன்னதுசார்வாங்
களையார்தருகதிராயிரமுடையவ்வவனெடும்
முனைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே. (ங)

சுரர்மாதவர்தொகுகின்னரரவரோதொலைவில்லா
கரரானபன்முனிவர்தொழவிருந்தானிடமலமா
ரனைசார்வரவணிபொற்கலனவைகொண்டுபன்னூறு
முனைசார்வருமணமொய்ம்புடைமுதுகுன்றடைவோமே. (ச)

அறையார்கழலந்தன்றனையயின்மூவிலையழகார்
கறையார்கெடுவேலின்மிசையேற்றுணிடங்கருதில்
மறையாயினபலசொல்லியொண்மலர்சாந்தவைகொண்டு
முறையால்மிகுமுனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (ஞ)

ஏவார்சிலையெயினன்னுருவாகியெழில்விசயற்
கோவாதவின்னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகிற்
சாவாதவர்பிறவாதவர்தவமேமிகவுடையார்
மூவாதபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (சு)

தழல்சேர்தருதிருமேனியர்சசிசேர்சடைமுடியர்
மழமால்விடைமிகவேறியமறையோனுறைகோயில
விழவோடொலிமிகுமங்கையர்தகுமாடகசாலை
முழவோடிசைகடமுஞ்செயுமுதுகுன்றடைவோமே. (எ)

செதுவாய்மைகள்கருதிவ்வுரையெடுத்ததிறலரக்கன்
கதுவாய்கள்பத்தலறியிடக்கண்டானுறைகோயின்

மதுவாயசெங்காந்தண்மலர்நிறையக்குறையில்லா
முதுவேய்கண்முத்துதிரும்பொழில்முதுகுன்றடைவோமே. (அ)

இயலாடியபிரமன்னரியிருவர்க்கறிவரிய
செயலாடியதீயாருருவாகியெழுசெல்வன்
புயலாடிவண்பொழில்சூழ்புனற்படப்பைத்தடத்தருகே
முயலோடவெண்கயல்பாய்தருமுதுகுன்றடைவோமே. (கூ)

அருகசொடுபுத்தரவாறியாவான்மலையான்
மருகன்வருமிடபக்கொடியுடையானிடமலரார்
கருகுகுழன்மடவார்கடிகுறிஞ்சியதுபாடி
முருகன்னதுபெருமைபகர்முதுகுன்றடைவோமே. (கo)

முகில்சேர்தருமுதுகுன்றுடையானம்மிகுதொல்சீர்ப்
புகலிங்கர்மறைஞானசம்பந்தன்னுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர்பாவம்மடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது - இதுவேவிருத்தாசலம்.

சுவாமிபெயர் - பழமலைநாதர், தேவியார் - பெரியநாயகியம்மை.

திருவியலூர் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்தமழ்நறுமென்குழலரிவையவள்வெருவப்
பொருவெங்கரிபடவென்றதனுரிவையுடலணிவோ
னரவம்மலிபுனலும்மிளமதியுங்குதலியும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே. (க)

ஏரூர்தருமொருவன்பலவுருவன்னிலையானு
ளூர்தருசடையன்னனலுருவன்புலியுடையான்
மாரூர்புரமெரியச்சிலைவலாவித்தவன்மடவாள்
வீரூர்தரின்றுனிடம்விரிநீர்வியலூரே. (உ)

செம்மென்சடையவைதாழ்வுறமடவார்மனேதோறும்
பெய்ம்மின்பலியெனநின்றிசைபகர்வாரவரிடமா
மும்மென்றெழுமருவித்திரள்வரைபற்றிடவுலாமேல்
விம்மும்பொழில்கெழுவும்வயல்விரிநீர்வியலூரே. (ங)

அடைவாகியவடியார்தொழவலரோன்றலையதனின்
மடவாரிடுபலிவந்துணவுடையானவனிடமாங்
கடையார்தரவகிலார்கழைமுத்தந்திரைசிந்தி
மிடையார்பொழில்புடைசூழ்தருவிரிநீர்வியலூரே. (ச)

எண்ணூர்தருபயனையனவனுய்மிகுகலையாய்ப்
பண்ணூர்தருமறையாயுயர்பொருளாயிறையவனுய்க்
கண்ணூர்தருமூருவாகியகடவுள்ளிடமெனலாம்
விண்ணோரொடுமண்ணோர்தொழுவிரிநீர்வியலூரே. (டு)

வசைவிற்கொடுவருவேடுவனவனுய்நிலையறிவான்
றிசையுற்றவர்காணச்செருமலைவானிலையவனை
யசையப்பொருதசையாவணமவனுக்குயர்படைகள்
விசையற்கருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (சு)

மானூரவுடையானிரவுடையான்பகல்கட்ட
மூனூர்தருமுயிராணுயர்விசையான்விளைபொருள்கள்
தானுகியதலிவன்னெனநினைவாரவரிடமா
மேனூடியர்விண்ணோர்தொழும்விரிநீர்வியலூரே. (எ)

பொருவாரொனக்கெதிராரொனப்பொருப்பையெடுத்தான்றன்
கருமால்வரைகரந்தோளுரங்கதிர்ஈண்முடிகெரிந்து
சிரமாயினகதறச்செறிகழல்சேர்திருவடியின்
விரலாலடர்வித்தானிடம்விரிநீர்வியலூரே. (அ)

வளம்பட்டலர்மலர்மேலயன்மாலும்மொருவகையா
லளம்பட்டறிவொண்ணுவகையழலாகியவண்ணை
லொளம்பட்டெழுதழல்தூணதனடிவேயொருவுருவம்
விளம்பட்டருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (கூ)

தடுக்காலுடன்மறைப்பாரவர்தவர்சீவரமூடிப்
பிடக்கேயுரைசெய்வாரொடுபேணுர்கமர்பெரியோர்
கடற்சேர்தருவிடமுண்டமுதமரர்க்கருள்செய்த
விடைச்சேர்தருகொடியானிடம்விரிநீர்வியலூரே. (கo)

விளங்கும்பிறைசடைமேலுடைவிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டதொர்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன்
றுளங்கில்தமிழ்பரவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனேடுயர்விண்ணும்முடையாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - யோகாநந்தேசுவரர், தேவியார் - சவுந்தரநாயகியம்மை.

திருக்கோடுந்தன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்துமழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்

ஆனிற்பொலிவைக்தும்மமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்திருஙகோ. (க)

மயில்புல்குதண்பெடையோடுஞமும்வளர்சாரற்
குயிலின்னிசைபாடுங்குளிர்சோலைக்கொடுங்குன்றம்
அயில்வேல்மலிகெடுவெஞ்சுடரானலேந்திநின்ருடி
யெயின்முன்படவெய்தானவன்மேயவ்வெழினகரே. (உ)

மிளிரும்மணிபைம்பொன்னெடுவிரைமாமலருந்திக்
குளிரும்புனல்பாயுங்குளிர்சாரற்கொடுங்குன்றங்
கிளர்கங்கையொடிளவெண்மதிகெழுவுஞ்சடைதன்மேல்
வளர்கொன்றையுமதமத்தமும்வைத்தான்வளஙகரே. (ஊ)

பருமாமதகரியோடரியிழியும்விரிசாரற்
குருமாமணிபொன்னெடிழியருவிக்கொடுங்குன்றம்
பொருமாவெயில்வளைவித்தருகணையிற்பொடிசெய்த
பெருமானவனுமையாளொடுமேவும்பெருஙகரே. (எ)

மேகத்திடிகுரல்வர்தெழவெருவிவ்வனையிழியுங்
கூகைக்குலமோடித்திரிசாரற்கொடுங்குன்றங்
நாகத்தொடுமிளவெண்பிறைசூடிங்கலமங்கை
பாகத்தவனிமையோர்தொழுமேவும்பழஙகரே. (டு)

கைம்மாமதகரியின்னினமிடியின்குரலதிரக்
கொய்ம்மாமலர்சசோலைபுகமண்டுங்கொடுங்குன்றம்
அம்மானெனவுள்கித்தொழுவார்கட்கருள்செய்யும்
பெம்மானவனிமையோர்தொழுமேவும்பெருஙகரே. (சு)

மரவத்தொடுமணமாதவிமல்வல்லதுவிண்ட
குரவத்தொடுவிரவும்பொழில்சூழ்தண்கொடுங்குன்றம்
அரவத்தொடுமிளவெண்பிறைவிரவும்மலர்க்கொன்றை
நிரவச்சடைமுடிமேலுடன்வைத்தானெடுஙகரே. (எ)

முட்டாமுதுகரியின்னினமுதுவேய்களோமுனிந்து
குட்டாச்சுனையவைமண்டிநின்ருடுங்கொடுங்குன்றம்
ஒட்டாவரக்கன்னைமுடியொருபஃதவையுடனே
பிட்டானவனுமையாளொடுமேவுமபெருஙகரே. (அ)

அறையும்மரிகுரலோசையையஞ்சியடுமானை
குறையுமமனமாகிம்முழைவைகுங்கொடுங்குன்றம்
மறையம்மவையுடையானெனவெடியானெனவிவர்க
ளிறையும்மறிவொண்ணுதவன்மேயவெழினகரே. (கூ)

மத்தக்களிருளிவ்வரவஞ்சிம்மலைதன்னைக்
குத்திப்பெருமுழைதன்னிடைவைகுங்கொடுங்குன்றம்

புத்தரொடுபொல்லாமனச்சமணர்புறங்கூறப்
பத்தர்க்கருள்செய்தானவன்மேயபழனகரே. (கo)

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றை
கானற்கழுமலமாகர்த்தலிவன்னலகவுணி
ஞானத்துயர்சம்பந்தனலங்கொள்தமிழ்வல்லா
ரூனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்துமெழிலோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொடுங்குன்றேசுவரர், தேவியார் - அழுதவல்லி.

திருநெய்த்தானம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மையாடியகண்டன்மலிமகள்பாகமதுடையான்
கையாடியகேடிற்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடுங்
கெய்யாடியபெருமானிடமெய்த்தானமெனீரே. (க)

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூர்
ரறையும்புனல்வருகாவிரிபலசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயில்நெய்த்தானமெனீரே. (உ)

பேயாயினபாடப்பெருகடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகம்மிகவுடையான்
தாயாகியவுலகங்களனிலபேறுசெய்தலிவன்
னேயாடியபெருமானிடமெய்த்தானமெனீரே. (ங)

சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுநள்ளிருணடமாடியநம்பன்னுறையிடமாங்
கடுவாளிளவரவாடுமிழ்கடனஞ்சமதுண்டா
னெடுவாளைகள்குதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே. (ச)

நகாரமொடேலம்மணிசெம்பொன்னுளையுந்திப்
பகராவருபுனல்காவிரிபரவிப்பணிந்தேத்துந்
நிகரான்மணிவிடுதண்கனிநிகழ்வாயநெய்த்தான
நகரானடியேத்தநமைநடலையடையாவே. (ஞ)

விடையார்கொடியுடையவ்வணல்வீங்கார்வெளையெலும்பும்
உடையார்நறுமாலிச்சடையுடையாரவர்மேய
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ்தணெய்த்தானம்
மடையாதவனொன்றும்மமருலகம்மடையாரே. (சு)

நிழலார்வயல்கமழ்சோலைகணிறைகின்றநெய்த்தானத்
தழலானவனனலங்கையிலேந்தியழகாய
கழலானடிநாளுங்கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றித்தொழுவாரே. (எ)

அறையார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாய
மிறையாரமுனெடுத்தானிருபதுதோளுறவூன்றி
நிறையார்புனனெய்த்தானனன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. (அ)

கோலம்முடிநெடுமாலொடுகொய்தாமரையானுஞ்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாயநெய்த்தானங்
காலம்பெறமலர்சூடிவைதூவித்தொழுதேத்தும்
ஞாலம்புகழடியாருடலுறுநோய்நலியாவே. (கூ)

மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
புத்தரவர்சொன்னம்மொழிபொருளாகினையேன்மி
னித்தம்பயினிமலன்னுறைநெய்த்தானமதேத்துஞ்
சித்தம்முடையடியாருடல்செறுநோயடையாவே. (கo)

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வர்சிவகதியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - நெய்யாடியப்பர், தேவியார் - வாலாம்பிகையம்மை.

ஆடு பதிகம் - கடு.

கிருப்புள்ளமங்கை - திரு ஆலந்துறை - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிரளாயினபரமன்பிரமன்முன்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிறலறச்சாடியகடவுள்ளிடங்கருதி
லாலந்துறைதொழுவார்தமையடையாவினைதானே. (க)

மலையான்மகள்கணவன்மலிகடல்சூழ்தருதண்மைப்
புலையாயினகளைவானிடம்பொழில்சூழ்புளமங்கைக்
கலையால்மலிமறையோரவர்கருதித்தொழுதேத்த
அலையார்புனல்வருகாவிரியாலந்துறையதுவே. (உ)

கறையார்மிடறுடையான்கமழ்கொன்றைச்சடைமுடிமேற்
பொறையார்தருகங்கைப்புனலுடையான்புளமங்கை

சிறையார்தருகளிவண்டறைபொழில்சூழ்திருவாலந்
துறையானவனறையார்கழல்தொழுமின்றுதிசெய்தே. (கூ)

தணியார்மதியரவின்னெடுவைத்தானிடமொய்த்தெம்
பணியாயவனடியார்தொழுதேத்தும்புளமங்கை
மணியார்தருகனகம்மவைவயிரத்திரளோடும்
மணியார்மணலணிகாவிரியாலந்துறையதுவே. (சு)

மெய்த்தன்னுறும்வினைதீர்வகைதொழுமின்செழுமலரின்
கொத்தின்னெடுசந்தாரகில்கொணர்காவிரிக்கரைமேற்
பொத்தின்னிடையாகதைபலபாடும்புளமங்கை
யத்தன்னமையாள்வானிடமாலந்துறையதுவே. (எ)

மன்னனவனுலகிற்கொருமழையானவன்பிழையில்
பொன்னனவன்முதலானவன்பொழில்சூழ்புளமங்கை
யென்னனவனிசையானவனினனாயிறின்சோதி
யன்னனவனுறையும்மிடமாலந்துறையதுவே. (சு)

முடியார்தருசடைமேன்முளையிளவெண்மதிசூடிப்
பொடியாடியதிருமேனியர்பொழில்சூழ்புளமங்கைக்
கடியார்மலர்புனல்கொண்டுதன்கழலேதொழுதேத்தும்
மடியார்தமக்கினியானிடமாலந்துறையதுவே. (எ)

இலங்கைம்மன்னன்முடிதோளிறவெழிலார்திருவிரலால்
விலங்கல்லிடையடர்த்தானிடம்வேதம்பயின்றேத்திப்
புலன்கள்தமைவென்றூர்புகழவர்வாழ்புளமங்கை
யிலங்கன்மலிசடையானிடமாலந்துறையதுவே. (அ)

செறியார்தருவெள்ளைத்திருநீற்றின்றிருமுண்டப்
பொறியார்தருபுரிநூல்வரைமார்பன்புளமங்கை
வெறியார்தருகமலத்தயன்மாலுந்தனதாடி
யறியாவகைநின்றனிடமாலந்துறையதுவே. (கூ)

நீதியறியாதாரமண்கையரொடுமண்டைப்
போதியவரோதும்மொழைகொள்ளார்புளமங்கை
யாதியவர்கோயில்திருவாலந்துறைதொழுமின்
சாதிம்மிகுவானோர்தொழுதன்மைபெறலாமே. (கo)

பொற்றின்னிடைத்தேனுறியபொழில்சூழ்புளமங்கை
யத்தன்புனல்வருகாவிரியாலந்துறையானைக்
கற்றமமலிகமழ்காழியுட்கலிஞானசம்பந்தன்
சற்றம்மலிபாடல்சொலியாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பசுபதிநாயகர், தேவியார் - பால்வளநாயகி.

திரு இடும்பாவனம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மனமார்தருமடவாரொடுமகிழ்மைத்தர்கண்மலர்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச்
சினமார்தருதிறல்வாளெயிற்றரக்கன்மிகுகுன்றி
லினமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (க)

மலையார்தருமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
நிலையார்தருநிமலன்வலிநிலவும்புகழொளிசேர்
கலையார்தருபுலவோரவர்காவன்மிகுகுன்றில்
இலையார்தருபொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (உ)

சிலம்மிகுசித்தத்தவர்சிந்தித்தெழுமெந்தை
ஞாலம்மிகுகடல்சூழ்தருமூலகத்தவர்தலைமார்
கோலம்மிகுமலர்மென்மூலைமடவார்மிகுகுன்றில்
ஏலங்கமழ்பொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (ஙூ)

பொழிலார்தருகுலைவாழைகளெழிலார்திகழ்போழ்தின்
தொழிலான்மிகுதொண்டரவர்தொழுதாடியமுன்றிற்
குழலார்தருமலர்மென்மூலைமடவார்மிகுகுன்றில்
எழிலார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (ச)

பத்தார்விரலுமையாளொருபங்கர்கங்கைமுடிமேற்
செந்தாமரைமலர்மல்கியசெழுநீர்வயற்கனைமேற்
கொந்தார்மலர்புன்னைமகிழ்குரவங்கமழ்குன்றில்
எந்தாயெனவிருந்தாணிடமிடும்பாவனமிதுவே. (ஞ)

நெறிநீர்மையர்நீள்வானவர்நினையுந்நினைவாகி
யறிநீர்மையிலெய்தும்மவர்க்கறியும்மறிவருளிக்
குறிநீர்மையர்குளமார்தருமணமார்தருகுன்றில்
எறிநீர்வயல்புடைசூழ்தருமிடும்பாவனமிதுவே. (கூ)

நீறேறியதிருமேனியர்நிலவும்மூலகெல்லாம்
பாறேறியபடுவெண்டலைகையிற்பலிவாங்காக்
கூறேறியமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
யேறேறியவிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (எ)

தேரார்தருதிகழ்வாளெயிற்றரக்கன்சிவன்மலையை
யோராதெடுத்தார்த்தான்முடியொருபஃதவைநெரித்துக்
கூரார்தருகொலைவாளொடுகுணநாமமுங்கொடுத்த
வோரார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (அ)

பொருளார்தருமறையோர்புகழ்விருத்தர்பொலிமலிசீர்த்
தெருளார்தருசிந்தையொசெந்தம்மலர்பலதூய்

மருளார்தருமாயன்னயன்காணர்மயலெய்த
விருளார்தருகண்டர்க்கிடமிடும்பாவனமிதுவே. (கூ)

தடுக்கையுடனிடுக்கித்தலைபறித்துச்சமண்டப்பர்
உடுக்கைபலதுவர்க்கூறைகளுடம்பிட்டுழல்வாரும்
மடுக்கண்மலர்வயல்சேர்செந்நெல்மலிசீர்மலர்க்கரைமேல்
இடுக்கண்பலகளைவானிடமிடும்பாவனமிதுவே. (கo)

கொடியார்நெடுமாடக்குன்றஞரிற்கைக்கோல
விடியார்கடலடிவீழ்தருமிடும்பாவனத்திறையை
யடியாயுமந்தணர்காழியுளணிஞானசம்பந்தன்
படியார்சொன்னபாடல்சொலப்பறையும்வினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சற்குணநாதர், தேவியார் - மங்களாயகி.

திநநின்றியூர் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சூலம்படைசுண்ணப்பொடிசாந்தஞ்சுடுநீறு
பாலம்மதிபவளச்சடைமூடிமேலதுபண்டைக்
காலன்வலிகாலின்னெடுபோக்கிக்கடிகமழ்ந்
நீலம்மலர்ப்பொய்கைநின்றியூரின்னிலையோர்க்கே. (க)

அச்சம்மிலர்பாவம்மிலர்கேடும்மிலரடியார்
நிச்சம்முறுநோயும்மிலர்தாமுந்நின்றியூரில்
நச்சும்மிடறுடையார்நறுங்கொன்றைநயந்தார்நாம்
பச்சம்முடையடிகள்திருப்பாதம்பணிவாரே. (உ)

பறையின்னெலிசங்கின்னெலிபாங்காரவுமார
அறையும்மொலியெங்கும்மலையறிவாரவர்தம்மை
நிறையும்புனல்சடைமேலுடையடிகணின்றியூரில்
உறையும்மிறையல்லதெனதுள்ளம்முணராதே. (ங)

பூண்டவ்வரைமார்பிற்புரிநூலன்விரிகொன்றை
யீண்டவ்வதனேடும்மொருபாலம்மதியதனைத்
தீண்டும்பொழில்சூழ்ந்தநின்றியதுதன்னில்
ஆண்டகழல்தொழிலல்லதுவறியாரவரறிவே. (ச)

சூழலின்னிசைவண்டின்னிசைகண்டுகுயில்கூவும்
நிழலின்னெழில்தாழ்ந்தபொழில்சூழ்ந்தநின்றியூரில்
அழலின்வலனங்கையதுவெய்தியனலாடுங்
கழலின்னெலியாடும்புரிகடவுள்களைகண்ணே. (ஞ)

மூரல்முறுவல்வெண்ணகையுடையாளொருபாகஞ்
சாரன்மதியதனோடுடன்சலவஞ்சடைவைத்த
வீரன்மலியழகார்பொழின்மிடையுத்திருநின்றி
யூரன்கழலல்லாதெனதுள்ளமுணராதே. (சு)

பற்றியொருதலைகையினிலேந்திப்பலிதேரும்
பெற்றியதுவாகித்திரிதேவர்பெருமானர்
சுற்றியொருவேங்கையதளோடும்பிறைசூடிச்
செற்றியொருகண்ணுர்நின்றியூரின்னிலையாரே. (எ-அ)

கல்லமலர்மேலானெடுஞாலம்மதுவுண்டான்
அல்லனெவாவாவானின்றும்மறிவரிய
வெல்லின்பொழில்சூழ்ந்தநின்றியூரின்னிலையாஞ்
செல்வரடியல்லாதெனசிந்தையுணராதே. (கூ)

நெறியில்வருபேராவகைநினையாநினைவொன்றை
யறிவில்சமணுந்தருசைகேட்டுமையராதே
நெறியில்லவர்குறிகண்ணினையாதேநின்றியூரின்
மறியேந்தியகையானடிவாழ்த்தும்மதுவாழ்த்தே. (கூ0)

குன்றமதுவெடுத்தானுடல்தோளுந்நெரிவாக
நின்றங்கொருவிரலாலுறவைத்தானின்றியூரை
நன்றூர்தருபுகலிதமிழ்ஞானமிகுபந்தன்
குன்றுத்தமிழ்சொல்லக்குறைவின்றிறைபுகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - லட்சுமிபீசுவரர், தேவியார் - உலகநாயகி.

திருக்கழுமலம் - திருவிராகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிபடர்சடைமுடியிடைபெருகியபுனலுடையவனிறை
யிறையணிவளையிணைமுலையவளிணைவனதெழிலுடையிடவகை
கறையணிபொழினிறைவயலணிகழுமலமமர்கனலுருவின
னறையணிமலர்நறவிரைபுல்குலமலிகழல்தொழமருவுமே. (க)

பிணிபடுகடல்பிறவிகளறலெளிதுளதுபெருகியதிரை
யணிபடுகழுமலமினிதமரனலுருவினனவிர்சடைமிசை
தணிபடுகதிர்வளரிளமதிபுனவனியுமைதலைவனெனிற
மணிபடுகறைமிடறனிலமலிகழலினைதொழுன்மருவுமே. (உ)

வரியுறுபுலியதளுடையினன்வளர்பிறையொளிகிளர்கதிர்பொதி
விரியுறுசடைவினைபுரைபொழில்விழவொலிமலிகழுமலமம

பொரியுறுகிறவிறைவனதடியிரவொடுபகல்பரவுவர்தம
தெரியுறுவினைசெறிகதிர்முனையிருள்கெடவணிகினைவெய்துமதே. (கூ)

வினைகெடமனகினைவதுமுடிபெறினனிதொழுதெழுகுலமதி
புனைகொடியிடைபொருடருபடுகளிறினதுரிபுதையுடலினன்
மனைகுடவயிறுடையனசிலவருகுறள்படையுடையவன்மலி
கனைகடலடைகழுமலமமர்கதிர்மதியினனதிர்கழல்களே. (சு)

தலைமதிபுனல்விடவரவிவைதலைமையதொருசடையிடையுட
னிலைமருவவோரிடமருளினனிழன்மழுவினேடழல்கணையினன்
மலைமருவியசிலைதனின்மதிளெரியுணமனமருவினனல
கலைமருவியபுறவணிதருகழுமலமினிதமர்தலைவனே. (டு)

வரைபொருதிழியருவிகள்பலபருகொருகடல்வரிமணலிடை
கரைபொருதிரையொலிகெழுமியகழுமலமமர்கனலுருவின
னரைபொருபுலியதளுடையினனடியிணைதொழவருவினெனு
முரைபொடிபடவுறுதுயர்கெடவுயருலகெய்தலொருதலைமையே. (சு)

முதிருறுகதிர்வளரிளமதிசடையினகறிறைதலைதனி
லுதிருறுமயிர்பிணைதவிர்தசையுடைபுலியதளிடையிருள்கடி
கதிருறுசுடரொளிகெழுமியகழுமலமமர்மழுமலிபடை
யதிருறுகழலடிகளதடிதொழுமறிவிலதறிவறியமே. (எ)

கடலெனகிறகெடுமுடியவனடுதிறல்தெறவடிசரணென
வடனிறைபடையருளியபுகழரவணையினனணிகிளர்பிறை
விடனிறைமிடறுடையவன்விரிசடையவன்விடையுடையவனுமை
யுடனுறைபதிகடன்மறுகுடையுயர்கழுமலவியனகரதே. (அ)

கொழுமலருறைபதியுடையவனெடியவனெனவிவர்களுமவன்
விழுமையையளவறிகிலரிறைவிரைபுணர்பொழிலணிவிழவமர்
கழுமலமமர்கனலுருவினனடியிணைதொழுமவரருவினை
யெழுமையுமிலகிலவகைதனிலெளிதிமையவர்வியனுலகமே. (கூ)

அமையனதுவரிழுகியதுகிலணியுடையினரமணுருவர்கள்
சமையமுமொருபொருளெனுமவைசலநெறியனவறவுரைகளு
மிமையவர்தொழுகழுமலமமரிறைவனதடிபரவுவர்தமை
நமையலவினைகளனடைதலிலுயர்நெறிநனிநணுகுவர்களே. (கo)

பெருகியதமிழ்விரகினன்மலிபெயரவனுறைபிணர்திரையொடு
கருகியகிறவிரிகடலடைகழுமலமுறைவிடமெனநனி
பெருகியசிவனடிபரவியபிணைமொழியனவொருபதுமுடன்
மருவியமனமுடையவர்மதியுடையவர்விதியுடையவர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கழுமலம்என்பதும் - சீகாழிக்கொருபெயர்.

திருவிழிமிழலை - திருவிராகம் - பண் - நட்டபாடை.
திருச்சிற்றம்பலம்.

தடமிலவியமலிநிறுவியோர்தழலுமிழ்தருபடவரவுகொ
டடலசுரர்கோடமர்களைகடல்கடைவுழியெழுமிகுசின
விடமடைதருமிடறுடையவன்விடைமிசைவருமவனுறைபதி
திடமலிதருமறைமுறையுணர்மறையவர்நிறைதிருமிழலையே. (க)

தனையொடுதிவிதலகலிதருதகுதிறலுறுசலதரனது
வனையனதலைவிசையொடுவருதிகிரியையரிபெறவருளின
னுமையிடருருசுரருதிமதிபொதிசடையவனுறைபதிமிகு
தினைமலிகடன்மணலணிதருபெறுதிடர்வளர்திருமிழலையே. (உ)

மலைமகடனையிகழ்வதுசெய்தமதியுறுசிறுமனவனதுயர்
தலையினைடழுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர்களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதிள்புடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே. (ங)

மழுவலர்புரமெரியினின்மடிதரவொருகணைசெலநிறுவிய
பெருவலியினனலமலிதருகரனுரமிகுபிணமமர்வன
விருளிடையடையுறவொடுடவிசையுறுபரனினிதுறைபதி
தெருவினில்வருபெருவிழவொலிமலிதரவளர்திருமிழலையே. (ச)

அணிபெறுவடமரநிழலினிலமர்வொடுமடியிணையிருவர்கள்
பணிதரவறவெறிமறையொடுமருளியபரனுறைவிடமொளி
மணிபொருவருமரகதநிலமலிபுனலணைதருவயலணி
திணிபொழில்தருமணமதுதுகறுபதமுரல்திருமிழலையே. (ஞ)

வசையறுவலிவனசரவுருவதுகொடுசினவருதவமுயல்
விசையனதிறன்மலைமகளறிவுறுதிறலமர்மிடல்கொடுசெய்து
அசைவிலபடையருள்புரிதருமவனுறைபதியதுமிகுதரு
திசையினின்மலர்குலவியசெறிபொழின்மலிதருதிருமிழலையே. (சு)

கலமலிதருமறைமொழியொடுகதியுறுபுனல்புகையொளிமுதன்
மலரவைகொடுவழிபடுதிறன்மறையவனுயிரதுகொளவரு
சலமலிதருமறலிதனுயிர்கெடவுதைசெய்தவரனுறைபதி
திலதமிதெனவுலகுகள்புகழ்தருபொழிலணிதிருமிழலையே. (எ)

அரனுறைதிருகயிலையைநிலைகுலைவதுசெய்ததசமுகனது
கரமிருபதுநெரிதரவிரல்நிறுவியகழலடியுடையவன்
வரன்முறையுலகவைதருமலர்வளர்மறையவன்வழிவழுவிய
சிரமதுகொடுபெலிதிரிதருசிவனுறைபதிதிருமிழலையே. (அ)

அயனெடுமெழிலமர்மலர்மகள்மகிழ்கணனளவிடவொளியவோர்
பயமுறுவகைதழல்நிகழ்வதோர்படியுருவதுவரவரன்முறை

சயசயவெனமிகுததிசெயவெளியுருவியலவணுறைபதி
செயநிலவியமதிண்மதியதுதவழ்தரவுயர்திருமிழலையே. (சு)

இகழுருவொடுபறிதலைகொடுமிழிதொழின்மலிசமண்விரகினர்
திகழ்துவருடையுடல்பொதிபவர்கெடவடியவர்மிகவருளிய
புகழுடையிறையுறைபதிபுனலணிகடல்புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருதிகழ்கொடையினர்செறிவொடுதிகழ்திருமிழலையே. (கo)

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரகரிறைதமிழ்விரகனதுரையொருபது
மனமகிழ்வொடுபயில்பவரொழின்மலர்மகள்கலிமகள்சயமக
ளினமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம் - திருவிராகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புவம்வளிகனல்புனல்புவிகலியுனாமறைதிரிகுணமமர்நெறி
திவமலிதருசுரர்முதலியர்திகழ்தருமுயிரவையவைதம
பவமலிதொழிலதுனினைவொடுபதுமகன்மலரதுமருவிய
சிவனதுசிவபுரனினைபவர்செழுநிலனினில்நிலைபெறுவரே. (க)

மலைபலவளர்தருபுவியிடைமறைதருவழிமலிமனிதர்கள்
நிலைமலிசுரர்முதலுலகுகணிலைபெறுவகைநினைவொடுமிகு
மலைகடனடுவறிதுயிலமரியுருவியல்பரனுறைபதி
சிலைமலிமதில்சிவபுரனினைபவர்திருமகளொடுதிகழ்வரே. (உ)

பழுதிலகடல்புடைதழுவியபடிமுதலியவுலகுகண்மலி
குழுவியசுரர்பிறர்மனிதர்கள்குலமலிதருமுயிரவையவை
முழுவதுமழிவகைநினைவொடுமுதலுருவியவரனுறைபதி
செழுமணியணிசிவபுரகர்தொழுமவர்புகழ்மிகுமுலகிலே. (ஈ)

கறைமலிதருமளறெறிமுகைகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமுமவழிபடுமடியவர்
குறைவிலபதமினைதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுனினைபவர்செயமகடலிவரே. (ச)

சினமலியுறுபகைமிகுபொறிசிதைதருவகைவளர்நிறுவிய
மனனுணர்வொடுமலர்மிசையெழுதருபொருணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவதுகொடுவடைதகுபரனுறைவதுகருமதிள்
கனமருவியசிவபுரனினைபவர்கலிமகடாரிகழ்வரே. (ஞ)

சுருதிகள்பலகலைமுதல்கலிதுகளுறுவகைபயில்வொடுமிகு
உருவிய லுலகனைவுபுகழ்தரவழியொழுகுமெயுறுபொறியொழி
யருதவமுயல்பவர்தனதடியடைவகைநினையரனுறைபதி
திருவளர்சிவபுரனினைபவர்திகழ்குலநிலனிடைநிகழுமே. (சு)

கதமிகுகருவுருவொடுவுகிரிடைவுடவரைகணைகணவென
மதமிகுகெடுமுகனமர்வஸீமதிதிகழெயிறதணுதிமிசை
யிதமமர்புவியதனிறுவியவெழிலரிவழிபடவருள்செய்த
பதமுடையவனமர்சிவபுரனினைபவர்நிலவுவர்படியிலே. (எ)

அசைவுறுதவமுயல்வினிலயனருளினில்வருவலிகொடுசிவ
னிசைகயிலையையெழுதருவலகையிருபதுகரமவைனிறுவிய
நிசிசரன்முடியுடைதரவொருவிரல்பண்ணிகொளுமவனுறைபதி
திசைமலிசிவபுரனினைபவர்செழுநிலனினினிகழ்வுடையரே. (அ)

அடன்மலிபடையரியயனுமறிவரியதோரழன்மலிதரு
சுடருருவொடுநிகழ்தரவவர்வெருவொடுதுதியதுசெயவெதிர்
விடமலிகளதுதலமர்கணதுடையுருவெளிபடுமவனகர்
திடமலிபொழிலெழில்சிவபுரனினைபவர்வழிபுவிதிகழுமே. (கூ)

குணமறிவுகணிலையிலபொருளுனாமருவியபொருள்களுமில
தினமெனுமவரொடுசெதமதிமிகுசமணருமலிதமதுகை
யுணலுடையவருணர்வருபரனுறைதருபதியுலகினில்கல
கணமருவியசிவபுரனினைபவரொழிலுருவுடையவர்களே. (கo)

திகழ்சிவபுரநகர்மருவியசிவனடியினைபணிசிரபுர
நகரிறைதமிழ்விரகனதுரைகலமலியொருபதுகவில்பவர்
நிகழ்குலநிலநிறைதிருவுருநிகரிலகொடைமிகுசயமகள்
புகழ்புவிவளர்வழியடிமையின்மிகைபுணர்தரகலமிகுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரிநாயகர், தேவியார் - பெரியநாயகி.

ஆடு பதிகம் - ௨௯.

நீநமறைக்காடு - நீநவிராகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலதனெநடுவிடைநிறுவியோர்சினமலியரவதுகொடுதிவி
தலமலிசுராசுரர்களொலிசலசலகடல்கடைவுழிமிகு
கொலைமலிவிடமெழவவருடல்குலைதரவதுநுகர்பவனெழின்
மலைமலிமதிள்புடைதழுவியமறைவனமமர்தருபரமனே. (க)

கரமுதலியவவயவமவைகடுவிடவரவதுகொடுவரு
வரன்முறையணிதருமவனடல்வலிமிகுபுலியதளுடையின
னிரவலர்துயர்கெடுவகைனினையிமையவர்புரமெழில்பெறவளர்
மாநிகர்கொடைமனிதர்கள்பயின்மறைவனமமர்தருபரமனே. (உ)

இழைவளர்தருமுலைமலைமகளினிதுறைதருமெழிலுருவினன்
முழையினின்மிகுதுயிலுதுமரிமுசிவொடுமெழுளியொடெழு

கழைதருகர்தருகரியிரிதருகயிலையின்மலிபவனிருளுறு
மழைதவழ்தருபொழினிலவியமறைவனமமர்தருபரமனே. (கூ)

நலமிகுதிருவிதழியின்மலர்குதலையொடுகனகியின்முகை
பலசுரதிபடவரவொடுமதிபொதிசடைமுடியினன்மிகு
தலநிலவியமனிதர்களொடுதவமுயல்தருமுனிவர்கடம
மலமறுவகைமனநினைதருமறைவனமமர்தருபரமனே. (சு)

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிகுணனுயர்பசு
பதியதன்மிசைவருபசுபதிபலகலையவைமுறைமுறையுணர்
விதியறிதருநெறியமர்முனிகணனெடுமிகுதவமுயல்தரு
மதிநிபுணர்கள்வழிபடவளர்மறைவனமமர்தருபரமனே. (டு)

கறைமலிதிரிசிகைபடையடல்கனமழுவெழுதரவெறிமறி
முறைமுறையொலிதமருகமுடைதலைமுகிழ்மலிகணிவடமுக
முறைதருகரனுலகினிலுயரொளிபெறுவகைகனினொடுமலர்
மறையவன்மறைவழிவழிபடுமறைவனமமர்தருபரமனே. (சூ)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே. (எ)

சனம்வெருவுறவருதசமுகனெருபதுமுடியொடுமிருபது
கனமருவியபுயகிரிவகைகழலடியிலோர்விரனிறுவின
னினமலிகணநிசிசரன்மகிழ்வுறவருள்செய்தகருணையுனென
மனமகிழ்வொடுமறைமுறையுணர்மறைவனமமர்தருபரமனே. (அ)

அணிமலர்மகடலைமகனையனறிவரியதோர்பரிசினிலெரி
திணிதருதிரளுருவளர்தரவவர்வெருவுறலொடுதுதிசெய்து
பணியுறவெளியுருவியபரனவனுமைமலிகடல்திரளெழு
மணிவளரொளிவெயின்மிகுதருமறைவனமமர்தருபரமனே. (கூ)

இயல்வழிதரவிதுசெலவுறவினமயிலிறகுறுதழையொடு
செயன்மருவியசிறுகடமுடியடைகையர்தலைபறிசெய்துதவ
முயல்பவர்துவர்படமுடல்பொதிபவரறிவருபரனவனணி
வயலினில்வளவளமருவியமறைவனமமர்தருபரமனே. (கo)

வசையறுமலர்மகணிலவியமறைவனமமர்பரமனினை
பசைவொடுமிகுகலிபலபயில்புலவர்கள்புகழ்வழிவளர்தரு
விசையமர்கழுமலகரிறைதமிழ்விரகனதுரையியல்வல
விசைமலிதமிழொருபதும்வலவவருலகினிலெழில்பெறுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மறைக்காட்டீசுரர், தேவியார் - யாழைப்பழித்தமொழியம்மை.

திருக்கோலக்கா - பண் - தக்காகம்.
திருச்சிற்றம்பலம்.

மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீ
ழுடையுங்கொண்டவுருவமென்கொலோ. (க)

பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னிக்
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
யுண்டானஞ்சையுலகமுய்யவே. (உ)

பூணற்பொறிகொளரவம்புன்சடைக்
கோணற்பிறையன்குழகன்கோலக்கா
மாணப்பாடிமறைவல்லானையே
பேணப்பறையும்பிணிகளானவே. (ங)

தழுக்கொள்பாவந்தளரவேண்டுவீர்
மழுக்கொள்செல்வன்மறிசேரங்கையான்
குழுக்கொள்பூதப்படையான்கோலக்கா
விழுக்காவண்ணமேத்திவாழ்மினே. (ச)

மயிலார்சாயன்மாதோர்பாகமா
வெயிலார்சாயவெரித்தவெங்கைதன்
குயிலார்சோலைக்கோலக்காவையே
பயிலாநிற்கப்பறையும்பாவமே. (ஞ)

வெடிகொள்வினையைவீட்டவேண்டுவீர்
கடிகொள்கொன்றைகலந்தசென்னியான்
கொடிகொள்விழவார்கோலக்காவுளெம்
மடிகள்பாதமடைந்துவாழ்மினே. (ட)

நிழலார்சோலைநீலவண்டினங்
குழலார்பண்செய்கோலக் காவுளான்
கழலான்மொய்த்தபாதங்கைகளாற்
றொழலார்பக்கற்றுயரமில்லையே. (ண)

எறியார்கடல்சூழிலங்கைக்கோன்றன்னை
முறியார்தடக்கையடர்த்தமூர்த்திதன்
குறியார்பண்செய்கோலக்காவையே
நெறியாற்றொழுவார்வினைகணீங்குமே. (அ)

நாற்றமலர்மேலயனுநாகத்தி
லாற்றலணைமேலவனுங்காண்கிலாக்

கூற்றமுதைத்தகுழகன்கோலக்கா
வேற்ருன்பாதமேத்திவாழ்மினே. (கூ)

பெற்றமாசுபிறக்குஞ்சமணரு
மூற்றதுவர்தோயுருவிலாளருங்
குற்றமெறியார்கொள்ளார்கோலக்காப்
பற்றிப்பரவப்பறையும்பாவமே. (கo)

நலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா
ருலங்கொள்வினைபோயோங்கிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சத்தபுரீசர், தேவியார் - ஓசைகொடுத்தநாயகி.

சீகாழி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார்கொன்றைப்புரிபுன்சடையீர்
காவாயெனநின்றேத்துங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவர்போலாம்
பாவாரின்சொற்பயிலும்பரமரே. (க)

எந்தையென்றங்கிமையோர்புகுந்தீண்டிக்
கந்தமாலைகொடுசேர்காழியார்
வெந்தநீற்றர்விமலரவர்போலா
மந்திரட்டமாமெடிகளே. (உ)

தேனேவென்றமொழியாளொருபாகங்
கானமான்கைக்கொண்டகாழியார்
வானமோங்குகோயிலவர்போலா
மானவின்பமாமெடிகளே. (ஙூ)

மாணவென்றிக்காலன்மடியவே
காணமாணிக்களித்தகாழியார்
காணர்வாளிதொட்டாரவர்போலாம்
பேணர்புரங்களட்டபெருமானே. (ச)

மாடேயோதமெறியவயற்செந்நெற்
காடேறிச்சங்கீனுங்காழியார்
வாடாமலராள்பங்கரவாபோலா
மேடார்புரமூன்றெரித்தவிறைவரே. (ஞ)

கொங்குசெருத்திகொன்றைமலர்கூட்
கங்கைபுனைத்தசடையாள்காழியா
ரிங்கணரவமாட்டுமவர்போலாஞ்
செங்கணைக்கர்புரத்தையெரித்தாரே. (கூ)

கொல்லிவிடைமுன்பூதங்குனித்தாடுங்
கல்லவடத்தையுகப்பார்காழியா
ரல்லவிடத்தூடங்காரவர்போலாம்
பல்லவிடத்தும்பயிலும்பரமரே. (எ)

எடுத்தவரக்கனெரியவிரலூன்றிக்
கடுத்துமுரியவடர்த்தார்காழியா
ரெடுத்தபாடற்கிரங்குமவர்போலாம்
பொடிக்கணீறுபூசும்புனிதரே. (அ)

ஆற்றலுடையவரியும்பிரமனுந்
தோற்றங்காணவென்றிக்காழியா
ரேற்றமேறுங்கேறுமவர்போலாங்
கூற்றமறுக்குமைத்தகுழகரே. (கூ)

பெருக்கப்பிதற்றுஞ்சமணர்சாக்கியர்
கரக்கும்முரையையிட்டார்காழியா
ரிருக்கின்மலிந்தவிறைவரவர்போலா
மருப்பின்மூலையாள்பங்கத்தையரே. (கo)

காராரவல்சூழ்காழிக்கோன்றன்னைச்
சீராரஞானசம்பந்தன்சொன்ன
பாராரபுகழப்பரவவல்லவ
ரோராவானத்தினிதாவிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்செம்பொன்பள்ளி - பண் - தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களே
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. (க)

வாராரகொங்கைமாதோர்பாகமாய்ச்
சீராரசெம்பொன்பள்ளிமேவிய
வேராரபுரிபுன்சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. (உ)

வரையார்சாரல்தோடுதிலும்வருபொன்னித்
திரையார்செம்பொன்பள்ளிமேவிய

கரையார்விடையொன்றரூரும்பலை
யுரையாதவர்மேலொழியாவூனமே. (கூ)

மழுவாளேந்திமாதோர்பாகமாய்ச்
செழுவார்செம்பொன்பள்ளிமேவிய
வெழிலார்புரிபுன்சடையெம்மிறைவனைத்
தொழுவார்தம்மேற்றுயரமில்லையே. (ச)

மலையார்மகளோடனையமதிளெய்த
சிலையார்செம்பொன்பள்ளியரனையே
யிலையார்மலர்கொண்டெல்லிகண்பகல்
நிலையாவணங்கநில்லாவினைகளே. (ஞ)

அறையார்புனலோடகிலும்வருபொன்னிச்
சிறையார்செம்பொன்பள்ளிமேவிய
கறையார்கண்டத்தீசன்கழல்களே
நிறையால்வணங்கநில்லாவினைகளே. (கூ)

பையாரரவேல்குலாளொடுஞ்
செய்யார்செம்பொன்பள்ளிமேவிய
கையார்சூலமேந்துங்கடவுளே
மெய்யால்வணங்கமேவாவினைகளே. (எ)

வானுந்திங்கள்வளர்புன்சடைவைத்துத்
தேனுர்செம்பொன்பள்ளிமேவிய
வூனுர்தலையிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
யானன்கழலேயடைந்துவாழ்மினே. (அ)

காரார்வண்ணன்கனகமனையானுக்
தேரார்செம்பொன்பள்ளிமேவிய
நீரார்நிமிர்புன்சடையெந்நிமலனே
யோராதவர்மேலொழியாவூனமே. (கூ)

மாசாருடம்பர்மண்டைத்தேரரும்
பேசாவண்ணம்பேசித்திரியவே
தேசார்செம்பொன்பள்ளிமேவிய
வீசாவென்னநில்லாவிடர்களே. (கo)

கறவார்புகலிஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்து
மூறுமாசொல்லிவோங்கிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சொர்ணபுரீசர், தேவியார் - சுகந்தவனாயகி.

திருப்புத்தூர் - பூவணம் - தக்காராகம்.

திருச்சித்ரம்பலம்.

வெங்கள்விம்மூவெறியார்பொழிற்சோலைத்
திங்களோடுதிகழ்க்குந்திருப்புத்தூர்
கங்கைதங்குமுடியாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (க)

வேனல்விம்மூவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திகழ்க்குந்திருப்புத்தூ
ரூனமின்றியுறைவாரவர்போலு
மேனமுள்ளுமெயிறும்பூனவாரே. (உ)

பாங்குகல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றைதிகழ்க்குந்திருப்புத்தூ
ரோங்குகோயிலுறைவாரவர்போலுந்
தாங்குதிங்கடவழ்புன்சடையாரே. (ங)

நாறவிண்டவறுமாமலர்கவ்வித்
தேறல்வண்டுதிகழ்க்குந்திருப்புத்தூ
ரூறல்வாழ்க்கையுடையாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (ச)

இசைவிளங்குமெழில்சூழ்ந்தியல்பாகத்
திசைவிளங்குபொழில்சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்ந்ததலாரே. (ஞ)

வெண்ணிறத்தவிரைபோடலருந்தித்
தெண்ணிறத்தபுனல்பாய்திருப்புத்தூ
ரொண்ணிறத்தவொளியாரவர்போலும்
வெண்ணிறத்தவிடைசேர்கொடியாரே. (ட)

நெய்தலாம்பல்கழுநீர்மலர்ந்தெங்குஞ்
செய்கள்மல்குசிவனூர்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்ந்தாரவர்போலு
மையுணஞ்சமருவுமிடற்றாரே. (ண)

கருக்கமெல்லாங்கமழ்ம்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மைவிழவார்திருப்புத்தூ
ரிருக்கவல்லவிறைவரவர்போலு
மரக்கனெல்கவிரலாலடர்த்தாரே. (அ)

மருவியெங்கும்வளருமடமஞ்ஞை
தெருவுதோறுதிகழ்க்குந்திருப்புத்தூர்ப்

பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலுமறியாப்பெரியோனே. (கூ)

கூறைபோர்க்குந்தொழிலாரமண்கூறல்
தேறல்வேண்டாதெளிமின்திருப்புத்தூ
ராறுகான்குமமர்ந்தாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (கo)

கல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று
மல்லல்தீருமவலமடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - புத்தூரீசர், தேவியார் - சிவகாமியம்மை.
ஆ பதிகம்-உசு.

நீருப்புன்கூர்-பண்-தக்கராகம்.
திருச்சிற்றம்பலம்.

மூத்திலின்றவினைகளவைபோகச்
சித்திசெஞ்சேசிவனூர்திருப்புன்கூ
ரத்தமில்லாவடிகளவர்போலுங்
கத்தமல்குகமழ்புன்சடையாரே. (க)

மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூ
ராவரென்னுமடிகளவர்போலு
மேவினல்லாரெயில்மூன்றெரித்தாரே. (உ)

பங்கயங்கள்மலரும்பழனத்துச்
செங்கயல்கள்திளைக்குந்திருப்புன்கூர்க்
கங்கைதங்குசடையாரவர்போலு
மெங்களுச்சியுறையும்மிறையாரே. (ங)

கரையுலாவுகதிர்மாமணிமுத்தந்
திரையுலாவுவயல்சூழ்திருப்புன்கூ
ருரையினல்லபெருமானவர்போலும்
விரையினல்லமலர்ச்சேவடியாரே. (ச)

பலவவண்ணப்பரிசர்திருமேனி
திகழும்வண்ணமுறையுந்திருப்புன்கூ
ரழகரென்னுமடிகளவர்போலும்
புகழினன்றபுரிபுன்சடையாரே.

தெரிந்திலங்குகழுசீர்வயற்செல்வஞ்
திருத்தின்றவயல்சூழ்திருப்புன்கூர்ப்
பொருந்தின்றவடிகளவர்போலும்
விரிந்திலங்குசடைவெண்பிறையாரே. (ஈ)

பாரும்விண்ணும்பாவித்தொழுதேத்துந்
தேர்கொள்வீதிவிழவார்திருப்புன்கூ
ராரின்றவடிகளவர்போலுங்
கூரின்றவெயின்மூன்றெரித்தாரே. (எ)

மலையதனுருடையமதின்மூன்றுஞ்
சிலையதனலெரித்தார்திருப்புன்கூர்த்
தலைவர்வல்லரக்கன்தருக்கினை
மலையதனலடர்த்துமகிழ்ந்தாரே. (அ)

காடவல்லமலரானுமாலுமாய்த்
தேடின்றருருறையுந்திருப்புன்கூ
ராடவல்லவடிகளவர்போலும்
பாடலாடல்பயிலும்பரமரே. (க)

குண்டுமூற்றிக்கூறையின்றியே
பிண்டமுண்ணும்பிரான்தர்சொற்கொளேல்
வண்டுபாடமலரார்திருப்புன்கூர்க்
கண்டுதொழுமின்காபாலிவேடமே. (க0)

மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்
காடவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சிவலோகநாதர், தேவியார் - சொக்கநாயகி.

திருச்சோற்றுத்துறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செப்பமெஞ்சேரெறிகொள்சிற்றின்பந்
தப்பனென்னுதருளேதுணையாக
வொப்பரொப்பர்பெருமானெளிவெண்ணீற்
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (உ)

ஆலுமெய்யுத்தயிரும்பயின்றுழிதர்
தோலுநூலுந்துதைத்தவனாமார்பர்
மாலுஞ்சோலைபுடைசூழ்மடமஞ்ஞை
யாலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ஊ)

செய்யர்செய்யசடையர்வெண்டோடுபூவா
கைகொள்வேலர்கழலர்கரிகாடல்
தையலாளோர்பாகமாயவெம்
மையர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (கூ)

பிணிகொளாக்கையொழியாப்பிறப்புளீர்
துணிகொள்போரார்துளக்குமழுவாளர்
மணிகொள்கண்டர்மேயவார்பொழி
லணிகொள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ச)

பிறையும்மரவும்புனலுஞ்சடைவைத்து
மறையுமோதிமயானமிடமாக
வுறையுஞ்செல்வமுடையார்காவிரி
யறையுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ஞ)

துடிகளோடுமுழவம்விம்மவே
பொடிகொள்பூசிப்புறங்காடரங்காகப்
படிகொள்பாணிபாடல்பயின்றாடு
மடிகள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (சு)

சாடிக்காலன்மாளத்தலைமாலை
சூடிமிக்குச்சுவண்டாய்வருவார்தாம்
பாடியாடிப்பரவுவாருள்ளத்
தாடிசோற்றுத்துறைசென்றடைவோமே. (எ)

பெண்ணேர்பாகமுடையார்பிறைச்சென்னிக்
கண்ணேர்பாகங்கலந்தநுதலினு
ரெண்ணதாக்கனெடுக்கவூன்றிய
வண்ணல்சோற்றுத்துறைசென்றடைவோமே. (அ)

தொழுவாரிருவர்துயரநீங்கவே
யழலாயோங்கியருள்கள்செய்தவன்
விழவார்மறுகில்விதியால்மிக்க
வெழிலார்சோற்றுத்துறைசென்றடைவோமே. (கூ)

கோதுசாற்றித்திரிவாரமண்குண்ட
ரோதுமோத்தையுணராதமூடநெஞ்சே
நீதிகின்றுநினைவார்வேடமா
மாதிசோற்றுத்துறைசென்றடைவோமே. (கo)

அந்தண்சோற்றுத்துறையம்மானையைச்
சிந்தைசெய்மினடியீராயினீர்
சந்தம்பாவுஞானசம்பந்தன்
வந்தவாறேபுனைதல்வழிபாடே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - தெரிவையாட்செல்வர். அம்பிகையார் - ஒப்பிலாமின்னை.

திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்.

ஊருலாவுபலிகொண்டுலகேத்த
நீருலாவுநிமிர்புன்சடையண்ணல்
சீருலாவுமறையோர்நறையூரில்
சேருஞ்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (க)

காடுகோடுங்கலக்கப்பலிகண்ணி
யோடுங்கங்கையொளிர்புன்சடைதாழ
வீடுமாகமறையோர்நறையூரில்
நீடுஞ்சித்தீச்சரமேநினைநெஞ்சே. (உ)

கல்வியாளர்கனகமழன்மேனி
புல்குகங்கைபுரிபுன்சடையானூர்
மல்குதிங்கட்பொழில்சூழ்நறையூரிற்
செல்வர்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (ங)

நீடவல்லநிமிர்புன்சடைதாழ
வாடவல்லவடிகளிடமாகும்
பாடல்வண்டுபயிலுநறையூரிற்
சேடர்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ச)

உம்பராலுமுலகினவராலுந்
தம்பெருமையளத்தற்கரியானூர்
நண்புலாவுமறையோர்நறையூரிற்
செம்பொன்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ஞ)

கூருலாவுபடையான்விடையேறிப்
போருலாவுமழுவானனலாடி
பேருலாவுபெருமானறையூரிற்
சேருஞ்சித்தீச்சரமேயிடமாமே. (ட)

* அன்றிநின்றவவுணர்புரமெய்த
வென்றிவில்லிவிமலன்விரும்புமூர்
மன்றில்வாசமணமார்நறையூரிற்
சென்றுசித்தீச்சரமேதெளிநெஞ்சே. (எ)

அரக்கனண்மையழியவரைதன்னில்
நெருக்கவூன்றுமம்மிரலான்விரும்புமூர்
பரக்குங்கீர்த்தியுடையார்நறையூரிற்
றிருக்கொள்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (அ)

ஆழியானுமலரினுறைவானு
மூழிதேடியுணராவகையால்

* அன்றிநின்ற - பாடத்தின்ற.

சூழுமேடெரியாமொருவன்சீர்
சூழ்சித்தீச்சரமேதொழுமினே. (கூ)

மெய்யின்மாசர்விரிதுண்டுகிலினர்
கையிலுண்டுகழுமுமைகொள்ளே
லுய்யவேண்டிலிறைவனறையூரிற்
செய்யுஞ்சித்தீச்சரமேதவமாமே. (கo)

மெய்த்தலாவுமறையோர்நறையூரிற்
சித்தன்சித்தீச்சரத்தையுயர்காழி
யத்தன்பாதமணிஞானசம்பந்தன்
பத்தும்பாடப்பறையும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சித்தநாதேசர், தேவியார் - அழகாம்பிகை.

ஸ்ரீபுகலி - பண் - தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

விதியாய்வினையாய்வினைவின்பயனுமிக்
கொதியாவருகூற்றையுதைத்தவர்சேரும்
பதியாவதுபங்கயமின்றலரத்தேன்
பொதியாபொழில்சூழ்புகலிக்கர்தானே. (க)

ஒன்னார்புரமூன்றுமெரித்தவொருவன்
மின்னாரிடையாளொடுங்கூடியவேடந்
தன்னாலுறைவாவதுதண்கடல்சூழ்ந்த
பொன்னார்வயற்பூம்புகலிக்கர்தானே. (உ)

வலியின்மதிசெஞ்சடைவைத்தமணாளன்
புலியின்னதள்கொண்டரையார்த்தபுனிதன்
மலியும்பதிமாமறையோர்நிறைந்தீண்டிப்
பொலியும்புனற்பூம்புகலிக்கர்தானே. (ங)

கயலார்தடங்கண்ணியொடும்மெருதேறி
யயலார்கடையிற்பலிகொண்டவழகன்
னியலாலுறையும்மிடமெண்டிசையோர்க்கும்
புயலார்கடற்பூம்புகலிக்கர்தானே. (ச)

காதார்கனபொற்குழைதோடதிலங்கத்
தாதார்மலர்தண்சடையேறமுடித்து
* நாதாலுறையும்மிடமாவதுநாளும்
போதார்பொழிற்பூம்புகலிக்கர்தானே. (ஞ)

* நாதன் - நாதான் என நின்றது.

வலமார்படைமான்மழுவேந்தியமைந்தன்
கலமார்கடனஞ்சமுதண்டகருத்தன்
குலமார்பதிகொன்றைகள்பொன்சொரியத்தேன்
புலமார்வயற்பூம்புகலிக்கரசானே. (உ)

கறுத்தான்கனலால்மதிள்மூன்றையும்வேவச்
செறுத்தான்றிகழுங்கடனஞ்சமுதாக
வறுத்தானயன்றன்சிரமைந்திலுமொன்றைப்
பொறுத்தானிடம்பூம்புகலிக்கரசானே. (ஊ)

தொழிலான்மிகுதொண்டர்கள்தோத்திரஞ்சொல்ல
வெழிலார்வரையாலன்றரக்கனைச்செற்ற
கழலாணுறையும்மிடங்கண்டல்கண்மின்டிப்
பொழிலானமலிபூம்புகலிக்கரசானே. (ஈ)

மாண்டார்சுடலைப்பொடிப்பூசிமயானத்
தீண்டாநடமாடியவேந்தன்றன்மேனி
நீண்டானிருவர்க்கெரியாயரவாரம்
பூண்டானகாபூம்புகலிக்கரசானே. (ஏ)

உடையார்துகில்போர்த்துழல்வார்சமண்கையி
லுடையாதனசொல்லுவராதர்களோத்தைக்
கிடையாதவன்றன்னகர்நன்மலிபூகம்
புடையார்தருபுகலிக்கரசானே. (ஐ0)

இரைக்கும்புனலஞ்சடைவைத்தவெம்மான்றன்
புரைக்கும்பொழிற்பூம்புகலிக்கரசன்றன்மே
லுரைக்குந்தமிழ்ஞானசம்பந்தனெண்மாலை
வரைக்குந்தொழில்வல்லவர்கல்லவர்தாமே. (ஐஉ)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாங்கணின் முட்டம் - பண் - தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்குங்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயுங்
கொழுநீர்வயல்சூழ்தகுதாங்கணின்முட்டம்
தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே. (க)

விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குழல்தொங்கியகாட்டிற்
குடையார்புனல்மல்குகுதாங்கணின்முட்ட
முடையாவெனையாளுடையெந்தைபிரானே. (உ)

சூலப்படையான்விடையானகலிற்றுன்
காலன்றனையாருயிர்வவ்வியகாலன்

கோலப்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டத்
தேலங்கமழ்புன்சடையெந்தையிரானே. (க)

வாடாவினிகொன்றைவலத்தொருகாதிற்
றோடார்குழையானலபாலனகோக்கி
கூடாதனசெய்தகுரங்கணின்முட்ட
மாடாவருவாரவரன்புடையாரே. (ச)

இறையார்வளையாளையோர்பாகத்தடக்கிக்
கறையார்மிடற்றுரன்கரிகீறியகையான்
குறையார்மதிசூடிகுரங்கணின்முட்டத்
துறைவானெமையாளுடையொண்சுடராரே. (ஞ)

பலவும்பயனுள்ளனபற்றுமொழிந்தோங்
கலவம்மயில்காமுறுபேடையோடாடிக்
குலவும்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டங்
நிலவும்பெருமானடிநித்தல்நினைந்தே. (ஈ)

மாடார்மலர்க்கொன்றைவளர்சடைவைத்துத்
தோடார்குழைதாளொருகாதிலங்கக்
கூடார்மதிளெய்தகுரங்கணின்முட்டத்
தாடாரரவம்மரையார்த்தமர்வானே. (எ)

மையார்நிறமேனியரக்கர்தங்கோனை
யுய்யாவகையாலடர்த்தின்னருள்செய்த
கொய்யார்மலர்சூடிகுரங்கணின்முட்டங்
கையாற்றொழுவார்வினைகாண்டலரிதே. (அ)

வெறியார்மலர்த்தாமரையானெடுமால
மறியாதசைந்தேத்தவோராரழலாகுங்
குறியானிமிர்ந்தான்றன்குரங்கணின்முட்டங்
கெறியாற்றொழுவார்வினைநிற்கெலிலாவே. (கூ)

கழுவார்துவராடைகலந்துமெய்போர்க்கும்
வழுவாச்சமண்சாக்கியர்வாக்கவைகொள்ளேல்
சூழுமின்சடையண்ணல்குரங்கணின்முட்டத்
தெழில்வெண்பிறையானடிசேர்வதியல்வே. (கo)

கல்லார்மதிட்காழிஞானசம்பந்தன்
கொல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்டஞ்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வாலீசுவரர், தேவியார் - இறையார்வளையம்மை.

அடி பதிகம் ஈறு.

திரு இடைமருது - பண் - தக்காகம்.

இருச்சிற்றம்பலம்.

ஓடேகலனுண்பதுமூரிடுபிச்சை
காடேயிடமாவதுகல்லாலினிழற்கீழ்
வாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந்
தீடாவுறைகின்றவிடைமருதீதோ. (க)

தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதோர்பாம்பரையார்த்தபரம
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (உ)

வெண்கோவணங்கொண்டொருவெண்டலையேந்தி
யங்கோல்வளையாளையோர்பாகமமர்ந்து
பொங்காவருகாவிரிக்கோலக்கரைமே
லெங்கோனுறைகின்றவிடைமருதீதோ. (ங)

அந்தம்மறியாதவருங்கலமுந்திக்
கந்தங்கமழ்காவிரிக்கோலக்கரைமேல்
வெந்தபொடிப்பூசியவேதமுதல்வ
னெந்தையுறைகின்றவிடைமருதீதோ. (ச)

வாசங்கமழ்மாமலர்ச்சோலையில்வண்டே
தேசம்புகுந்தீண்டியோர்செம்மையுடைத்தாய்ப்
பூசம்புகுந்தாடிப்பொலிந்தழகாய
வீசனுறைகின்றவிடைமருதீதோ. (ஞ)

வன்புற்றிளநாகமசைத்தழகாக
வென்பிற்பலமாலையும்பூண்டொருதேறி
யன்பிற்பிரியாதவளோடுமுடனு
யின்புற்றிருந்தான்றனிடைமருதீதோ. (ட)

தேக்குந்திமிலும்பலவுஞ்சுமந்துந்திப்
போக்கிப்புறம்பூசலடிப்பவருமா
லார்க்குந்திரைக்காவிரிக்கோலக்கரைமே
லேற்கவிருந்தான்றனிடைமருதீதோ. (ண)

பூவார்குழலாரகில்கொண்டுபுகைப்ப
வோவாதடியாரடியுள்குளிர்ந்தேத்த
வாவாவரக்கன்றனையாற்றலழித்த
வேவார்சிலையான்றனிடைமருதீதோ. (அ)

மூற்றாததோர்பான்மதிசூடுமுதல்வ
னாற்றாமரையானுமால்காணவொண்ணாத்

பொற்றேனியுந்தாதும்பொலிந்தழகாக
வெற்றேயுறைகின்றவிடைமருதீதே. (கூ)

றிறுதேரருஞ்சிலசமணும்புறங்கூற
றெறியேபலபத்தர்கள்கைதொழுதேத்த
வெறியாவருகாவிரிக்கோலக்கரைமே
லெறியார்மழுவாளனிடைமருதீதே. (கூ0)

கண்ணூர்கமழ்காழியுண்ஞானசம்பந்த
னெண்ணூர்புகழெந்தையிடைமருதின்மேற்
பண்ணூடிசைபாடியபத்தும்வல்லார்கள்
விண்ணூருலகத்தினில்வீற்றிருப்பாரே. (கூக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மருதீசர், தேவியார் - நலமுலைநாயகி.

தீந அன்பிலாலந்துறை - பண் - தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

கணைதேடொளிமாலரவம்வரைவில்லா
வினையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணையாமயிலுங்குயில்சேர்மடவன்ன
மணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. (க)

சடையார்சதிரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைக்கிள்ளை
யடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. (உ)

ஊரும்மரவஞ்சடைமேலுறவைத்துப்
பாரும்பலிகொண்டொலிபாடும்பரமர்
நீருண்கயலும்வயல்வாளைவராலோ
டாரும்புனலன்பிலாலந்துறையாரே. (கூ)

பிறையும்மரவுமுறவைத்திமுடிமேல்
நறையுண்டெழுவன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோதவொலிசென்
றறையும்புனலன்பிலாலந்துறையாரே. (ச)

நீடும்புனற்கங்கையுந்தங்கமுடிமேற்
கூடும்மலையாளொருபாகமமர்ந்தார்
மாடும்மழவம்மதரம்மடமாத
ராடும்பதியன்பிலாலந்துறையாரே. (ஞ)

நீரார்திருமேனியருணமிலார்பா
லூரார்சுலையாயினதும்பர்பெருமான

வேரூரகிலும்மிருசந்தனமுந்தி
யாரூர்வயலன்பிலாலத்துறையாரே. (ச)

செடியார்தலையிற்பலிகொண்டினிதுண்ட
படியார்பரமன்பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனல்தூவிநின்றேத்து
மடியார்தொழுமன்பிலாலத்துறையாரே. (எ)

விடத்தார்திகழுமிடற்றன்னடமாடி
படத்தாரரவம்விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக்கோன்வரையார
வடர்த்தாருளன்பிலாலத்துறையாரே. (அ)

வணங்கிம்மலர்மேலயனுமெடுமாலும்
பிணங்கியறிகின்றிலர்மற்றும்பெருமை
சுணங்குமுகத்தம்முலையாளொருபாக
மணங்குந்திகழன்பிலாலத்துறையாரே. (கூ)

தறியார்துகில்போர்த்துழல்வார்சமண்கையர்
நெறியாவுணராநிலைகேடினர்சித்தல்
வெறியார்மலர்கொண்டடிவீழுமவரை
யறிவாரவரன்பிலாலத்துறையாரே. (கூ)

அரவார்புனலன்பிலாலத்துறைதன்மேற்
கரவாதவர்காழியர்ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்பத்திசைபாடவல்லார்போய்
விரவாகுவர்வானிடைவீடெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சத்திவாகீசர், தேவியார் - சவுந்தராயகி.

சீகாழி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அடலேறமருங்கொடியண்ணல், மடலார்குழலாளொடுமன்னுங்
கடலார்புடைசூழ்தருகாழி, தொடர்வாரவர்தூநெறியாரே. (க)

நிரையார்புனல்சூடியசெல்வன், வரையார்மகளோடுமகிழ்ந்தான்
கரையார்புனல்சூழ்தருகாழி, நிரையார்மலர்தூவுமினின்றே. (உ)

இடியார்குரலேறுடையெந்தை, துடியாரிடையாளொடுதுன்னுங்
கடியார்பொழில்சூழ்தருகாழி, யடியாரறியாரவலம்மே. (ங)

ஒளியார்விடமுண்டவொருவன், னளியார்குழன்மங்கையொடன்பாய்
கனியார்பொழில்சூழ்தருகாழி, யெனிதாமதுகண்டவரின்பே. (ச)

பனியார்மலரார்தருபாதன், முனிதானுமையோடுமுயங்கிக்
கனியார்பொழில்சூழ்தருகாழி, யினிதாமதுகண்டவரீடே. (இ)

கொலையார்தருகூற்றமுதைத்து, மலையான்மகளோடுமகிழ்ந்தான்
கலையார்தொழுதேத்தியகாழி, தலையாற்றொழுவார்தலையாரே. (ஈ)

திருவார்சிலையாலெயிலெய்து, உருவாருமையோடுடனானன்
கருவார்பொழில்சூழ்தருகாழி, மருவாதவர்வான்மருவாரே. (எ)

அரக்கன்வலியொல்கவடர்த்து, வரைக்குமகளோடுமகிழ்ந்தான்
சுரக்கும்புனல்சூழ்தருகாழி, நிரக்குமலர்தூவநினைந்தே. (அ)

இருவர்க்கெரியாகியிமிர்ந்தா, னுருவிற்பெரியாளொடுசேரும்
கருநற்பரவைகமழ்காழி, மருவப்பிரியும்வினைமாய்மே. (கூ)

சமண்சாக்கியர்தாமலர்தூற்ற, வமைந்தானுமையோடுடனன்பாய்க்
கமழ்ந்தார்பொழில்சூழ்தருகாழி, சுமந்தார்மலர்தூவுதல்தொண்டே. (கo)

கலமாகியஞானசம்பந்தன், கலமார்கடல்சூழ்தருகாழி
நிலவாகநினைந்தவர்பாடல், வலரானவர்வானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - பண் - தக்கராகம்.

திருச்சிறம்பலம்.

அரையார்விரிகோவணவாடை, நரையார்விடையூர்தியனாகான்
விரையார்பொழில்வீழிம்மிழலை, யுரையாலுணர்வாருயர்வாரே. (க)

புனைதல்புரிபுன்சடைதன்மேற், கனைதல்லொருகங்கைகரந்தான்
வினையில்லவர்வீழிம்மிழலை, நினைவில்லவர்நெஞ்சமுநெஞ்சே. (உ)

அழவல்லவராடியும்பாடி, யெழவல்லவரெதையடிமேல்
விழவல்லவர்வீழிம்மிழலை, தொழவல்லவர்நல்லவர்தொண்டே. (ங)

உரவம்புரிபுன்சடைதன்மே, லரவம்மரையார்த்தவழகன்
விரவும்பொழில்வீழிம்மிழலை, பரவும்மடியாரடியாரே. (ச)

நரிதாகியநஞ்சணிகண்டன், வரிதாகியவண்டறைகொன்றை
விரிதார்பொழில்வீழிம்மிழலை, யுரிதாகினைவாருயர்வாரே. (ஞ)

சடையார்பிறையான்சரிபூதப், படையான்கொடிமேலதொர்பைங்கண்
விடையானுறைவீழிம்மிழலை, யடைவாரடியாரவர்தாமே. (ஙு)

தெரியார்கழலுஞ்சிலம்பார்க்க, நெரியார்குழலாளொடுநின்றான்
வெரியார்பொழில்வீழிம்மிழலை, யறிவாரவலம்மறியாரே. (எ)

டனாயவலியொல்கவரக்கன், வனையாவிரலூன்றியமைந்தன்
னினையார்வயல்வீழிம்மிழலை, பனையாவருவாரடியாரே. (அ)

மருள்செய்திருவர்மயலாக, வருள்செய்தவனூரழலாகி
வெருள்செய்தவன்வீழிம்மிழலை, தெருள்செய்தவர்தீவினைதேய்வே. (கூ)

துளங்குக்தெறியாரவர்தொன்மை, வளங்கொள்ளன்பின்புல்லமண்டேரை
விளங்கும்பொழில்வீழிம்மிழலை, யுளங்கொள்பவர்தம்மினோயேவே. (கூ)

களிர்காழியுண்ஞானசம்பந்தன், குளிரார்சடையானடிகூற
மிளிரார்பொழில்வீழிம்மிழலை, கிளர்பாடல்வல்லார்க்கில்லைகேடே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

நிந ஐயாறு - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார்மதியோடுறரீருங், நிலையார்சடையாரிடமாகும்
மலையாரமுமாமணிசந்தோ, டலையார்புனல்சேருமையாறே. (க)

மதியொன்றியகொன்றைவடத்தன், மதியொன்றவுதைத்தவர்வாழ்வும்
மதியின்னெடுசேர்கொடிமாடம், மதியம்பயில்கின்றவையாறே. (உ)

கொக்கினிறகின்னெடுவன்னி, புக்கசடையார்க்கிடமாகுந்
திக்கினிசைதேவர்வணங்கும், அக்கின்னரையாரதையாறே. (ங)

சிறைகொண்டபுரம்மவைசிக்தக், கறைகொண்டவர்காதல்செய்கோயில்
மறைகொண்டுல்வானவர்தம்மி, லறையும்மொலிசேருமையாறே. (ச)

உமையாளொருபாகமதாகச், சமைவாரவர்சார்விடமாகும்
மமையாருடல்சோர்தரமுத்தம், மமையாவருமத்தினையாறே. (ஞ)

தலையின்றெடைமாலையணிந்து, கலிகொண்டதோர்கையினர்சேர்வா
னிலைகொண்டமனத்தவர்நித்தம், மலர்கொண்டுவணங்குமையாறே. (ரு)

வரமொன்றியமாமலரோன்றன், சிரமொன்றையறுத்தவர்சேர்வாம்
வரைநின்றிழிவார்தருபொன்னி, யரவங்கொடுசேருமையாறே. (எ)

வரையொன்றதெடுத்தவரக்கன், சிரமங்கெரித்தவர்சேர்வு
விரையின்மலர்மேதகுபொன்னித், திரைதன்னெடுசேருமையாறே. (அ)

சங்கத்தயனுமறியாமைப், பொங்குஞ்சுடரானவர்கோயில்
கொங்கிற்பொலியும்புனல்கொண்டு, அங்கிக்கெதிர்காட்டுமையாறே. (கூ)

துவராடையர்தோலுடையார்கள், கவர்வாய்மொழிகாதல்செய்யாதே
தவராசர்கடாமரையாளை, டவர்தாமணையந்தினையாறே. (கஅ)

கலையார்கலிக்காழியர்மன்னன், னலமார்தருஞானசம்பந்தன்
னலையார்புனல்சூழுமையாற்றைச், சொலுமாலைவல்லார்துயர்வீடே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்பொன்சோதீசுரர், தேவியார் - அறம்வளர்த்தநாயகி.

நிருப்பனையூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடைமேல்மதிமத்தம், விரவிப்பொலிகின்றவனூராம்
நிரவிப்பலதொண்டர்களிறும், பரவிப்பொலியும்பனையூரே. (க)

எண்ணெண்றினைத்தவர்தம்பா, லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையின்வண்டு, பண்ணின்றெளிசெய்பனையூரே. (உ)

அலருமெறிசெஞ்சடைதன்மேல், மலருமிறையொன்றுடையானூர்
சிலரென்றுமிருந்தடிபேணப், பலருமபரவும்பனையூரே. (ஈ)

இடியார்கடனஞ்சமுதுண்டு, பொடியாடியமேனியினனூர்
நடியார்தொழமன்னவரேத்தப், படியார்பணியும்பனையூரே. (ச)

அறையார்கழல்மேலரவாட, விறையார்பலிதேர்ந்தவனூராம்
பொறையார்மிகுசீர்விழமல்கப், பறையாரொலிசெய்பனையூரே. (ஙி)

அணியார்தொழவல்லலரேத்த, மணியார்மிடறொன்றுடையானூர்
தணியார்மலர்கொண்டிருபோதும், பணிவார்பயிலும்பனையூரே. (சு)

அடையாதவர்மூவெயில்சீறும், விடையான்விறலார்கரியின்றோ
லுடையானவனெண்பலபூதப், படையானவனூர்பனையூரே. (எ)

இலகும்முடிபத்துடையானை, யலல்கண்டருள்செய்தவெம்மண்ணல
லுலகில்லுயிர்சீர்நிலமற்றும், பலகண்டவனூர்பனையூரே. (அ)

வரமுன்னிமகிழ்ந்தெழுவீர்காள், சிரமுன்னடிதாழவணங்கும்
பிரமன்னெடுமாலறியாத, பரமன்னுறையும்பனையூரே. (கூ)

அழிவல்லமணரொடுதேரர், மொழிவல்லனசொல்லியபோதும்
மிழிவில்லதோர்செம்மையினனூர், பழியில்லவர்சேர்பனையூரே. (கo)

பாரார்விடையான்பனையூர்மேற், சீரார்தமிழ்ஞானசம்பந்தன்
னூரதசொன்மாலைகள்பத்தும, மூரூர்றினவாருயர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சவுந்தரேசர், தேவியார் - பெரியநாயகி.

நிருமயிலாடுதுறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிகன்மாமலர்கொண்டே, யிரவும்பகலுந்தொழுவார்கள்
சிரமொன்றியசெஞ்சடையார்வாழ், வரமாமயிலாடுதுறையே. (க)

உரவெங்கரியின்னுரிபோர்த்த, பரமன்னுறையும்பதியென்பர்
குரவஞ்சுரபுன்னையும்வன்னி, மருவும்மயிலாடுதுறையே. (உ)

உளனத்திருணீங்கிடவேண்டில், ஞானப்பொருள்கொண்டடிபேணுந்
தெளனத்தினியானமருஞ்சேர், வானம்மயிலாடுதுறையே. (ஈ)

அஞ்சொண்புலனுமவைசெற்ற, மைஞ்சன்மயிலாடுதுறையை
நெஞ்சொன்றினினைந்தெழுவார்மேற், றுஞ்சும்பிணியாயினதானே. (ச)

தணியார்மதிசெஞ்சடையான்றன், னணியார்ந்தவருக்கருளென்றும்
பிணியாயினதீர்த்தருள்செய்யும், மணியாரம்மயிலாடுதுறையே. (ஙி)

தொண்டரிசைபாடுநெடுந்தேர், கண்டுதுதிசெய்பவனூராம்
பண்டம்பலவேதியரோத, வண்டார்மயிலாடுதுறையே. (சு)

அணங்கோடொருபாகமமர்ந்து, இணங்கியருள்செய்தவனூராம்
தணங்கும்புரிநூலர்கள்கூடி, வணங்கும்மயிலாடுதுறையே. (அ)

சிரங்கையினிலேந்தியிரந்த, பரங்கொள்பாமேட்டிவரையா
லரங்கவ்வரக்கன்வலிசெற்ற, வரங்கொண்மயிலாடுதுறையே. (அ)

ஞாலத்தைநுகர்ந்தவன்றானுங், கோலத்தயனும்மறியாத
சீலத்தவனூர்சிலர்கூடி, மாலத்தீர்மயிலாடுதுறையே. (க)

கின்றுண்சமணுமெடுந்தேரர், றொன்றும்மறியாமையுயர்ந்த
வென்றியருளாமவனூராம், மன்றன்மயிலாடுதுறையே. (கo)

கயர்காழியுள்ஞானசம்பந்தன், மயல்தீர்மயிலாடுதுறைமேற்
செயலாலுரைசெய்தனபத்தும், முயர்வாமிவையுற்றுணர்வார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாயூரநாதர், தேவியார் - அஞ்சுகநி.

திருவேட்களம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமுமாதியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவமியம்பமலைமகள்காணின்றுடிச்
சந்தமிலங்குகுதலைகங்கைதண்மதியம்மயலேததும்ப
வெந்தவெண்ணீறுமெய்பூசுமேட்களகன்னகாரே. (க)

சடைதனைத்தாழ்தலுமேறமுடித்துச்சங்கவொண்டோடசரிந்திலங்கப
புடைதனிற்பாரிடஞ்சூழப்போதருமாறிவர்போல்வா
ருடைதனிலுல்விறற்கோவணவாடையுண்பதுமூரிடுபிச்சைவெள்ளே
விடைதனையூர்தியகந்தார்வேட்களகன்னகாரே. (உ)

பூதமும்பல்கணமும்புடைசூழப்பூமியும்விண்ணுமுடன்பொருந்தச்
சீதமமவெம்மையுமாகிச்சீரொடுநின்றவெஞ்செல்வ
ரோதமுங்கானலுஞ்சூழ்தருவேலியுள்ளங்கலந்திசையாலெழுந்த
வேதமும்வேள்வியுமோவாவேட்களகன்னகாரே. (ங)

அரைபுல்குமைந்தலையாடலரவமமையவெண்கோவணத்தோடசைத்து
வரைபுல்குமார்பிலோராமைவாங்கியணிந்தவர்தாங்
திரைபுல்குதெண்கடறண்கழியோதந்தேனலங்கானலில்வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழில்சூழ்ந்தவேட்களகன்னகாரே. (ச)

பண்ணுறுவண்டறைகொன்றையலங்கல்பால்புரைநீறுவெண்ணூல்கிடந்த
பெண்ணுறுமார்பினர்பேணுறும்மதியெய்தபெருமான் [திரம்
கண்ணுறுநெற்றிதவத்தவெண்டங்கட்கண்ணியர்விண்ணவர்கைதொழுதேத்
வெண்ணிறமால்விடையண்ணல்வேட்களகன்னகாரே. (ஞ)

கறிவளர்குன்றமெடுத்தவன்காதற்கண்கவரைக்கணையோடுடலம்
பெற்றிவளாராழலுண்ணப்பொங்கியபூதபுராணர்
மறிவளரங்கையர்மங்கையோர்பங்கர்மைஞ்ஞிறமானுரித்தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந்தாரார்வேட்களகன்னகராரே. (சு)

மண்பொடிக்கொண்டெரித்தார்சுடலைமாமலைவேந்தன்மகள்மகிழ
நண்பொடிச்சோரின்றுடிநொய்யன்செய்யவுகந்தார்
கண்பொடிவெண்டலையோடுகையேந்திக்கால்னைக்காலால்கடந்துகந்தார்
வெண்பொடிச்சேர்திருமார்பர்வேட்களகன்னகராரே. (எ)

ஆழ்தருமால்கடனஞ்சினையுண்டாரமுதமமரர்க்கருளிச்
சூழ்தருபாம்பரையார்த்துச்சூலமோடொண்மழுவேந்தித்
தாழ்தருபுன்சடையொன்றினவாங்கித்தண்மதியம்மயலேததும்ப
வீழ்தருகங்கைகரந்தார்வேட்களகன்னகராரே. (அ)

திருவொளிகாணியபேதுறுகின்றதிசைமுகனுந்திசைமேலளந்த
கருவரையேந்தியமாலுங்கைதாழின்றதுமல்லா
லருவரையொல்கவெடுத்தவரக்கனுடலிற்றோள்களாழத்தழுந்த
வெருவுறவூன்றியபெம்மான்வேட்களகன்னகராரே. (கூ)

அத்தமண்டோய்துவாரமண்ருண்டர்யாதுமல்லாவுரையேயுரைத்துப்
பொய்த்தவம்பேசுவதல்லாற்புறனுரையாதொன்றுங்கொள்ளேல்
முத்தனவெண்முறுவல்லுமையஞ்சமூரிவல்லானினீருரிபோர்த்த
வித்தகவேதமுதல்வர்வேட்களகன்னகராரே. (கo)

விண்ணியல்மாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங்கும்விரிந்திலங்க
கண்ணியசீரவர்காழிற்றமிழ்ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபேணியவேட்களமேன்மொழிந்த
பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொடுபாவமிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாசுபதேசுரர், தேவியார் - நல்லநாயகியம்மை.

ஆ பதிகம் - கூக.

நீநவாழ்கோளிபுத்தூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிதையங்கொண்டுபலபலகூறி
வீடியுடைவானெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றுண்டிகாண்போம். (க)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம்
புரைகெழுவெண்டலையேற்றிப்போர்விடையேறிப்புகழ

வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வோம். (உ)

பூணெடுகோகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையூரையமுண்டியென்றுபல்கூறி
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (ஊ)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கைதாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபல்கூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றனடிகாண்போம். (எ)

கனமலர்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
றினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (ஙி)

அளிவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சி
கலைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்ன
வளைபொலிமுன்கைமடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தலையிழ்மாமலர்தூவித்தலைவனதாளிணைசார்வோம். (சு)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்தழற்றலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபல்கூறி
மடல்நெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித்தலைவனதாணிழல்சார்வோம். (எ)

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனெளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். (அ)

கரியவனன்முகன்கைதொழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியுரையமிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம். (கூ)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினர்புறங்கூற
வெண்டலையிற்பலிகொண்டல்விரும்பினையென்றுவிளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கள்மாமலர்தூவத்தோன்றின்றுனடிசேர்வோம். (கூ)

கல்லுயர்மாக்கடனின்றுழலுருவுகரைபொருகாழியமூதூர்
கல்லுயர்கான்மறைவாணனற்றமிழ்ஞானசம்பந்தன்

வல்லுயர்சூலமும்வெண்மழுவாளுமல்லலன்வாழ்கொளிபுத்தூர்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்வெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணவீசுரர், தேவியார் - வண்டார்பூங்குழலம்மை.

நீதப்பாம்புரம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருஞான்மறையாளர்பாம்புரமன்னகராரே. (க)

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடெருக்கணிசடைய
ரக்கினொடாமைபூண்டழகாகவனலதுவாடுமெமடிகண்
மிக்கசொல்வேதவேள்வியுளெங்கும்விண்ணவர்விரைமலர்தூவப்
பக்கம்பல்பூதம்பாடிடவருவார்பாம்புரமன்னகராரே. (உ)

துன்னலினுடையுடுத்ததன்மேலோர்தூறைகல்லரவதுசுற்றிப்
பின்னுவார்சடைகடாழவிட்டாடிப்பித்தாய்த்திரியுமெம்பெருமான்
மன்னுமாமலர்கவிடாளுமாமலையாட்டியுந்தாமும்
பன்னுநூல்மறைகள்பாடிடவருவார்பாம்புரமன்னகராரே. (ங)

துஞ்சுகாடுறைந்துதோற்றமுமில்லாச்சுடர்விடுசோதியெம்பெருமா
னஞ்சுசேர்கண்டமுடையவென்னுதார்கள்ளிருண்டஞ்செயுமம்பர்
மஞ்சுதோய்சோலைமாமயிலாடமாடமாளிகைதன்மேலேறிப்
பஞ்சுசேர்மெல்லடிப்பாவையர்பயிலும்பாம்புரமன்னகராரே. (ச)

கதியதனயலேகுதலைமாலைகாண்மதிசடைமிசையணிந்து
கதியதுவாகக்காளிமூன்காணக்கானிடைநடஞ்செய்தகருத்தர்
விதியதுவழுவாவேதியர்வேள்விசெய்தவரோத்தொலியோவாப்
பதியதுவாகப்பாலையுந்தாமும்பாம்புரமன்னகராரே. (ஞ)

ஓதிநன்குணர்வார்க்குணர்வுடையொருவரொளிதிகழுருவஞ்சேரொருவர்
மாதினையிடமாவைத்தவெம்வள்ளல்மான்மறியேந்தியமைந்தர்
ஆதியாருலென்றமரர்கள்பணியவலைகடல்கடையவன்றெழுந்த
பாதிவெண்பிறைசடைவைத்தவெம்பரமர்பாம்புரமன்னகராரே. (ரு)

மாலிருக்கன்முசக்கரமீருமலரவற்கொருமுகமொழித்தே
யூலின்மேலுமோர்கால்வருக்கருவியனலதுவாடுமெமடிகள்
காலனைக்காய்ந்துதங்கழலடியார்க்காமனைப்பொடிபடகோக்கிப்
பாலனுக்கருள்கள்செய்தவெம்மடிகள்பாம்புரமன்னகராரே. (எ)

விடைத்தலல்லாத்தன்வெம்பினையெடுத்தமெல்லியலிருவிசயன்றி
யடர்த்தவன்றனக்கருள்செய்தவடிகளனலதுவாடுமெம்மண்ணல்

மடக்கொடியவர்கள்வருபுனலாலம்வர்த்திபயிலின்கரைமேற்
படப்பையிற்கொணர்த்துபருமணிதரும்பாம்புரன்னகாரே. (அ)

கடிபடுகமலத்தயனெடுமாலுங்காதலோடடிமுடிதேடச்
செடிபடுவினைகள்தீர்த்தருள்செய்யுந்தீவணரெம்மூடைச்செல்வர்
முடியுடையமரர்முனிகணத்தவர்கள்முறைமுறையடிபணிந்தேத்தப்
படியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரன்னகாரே. (கூ)

குண்டர்சாக்கியருங்குணமிலாதாருங்குற்றுவிட்டுடுக்கையர்தாமுங்
கண்டவாறுரைத்துக்கால்கிபிர்த்துண்ணுங்கையர்தாமுள்ளவாறறியார்
வண்டுசேர்குழலிமலைமகணடுங்கவாரணமுரிசெய்துபோர்த்தார்
பண்டுகொன்செய்தபாவங்கள்தீர்ப்பார்பாம்புரன்னகாரே. (கo)

பார்மலிந்தோங்கிப்பருமதிள்சூழ்ந்தபாம்புரன்னகாரைக்
கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலமுதுபதிக்கவுணி
கார்மலிந்தோங்குஞான்மறைஞானசம்பந்தன்செந்தமிழ்வல்லார்
சீர்மலிந்தழகார்செல்வமதோங்கிச்சிவனடிநண்ணுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாம்புரேசர், தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

திருப்பேணுபெருந்துறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பைம்மாகாகம்பன்மலர்க்கொன்றைபன்றிவெண்கொம்பொன்றுபூண்டு
செம்மாந்தையம்பெய்துகன்றுசொல்லிச்செய்தொழில்பேணியோர்செல்வ
ரம்மானேக்கியந்தளிர்மேனியரிவையோர்பாகமமர்ந்த
பெம்மானல்கியதொல்புகழாளர்பேணுபெருந்துறையாரே. (க)

மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி
பாவங்கடீர்தரகல்வினல்கிபபல்கணநின்றுபணியச்
சாவமதாகியமால்வரைகொண்டுதண்மதிள்மூன்றுமெரித்த
தேவர்கள்தேவரெம்பெருமானர்தீதில்பெருந்துறையாரே. (உ)

செய்பூங்கொன்றைகூவிளமாலைசென்னியுட்சேர்புனல்சேர்த்திக்
கொய்பூங்கோதைமாதுமைபாகங்கூடியோர்பீடைவேடர்
கைபோனனற்கனிகுலைவாழைக்காய்குலையிற்கமுகினேப்
பெய்பூம்பாளைபாய்ந்திழிதேறல்பில்குபெருந்துறையாரே. (ஊ)

நிலனெடுவானுநீரொடுதியும்வாயுவுமாகியோரைந்து
புலனெடுவென்றுபொய்ம்மைகடீர்த்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
கலனெடுதீங்குந்தானலதின்றிநன்கெழுசிந்தையராகி
மலனெடுமாசுமில்லவர்வாழுமல்குபெருந்துறையாரே. (எ)

பணிவாயுள்ளகன்தெழுகாயின்பத்தர்கள்பத்தினமைசெய்யத்
துணியார்தன்களுள்ளநிலாதசமடர்கள்சோதிப்பரியா

தணியார்நீலமாகியகண்டரதிலுருஞ்சுதலைமேல்
மணிவாய்நீலம்வாழ்கழற்றேறல்மல்குபெருந்துறையாரே. (தீ)

எண்ணூர்தங்கள்மும்மதின்வேவவேவலங்காட்டியவெந்தை
விண்ணோர்சாரத்தன்னருள்செய்தவித்தகர்வேதமுதல்வர்
பண்ணூர்பாடலாடலறாபசுபதியீசனூர்பாகம்
பெண்ணுணையவார்சடையண்ணல்பேணுபெருந்துறையாரே. (சு)

விழையாருள்ளநன்கெழுகாவில்வினைகெடவேதமாறங்கம்
பிழையாவண்ணம்பண்ணியவாற்றாற்பொரியோரேத்துமபெருமான்
றழையார்மாவின்றழ்கனியுந்தித்தண் * அரிசில்புடைசூழ்ந்த
குழையார்சோலைமென்னடையன்னங்கூடுபெருந்துறையாரே. (எ)

பொன்னங்கானல்வெண்டிரைசூழ்ந்தபொருகடல்வேலியிலங்கை
மன்னனெல்கமால்வரையூன்றிமாமுராணகழ்ந்தோளூ
மூன்னவைவாட்டிப்பின்னருள்செய்தமுனிவிலவேலுடைமூர்த்தி
யன்னங்கன்னிபேடையோடாடியணவுபெருந்துறையாரே. (அ)

புள்வாய்போழ்ந்துமாநிலங்கீண்டபொருகடல்வண்ணனும்பூவி
னுள்வாயல்லிமேலுறைவானுமுணர்வரியானுமைகேள்வன்
முள்வாய்தாளின்றுமரைமொட்டின்முகமலரக்கயல்பாயக்
கள்வாய்நீலங்கண்மலரேய்க்குங்காமர்பெருந்துறையாரே. (சு)

குண்டுக்கேருங்கூறைகளுந்துங்கூப்பிலர்செப்பிலராகி
மிண்டும்மிண்டர்மிண்டவைகண்டுமிண்டுசெயாதுவிரும்புந்
தண்டும்பாம்பும்வெண்டலைசூலந்தாங்கியதேவர்தலைவர்
வண்டுந்தேனும்வாழ்பொழிற்சோலைமல்குபெருந்துறையாரே. (கo)

கடையார்மாடநன்கெழுவீதிக்கழுமலவூரன்கலந்த
கடையாரின்சொல்ஞானசமபந்தனல்லபெருந்துறைமேய
படையார்சூலம்வல்லவன்பாதமபரவியபத்திவைவல்லா
ருடையாராகியுள்ளமுமொன்றியுலகினில்மன்னுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவநந்தநாதர், தேவியார் - மலையரசியம்மை.

திருக்கற்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடுத்திகழ்மென்முலையாளோர்பாகமதாகமகித்துத்
தடுத்தினைசேர்புனல்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
ரிடத்திகழ்மூப்புரிநூலர்தண்பமோடின்பமதெல்லாங்
கடத்தவர்தாதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (க)

---

* அரிசில் என்பது ஒருநதி, அது அரிசொல்ல வந்ததினால் அரிசொல் நதியென்று கும்பகோணபுராணத்திற் சொல்லப்படுகின்றது.

அங்கமோராறுடைவேள்வியானவருமறையான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிதர்
சங்கமதார்குறமாதர்தங்கையில்வளைகவர்தல்தாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. (4)

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னெளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகைவிம்முங்கற்குடிமாமலையாரே. (5)

ஒருங்களிரியிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்கலமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்முளைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. (6)

போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தா
சேர்மலிகேழல்கிளைத்தவிண்ணெளியாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. (7)

உலந்தவரென்பதணிந்தேயூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்
கலந்தருசிந்தையராகிமாமலிமாலையினூலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (8)

மாணிடமார்தருகையர்மாமழுவாரும்வலத்தா
ரூனிடையாதலையோட்டிலுண்கலனாகவுகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையால்தினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. (9)

வாளமர்வீரனினந்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வேய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. (10)

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணுக்கொள்கையர்வெள்விடையூர்வர்
வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழற்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. (11)

மூத்தவராடையினருமுசுகருப்பொடியாரு
காத்தவர்பொய்ம்மொழியார்கணையிலராமதிவைத்தா
ரேத்துயர்பத்தர்கள்சித்தநிறைஞ்சவவரிடஞ்செல்வாங்
காத்தவர்தாமருசோலைக்கற்குடிமாமலையாரே. (12)

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

கோலம்பொழிற்சோலைப்பெடையோடாடிமடமஞ்ஞை
யாலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (சு)

ஈர்க்கும்புனல்சூடியிளவெண்டிங்கள்முதிரவே
பார்க்கும்மரவம்பூண்டாடிவேடம்பயின்றுருங்
கார்க்கொள்கொடிமுல்லைகுருந்தமேறிக்கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கு)

பறையுஞ்சிறுகுழலும்யாழும்பூதம்பயிற்றவே
மறையும்பலபாடிமயானத்துறையுமைந்தனர்
பிறையும்பெரும்புனல்சேர்சடையினுரும்பேடைவண்
டுறையும்பழையனூராலங்காட்டெமமடிகளே. (கூ)

நுணங்குமறைபாடியாடிவேடம்பயின்றுரு
மிணங்குமலைமகளோடிருகூறொன்றுயிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர்வைகவேத்தும்வாழ்த்துங்கேட்
டுணங்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (எ)

கணையும்வரிசிலையுமெரியுங்கூடிக்கவர்ந்துண்ண
வினையிலெயில்மூன்றுமெரித்திட்டாரெம்மிறைவனர்
பிணையுஞ்சிறுமறியுங்கலையுமெல்லாங்கங்குல்சேர்க்
கணையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (அ)

கவிழமலைதளரக்கடகக்கையாலெடுத்தான்றோள்
பவழநுனைவிரலாற்பையவூன்றிப்பரிந்தாருங்
தவழுங்கொடிமுல்லைபுறவஞ்சோறவம்பூத்
தவிழும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கூ)

பகலுமிரவுஞ்சேர்பண்பினுருவண்போரா
திகலுமிருவர்க்குமெரியாய்த்தோன்றிநிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடுவல்லார்க்கென்றுந்தீயபோ
யகலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கo)

போழும்பலபேசிப்போதுசாற்றித்திரிவாரும்
வேழம்வருமளவும்வெயிலேதற்றித்திரிவாரும்
கேழல்வினைபோகக்கேட்பிப்பாருங்கேடிலா
வாழ்வர்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கக)

சாக்கியங்கமழ்மறுகிற்சண்பைஞானசம்பந்த
னாக்கண்பழையனூராலங்காட்டெம்மடிகளை
வேக்கனருளாலேவிரித்தபாடல்விரைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஊர்த்தாண்டவேசுரர், தேவியார்-வண்டார்குழலியம்மை.

திரு அதிகைவீரட்டானம் - பண் - தக்காராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம்
வண்டுமருள்பாடவளர்பொன்விரிகொன்றை
விண்டதொடையலானுடும்வீரட்டானத்தே. (க)

அரும்புங்குரும்பையுமலைத்தமென்கொங்கைக்
கரும்பின்மொழியாளோடன்கையனல்விசிச்
சுரும்புண்விரிகொன்றைச்சுடர்பொற்சடைதாழ
விரும்புமதிகையுளாடும்வீரட்டானத்தே.)

ஆடலழனாகமரைக்கிட்டசைத்தாடப்
பாடல்மறைவல்லான்படுதம்பலிபெயர்வான்
மாடமுகட்டின்மேல்மதிதோயதிகையுள்
வேடம்பலவல்லானுடும்வீரட்டானத்தே. (ங)

எண்ணரியிலெய்தானிறைவனனலேந்தி
மண்ணர்முழவதிரமுதிராமதிசூடிப்
பண்ணர்மறைபாடப்பரமனதிகையுள்
விண்ணோர்பரவநின்றுடும்வீரட்டானத்தே. (ச)

கரிபுன்புறமாயகழிந்தாரிடுகாட்டிற்
றிருநின்றெருதுகையாற்றிருவாமதிகையு
ளெரியேந்தியபெருமானெரிபுன்சடைதாழ
விரியும்புனல்சூடியாடும்வீரட்டானத்தே. (ஞ)

தளங்குஞ்சுடரங்கைத்துதையவிலோடி
இளங்கொம்பனசாயலுமையோடிசைபாடி
வளங்கொள்புனல்சூழ்ந்தவயலாரதிகையுள்
விளங்கும்பிறைசூடியாடும்வீரட்டானத்தே. (சு)

பாதம்பலரேத்தப்பரமன்பரமேட்டி
பூதம்புடைசூழப்புலித்தோலுடையாகக்
கீதமுமைபாடக்கெடிலவடபக்கம்
வேதமுதல்வனின்றுடும்வீரட்டானத்தே. (எ)

கல்லார்வரையரக்கன்றடந்தோள்கவின்வாட
வொல்லையடர்த்தவனுக்கருள்செய்ததிகையுட்
பல்லார்பகுவாயகுவெண்டலைசூடி
வில்லாலெயிலெய்தானுடும்வீரட்டானத்தே. (அ)

கெடியானன்முகனுங்கிளர்ந்தானைக்காண்கிலார்
பொடியாடுமார்பானைப்புரிநூலுடையானைக்

கடியார்கழுநீலம்மல்குமதிகையுள்
வெடியார்தலையேந்தியாடும்வீரட்டானத்தே. (க)

அரையோடலர்பிண்டிமருவிக்குண்டிகை
சுரையோடனேந்தியுடைவிட்டுழல்வார்க
ளுரையோடுரையொவ்வாதுமையோடனகி
விரைதோயலர்தாளுடும்வீரட்டானத்தே. (கo)

ஞாழல்கமழ்காழிஞானசம்பந்தன்
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைச்சொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகவினைவாவினையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டில் - செடிலநதிக்கு வடபக்கத்திலிருக்கின்றது.

திரிபுரவிசயஞ்செய்த வீரட்டானம்.

சுவாமிபெயர்-அதிகைநாதர், வீரட்டானேசுவரர், தேவியார் - திருவதிகைநாயகி.

திருச்சிராபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லடைந்தவெண்டலையிற்பலிகொள்வதன்றியும்போய்
வில்லடைந்தபுருவநல்லாண்மேனியில்வைத்தலென்ன
சொல்லடைந்தநான்மறையோடங்கங்கலைகளெல்லாஞ்
செல்லடைந்தசெல்வர்வாழுஞ்சிராபுரமேயவனே. (க)

கொல்லைமுல்லைகையினாளோர்கூறதுவன்றியும்போ
யில்லல்வாழ்க்கைப்பலிகொண்டுண்ணுமாதரவென்னைகொலாஞ்
சொல்லரண்டபெருமையாளர்தொல்கலைகற்றுவல்லார்
செல்லரண்டசெல்வமல்குசிராபுரமேயவனே. (உ)

நீரடைந்தசடையின்மேலோர்நிகழ்மதியன்றியும்போ
யூரடைந்தவேறதேறியுண்பலிகொள்வதென்ன
காரடைந்தசோலைசூழ்ந்துகாமரம்வண்டிசைப்பச்
சீரடைந்தசெல்வமோங்குசிராபுரமேயவனே. (ங)

கையடைந்தமானினேகொராரவன்றியும்போய்
மெய்யடைந்தவேட்கையோடுமெல்லியல்வைத்தலென்னே
கையடைந்தகளைகளாகச்செங்கழுநீர்மலர்கள்
செய்யடைந்தவயல்கள்சூழ்ந்தசிராபுரமேயவனே. (ச)

புரமெரித்தபெற்றியோடும்போர்மதயானைதன்னைக்
காமெடுத்துத்தோலுரித்தகாரணமாவதென்னே
மாமுரித்தேரலுடுத்தமாதவர்தேவரேத்துஞ்
சீரமெடுத்தகைகள்கூப்புஞ்சிராபுரமேயவனே. (ஞ)

கண்ணுமூன் றுமுடையதன்திக்கையினில்வெம்மழுவும்
பண்ணுமூன் றுவீணையோடுபாம்புடன்வைத்ததென்னே
எண்ணுமூன் றுகனலுமோம்பியெழுமையும்விழுமியராய்த்
திண்ணமூன் றுவேள்வியாளர்சிரபுரமேயவனே. (சு)

குறைபடாதவேட்கையோடுகோல்வளையாளொருபாற்
பொறைபடாதவின்பமோடுபுணர்தருமெய்ம்மையென்னே
இறைபடாதமென்முலையார்மாளிகைமேலிருந்து
நிறைபடாதபாடலோங்குசிரபுரமேயவனே. (எ)

மலையெடுத்தவாளரக்கனஞ்சவொருவிரலால்
நிலையடுத்தகொள்கையானேநின்மலனேநினைவார்
தலையடுத்தசொற்பயில்வார்மேதகுவீதிதோறுஞ்
சிலையெடுத்ததோளினனேசிரபுரமேயவனே. (அ)

மாலினைமலரினனும்வந்தவர்காணுது
சாலுமஞ்சப்பண்ணினீண்டதத்துவமேயதென்னே
காலுவேதமோதலார்கள்நந்துணையென்றிறைஞ்சச்
சேலுமேயுங்கழனிசூழ்ந்தசிரபுரமேயவனே. (கூ)

புத்தரோடுசமணர்சொற்கள்புறனுரையென்றிருக்கும்
பத்தர்வந்துபணியவைத்தபான்மையதென்னேகொலாம்
மத்தயானையுரியும்போர்த்துமங்கையொடும்முடனே
சித்தர்வந்துபணியுஞ்செல்வச்சிரபுரமேயவனே. (கo)

தெங்கணீண்டசோலைசூழ்ந்தசிரபுரமேயவனை
யங்கணீண்டமறைகள்வல்லவணிகொள்சம்பந்தனுரை
பங்கணீங்கப்பாடவல்லபத்தர்கள்பாரிதன்மேற்
சங்கமோடுடீடிவாழ்வர்தன்மையினுலவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சிரபுரமென்பதுஞ் - சோழிக்கொருபெயர்.

தீருச்சேய்ஞலூர் - பண் - பழநீதக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நூலடைந்தகொள்கையாலேநுன்னடிகூடுதற்கு
மாலடைந்தநால்வர்கேட்கநல்கியநல்லறத்தை
யாலடைந்தநீழல்மேவியருமறைசொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (க)

நீறடைந்தமேனியின்கணேரிழையாளொருபாற்
கூறடைந்தகொள்கையன்றிக்கோலவளர்சடைமே
லாறடைந்தநிங்கள்சூடியரவமணிந்ததென்னே
சேறடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (உ)

ஊனடைந்தவெண்டலையிலுண்பலிதிரிந்து
கானடைந்தபேய்களோடுபூதங்கலந்துடனே

மானடைந்தநோக்கிகாணமகிழ்ந்தெரியாடலென்னே
தேனடைந்தசோலைமல்குசெய்ஞலூர்மேயவனே. (கூ)

வீணடைந்தமும்மதிலும்விண்மலையாவரவி
ணடைந்தவெஞ்சரத்தால்கல்லெரியூட்டலென்னே
பாணடைந்தவண்டுபாடும்பைம்பொழில்சூழ்ந்தழகார்
சேணடைந்தமாடமல்குசெய்ஞலூர்மேயவனே. (சு)

பேயடைந்தகாடிடமாட்பேணுவதன்றியும்போய்
வேயடைந்ததோளியஞ்சவேழமுரிந்ததென்னே
வாயடைந்தான்மறையாறங்கமோடைவேள்வி
தியடைந்தசெங்கையாளர்செய்ஞலூர்மேயவனே. (டு)

காடடைந்தவேனமொன்றின்காரணமாகிவந்து
வேடடைந்தவேடனகிவிசயனெடெய்ததென்னே
கோடடைந்தமால்களிற்றுக்கோச்செங்கணற்கருள்செய்
சேடடைந்தசெல்வர்வாழுஞ்செய்ஞலூர்மேயவனே. (கூ)

பீரடைந்தபாலதாட்டப்பேணுதவன்றூதை
வோடடைந்துபாய்ந்ததாளைவேர்தடிந்தான்றனக்குத்
தாரடைந்தமாலைசூட்டித்தலைமைவகுத்ததென்னே
சீரடைந்தகோயில்மல்குசெய்ஞலூர்மேயவனே. (எ)

மாவடைந்ததேரரக்கன்வலிதொலைவித்தவன்ற
னுவடைந்தபாடல்கேட்டுநயந்தருள்செய்ததென்னே
பூவடைந்தான்முகன்போற்பூசுராபோற்றிசெய்யுஞ்
சேவடைந்தவூர்தியானேசெய்ஞலூர்மேயவனே. (அ)

காரடைந்தவண்ணனெடுகனகமனையாளும்
பாரிடந்தும்விண்பறந்தும்பாதமுடிகாணர்
சீரடைந்துவந்துபோற்றச்சென்றருள்செய்ததென்னே
தேரடைந்தமாமறுகிற்சேய்ஞலூர்மேயவனே. (கூ)

மாசடைந்தமேனியாருமனந்திரியாதகஞ்சி
நேசடைந்தவூணினுருநேசமிலாததென்னே
வீசடைந்ததோகையாடவிரைகமழும்பொழில்வாய்
தேசடைந்தவண்டுபாடுஞ்செய்ஞலூர்மேயவனே. (கo)

சேயடைந்தசெய்ஞலூரிற்செல்வன்சீர்பரவித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணிபுரத்தலைவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின்னுரைகள்
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டில் - சுப்பிரமணியசுவாமியினுண்டான தலம்.
சுவாமிபெயர்-சத்தகிரீசுவரர், தேவியார்-சஜ்ஜனதேவிநாயகி.

திருநள்ளாறு - பண் - பழந்தக்கராகம்.

பச்சைத்திருப்பதிகம்.

இது-சமணர்கள் வாதின்பொருட்டுத் தியிலிட்டபோது வேகாதிருந்தது.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுகள்ளாறே. (க)

தோடுடையகாதுடையன்சீரூலுடையன்தொலியாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
னேடுடையமேலுலகமேடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுகள்ளாறே. (உ)

ஆன்முறையாலாற்றவெண்ணீறுடியணியிமையோர்
பான்முறையால்வைத்தபாதம்பத்தர்பணிந்தேத்த
மான்மறியும்வெண்மழுவுஞ்சூலமும்பற்றியகை
நான்மறையானமபெருமான்மேயதுகள்ளாறே. (ங)

புல்கவல்லவார்சடைமேற்பூம்புனல்பெய்தயலே
மல்கவல்லகொன்றைமாலைமதியோடுடன்சூடிப்
பல்கவல்லதொண்டர்தம்பொற்பாதநிழற்சேர
நல்கவல்லநம்பெருமான்மேயதுகள்ளாறே. (ச)

ஏறுதாங்கியூர்திபேணியோர்கொளிளமதிய
மாறுதாங்குஞ்சென்னிமேலோராடரவஞ்சூடி
நீறுதாங்கிநூல்கிடந்தமார்பினிரைகொன்றை
நாறுதாங்குநம்பெருமான்மேயதுகள்ளாறே. (ஞ)

திங்களுச்சிமேல்விளங்குந்தேவனிமையோர்க
ளெங்களுச்சியெம்மிறைவனென்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சியால்வணங்குந்தன்னடியார்கட்கெல்லா
நங்களுச்சிநம்பெருமான்மேயதுகள்ளாறே. (ட)

வெஞ்சுடர்த்தியங்கையேந்திவிண்கொள்முழவதிர
வஞ்சிடத்தோராடல்பாடல்பேணுவதன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர்திங்கள்சூடித்திகழ்தருகண்டத்துள்ளே
நஞ்சடைந்தநம்பெருமான்மேயதுகள்ளாறே. (ண)

சிட்டமார்ந்தமும்மதிளுஞ்சிலையரைதீயம்பினற்
சுட்டுமாட்டிச்சுண்ணவெண்ணீறுடுவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்தசென்னிமேலோர்பான்மதியஞ்சூடி
நட்டமாடுநம்பெருமான்மேயதுகள்ளாறே. (அ)

உண்ணலாகாநஞ்சுகண்டத்துண்டேயொடுக்கி
யண்ணலாகாவண்ணாழூலாரழல்போலுருவ
மெண்ணலாகாவுள்வினையென்றெள்கவலித்திருவர்
கண்ணலாகாகம்பெருமான்மேயதுகள்ளாறே. (கூ)

மாசுமெய்யர்மண்டைத்தேரர்குண்டர்குணமிலிகள்
பேசும்பேச்சைமெய்யென்றெண்ணியங்கெறிசெல்லன்மின்
மூசுவண்டார்கொன்றைசூடிமும்மதிலும்முடனே
காசஞ்செய்தகம்பெருமான்மேயதுகள்ளாறே. (கo)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புகல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புகள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ள-சப்தஸ்தியாகர் தலங்களிலொன்று.
சுவாமிபெயர்-தெர்ப்பாரணியர், தேவியார்-போகமார்த்தபூண்முலையம்மை.

ஆடு பதிகம்-சகூ

நீநுவலிவலம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒல்லையாறியுள்ளமொன்றிக்கள்ளமொழித்துவெய்ய
சொல்லையாறித்தூய்மைசெய்துகாமவினையகற்றி
கல்லவாறேயுன்றனைநாவினவின்றேத்த
வல்லவாறேவந்துகல்காய்வலிவலமேயவனே. (க)

இயங்குகின்றவிரவிதிங்கள்மற்றுற்றேவரெல்லாம்
பயங்களாலேபற்றிநின்பாற்சித்தந்தெளிகின்றிலர்
தயங்குசோதிசாமவேதாகாமனைக்காய்ந்தவனே
மயங்குகின்றேன்வந்துகல்காய்வலிவலமேயவனே. (உ)

பெண்டிர்மக்கள்சுற்றமென்னும்பேதைப்பெருங்கடலை
விண்டுபண்டேவாழமாட்டேன்வேதனேகோய்கலியக்
கண்டுகண்டேயுன்றனைநங்காதலிக்கின்றதுள்ளம்
வண்டுகிண்டிப்பாடுஞ்சோலைவலிவலமேயவனே. (ங)

மெய்யராகிப்பொய்மைநீக்கிவேதனையத்துறந்து
செய்யராஞ்சிந்தையானேதேவர்குலக்கொழுந்தே
கையனேயுன்றனைம்காரூரவிற்றுகின்றேன்
வையமுன்னேவந்துகல்காய்வலிவலமேயவனே. (ச)

தஞ்சும்போதந்துற்றும்போதஞ்சொல்லுவனுன்றிறமே
தஞ்சமில்லாத்தேவர்வந்துன்றாளினைக்கீழ்ப்பணிய
நஞ்சையுண்டாய்க்கென்செய்கேனாரூரினேன்தடியேன்
வஞ்சமுன்டென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (ஞ)

புரிசடையாய்புண்ணியனேகண்ணிலார்மூவெயிலு
மெரியவெய்தாயெம்மெருமானென்றிமையோர்பரவுங்
கரியுரியாய்காலகாலாநீலமணிமிடற்று
வரியரவாவக்துகல்காய்வலிவலமேயவனே. (சு)

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியே
னுயுனின்பாலன்புசெய்வானுதரிக்கின்றதுள்ள
மாயமாயகாயந்தன்னுளேவர்கின்றொன்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (எ)

நீரொடுங்குஞ்சென்சடையாய்நின்னுடையபொன்மலையை
வேரொடுமெடுத்தேக்தலுற்றவேக்தனிராவணனைத்
தேரொடும்போய்வீழ்ந்தலறத்திருவிரலாலடர்த்த
வாரொடுங்குங்கொங்கைபங்கவலிவலமேயவனே. (அ)

ஆதியாயகான்முகனுமாலுமறிவரிய
சோதியானேநீதியில்லேன்சொல்லுவதுன்றிறமே
யோதினாளுமுன்னேபேத்துமென்னாவினேயவலம்
வாதியாமேவக்துகல்காய்வலிவலமேயவனே. (கூ)

* பொதியிலானேபூவணத்தாய்பொன்றிகழுங்கயிலைப்
பதியிலானேபத்தர்சித்தம்பற்றுவிடாதவனே
விதியிலாதார்வெஞ்சமணர்சாக்கியரென்றிவர்கள்
மதியிலாதாரென்செய்வாரோவலிவலமேயவனே. (கo)

வன்னிகொன்றைமத்தஞ்சூடும்வலிவலமேயவனைப்
பொன்னிகாடன்புகலிவேந்தன்ஞானசம்பந்தன்சொன்ன
பன்னுபாடல்பத்தும்வல்லார்மெய்த்தவத்தோர்விரும்பு
மன்னுஞ்சோதியிசனேடமன்னியிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மனத்துணைநாதர், தேவியார் - வாளையங்கண்ணி.

திருச்சோபுரம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கணானையீருரிவைபோர்த்துவிளங்குமொழி
மங்கைபாகம்வைத்துகந்தமாண்பதுவென்னைகொலாங்
கங்கையோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானேதூயநீற்றுச்சோபுரமேயவனே. (க)

விடையமர்த்துவெம்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தண்புனலைத்தாங்கியதென்னைகொலாங்

---

* பொதியில் - என்பது பொதிகைமலை அது வைப்புத்தலங்களிலொன்று. திக்கலூர் பிடாரர் கோவந்தபுத்தூர் குருக்கேத்திரம் பொதியமலை தேனூர் - என்னுஞ் செய்யுளாலுணர்க.

கடையுயர்ந்தமும்மதிலுங்காய்த்தனலுள்ளழுந்தத்
தொடைநிகழ்ந்தவெஞ்சிலையாய்சோபுரமேயவனே. (உ)

தீயராயவல்லரக்கர்செந்தழலுள்ளழுந்தச்
சாயவெய்துவானவரைத்தாங்கியதென்னேகொலாம்
பாயும்வெள்ளேயேற்றையேறிப்பாய்புலித்தோலுடுத்த
தூயவெள்ளீற்றினனேசோபுரமேயவனே. (ஊ)

பல்லிலோடுகையிலேந்திப்பல்கடையும்பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கைமேலதானவாதரவென்னேகொலாம்
வில்லிவென்றதுண்புருவவேனெடுங்கண்ணியொடுந்
தொல்லையூழியாகின்றாய்சோபுரமேயவனே. (எ)

காற்றமிக்ககொன்றைதுன்றுசெஞ்சடைமேல்மதிய
மேற்றமாகவைத்துகந்தகாரணமென்னேகொலா
மூற்றமிக்ககாலன்றன்னையொல்கவுதைத்தருளித்
தோற்றமீறுமாகின்றாய்சோபுரமேயவனே. (ஏ)

கொன்னவின்றமுவிலேவற்கூர்மழுவாட்படையன்
பொன்னெவென்றகொன்றைமாலைசூடும்பொற்பென்னேகொலா
மன்னமன்னமென்னடையாள்பாகமமர்ந்தரைசேர்
துன்னவண்ணவாடையினாய்சோபுரமேயவனே. (ஐ)

குற்றமின்மையுண்மைநீயென்றுன்னடியார்பணிவார்
கற்றல்கேள்ஞானமானகாரணமென்னேகொலாம்
வற்றலாமைவாளரவம்பூண்டயன்வெண்டலையிற்
றுற்றலானகொள்கையானேசோபுரமேயவனே. (ஒ)

விலங்கலொன்றுவெஞ்சிலையாக்கொண்டுவிறலரக்கர்
குலங்கள்வாழுமூரெரித்தகொள்கையிதென்னேகொலா
மிலங்கைமன்னுவாளரவுணர்கோனெயெழில்விரலாற்
றலங்கலூன்றிவைத்துகந்தாய்சோபுரமேயவனே. (ஓ)

விடங்கொணாகமால்வரையைச்சுற்றிவிரிதிரைநீர்
கடைந்தஞ்சையுண்டுகந்தகாரணமென்னேகொலா
மிடந்துமண்ணையுண்டமாலுமின்மலர்மேலயனுந்
தொடர்ந்துமுன்னங்காணமாட்டாச்சோபுரமேயவனே. (கூ)

புத்தரோடுபுன்சமணர்பொய்யுரையேயுரைத்துப்
பித்தராகக்கண்டுகந்தபெற்றிமையென்னேகொலா
மத்தயானையீருரிவைபோர்த்துவளர்சடைமேற்
றுத்திநாகஞ்சூடினானேசோபுரமேயவனே. (கஎ)

சோலைமல்குதண்வயல்சூழ்சோபுரமேயவனைச்
சீலமிக்கதொல்புகழார்சிரபுரக்கோனல்லத்தால்

ஞாலமிக்கதண்டமிழால்ஞானசம்பந்தன்சொன்ன
கோலமிக்கமாலைவல்லார்கூடுவர்வானுலகே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

௬கோட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சோபுரநாதர், தேவியார் - சோபுரநாயகி.

திருநெடுங்களம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுன்னைப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினுலயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (க)

கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னை
நினைத்தனையாமிடற்றில்வைத்தநிருந்தியதேவரின்னை
மனத்தகத்தேர்பாடலாடல்பேணியிராப்பகலு
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (உ)

நின்னடியேவழிபடுவானிமலாநினைக்கருதி
வென்னடியாணுயிரைவவ்வேலென்றடற்கூற்றுதைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கு
நின்னடியாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஊ)

மலைபுரிந்தமன்னவன்றன்மகளையோர்பால்மகிழ்ந்தா
யலைபுரிந்தகங்கைதங்குமவிர்சடையாரூரா
தலைபுரிந்தபலிமகிழ்வாய்தலைவநின்றுணிழற்கீழ்
நிலைபுரிந்தாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (எ)

பாங்கினல்லார்படிமஞ்செய்வார்பரிடமும்பலிசேரத்
தூங்கிசல்லார்பாடலோடுதொழுகழலேவணங்கித்
தாங்கிநில்லாவன்பினேடுந்தலைவநின்றுணிழற்கீழ்
நீங்கிநில்லாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஏ)

விருத்தனுகிப்பாலனுகிவேதமோர்நான்குணர்ந்து
கருத்தனுகிக்கங்கையாளைக்கமழ்சடைமேற்கரந்தாய்
யருத்தனுயவாதிதேவனடியிணையேபரவி
நிருத்தர்கீதரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஐ)

கூறுகொண்டாய்மூன்றுமொன்றுக்கூட்டியோர்வெங்கணையால்
மாறுகொண்டார்புரமெரித்தமன்னவனேகொடிமே
லேறுகொண்டாய்சாந்தமீதன்றெம்பெருமானணிந்த
நீறுகொண்டாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஒ)

குன்றிலுச்சிமேல்விளங்குங்கொடிமதிள்சூழிலங்கை
யன்றினின்றவரக்கர்கோனையருவரைக்கீழடர்த்தாய்

யென்றுகல்லவாய்மொழியாலேத்தியிராப்பகலு
நின்றுதைவோரிடர்களீயாய்நெடுங்களமேயவனே. (அ)

வேழவெண்கொம்பொசித்தமாலும்விளங்கியகான்முகனுஞ்
சூழவெங்குகேடவாங்கோர்சோதியுளாகிநின்றாய்
கேழல்வெண்கொம்பணிந்தபெம்மான்கேடிலாப்பொன்னடியி
னீழல்வாழ்வாரிடர்களீயாய்நெடுங்களமேயவனே. (கூ)

வெஞ்சொற்றஞ்சொலாக்கின்றவேடமிலாச்சமணுந்
தஞ்சமில்லாச்சாக்கியருந்தத்துவமொன்றறியார்
தஞ்சலில்லாவாய்மொழியாற்றோத்திரநின்னடியே
நெஞ்சில்வைப்பாரிடர்களீயாய்நெடுங்களமேயவனே. (கo)

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
காடவல்லபனுவன்மாலிஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்துமபாடவல்லார்பாவமபறையுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - நித்தியசுந்தரர், தேவியார் - ஒப்பிலாநாயகி.

திருமுதுகுன்றம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
காவராயுகண்ணுபாரும்விண்ணெரிகால்நீரு
மேவராயவிமையமலரோன்செங்கண்மாலிசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே. (க)

பற்றுமாகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபா
லெற்றுநீர்நிக்காலுமேலேவிண்ணியமானலோடு
மற்றுமாதோர்பல்லுயிராய்மாலயனும்மறைகள்
முற்றுமாகிவேறுமானுன்மேயதுமுதுகுன்றே. (உ)

வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
காரிபாகுயத்தபூமேல்நான்முகன்றன்றலையிற்
சீரிதாகப்பலிகொள்செல்வன்செற்றவுத்தோன்றியதோர்
மூரிநாகத்தரிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே. (ஈ)

பாடுவாருக்கருளுமெந்தைபணிமுதுபெளவமுங்கீர்
நீடுபாருமுழுதுமோடியண்டர்நிலைகெடவும்
காடுதானுமூடுமோடிஞாலமுகான்முகனு
மூடுதாணுமும்மெள்ளத்துயர்ந்ததுமுதுகுன்றே. (ச)

வழக்குதிங்கள்வன்னிமத்தமாசுணம்மீசனைவிச்
செழுங்கல்வேதன்செல்விகாணத்தேவர்திசைவணங்கத்

தழங்குமொந்தைதக்கைகிக்கபேய்ச்கணம்பூதஞ்சூழ
முழங்குசெந்தியேந்தியாடுமேயதுமுதுகுன்றே. (கூ)

சுழிக்தகங்கைதோய்ந்தசிங்கட்டொல்லார்கல்விதழி
சழிந்தசென்னிச்சைவவேடந்தானினைக்தம்புலனும்
அழிந்தசிக்தையந்தணாளர்க்கறம்பொருளின்பம்வீடு
மொழிந்தவாயான்முக்கணாதிமேயதுமுதுகுன்றே. (சூ-எ)

மயங்குமாயம்வல்லராகிவானினைடீரு
பியங்குவோருக்கிறைவனுயவிராவணன்றேணெரித்த
புயங்கராகமாகடத்தன்புணர்முலைமாதுமையாள
முயங்குமார்பன்முனிவரோத்தமேயதுமுதுகுன்றே. (அ)

ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனும்மறியாக்
கோலமுண்டர்சிந்தைகொள்ளாராயினுங்கொய்மலரா
லேலவிண்டைகட்டிநாமமிசையவெடபோதுமேத்து
மூலமுண்டநீற்றர்வாயான்மேயதுமுதுகுன்றே. (கூ)

உறிகொள்கையர்சீவரத்தருண்டுழல்மிண்டர்சொல்லை
நெறிகளென்னனினைமினீறுதேநித்தலுங்கைதொழுமின்
மறிகொள்கையன்வங்கமுக்நீரபொங்குவிடத்தையுண்ட
முறிகொள்மேனிமங்கைபங்கன்மேயதுமுதுகுன்றே. (கo)

மொய்த்துவாழ்ந்பல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையெனனுமபிரமபுத்தலிவன். (கக)

திருச்சிற்றம்பலம்.

இது திருமுறையைக்கண்டெடுக்கும்போது செல்லரித்சிதலமாகிய பதிகங்களி
லொன்று, திருமுறைகண்டபுராணத்திற் காண்க.

திருவோத்தூராண்பனைபெண்பனையானது - பண் - பழந்தக்கராகம்.
திருச்சிற்றம்பலம்.

பூத்தோர்ந்தாயனகொண்டுகின்பொன்னடி, யேத்தாதாரில்லையெண்ணுங்கா
லோத்தூர்மேயவொளிமழுவாளங்கை, கூத்தீரும்மகுணங்களே. (க)

இடையீர்போகாவிளமுலையாளையோர், புடையீரோபுள்ளிமானுரி
யுடையீரோயும்மையேத்துதுமோத்தூர்ச், சடையீரோயுமதாளே. (உ)

உள்வோர்போலகொடிமையினுர்திறங், கொள்வீரல்குலோர்கோவண
மொள்வாழைக்கனிதேன்சொரியோத்தூர்க், கள்வீரோயுமகாதலே. (ங)

தோட்டிரோதத்தியைத்தலைகாதத்தை, யாட்டிரோயடியார்வினை
யோட்டிரோயுமையேத்துதுமோத்தூர், காட்டிரோயருணல்குமே. (ச)

குழையார்காதிற்கொடுமழுவாட்படை, யுழையாள்வீர்திருவோத்தூர்
பிழையாவண்ணங்கள்பாடினின்றுவ, ரழையாமேயருணல்குமே. (ஞ)

மிக்கார்வத்தவிரும்பிப்பலியிடத், தக்கார்தம்மடியீர்களென்
றுட்காதாருளரோதிருவோத்தூர், கக்கீசேயருணல்குமே. (சு)

தாதார்கொன்றைதயங்குமுடியுடை, நாதாவென்றுலகம்புகழ்ச்
சோதாதாருளரோதிருவோத்தூர், ராதீசேயருணல்குமே. (எ)

என்றுனிம்மலியென்றவரக்கனை, வென்றுர்போலுந்விரலினு
லொன்றுர்மும்மதிளெய்தவனெத்தூர், சென்றுர்மேல்வினையேகுமே. (அ)

கன்றுசான்மறையாளெடுமாலுமாய்ச், சென்றுர்போலுந்திசையெலா
மொன்றுயொள்ளெரியாய்மிகவோத்தூர், நின்றீசேயுமைகேடியே. (கூ)

காரமண்கலிங்கத்துவராடையர், தேரர்சொல்லவைதேறன்மி
னேரம்பாலெயிலெய்தவனெத்தூர்ச், சீரவன்கழல்சேர்மினே. (கo)

குரும்பையாண்பனையின்குலையோத்தூர், ரரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுள்ஞானசம்பந்தன்சொல், விரும்புவார்வினைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதநாதர், தேவியார் - இளமுலைநாயகி.

திருமாற்பேறு - பண் - பழந்தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊரியார்தருகஞ்சினையுண்மெய், நீறுசேர்திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின், மாறிலாமணிகண்டரே. (க)

தொடையார்மாமலர்கொண்டிருபோதும்மை, யடைவாராமடிகள்ளன
மடையார்நீர்மல்குமன்னியமாற்பே, றுடையீரேயுமையுள்கியே. (உ)

பையாருமரவங்கொடுவாட்டிய, கையானென்றுவணங்குவர்
மையார்கஞ்சுண்டுமாற்பேற்றிருக்கின்ற, வையாநின்னடியார்களே. (ரு)

சாலமாமலர்கொண்டுசரணென்று, மேலையார்கள்விரும்புவர்
மாலினூர்வழிபாடுசெய்மாற்பேற்று, நீலமார்கண்டநின்னையே. (ச)

மாறிலாமணியேயென்றுவானவ, ரேறவேமிகவேத்துவர்
கூறனேகுலவுந்திருமாற்பேற்றி, னீறனேயென்றுநின்னையே. (ஞ)

உரையாதாரில்லையொன்றுநின்றன்மையைப், பரவாதாரில்லைகாள்களும்
திரையார்பாலியின்றென்கரைமாற்பேற், றரையாவேயருணல்கிடே.(கூ-எ)

அரசளிக்குமரக்கனவன்றனை, யுரைகெடுத்தவனெல்கிட
வரமிகுத்தவெம்மாற்பேற்றடிகளைப், பரவிடக்கெடும்பாவமே. (அ)

இருவர்தேவருந்தேடித்திரிந்தநி, லொருவராலறிவுண்டிலன்
மருவுநீள்கழன்மாற்பேற்றடிகளைப், பரவுவார்வினைபாறுமே. (கூ)

தூசுபோர்த்துழல்வார்கையிற்றுற்றுணு, நீசர்தம்முரைகொள்ளேலுக்
தேசமல்கியதென்றிருமாற்பேற், றீசனென்றெடுத்தேத்துமே. (கo)

மன்னிமாலொடுசோமன்பணிசெய்ய, மன்னுமாற்பேற்றடிகளே
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொற், பன்னவேவினைபாறுமே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மால்வணங்குமீசர், தேவியார் - கருணைநாயகி.

ஆடு பதிகம் - நிடு.

திருப்பாற்றுறை - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

காரார்கொன்றைகலந்தமுடியினர்
சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்காளும்பரவியபாற்றுறை
யாராராதிமுதல்வரே. (க)

கல்லாருமவர்தியரெனப்படுஞ்
சொல்லார்கன்மலர்சூடினர்
பல்லார்வெண்டலைச்செல்வரெம்பாற்றுறை
யெல்லாருந்தொழுமீசரே. (உ)

விண்ணோர்திங்கள்விளங்குறுதலின
ரெண்ணோர்வந்தெனெழில்கொண்டார்
பண்ணோர்வண்டினம்பாடல்செய்பாற்றுறை
யுண்ணுணுளுமுறைவரே. (ங)

பூவுந்திங்கள்புனைந்தமுடியின
ரேவினல்லாரெயிலெய்தார்
பாவந்தீர்புனன்மல்கியபாற்றுறை
யோவென்சிந்தையொருவரே. (ச)

மாகந்தோய்மதிசூடிமகிழ்ந்தென
தாகம்பொன்னிறமாக்கினர்
பாகம்பெண்ணுமுடையவர்பாற்றுறை
நாகம்பூண்டநயவரே. (ஞ)

போதுபொன்றிகழ்கொன்றைபுனைமுடி
நாதர்வந்தெனலங்கொண்டார்
பாதந்தொண்டர்பரவியபாற்றுறை
வேதமோதும்விகிர்தரே. (ட)

வாடல்வெண்டலைசூடினர்மால்விடை
கோடல்செய்தகுறிப்பினர்
பாடல்வண்டினம்பண்செயுமபாற்றுறை
யாடல்காமனைசெற்றரே. (ண)

வெவ்வமேனியராய்வெள்ளைநீற்றினர்
செவ்வஞ்செய்தெனைஆள்கொண்டார்
பவ்வஞ்சடைகண்டரெம்பாற்றுறை
மவ்வல்சூடியமைந்தரே. (அ)

ஏனமன்னமுமானவருக்கெரி
யானவண்ணத்தெமண்ணலார்
பானலம்மலர்விம்மியபாற்றுறை
வானவெண்பிறைமைந்தரே. (கூ)

வெந்தநீற்றினர்வேலினர்நூலினர்
வந்தெனன்னலம்வவ்வினர்
பைந்தண்மாதவிசூழ்தருபாற்றுறை
மைந்தர்தாமோர்மணாளரே. (கo)

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய
பத்தநாறுபெயரானப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ்
பத்தும்பாடிபபரவுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருமூலநாதர், தேவியார் - மோகாம்பிகை.

திருவேற்காடு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனெளி, வெள்ளியானுறைவேற்கா
டுள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினிற், றொள்ளியாரவர்தேவரே. (க)

ஆடல்காகமசைத்தளவில்லதோர், வேடங்கொண்டவன்வேற்காடு
பாடியும்பணிந்தாரிவ்வுலகினிற், சேடராகியசெல்வரே. (உ)

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டுமபுயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. (க)

பேயடையாபிரிவெய்தும்பிள்ளாயிளைதுள்ளகிலேன்
வாயினலவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கனவெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. (உ)

மண்ணெடுநீரனல்காலோடாகாயமதியிரவி
யெண்ணில்வருமியமானனிகபரமுமெண்டிசையும்
பெண்ணினெடாண்பெருமையொடுசிறுமையுமாம்பெராளன்
விண்ணவர்கோன்வழிபடவெண்காடிடமாவிரும்பினனே. (ங)

விடமுண்டமிடற்றண்ணல்வெண்காட்டின்றண்புறவின்
மடல்விண்டமுடத்தாழைமலர்நிழலைக்குருகென்று
தடமண்டுதுறைக்கெண்டைதாமரையின்பூமறையக்
கடல்விண்டகதிர்முத்தங்கைகாட்டுங்காட்சியதே. (ச)

வேலைமலிதண்கானல்வெண்காட்டான்றிருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தால்வழிபடுநன்மறையவன்றன்
மேலடர்வெங்காலனுயிர்விண்டபினைநமன்றூத
ரோலமிடற்றுனடியாரென்றடரவஞ்சுவரே. (ஞ)

தண்மதியும்வெய்யரவுந்தாங்கினஞ்சடையினிட
னெண்மதியதுதவுமையோர்கூறுகந்தாளுறைகோயில்
பண்மொழியாலவளுமம்பலவோதப்பசுங்கிள்ளை
வெண்முகில்சேர்கரும்பெணைமேல்விரிந்திருக்கும்வெண்காடே. (ட)

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானு
மக்கரைமேலசைத்தானுமடைத்தபாதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடெம்மினேதுக்கு
முக்குளகண்குடையானுமுக்கணுடையிறையவனே. (எ)

பண்மொய்த்தவின்மொழியாள்பயமெய்தமலையெடுத்த
வுன்மத்தனுரமெரித்தன்றருள்செய்தானுறைகோயில்
கண்மொய்த்தகருமஞ்ஞைகடமாடக்கடன்முழங்க
விண்மொய்த்தபொழில்வரிவண்டிசைமுரலும்வெண்காடே. (அ)

கள்ளார்செங்கமலத்தான்சடற்கிடந்தானெனவிவர்க
ளொள்ளாண்மைகொளற்கோடியுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான்
வெள்ளானேதவஞ்செய்யுமேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருகாதாருணர்வுடைமையுணரோமே. (கூ)

போதியர்கள்பிண்டியர்கண்மிண்டுமொழிபொருளென்னும்
பேதையர்களவர்பிறிமினறிவுடையீரிதுகேண்மின்
வேதியர்கள்விரும்பியசீர்வியன்றிருவெண்காட்டானென
றோதியவர்யாதுமொருதீதிலரென்றுணருமினே. (கo)

தன்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுவேதாரணியேசுவரர், தேவியார் - பிரமவித்தியாநாயகி.

சீகாழி - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழிமங்கைமார்பலர்பாடியாடியவோசைகாடொறுங்
கண்ணினேரியலேபொலியுங்கடற்காழிப் (உ)
பெண்ணினேரொரு பங்குடைப்பெருமானேயெம் பெருமானென்றென்றுன்
மண்ணலானடியாரருளாலுய்குறைவிலரே. (க)

மொண்டலம்பியவார்திரைக்கடன்மோதிமீதறிசங்கவங்கமுங்
கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி
வண்டலம்பியகொன்றையானடிவாழ்த்தியேத்தியமாந்தர்தம்வினை
விண்டலங்கெளிதாமதுகல்விதியாமே. (உ)

காடெலாமொளியெய்தநல்லவர்கண்டுமேத்திவணங்குவார்பொழிற்
காடெலாமலர்தேன்றுளிக்குங்கடற்காழித்
தோடெலாவியகாதுளார்சுரிசங்கவெண்குழையானென்றென்றுன்னும்
வேடங்கொண்டவர்கள்வினைநீங்கலுறுவரே. (ங)

மையினர்பொழில்சூழ்மிழலில்வாசமார்மதமல்குகாடொறும்
கையினர்மலர்கொண்டெழுவார்கலிக்காழி
யையனேயரனேயென்றுதரித்தோதிநீயுளையென்னப்பல
ருய்யுமாறுலகில்லுயர்த்தாரிலுள்ளாரே. (ச)

மனிகடுத்திரைமேனிமிர்த்தெதிர்வந்துவந்தொளிர்சித்திலம்விழக்
கனிகடித்தகையார்மருவுங்கலிக்காழி
வரியகாலனைவீட்டிமாணிதனின்னுயிரளித்தானைவாழ்த்திட
மெலியுந்தீவினைகோயலைமேவுவர்வீடே. (ரு)

மற்றுமிவ்வுலகத்துளோர்களும்வானுளோர்களும்வந்துவைகலுங்
கற்றசிக்கையராய்க்கருதுங்கலிக்காழி
நெற்றிமேலமர்கண்ணினானினைந்திருந்திசைபாடுவாரினை
செற்றமாத்தொனத்தெளிமின்கள்சிக்கையுளே. (கூ)

தானலம்புரைவேதியரொடுதக்கமாகவர்தாந்தொழப்பயில்
கானவின்விளைசேரவிம்மூங்கலிக்காழி
யூனுளாருயிர்வாழ்க்கையாயுறவாகிநின்றவொருவனேயென்
றூனலங்கொடுப்பாருள்வேர்த்தாவரோ. (எ)

மைத்தவண்டெழுசோலையாலைகள்சாலிசேர்வயலாரவைகலுங்
கத்துவார்கடல்சென்றலவுங்கலிக்காழி
யத்தனேயரனேயரக்கனையன்றடர்த்துகந்தாயுனகழல்
பத்தராய்ப்பரவுமபயனீங்குகல்காயே. (அ)

பருமராமொடுதெங்குபைங்கதலிப்பருங்கனியுண்ணமந்திகள்
கருவராலுகளும்வயல்சூழ்கலிக்காழித்
திருவினுபகனையமாலொடுசெய்யமாமலர்ச்செல்வனுகிய
விருவர்காண்பரியாயெனவேத்துதலின்பமே. (கூ)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரியாதுவண்டுகிலாடைபோர்த்தவர்
கண்டுசேர்கிலாமுகார்கலிக்காழித்
தொண்டைவாயுமையோடுங்கூடியவேடனேகுடலைப்பொடியணி
வண்டவாணனென்பார்க்கடையாவல்லருனே. (கo)

பெயரொணம்மிலைபன்னிரண்டினுமுண்டெனப்பெயர்பெற்றவூர்திகழ்
கயலுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி
கயனடன்கழலேத்திவாழ்த்திபனூரனைசம்பந்தன்செந்தமிழ்ஞா
யிறுமாமொழிவாருலகத்துயர்கதாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நிலமாத்தூர் - பண் - சீகாமரம்.
திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைகாணரவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்கீண்டபெண்ணைமே
லன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. (க)

பாவினானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தவருளென்கொல்விண்ணவனே
காவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறத்து * பம்பைநீ
ராருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. (உ)

நீண்டவார்சடைதாழநேரிழைபாடநீறுமெய்பூசிமாலயன்
மாண்டவார்சுடலைநடமாடுமாண்பதுவென்
பூண்டகேழன்மருப்பராவிரிகொன்றைவாள்வரியாமைபூணினை
வாண்டகாயகனேயாமாத்தூரம்மானே. (ங)

சேலினேரனகண்ணிவெண்ணகைமான்விழித்திருமாதைப்பாகம்வைத்
தேலமாதவமீமுயல்கின்றவேடமிதென்
பாலினேர்மொழிமங்கைமார்நடமாடியின்னிசைபாடநீள்பதி
யாலைசூழ்கழனியாமாத்தூரம்மானே. (ச)

தொண்டர்வந்துவணங்கிமாமலர்தூவிநின்கழலேத்துவாரவ
ருண்டியால்வருந்தலிரங்காததென்னைகொலாம்
வண்டலாகழனிக்கலந்துமலர்ந்தகாமனைமாதர்வாண்முக
மண்டவாணர்தொழுமாமாத்தூரம்மானே. (ஞ)

ஓதியாரணமாயநுண்பொருளன்றுரைத்தல்வர்முன்கேட்கவன்னெறி
நீதியாலநீழலைக்கின்றநீர்மையதென்
சோதியேசுடரேசுரும்பமர்கொன்றையாய்திருநின்றியூருறை
யாதியேயரனேயாமாத்தூரம்மானே. (ட)

மங்கைவாணுதன்மான்மதநிடைவாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்தையதென்னைகொலாம்
பங்கயமதுவுண்டுவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிக்குமாமாத்தூரம்மானே. (ண)

நின்றடர்த்திடுமைம்புலன்னிலையாதவண்ணநினைத்துளத்திடை
வென்றடர்த்தொருபான்மடமாதைவிரும்புதலென்
குன்றெடுத்தனிசாசரன்றிரடோளிருபதுதானெரிதர
வன்றடர்த்துகந்தாயாமாத்தூரமமானே. (அ)

செய்யதாமரைமேலிருந்தவனேமொலடிதேடநீண்முடி
வெய்யவாரழலாய்நிமிர்கின்றவேற்றுமையென்

---

* பம்பை என்பது - ஒருநதி.

றையலாளொடுபிச்சைகொள்சிச்சைதயங்குதோலையார்த்தவேடங்கொண்
டையமேற்றகைத்தாயமாத்தூரம்மானே. (கூ)

புத்தர்புன்சமணர்தர்பொய்மொழிநூல்பிடித்தலர்தூற்றினின்னடி
பத்தர்பேணினின்றபரமாயபான்மையதென்
முத்தைவென்றமுறுவலாளுமைபங்கனென்றிமையோர்பரவிடு
மத்தனேயரியாயமாத்தூரம்மானே. (கo)

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்வெரியேந்திமாநட
மாடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடனேகமரும்புபைம்பொழிற்கொச்சையார்னிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆமாத்தூர் என்பது - பசுக்களுக்குத் தாயகமானவூர் என்றும், ஆமாதாவூர் எனற் பாலது - ஆமாத்தூர் என மருவினதென்றும், பெரியோர்களாற்கேள்வி. ஆ - பசு. சமஸ்கிருதத்தில் - கோமாதுருபுரம் எனப்பெயராம்.

நீருக்களர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதிற்
றேரினார்மறுகில்விழாமல்குநிருக்கள
ரூருளாரிடுபிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
யாரின்றவனேயடைந்தார்க்கருளாயே. (க)

தோளின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார்வளருந்தவம்மல்குதிருக்களருள்
வேளினேர்விசயற்கருள்புரிவித்தகாவிரும்பும்மடியனை
யாளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. (உ)

பாடவல்லரன்மைந்தரோடுபனிமலர்பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களரு
ணீடவல்லநிமலனேயடிநிரைகழல்சிலம்பார்க்கமாகட
மாடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. (ங)

அம்பினேர்தடங்கண்ணினருடனுடைவர்பயின்மாடமாளிகைச்
செம்பொனார்பொழில்சூழ்ந்தழகாயதிருக்களரு
ளென்புபூண்டதோர்மேனியெம்மிறைவாவினையடிபோற்றிநின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க்கருளாயே. (ச)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங்கின்டிமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்ததிருக்களருண்
மங்கைதன்னினுகின்சுடியமணவாளனேபிணைகொண்டோர்கைத்தலத்
தன்கையிற்பலியாயடைந்தார்க்கருளாயே. (ஞ)

கோலமாமயிலாலக்கொண்டல்கள்சேர்பொழிற்குலவும்வயனிடைச்
சேலினங்கயலாபுனல்சூழ்ந்ததிருக்களரு
ணீலமேவியகண்டனேகிமிர்புன்சடைப்பெருமானெனப்பொலி
யாலநீழலுளாயடைந்தார்க்கருளாயே. (கூ)

தமபலம்மறியாதவர்மதிரூங்குமால்வரையாலழலெழுத்
திண்பலகெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்
வம்பலாமலர்தூவிநின்னடிவானவர்தொழக்கூத்துகந்தபே
ரம்பலத்துறையாயடைந்தார்க்கருளாயே. (எ)

குன்றடுத்தகனமாளிகைக்கொடிமாடநீடியகோபுரங்கண்மேற்
சென்றடுத்துயர்வான்மதிதோயுந்திருக்களரு
ணின்றடித்துயர்மால்வரைநிரடோளினலெடுத்தான்றனீண்முடி
யன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. (அ)

பணியாழ்பயில்கின்றமங்கையர்பாடலாடலோடாரவாழ்பதி
தெண்ணிலாமதியாபொழில்சேருந்திருக்களரு
ணுனாணிலாவியவாருவனேயிருவாக்குநின்கழல்காட்சியாரழ
லுனாணிலாயவெம்மானடைந்தார்க்கருளாயே. (கூ)

பாகியமபலசெய்தபத்தர்கள்பாட்டொடும்பலபணிகள்பேணிய
நிக்கியல்குணத்தாசிறத்தருந்திருக்களருள்
வாகினன்மறையோதினயமண்டேரசொல்லியசொற்களானபொய்
யாக்கினின்றவனேயடைந்தார்க்கருளாமே. (கo)

இதுவதெழுமாடவீதிபொழில்கொள்காழிநகாக்கவுணிபன்
செதுதமிழ்மொழியாரவாசெருந்திருக்களரு
ளதிபன்னுசீதாமேனியாவினயமர்தமபெருமானைஞானசம்
பதனசொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - களாமுனீசுவரர், தேவியார் - அழகேசுவரியம்மை.

திருக்கோட்டாறு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கருந்தடங்கண்ணினல்மாதராரிசைசெய்பகராநின்றபூம்பொழிற்
குருந்தமாதவியினவிரைமல்குகோட்டாற்றி
லிருந்தவெம்பெருமானெயிலிலையடிவாழுதேத்துமாந்தர்கள்
வருந்துமாறறியார்வகுளசேர்வாவானூடே. (க)

மின்றுமேய்ந்துலினேர்த்துமாகரிரோடும்மலர்வெண்டிவான்மழை
குன்றினேர்த்துகுத்திப்பணிசெய்யுங்கோட்டாற்று
ளென்றுமன்னியவெம்பிரான்கழலேத்திவானரசாளவல்லவா
பொன்றுமாறறியார்புகழார்த்தபுண்ணியரே. (உ)

விரிநாளும்விழாவிடைப்பொலிதொண்டர்வந்துவியத்துபண்செயக்
குரவமாருநிழற்பொழின்மல்குகோட்டாற்றி
லரவநீள்சடையானையுள்கிநின்றுதரித்துமுனன்புசெய்தடி-
பரவுமாறுவல்லார்பழிபற்றறுபபாரே. (கூ)

அமபினேர்விழிமங்கைமார்பலராடகம்பெறுமாடமாளிகைக்
கொம்பினேர்துகிலின்கொடியாடுகோட்டாற்றி
னம்பனேகடனேகலந்திகழ்காதனேயென்றுகாதல்செய்தவர்
தம்பினேர்ந்தறியார்தமமாற்றவல்வினையே. (சு)

பழையதம்மடியார்துதிசெயப்பாருளோர்களும்விண்ணுளோர்தொழக்
குழலுமொக்கைவிழாவொலிசெய்யுங்கோட்டாற்றிற்
கழலும்வண்சிலமபும்மொலிசெயக்கானிடைக்கணமேத்தவாடிய
வழகனென்றெழுவாரணியாவர்வானவாக்கே. (டு)

பஞ்சின்மெல்லடிமாதராடவர்பத்தர்சித்தாகள்பண்புவைகலுங்
கொஞ்சியின்மொழியாற்றுழினமல்குகோட்டாற்றின்
மஞ்சனேமணியேமணிமிடற்றண்ணலேயெனவுணணெகிழ்ந்தவர்
துஞ்சுமாறறியார்பிறவாரித்தொன்னிலத்தே. (சு)

கலவமாமயிலாளோர்பங்கனேக்கண்டுகண்மிசைநீர்கெகிழ்த்திசை
குலவுமாறுவல்லார்குடிகொண்டகோட்டாறறி
னிலவுமாமதிசேர்சடையுடைனின்மலாவெனவுனனுவாரவ
ருலவுவானவரினுயர்வாகுவதுண்மையதே. (எ)

வண்டலார்வயற்சாலியாலிவளம்பொலிந்திட்வார்புனற்றிரை
கொண்டலார்கொணர்ந்தங்குலவுந்திகழ்கோட்டாற்றிற்
றெண்டெலாந்துதிசெய்யகின்றதொழிலனேகழலாலரக்கனை
மிண்டெலாந்தவிர்த்தென்னுகந்திட்டவெற்றிமையே. (அ)

கருதிவந்தடியாதொழுதெழக்கண்ணனேடையன்றேடவானையின்
குருதிமெய்கலப்பவுரிகொண்டுகோட்டாறறில
விருதினன்மடமாதுநீயும்வியப்பொடுமுயாகோயின்மேவிவெள்
ளெருதுகந்தவனேயிரங்காயுனதின்னருளே. (கூ)

உடையிலாதுழல்கின்றகுண்டருமூணருந்தவத்தாயசாக்கியர்
கொடையிலார்மகத்தார்குறையாதுங்கோட்டாற்றிற்
படையிலாமழுவேநதியாடியபண்பனேயிவரெனகொலோநுனை
யடைகிலாதவண்ணமருளாயுன்னடியவர்க்கே. (கo)

காலனைக்கழலாலுதைத்தொருகாமனைக்கனலாகச்சிறிமெய்
கோலவாகுழலாகுடிகொண்டகோட்டாற்றின்
மூலனேமுடிவொன்றிலாதவெம்முத்தனேப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஜராபதேசுவரர், தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

திருப்புறவார் - பனங்காட்டூர் - பண் - சீகாமரம்.
திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்த்தனமும்மதில்களேழுமிழவெங்கணையாலெய்தாய்விரி
பண்ணமர்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்த்தவனேகலந்தார்க்கருளாயே. (க)

நீடல்கோடலலர்வெண்முல்லைநீர்மலர்கிடைத்தாதளஞ்செய்யப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதினன்மின்னுலங்கவெண்குழைதுள்ளுகள்ளிரு
ளாடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. (உ)

வாளையுங்கயலும்மிளிர்பொய்கைவார்புனற்கரையருகெலாம்வயற்
பாளையொண்கமுகம்புறவார்பனங்காட்டூர்ப்
பூளையுங்குருக்கொன்றையுமதமத்தமும்புனைவாய்கழலிணைத்
தாளையேபரவுந்தவத்தார்க்கருளாயே. (ங)

மேய்ந்திளஞ்செங்கென்மென்கதிர்க்கவ்விமேற்படுகலின்மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப்புறவார்பனங்காட்டூர்
ராய்ந்தகான்மறைபாடியாடுமடிகளென்றென்றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந்தவத்தார்க்கருளாயே. (ச)

செங்கயல்லொடுசேல்செருச்செயச்சீறியாழ்முரறேறினனத்தொடு
பங்கயம்மலரும்புறவாபனங்காட்டூர்க்
கங்கையுமதியுங்கமழ்சடைக்கேண்மையாளொடுங்கூடிமான்மறி
யங்கையாடலென்னேபடியார்க்கருளாயே. (ஞ)

நீரினாவரைகோலிமால்கடனீடியபொழில்சூழ்த்துவைகலும்
பாரினார்பிரியாப்புறவார்பனங்காட்டூரக
காரினார்மலர்க்கொன்றைதாங்குகடவுளென்றுகைகூப்பிநாடொறுஞ்
சீரினல்வணங்குந்திறத்தார்க்கருளாயே. (ஈ)

கையரிவையர்மெல்விரல்லவைகாட்டியும்மலர்க்காந்தளங்குறி
பையராவிரியும்புறவார்பனங்காட்டூர்
மெய்யரிவையோர்பாகமாகவுமேவினாய்கழலேத்திநாடொறும்
பொய்யிலாவடிமைபுரிந்தார்க்கருளாயே. (எ)

தூவியஞ்சிறைமென்னடையனமல்கியாலிசையாலுமலர்ப்பொய்கைப்
பாவில்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்
மேவியங்கிலையாயரக்கனோரைடர்த்தவன்பாடல்கேட்டரு
ளேவியம்பெருமானென்பவார்க்கருளாயே. (அ)

அந்தண்மாதவிபுன்னைசல்லவசோகுமாரவித்தமல்லிகை
பைந்தணைழல்கள்சூழ்புறவார்பனங்காட்டூர்
செந்திளம்முகில்வண்ணனன்முகனென்றிவர்க்கரிதாயினிர்த்தனோர்
சந்தமாயவனேதவத்தார்க்கருளாயே. (கூ)

நீணமார்முருகுண்டுவண்டினீலமாமலர்கவ்விதேரிசை
பாணில்யாழ்முரலும்புறவார்பனங்காட்டீர்
காணழிந்தழல்வார்சமணருமேற்பிச்சாக்கியருகத்தலே
யூணுரியவனேயுகப்பார்க்கருளாயே. (கஅ)

மையினார்மணிபோன்மிடற்றனீமாசில்வெண்பொடிப்பூசுமார்பினீப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டீ
ரையனேயுகழானகாழியுளாய்த்தான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நொட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பனங்காட்டீசுவரர், தேவியார் - திருப்புருவமின்னனம்மை.

ஸ்ரீபுகலி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கந்திளைக்கும்பூமபுகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (க)

நீரார்ந்தசெஞ்சடையிற்நிரையார்கழல்சேர்பாதத்தீ
ரூரார்ந்தசில்பலியிருழைமானுரிதோலாடையீர
பேரார்ந்ததெண்டிரைசென்றணையுங்கானற்பூம்புகலிச்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழிமல்குபூமபுனலுமரவுஞ்சடைமேலடைவெய்த
மொழிமல்குமாமறையீர்கறையார்கண்டதெண்டோளிர்
பொழின்மல்குவண்டினங்களறையுங்கானற்பூம்புகலி
யெழின்மல்குகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ஙூ)

கையிலார்ந்தவெண்மழுவொன்றுடையீர்கரியகரியின்ரோன்
மயிலார்ந்தசாயன்மடமங்கைவெருவமெய்போர்த்தீர்
பயிலார்ந்தவேதியர்கள்பதியாய்விளங்கும்பைம்புகலி
யெயிலார்ந்தகோயிலேகோயிலாகவிசைந்தீரே. (ச)

காவார்ந்தபாடலீராடலரவமரைக்கார்த்திர்
பாவார்ந்தபல்பொருளின்பயன்களானீரயன்பேணும்
பூவார்ந்தபொய்கைகளும்வயலுஞ்சூழ்ந்தபொழிறபுகலித்
தேவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (ஞ)

மண்ணார்ந்தமணமுழவந்தும்பமலியான்மகனென்னும்
பெண்ணார்ந்தமெய்மகிழப்பேணியெரிகொண்டாடினீர்
விண்ணார்ந்தமதியமிடைமாடத்தாரும்வியன்புகலிக்
கண்ணார்ந்தகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (சு)

களிபுல்குவல்லவுணர்மூன்றெரியக்கணைதொட்டீ
ரளிபுல்குபூமுடியீரமரர்சேத்தவருள்செய்தீர்
தெளிபுல்குதேனினமுமலருள்விரைசோதிண்புகலி
யொளிபுல்குகோயிலேகோயிலாகவுகந்தீரே. (எ)

பரந்தோங்குபல்புகழ்சேரரக்கர்கோனைவரைக்கீழிட்
டிரந்தோன்றும்பாடல்கேட்டுகலையளித்திருகவாதார்
புரந்தோன்றுமுமமதிலுமெரியச்செற்றீர்பூம்புகலி
வரந்தோன்றுகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (அ)

சலந்தாங்குதாமரைமேலயனுந்தாணியளந்தானுங்
கலந்தோங்கிவந்திழிந்துங்காணுவண்ணங்கனலானீர்
புலந்தாங்கியையம்புலனுஞ்செற்றீர்வாழும்பூம்புகலி
நலந்தாங்குகோயிலேகோயிலாகநயந்தீரே. (கூ)

கொடிதாயவன்சமணுமிறைவொன்றில்லாச்சாக்கியருங்
கடிதாயகட்டுரையாற்கழறமேலோர்பொருளானீர்
பொடியாருமேனியினீறுபுகலிமறையோர்புரிந்தேத்த
வடிவாருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (கo)

ஒப்பரியபும்புகலியோங்குகோயின்மேயானை
யப்பரிசிற்பதியானவணிகொண்ஞானசமபந்தன்
செப்பரியதண்டமிழாற்றெரிந்தபாடலிவைவல்லா
ரெப்பரிசிலிடாதிங்கியிமையோருலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - நிசை.

நீருத்தலைச்சங்காடு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலச்சங்கவெண்குழையுந்தோடுமெய்தோர்கல்வேதஞ்
சொலசசங்கையில்லாதீருடுகாடல்லாற்கருதாதீர
குலச்செங்காயபைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலுக்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. (க)

தூணிமலருகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்தீரண்டர்க்கெல்லாமாண்பானீர்
*பிணிமல்குநான்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
யணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (உ)

சீர்கொண்டபாடலீர்செங்கண்வெள்ளேறூர்தியீர்
நீர்கொண்டும்பூக்கொண்டுநீங்காத்தொண்டர்நின்றேத்தத்
தார்கொண்டநான்மார்பர்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
யார்கொண்டகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ங)

---

* பிணி - பிணித்தல்.

வேடஞ்சூழ்கொள்கையீர்வேண்டிநீண்டவெண்டிங்க
ளோடஞ்சூழ்கங்கையுமுச்சிவைத்தீர்தலைச்சங்கைக்
கூடஞ்சூழ்மண்டபமுங்குலாயவாசற்கொடித்தோன்று
மாடஞ்சூழ்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

சூலஞ்சேர்கையினீர்சுண்ணவெண்ணீரூடலீர்
நீலஞ்சோகண்டத்தீர்நீண்டசடைமேனீரேற்றீ
ராலஞ்சேர்தன்கானலன்னமன்னுந்தலைச்சங்கைக்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (ஞ)

நிலநீரொடாகாசமனல்காலாகிநின்றைந்து
புலனீமைபுறங்கண்டார்பொக்கஞ்செய்யார்போற்றுவார்
சலநீதரல்லாதார்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
கலநீரகோயிலேகோயிலாகவுகந்தீரே. (சு)

அடிபுல்குபைங்கழல்களாப்பப்பெயர்த்தோரனலேந்திக்
கொடிபுல்குமென்சாயலுமையோர்பாகங்கூடினீர்
பொடிபுல்குநான்மார்பர்புரிநூலாளர்தலைச்சங்கைக்
கடிபுல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (எ)

திரையார்ந்தமாகடல்சூழ்தென்னிலங்கைக்கோமானை
வரையார்ந்ததோளடரவிரலாலூன்றுமாண்பினீ
ரரையார்ந்தமேகலையீரந்தணாளர்தலைச்சங்கை
நிரையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்தீரே, (அ)

பாயோங்குபாம்பணைமேலானும்பைந்தாமரையானும்
போயோங்கிக்காண்கிலார்புறநின்றேராரார்போற்றுவார்
தீயோங்குமறையாளாதிகழுஞ்செல்வத்தலைசசங்கைச்
சேயோங்குகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கூ)

அலையாரும்புனலுறந்தவமணாகுண்டாசாக்கியர்
தொலையாதங்கவாதுற்றத்தோற்றங்காட்டியாட்கொண்டீர்
தலையானகால்வேதகீதரிதாதார்வாழுந்தலைச்சங்கை
நிலையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்தீரே. (கo)

களிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலைச்சங்கையோங்குகோயின்மேயானை
யொளிரும்பிறையானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தார்க்குமேலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செங்கணையகேசுவரர் - தேவியார் - செளந்தரியம்மை.

திருவிடைமருது - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குநூன்மார்பினீர்பூதப்படையினீர்பூங்கங்கை
தங்குசெஞ்சடையினீர்சாமவேதமோதினீர்
செங்குமெழிலார்மறையோர்கண்முறைபாலேத்தவிடைமருதின்
மங்குலோயகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

நீராரந்தசெஞ்சடையீர்நெற்றிநெடுங்கணிகழ்வித்தீர்
போராரந்தவெண்மழுவொன்றுடையீர்பூதமபாடலீ
சேராரந்தமேகலையாள்பாகங்கொண்டிடைமருதிற
சீராரந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழன்மல்குமங்கையிலேந்திப்பூதமவைபாடச்
சுழன்மல்குமாடலீர்சுடுகாடல்லாற்கருதாதீ
ரெழினமல்குகான்மறையோர்முறைபாலேத்தவிடைமருதிற்
பொழின்மலகுகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (ங)

பொல்லாப்படுதலையொன்றேந்திப்புறங்காட்டாடலீர
வில்லாற்புரமூன்றுமெரித்தீர்விடையாகொடியினீ
ரெல்லாக்கணங்களுமுறையாலேத்தவிடைமருதிற்
செல்வாய்கோயிலேகோயிலாகசசேர்ந்தீரே. (ச)

வருந்தியமாதவத்தோர்வானேரேனோர்வந்திண்டிப்
பொருந்தியதைபபூசைமாடியுலகமபொலிவெய்தத்
திருந்திபகான்மறையோர்சீராலேத்தவிடைமருதிற்
பொருந்திபகோயிலேகோயிலாகப்புக்கீரே. (ஞ)

சலமல்குசெஞ்சடையீர்சந்தநீறுபூசினீர்
வலமல்குவெண்மழுவொன்றேந்திமயானத்தாடலீ
ரிலமல்குகான்மறையோரினிதாயேத்தவிடைமருதிற்
புலமல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (கூ)

புனமல்குகொன்றையீர்புலியினதளீர்பொலிவார்ந்த
சினமல்குமால்விடையீரசெய்யீர்கரியகண்டத்தீ
ரினமல்குகான்மறையோர்தஞ்சிரகொளிடைமருதிற்
கனமல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (எ)

சிலையுய்த்தவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திறலரக்கன்
றலைபத்துந்திண்டோளுநெரித்தீர்தையல்பாகத்தீ
ரிலைமொய்த்ததண்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தவிடைமருதி
னிலைமொய்த்தகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (அ)

மறைமல்குகான்முகனும்மாலுமறியாவண்ணத்தீர்
கறைமல்குகண்டத்தீர்கபாலமேந்துகையினீ
ரறைமல்குவண்டினங்களாலுஞ்சோலையிடைமருதி
னிறைமல்குகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (கூ)

சின்போரவைச்சாக்கியருமாசுசேருஞ்சமணருந்
துன்பாயகட்டுரைகள்சொல்லியல்லறாற்றவே
மின்பாயவர்த்தணர்களேத்துமேர்கோளிடைமருதி
லன்பாடகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (கo)

கல்லின்மணிமாடக்கழுமலத்தார்காவலவ
னல்லவருமறையானற்றமிழ்ஞானசம்பந்த
னெல்லியிடைமரு திலேத்துபாடலிவைபத்துஞ்
சொல்லுவாகுங்கேட்பாக்குந்துயரமில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமருந்திருமேனியுடையீரிறங்குசடைதாழப்
பண்ணமருகானமறையேபாடியாடல்பயில்கின்றீர்
திண்ணமருமதிலம்பொழிலுஞ்சூழ்ந்தநல்லூர்
மண்ணமருகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

அலைமல்குதண்புனலுமிறையுஞ்சூடியங்கையிற்
கொலைமல்குவெண்மழுவுமனலுமேந்துங்கொள்கையீர்
சிலைமல்குவெங்கணையாறுமூன்றெரித்தீர்திருநல்லூர்
மலைமல்குகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (உ)

குறைநிரம்பாவெண்மதிபஞ்சூடிக்குளிர்புனசடைதாழப்
பறைகின்றபாடலோடாடலபேணிபயில்கின்றீர்
சிறைகின்றதண்புனலும்வயலுஞ்சூழ்ந்தநல்லூர்
மறைகின்றகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ங)

கூனமருமெண்பிறையும்புனலுஞ்சூடுங்கொள்கையீர்
மானமருமென்னெழிலாளபாகமாகுமாண்பினீர்
தேனமருமதிலம்பொழின்வண்டுபாடுநல்லூர்
வானமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

கிணங்கவருமூவிலையுமனலுமேந்திவெறிகுழலா
ளணங்கமருமம்பாடலோடாடன்மேவுமழகினீர்
திணங்கவருமாடரவும்பிறையுஞ்சூடிநல்லூர்
மணங்கமழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ஞ)

கார்மருவுபூங்கொன்றைசூடிக்கமழ்புனசடைதாழ
வார்மருவுமென்முலையாள்பாகமாகுமாண்பினீர்
தேர்மருவுவீதிக்கொடிகளாடுநல்லூர்
ரேர்மருவுகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ட)

ஊன்றோயும்வெண்மழுவுமனலுமேந்தியுமைகாண
மீன்றோயுந்திசைநிறையலோங்கியாமெய்வடத்தீர்

தேன்றோயும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வானோர்தொழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (எ)

காதமருங்வெண்குழையீர்கறுத்தவரக்கன்மலையெடுப்ப
மாதமருமென்மொழியாண்மறுகுமவண்ணங்கண்டுகந்தீர்
நீதமராவுக்கணர்கள்பரவியேத்துந்திருநல்லூர்
மாதமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (அ)

போதின்மேலயன்றிருமால்போற்றியும்மைக்காணாது
காதனேயிவனென்றுகயந்தேத்தமகிழ்ந்தளித்தீர்
நீதிலாவுக்கணாகடமூன்றோமபுந்திருநல்லூர்
மாதாளவளோடமன்னுகோயின்மகிழ்ந்தீரே. (க)

பொல்லாதசமணொடுபுறங்கூறுஞ்சாக்கியரொன்
றல்லாதாறவுரைவிட்டடியார்கள்போற்றோவா
கல்லாகளத்தணர்கணுளுமேத்துந்திருநல்லூர்
மல்லார்த்தகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (கo)

கொந்தணவும்பொழில்புடைசூழ்கொச்சைமேவுசுலவேந்தன்
செந்தமிழின்சம்பந்தன்சிறைவண்புனல்சூழ்திருநல்லூர்ப்
பந்தணவுமெல்விரலாள்பங்கன்றன்னைப்பயில்பாடல்
சிந்தனையாலுரைசெய்வார்சிவலோகஞ்சேர்ந்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்துடவாயில்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலைவாழுமங்கையீர்சங்கையாருங்கருங்கூத
லலைவாழுஞ்சஞ்சடையிலரவும்பிறையுமமர்வித்தீர்
குலைவாழைகமுகம்பொன்பவளமபழுக்குங்குடவாயி
னிலைவாழுங்கோயிலேகோயிலாகினின்றீரே. (க)

அடியார்த்தபைங்கழலுஞ்சிலம்புமாப்பவங்கையிற்
செடியாகதவெண்டலைபொன்றேந்தியுலகம்பலிதேரீர்
குடியாகதமாமறையோராகுலாவியேத்துங்குடவாயிற்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (உ)

கழலாபூம்பாதத்தீரோதக்கடலில்விடமுண்டன்
றழலாருங்கண்டத்தீரண்டர்போற்றுமளவினீர்
குழலாரவண்டினங்கள்கீதத்தொலிசெய்குடவாயி
னிழலார்த்தகோயிலேகோயிலாகவிகழ்ந்தீரே. (ங)

மறியாருங்கைத்தலத்தீரமங்கைபாகமாகச்சேர்ந்
தெறியாருமாமழுவுமெரியுமேந்துங்கொள்கையீர்
குறியார்ந்தவண்டினங்கடேன்மிழற்றுங்குடவாயி
னெறியாருங்கோயிலேகோயிலாகவிகழ்ந்தீரே. (ச)

இழையார்ந்தகோவணமுங்கீளுமெழிலாருடையாகப்
பிழையாதசூலம்பெய்தாடல்பாடல்பேணினீர்
குழையாரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தகுடவாயில்
விழவார்ந்தகோயிலேகோயிலாகமிக்கீரே. (நி)

அரவார்ந்ததிருமேனியானவெண்ணீறுடினீ
ரிரவார்ந்தபெய்பலிகொண்டிமையோர்த்தாஞ்சுண்டீர்
குரவார்ந்தபூஞ்சோலைவாசமலிசுங்குடவாயிற்
றிருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (சு)

பாடலார்வாய்மொழியீர்பைங்கண்வெள்ளேறூர்தியீ
ராடலார்மாகடத்தீரிலைவேற்றுமாற்றலீர்
கோடலார்தும்பிமுரன்றிசைமிழற்றுங்குடவாயி
னீடலார்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (எ)

கொங்கார்ந்தபைங்கமலத்தயனுங்குறளாய்நிமிர்ந்தானு
மங்காத்துதள்ளாடவழலாய்நிமிர்ந்திலங்கைக்கோன்
றங்காதன்மாமுடியுந்தாளுமடர்த்தீர்குடவாயிற்
பங்கார்ந்தகோயிலேகோயிலாகப்பரிந்தீரே. (அ-கூ)

தூசார்ந்தசாக்கியருந்தூய்மையில்லாச்சமணரு
மேசார்ந்தபுன்மொழிகேட்டெழில்கொண்மாடக்குடவாயி
லாசாரஞ்செய்மறையோரளவிற்குன்றாதடிபோற்றத்
தேசார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கூ)

களிர்பூந்திரைமல்குகாழிஞானசம்பந்தன்
குளிர்பூங்குடவாயிற்கோயின்மேயகோமானை
யொளிர்பூந்தமிழ்மாலையுரைத்தபாடலிவைவல்லார்
தளர்வானதானெழியத்தகுசீர்வானத்திருப்பாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலங்கொண்முத்துமணியுமணியுந்திரளோதக்
கல்ங்கடன்னிற்கொண்டுகைசேர்கலிக்காழி
வலங்கொண்மழுவொன்றுடையாய்விடையாயெனவேத்தி
யலங்கல்சூட்டவல்லார்க்கடையாவருநோயே. (க)

ஊராருவரிச்சங்கம்வங்கங்கொடுவெற்று
காராரோதங்கரைமேலுயர்த்துங்கலிக்காழி
நீரார்சடையாய்நெற்றிக்கண்ணுவென்றென்று
பேராயிரமும்பிதற்றத்திரும்பிணிதானே. (உ)

வடிகொள்பொழிலின்மழலைவரிவண்டிசைசெய்யக்
கடிகொள்போதிற்றென்றலணையுங்கலிக்காழி

முடிகொள்சடையாய்முதல்வாவெண் முமுயன்றேத்தி
யடிகைதொழுவார்க்கில்லையல்லலவலமே. (சு)

மனைக்கேயேறவளஞ்செய்பவளம்வளர்முத்தங்
கனைக்குங்கடலுளோதமேறுங்கலிக்காழிப்
பனைக்கைப்பகட்டிருநியாய்பெரியாயெனப்பேணி
நினைக்கவல்லவடியார்நெஞ்சினல்லாரே. (ச)

பருதியியங்கும்பாரிற்சீரார்பணியாலே
கருதிவிண்ணோர்மண்ணோர்விரும்புங்கலிக்காழிச்
சுருதிமறைநான்கானசெம்மைதருவானைக்
கருதியெழுமின்வழுவாவண்ணந்துயர்போமே. (ஞ)

மந்தம்மருவும்பொழிலிலெழிலார்மதுவுண்டு
கந்தமருவவரிவண்டிசைசெய்கலிக்காழிப்
பந்தரீங்கவருளும்பரனேயெனவேத்திச்
சிந்தைசெய்வாசமமைநீங்காதிருப்பாரே. (சு)

புயலார்பூமிசாமமோதிப்புகழ்மல்கக்
கயலார்கண்ணூர்பண்ணுரொலிசெய்கலிக்காழிப்
பயில்வான்றன்னைப்பத்தியாரத்தொழுதேத்த
முயல்வார்தம்மேல்வெம்மைக்கூற்றமுகாதே. (எ)

அரக்கன்முடிதோணெரியவடர்த்தானடியார்க்குக்
காக்கநில்லாதருள்செய்பெருமான்கலிக்காழிப்
பரக்கும்புகழான்றன்னையேத்திப்பணிவார்மேற்
பெருக்குமின்பந்துன்பமானபிணிபோமே. (அ)

மாணுயிலகங்கொண்டமாலுமலரோனுங்
காணவண்ணமெரியாய்நிமிர்ந்தான்கலிக்காழிப்
பூணுர்முலையாள்பங்கத்தானைப்புகழ்ந்தேத்திக்
கோணுநெஞ்சமுடையாராக்கில்லைகுற்றமே. (க)

அஞ்சியல்லன்மொழிந்துதிரிவாரமணர்தர்
கஞ்சிகாலையுண்பார்க்கரியான்கலிக்காழித்
தஞ்சமாயதலிவன்றன்னைநினைவார்க
டுஞ்சலில்லாகல்லவுலகம்பெறுவாரே. (கo)

ஊழியாயபாரிலோங்குமூயர்செல்வக்
காழியீசன்கழலேபேணுஞ்சம்பந்தன்
ரூழுமாத்தாலுரைத்ததமிழ்களிவைவல்லார்
வாழிநீங்காவானேருலகின்மகிழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாதூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொல்லார்
வந்துமாலைவகும்போழ்தென்மாத்துள்ளார்
மைந்தாமணிளாவென்னமகிழ்வாரூர்போலும்
பைத்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. (க)

பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
ருருத்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ரூருமரவமுடையார்வாழுமூர்போலும்
பாரின்மிசையார்பாடலோவாப்பாசூரே. (உ)

கையாற்றொழுதுதலைசாய்த்துள்ளங்கசிவார்கண்
மெய்யார்குறையுந்துயருந்தீர்க்கும்விகிர்தனார்
நெய்யாடுதலைஞ்சுடையார்நிலாவுமூர்போலும்
பைவாய்நாகங்கோடலீனும்பாசூரே. (ங)

பொங்காடரவம்புனலுஞ்சடைமேற்பொலிவெய்தக்
கொங்கார்கொன்றைசூடியெனுள்ளங்குளிர்வித்தார்
தங்காதலியுந்தாமும்வாழுமூர்போலும்
பைங்கான்முல்லைபல்லரும்பினும்பாசூரே. (ச)

ஆடற்புரியுமைவாயரவொன்றரைச்சாத்துஞ்
சேடச்செல்வர்சிந்தையுளென்றும்பிரியாதார்
வாடற்றலையிற்பலிதேர்கையாரூர்போலும்
பாடக்குயில்கள்புயில்பூஞ்சோலைப்பாசூரே. (ஞ)

கானின்றகிரக்கனல்வாய்நாகங்கச்சாகத்
தோலொன்றுடையாவிடையார்தம்மைத்தொழுவார்கண்
மால்கொண்டோடமையறீர்ப்பாரூர்போலும்
பால்வெண்மதிதோய்மாடஞ்சூழ்ந்தபாசூரே. (கூ)

கண்ணினையிலேகண்ணெனன்றுடையார்கழலுனனி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுகவைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே. (எ)

தேசுகுன்றுத்தெண்ணீரிலங்கைக்கோமானைக்
கூசவடர்த்துக்கூர்வாளகொடுப்பார்தம்மையே
பேசிப்பிதற்றப்பெருமைதருவாரூர்போலும்
பாசித்தடமும்வயலுஞ்சூழ்ந்தபாசூரே. (அ)

குவாய்மலர்மேலயனுங்காகத்தனையானும்
புகுவாயறியார்புறன்றாரார்போற்றுவார்

செகுவாயுகுபற்றலைசேர்கையாரூர்போலும்
பகுவாய்நாயாரல்வாரும்பாரூரே. (கூ)

தூயவெயினின்றுழல்வார்தவர்தோயாடையார
காவிக்கெய்யசொல்லித்திரிவார்கயமில்லார்
காவல்வேவக்கணையொன்றெய்தாரூர்போலும்
பாலைக்குரவம்பயில்பூஞ்சோலைப்பாரூரே. (கo)

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
றேனும்வண்டுமின்னிசைபாடுதிருப்பாரூர்க்
கானமமுறைவார்கழல்சேர்பாடலிவைவல்லா
ரூனமிலராயும்பாவானத்துறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாரூராதர், தேவியார் - பசுபதிநாயகி.

அடி பதிகம் - சூo.

திருவேண்காடு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உண்டாய்நஞ்சையுமையோர்பங்காவென்றுள்ளித்
தொண்டாய்நிதியுமடியார்தங்கடுயரங்க
ளண்டாவண்ணமறுபாவினைகளையூர்போலும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செய்வெண்காடே. (க)

காதனம்மையாள்வானென்றுகவின்றேத்திப்
பாதம்பன்னள்பணியுமடியார்தங்கணமே
லேதகதீவிருந்தான்வாழ்மூர்போலும
வேதத்தொலியாற்கிளிசோறபயிலும்வெண்காடே. (உ)

தண்முத்தரும்பத்தடமூன்றுடையான்றனையுன்னிக்
கண்முத்தரும்பக்கழற்சேவடிகைதொழுவாக
ளுண்முத்தரும்பவுவகைதருவானூர்போலும்
வெணமுத்தருமபிப்புனல்வந்தலைக்கும்வெண்காடே. (ஊ)

நாயார்வந்துகாலுக்குருகிணுகாமுன்
னுனையால்வேருவுள்குவார்களுள்ளத்தே
கனையாவண்ணங்கண்டான்மேவுமூரபோலும்
விளையார்கமலத்தன்னமருவும்வெண்காடே. (எ)

பிள்ளைப்பிறையும்புனலுஞ்சூடும்பெம்மானென்
றுள்ளத்துள்ளித்தொழுவார்தங்களுருகோய்க
டள்ளிப்போகவருளுந்தலைவனூர்போலும்
வெள்ளைச்சுரிசங்குலவித்திரியும்வெண்காடே. (ஙி)

ஒளிகொண்மேனியுடையாயும்பாளீயென்
றளியாகியழுதுற்றாறுமடியார்கட்
கெளியானமரக்கரியான்வாழுமூர்போலும்
வெளியவருவிலானேவணங்கும்வெண்காடே. (கூ)

கோள்வித்தனையகூற்றந்தன்னைக்குறிப்பிஞன்
மாள்வித்தவனைமகிழ்ந்தங்கேத்தமாணிக்கா
யாள்வித்தமருலகமளிப்பானூர்போலும்
வேள்விப்புகையால்வானமிருள்கூவெண்காடே. (எ)

வளையார்முன்கையமலையாள்வெருவவவளையூன்றி
முளையாமதியஞ்சூடியென்றுமுப்போது
மிளையாதேத்தவிருந்தானெந்தையூர்போலும்
விளையார்கழனிப்பழனஞ்சூழ்ந்தவெண்காடே. (அ)

கரியானெடுகமலமலரான்காணுமை
யெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானென்பார்கட்
குரியானமரக்கரியான்வாழுமூர்போலும்
விரியார்பொழிலின்வண்டுபாடுமவெண்காடே. (கூ)

பாடும்மடியாபலருங்கூடிப்பரிதேத்த
வாடுமரவமசைத்தபெருமானிவினறி
மூடமுடையசமண்சாகியர்களுணராத
வேடமுடையபெருமான்பதியாம்வெண்காடே. (கo)

விடையார்கொடியான்மேவியுறையும்வெணகாட்டைக்
கடையாமாடங்கலருதேன்றுங்காழியா
னடையாரினசொன்ஞானசம்பந்தன்றமிழ்வல்லார்க்
கடையாவினைகளமாலோகமாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமீயச்சூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூன்றமுத்தமைதன்முதைதன்
மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே. (க)

பூவார்சடையின்முடிமேற்புனலானல்கொள்வார்
காவார்மறையர்பிறையர்கறைவெண்டலையேந்தி
யேவார்மலியேசிலையாக்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (உ)

பொன்னேர்கொன்றைமாமலர்புரளுமகலத்தான்
மின்னேர்சடைகளுடையான்மீயச்சூரானைத்

தன்னேர்பிறரில்லானேத்தலையால்வணங்குவார்க்
கன்னேரிமையோருலகமெய்தற்கரிதன்றே. (கூ)

வேகமதகல்லியானேவெருவவுரிபோர்த்துப்
பாகமுமையோடாகப்படிதம்பலபாட
காகமனைமேலசைத்துகடமாடியகம்பன்
மேகமுரிஞ்சுபொழில்சூழ்மீயச்சூரானே. (ச)

விடையார்கொடியார்சடைமேல்விளங்கும்பிறைவேடம்
படையார்பூதஞ்சூழப்பாடலாடலார்
பெடையார்வரிவண்டினையுமபிணைசேர்கொன்றையார்
விடையார்நடையொன்றுடையாமீயச்சூராரே. (ஞ)

குளிருஞ்சடைகொண்முடிமேற்கோலமார்கொன்றை
யொளிரும்பிறையொன்றுடையாளொருவன்கைகோடி
களிரும்மணிசூழ்மாலைகடடகவினம்பன்
மிளிரும்மரவமுடையானமீயச்சூரானே. (கூ)

நீலவடிவாமிடறுகெடியார்நிகரில்லார்
கோலவடிவுதமதாங்கொள்கையறிவாண்ணூர்
காலார்கழலார்கரியினுரியர்மழுவாளர்
மேலர்மதியர்விதியர்மீயச்சூராரே. (எ)

புலியினுரிதோலாடைபூசுமபொடிநீற்ற
ரொலிகொள்புனலோர்சடைமேற்கரதாருமையஞ்ச
வலியதிடோள்வன்கணரக்கர்கோன்றன்னை
மெலியவடைக்கீழடர்த்தார்மீயச்சூராரே. (அ)

காதின்மிளிருங்குழையர்கரியகண்டத்தார்
போதிலவனுமாலுந்தொழப்பொங்கெரியானூர்
கோதிவரிவண்டறைபூம்பொய்கைப்புனன்மூழ்கி
மேதிபடியும்வயல்சூழ்மீயச்சூராரே. (கூ)

கண்டாரகணுமபடியாகலங்கமுடைபடை
கொண்டோர்சொல்லுக்குறுகாருயர்ந்தகொள்கையார
பெண்டான்பாகமுடையாரபெரியவரைவில்லால்
விண்டார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (கo)

வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
காடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழீரைந்துமொழிந்துள்கி
யாடுமடியாரகல்வானுலகமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முயற்சிநாதேசுவரர், தேவியார் - சுந்தராம்பிகையம்மை.

அரிசிற்கரைத்திருப்புத்தூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
தன்னுகடனஞ்சிருடோய்சண்டர்தான்மூதூ
ரன்னம்படியும்புனலாரிசிலலைகொண்டு
பொன்னும்மணியும்பொருதன்கரைமேற்புத்தூரே. (க)

மேவாவசுரர்மேவெயில்வேவமலைவில்லா
லேவாளரிவெங்கணையாலெய்தானெய்துமூர்
காவானதனமோதிகாடோறும்
பூவானீராற்பூசுராபோற்றுமபுத்தூரே. (உ)

பல்லார்தலைசோமாலைசூடிப்பாடும்பூண்
டெல்லாவிடமும்வெண்ணீறணிந்தோர்தேறி
கல்லார்மங்கைபங்கமோனுங்காணுங்காற்
பொல்லாரல்லரழகியர்புத்தூர்ப்புனிதரே. (ங)

வரிவேர்வலையாளரிவையஞ்சவருகின்ற
களியேருரிவைபோர்த்தகடவுள்கருதுமூ
ரரிபோர்கழனிப்பழனஞ்சூழ்ந்தகழகாய
பொரியேர்புன்குசொரிபூஞ்சோலைப்புத்தூரே. (ச)

என்போடரவமேனத்தெயிறேடெழிலாமை
மின்போற்புரிநூல்விரிப்பூண்டமணிமாப
ரன்போடுருகுமடியார்க்கன்பரமருமூர்
பொன்போதலராகாங்காங்குசோலைப்புத்தூரே. (ஞ)

வள்ளிமுலைதாய்குமரன்முதைவான்றோயும
வெள்ளிமலைபோல்விடையொன்றுடையான்மேவுமூர்
தெள்ளிவருநீரிசிற்றென்பாற்சிறைவண்டும்
புள்ளுமலிபூம்பொய்கைசூழ்ந்தபுத்தூரே. (சு)

நிலந்தணீரோடனல்காலிசும்பினீரமையான்
சிலந்திசெங்கட்சோழனைச்செய்தானூர
ரலருதவுபயானற்றைக்கனேரூர்காசெய்திப்
புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே. (எ)

இத்தேரகவிம்மலைபோற்பனென்றேத்தும்
பத்தோர்வாயான்வனைக்கீழலறப்பாதத்தான்
வைத்தாரருள்செய்வரதன்மருவும்மூரான
புத்தூர்காணப்புகுவார்வினைகள்போகுமே. (அ)

முள்ளார்கமலத்தயன்மான்முடியோடடிதேட
வொள்ளாரொளியாயுணர்தற்கரியானூர்போலும்

கள்ளார்நெய்தல்கழுநீராம்பல்கமலங்கள்
புள்ளார்பொய்கைப்பூப்பலதோன்றும்புத்தூரே. (க)

கையார்சோறுகவர்குண்டர்களுந்துவருண்ட
மெய்யார்போர்வைமண்டையர்சொல்லுமெய்யல்ல
பொய்யாமொழியாலந்தணர்போற்றும்புத்தூரி
லையாவெனபார்க்கையுறவின்றியழகாமே. (கo)

நறவங்கயழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவப்பூண்டானுண்டான்புத்தூர்மேற்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்க
ளறவன்கழல்சேர்ந்தன்போடினபமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - படிக்காசளித்தவீசுவரர், தேவியார் - அழகம்மை.

நீநழதுதன்றம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாசிறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
யாவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வா
யோவாவுவரிகொள்ளவுயாதாயென்றேத்தி
மூவாமுனிவாவணங்குங்கோயினமுதுகுன்றே. (க)

எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவா
சிதைபுள்ளேகோயிலாகத்திகழ்வானை
மந்தியேறியினமாய்மல்காள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயின்முதுகுன்றே. (உ)

நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரந்
தேடுமடியாசிதையுள்ளேதிகழ்வானைப்
பாடுகுயிலினமலிகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிழ்ஞ்சுகாயின்முதுகுன்றே. (ங)

தெரிந்தவடியாச்சிவனேயென்றுதிசைதோறுங்
குருந்தமலருங்குரவிணலருங்கொண்டேத்தி
யிருந்துநின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றே. (ச)

வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தஞ்
சித்தமகத்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவம்வாரிக்கொணர்ந்துந்து
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (ஞ)

வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னகல்கும்பெருமானுறைகோயில்

கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கு
மொய்ம்பாசோலைவண்டுபாடுமுதுகுன்றே. (கூ-எ)

வாசங்கமழும்பொழில்சூழிலக்கைவாழ்வேங்கை
காசஞ்செய்தகங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தவடியார்கள்புகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. (அ)

அல்லிமலர்மேலயனுமாலினணையானுஞ்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லிவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்யுமுதுகுன்றே. (கூ)

கருகுமூடலார்கஞ்சியுண்டுகெடுவதின்
முருகுசிந்தையில்லாக்கயவாணுறைகோயில்
திருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துகடஞ்செய்முதுகுன்றே. (கூ0)

அறையாகடலசூழ்தனகாழ்ச்சமபத்தன்
முறையான்முனிவர்வணங்குசேயின்முதுகுன்றைக்
குறையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்களபிரியாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றமபலம்.

கறையணிவேலினிலர்போலுங்கபாலந்தரித்திலர்போலு
மறையுடையின்றிலர்போலுமாசுணமார்த்திலாபோலும
பறையுங்கரத்திலர்போலும்பாசம்பிடித்திலாபோலும்
பிறையுஞ்சடைக்கிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (க)

கூரம்பதுவிலர்போலுங்கொக்கினிறகிலாபோலு
மாரமும்பூண்டிலாபோலுமாமையணிந்திலர்போலுங்
காருஞ்சடைக்கிலாபோலுந்தண்டிக்கருளிலாபோலும்
பேரும்பலவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (உ)

சித்தவடிவிலர்போலுந்தேசந்திரிந்திலர்போலுங்
கத்திவருங்கமுங்காளிகதங்கடவிர்த்திலர்போலு
மெய்த்தயனமிடந்தார்க்காழியளித்திலாபோலும்
பித்தவடிவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ங)

கச்சரவாட்டிலர்போலுஞ்சமிடற்றிலர்போலுங்
கச்சுதரித்திலர்போலுங்கங்கைதரித்திலர்போலு
மொய்ச்சவன்பேயிலர்போலுமூப்புமெய்திலர்போலும
பிச்சையிரந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ச)

தோடுசெவிக்கிலர்போலுஞ்சூலம்பிடித்திலர்போலும்
மாடதடக்கையிலியானையுரித்திலர்போலும்
மோடுகரத்திலர்போலுமொள்ளழல்கையிலர்போலும்
பீடுமிகுத்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (கூ)

விண்ணவர்கண்டிலர்போலும்வேள்வியழித்திலர்போலும்
மண்ணலயன்றலைவீழவன்றுமதுத்திலர்போலும்
வண்ணவெலும்பினைடக்குவடங்கடரித்திலர்போலும்
பெண்ணினமொய்த்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (கூ)

பன்றியின்கொம்பிலர்போலும்பார்த்தற்கருளிலர்போலுங்
கன்றியகாலனைவீழக்கால்கொடுபோய்த்திலர்போலுந
துன்றுபிணஞ்சுடுகாட்டிலாடித்துதைந்திலர்போலும்
பின்றியும்பீடம்பெருகுமபிரமபுரமமர்ந்தாரே. (எ)

பரசுதரித்திலர்போலும்படுதலைபூண்டிலர்போலு
மரசனிலங்கையாகோனையன்றுமடர்த்திலர்போலும்
புரைசெய்புனத்திளமானும்புலியினதளிலர்போலும்
பிரசமலர்ப்பொழில்சூழ்ந்தபிரமபுரமமர்ந்தாரே. (அ)

அடிமுடிமாலயன்றேடவன்றுமளப்பிலர்போலுங்
கடிமலர்மங்கையோர்கூறாக்கனலவிழித்திலர்போலும்
படிமலர்ப்பாலனுக்காகப்பாற்கடலீந்திலர்போலும்
பிடிநடைமாதர்பெருகுப்பிரமபுரமமர்ந்தாரே. (கூ)

வெற்றரைச்சிவரத்தாக்குவெளிப்படின்றிலர்போலு
மற்றவராணிமுனல்வாக்கறங்களுரைத்திலர்போலு
முற்றவொன்றிலர்போலுமோடுமுடிகிலர்போலும்
பெற்றமுமூர்திலர்போலுமபிரமபுரமமர்ந்தாரே. (கo)

பெண்ணுருவாணுருவல்லாப்பிரமபுரமேய
வண்ணல்செய்யாதனவெல்லாமறிந்துவகைவகைபாலே
கண்ணியனாவடுத்தனவின்றனபத்தும்வல்லாகள்
விண்ணவரோடினிதாகவீற்றிருப்பாரவாதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - திருநீற்றுப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே. (க)

V.B.Siva

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுண்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (உ)

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (ஊ)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (எ)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவுத்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (ஏ)

அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (ஐ)

எயிலதுவட்டமதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலெத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலெப்பொடிதருசூலத்தாலவாயான்றிருநீறே. (ஒ)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. (ஓ)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமினபத்தருவதுநீறு
வாலமுதண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. (ஔ)

குண்டிகைக்கையர்களோசொக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துத்தகையதுநீறு
வண்டமிழ்ப்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே. (க0)

ஆற்றலடல்விடையேறுமாலவனாயன்றிருநீற்றைப்
போற்றிப்புகலிவிலாவுபூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதிரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்கல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தீநப்பெரும்புலியூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோராபாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. (க)

துன்னுகடற்பவளஞ்சேராதாயதீண்டதிரடோள்கண்
மினனுசுடர்க்கொடிபோலுமேனியினொருபங்கைக்
கன்னிகளின்புனையோகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானாரெருமபுலியூாபிரியாரே. (உ)

கள்ளமதித்தகபாலங்கைதனிலேமிகவேந்தித்
துள்ளமிதித்துநின்றாடுந்தொழிலதொழின்மிகுசெல்வர்
வெள்ளருகுதலைமாலைவிரிசடைமேன்மிளிர்கின்ற
பிள்ளைமதிப்பெருமானாரெரும்புலியூர்பிரியாரே. (ஙு)

ஆடலிலேபமுடையாரருமறைதாங்கியாறங்கம்
பாடலிலேயமுடையார்பன்மையொருமைசெய்தஞ்சு
மூடலிலேயமுடையார்யாகெனும்பேரொளிதாங்கிப்
பீடலிலேயமுடையாரெரும்புலியூாபிரியாரே. (ச)

தோடுடையாருழைக்காதிற்சுடுபொடியாரனலாடக்
காடுடையாரொளிவீசுங்கையுடையார்கடல்சூழ்ந்த
காடுடையார்பொருளின்பாலலவாளுருவாத
பீடுடையாரெருமானார்பெருமபுலியூாபிரியாரே. (ஞ)

கற்றதுறப்பணிசெய்துகாண்டுமென்பாரவர்தங்கண்
முற்றிதறிதுமென்பாகண்முதலியாவேதபுராணா
மற்றிதறிதுமென்பாகண்மனத்திடையாரபணிசெய்யப்
பெற்றிபெரிதுமுகப்பார்பெரும்புலியூாபிரியாரே, (சு)

மறையுடையாரொலிபாடனமாமலர்ச்சேவடிசேர்வார்
குறையுடையார்குறைதீர்ப்பார்குழகாழகர்கஞ்செல்வர்
கறையுடையார்திகழ்கண்டங்கங்கைசடையிற்கரந்தார்
பிறையுடையார்சென்னிதன்மேற்பெரும்புலியூர்பிரியாரே. (எ)

---

* கங்கைக்கன்னிகளின்புனையோடு-என்பதனுக்கு-கங்கையாறுகளாகிய மாலையுடன் எனப் பொருள் தோன்றுகின்றது.

உறவியுமின்புறுசிருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
மறவியென்சிந்தனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானர்பெரும்புலியூர்பிரியாரே. (அ)

சிருடையாரடியார்கள்சேடரொப்பார்சடைசேரு
நீருடையார்பொடிப்பூசுதினைப்புடையார்விரிகொன்றைத்
தாருடையார்விடையூர்வார்தலைவரதூற்றுப்பத்தாய
பேருடையாரபெருமானர்பெரும்புலியூர்பிரியாரே. (கூ)

உரிமையுடையடியார்களுள்ளுறவுள்கவல்லாகட்
கருமையுடையனகாட்டிபருள்செயுமாதிமுதல்வர்
கருமையுடைகரிமாலுங்கடிமலரண்ணலுங்காணாப்
பெருமையுடைபபெருமானர்பெரும்புலியூரபிரியாரே. (கo)

பிறைவளருமுடிச்சென்னிபபெருமபுலியூர்ப்பெருமானை
நிறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தத்துபாரீங்கி
நிறைவளரெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - விபாக்ஷிரபுரீசுவரர், தேவியார் - சவுந்தராம்பிகை.

திருக்கடம்பூர் - பண் - காந்தாரம்.

பலம.

வானமர்திங்களுநீருமருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமருமபிணைபுல்கிகலைபயிலுங்கடம்பூரிற்
றூணமர்கொள்கையினானைத்தாடொழவீடெளிதாமே. (க)

அரவினெடாமையும்பூண்டதுகிலிவேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிருமபிப்
பரவுந்தனிகடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றணனல்பாத
மிரவும்பகலும்பணியவினபமக்கதுவாமே. (உ)

*இளிபடுமின்சொலினர்களிநுங்குழன்மேலிசைந்தேறத்
தெளிபடுகொளைகைகலதுதீத்தொழிலார்கடமபூரி
லொளிதருவெண்பிறைசூடியொண்ணுதலோடனுகிப்
புலியதளாடைபுனைந்தானபொற்கழல்போற்றுதுதாமே. (ங)

பறையொசெங்குமியம்பப்பல்கொடிசேர்நெடுமாடங்
கறையுடைவேல்வரிக்கண்ணர்கலியாலிசோகடமபூரின்
மறையொலிகூடியபாடன்மருவினின்றுடன்மகிழும்
பிறையுடைவார்சடையானப்பேணவல்லார்பெரியோரே. (ச)

---

* இளி - என்பது ஏழிசையிலொன்று.

திவிரியக்கழலார்ப்பச்சேயெரிகொண்டிகோட்டின்
ஞவிரிசூக்தனற்பேய்கணைகைசெயட்டகவின்றேன்
காவிரிகொன்றைகலந்தகண்ணுதலான்கடம்பூரிற்
பாவிரிபாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. (டு)

தண்புனனீள்வயறேறுந்தாமரைமேலனம்வைகக்
கண்புணர்காவில்வண்டேறக்கள்ளவிழுங்கடம்பூரிற்
பெண்புனை கூறுடையானேப்பின்னுசடைப்பெருமானேப்
பண்புனைபாடல்பயில்வார்பாவமிலாதவர்தாமே. (சு)

பலிகெழுசெம்மலர்ச்சாரப்பாடலோடாடலறாத
கலிகெழுவீதிகலந்தகார்வயல்சூழ்கடம்பூரி
லொளிதிகழ்ங்கைகலந்தானெண்ணுதலாளுமைகேள்வன்
புனிதனாடையினன்றன்புனைகழல்போற்றலபொருளே. (எ)

பூம்படுகிற்கயல்பாயப்புள்ளிரியப்புறங்காட்டிற்
காம்படுதோளியராளுங்கண்கவருங்கடமபூரின்
மேமபடுதேவியோபாகமேவியமமானெனவாழ்த்தித்
தேமபடுமாமலர்தூவித்திசைதொழத்தீவகெடுமே. (அ)

திருமருமார்பிலவனுந்திகழ்தருமாமலரோனு
மிருவருமாயறிவொண்ணெரியுருவாகியவீசன்
கருவரைகாலிலடர்த்தகண்ணுதலான்கடமபூரின்
மருவியபாடல்பயில்வார்வானுலகம்பெறுவாரே. (கூ)

ஆடைதவிர்த்தறங்காட்டுமவாகளுமந்துவராடைச்
சோடைகணன்னெறிசொல்லாசொல்லிலுஞ்சொல்லலகண்டீர்
வேடம்பலபலகாட்டுவெகிர்தனம்வேதமுதல்வன்
காடதனிடமாடுங்கண்ணுதலான்கடம்பூரே. (கo)

விடைகவிலுங்கொடியானெவண்கொடிசோதிமொடங்
கடைகவிலுங்கடம்பூரிற்காதலினக்கடற்காழி
கடைகவின்ஞானசமபந்தனமையாலேதியபத்தும்
படைகவில்பாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அழுதகடேசுவரர், தேவியார் - சோதிமின்னம்மை.

திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர்மேனியினருமபிறைபுல்குசெஞ்சடையாரும்
கண்ணமர்நெற்றியினருங்காதமருங்குழையாரு
மெண்ணமருங்குணத்தாருமிமையவரேத்தநின்றாரும்
பண்ணமர்பாடலினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (க)

தினைக்கணிமாமலர்கொண்டுதாடொழுவாரவர்தங்கள்
வினைப்பகையாயின தீர்க்கும்விண்ணவர்விஞ்சையர்தெஞ்சி
னினைத்தெழுவார்துயர்தீர்ப்பார்நினைவரிமங்கைகேடிங்கப்
பனைக்கைப்பகட்டுரிபோர்த்தார்பாண்டிக்கொடுமுடியாரே. (உ)

சடையமர்கொன்றையினருஞ்சாந்தவெண்ணீறணிந்தாரும்
புடையமர்பூதத்தினரும்பொறிகிளர்பாமபசைத்தாரும்
விடையமருங்கொடியாரும்வெண்மழுமூவிலைச்சூலப்
படையமர்கொள்கையினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (ஊ)

கறைவளர்கொன்றையினருஞாலமெல்லாந்தொழுதேத்தக்
கறைவளர்மாமிடற்றரங்காடரங்காக்கனலேந்தி
மறைவளர்பாடலினேமமண்முழவங்குழன்மொந்தை
பறைவளர்பாடலினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (எ)

போகமுமின்பருமேகிப்போற்றியென்பாரவர்தங்க
ளாகமுறைவிடமாகவமர்ந்தவர்கொன்றையினேடு
நாகமுந்திங்களுஞ்சூடுநன்னுதனமங்கைதன்மேனிப்
பாகமுகந்தவர்தாமுமபாண்டிக்கொடுமுடியாரே. (ஏ)

கடிபடுகூவிளமத்தங்கமழ்சடைமேலுடையாரும்
பொடிபடமுப்புரஞ்செற்றபொருசிலையொன்றுடையாரும்
வடிவுடைமங்கைதன்னேமமணமபடிகொள்கையினரும
படிபடுகோலத்தினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (ஐ)

ஊனமர்வெண்டலைபேந்தியுண்பலிக்கென்றுழல்வாருந்
தேனமருமொழிமாதுசோதிருமேனியினருங்
கானமர்மஞ்ஞைகளாலுங்காவிரிகோலக்கரைமேற்
பானலீறணிவாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (ஒ)

புரந்தரன்றன்னெடுவானேர்போற்றியென்றேத்தகின்றாரும்
பெருந்திறல்வாளரக்கன்னேப்பேரிடர்செய்துகந்தாருங்
கருந்திரைமாமிடற்றரங்காகில்பனமணியுந்திப்
பரந்திழிகாவிரிப்பாங்கர்ப்பாண்டிக்கொடுமுடியாரே. (ஓ)

திருமகள்காதலினனுந்திகழ்தருமாமலர்மேலப்
பெருமகனும்வராக்காணப்பேரழலாகியபெம்மான்
மருமலிமென்மலர்ச்சந்துவந்திழிகாவிரிமாடே
பருமணிநீர்த்துறையாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (க)

புத்தரும்புந்தியிலாதசமணரும்பொய்மொழியல்லான்
மெய்த்தவம்பேசிடமாட்டார்வேடம்பலபலவற்றாற்
சித்தருந்தேவருங்கூடிச்செழுமலர்நல்லனகொண்டு
பத்தர்கடாம்பணிந்தேத்தும்பாண்டிக்கொடுமுடியாரே. (கக)

கலமல்குதண்கடல்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
பலமல்குவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதனைச்
சொலமல்குபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லார்துயர்தீர்ந்து
கலமல்குசிந்தையராகிஎனெனறியெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொடுமுடிநாதேசுவரர், தேவியார் - பண்மொழியம்மை.

திருச்சக்கரமாற்று - பண் - காந்தாரம்.

திருச்சிற்றமபலம்.

பிரமனூர்வேணுபுரமடுகலிவெங்குருப்பெருநீர்தோணி
புரமண்ணுபூந்தராய்பொன்னஞ்சிரபுரமவணசண்பை
யரண்மன்னுதண்காழிகொச்சைவயமுளளிட்டங்காதியாய
பரமனூர்பனனிரண்டாய்நினறதிருக்கழுமலமாம்பாவுமூரே. (க)

வேணுபுரமபிரமனூரபுகலிபெருவெங்குருவெள்ளத்தோங்குத்
தோணிபுரம்பூந்தராய்தூநீரச்சிரபுரமபுறவங்காழி
கோணியமேகாட்டாற்றுக்கொச்சைவயஞ்சணபைகூருஞ்செல்வங்
காணிநலவையகத்தோர்தொழுங்கழுமலமாங்கருதுமூரே. (உ)

புகலிசிரபுரம்வேணுபுரஞ்சணபைபுறவங்காழி
சிகரிபிரமபுரங்கொசசைவயநீமேனினறமூதூர
பகலிபவெங்குருவோடத்தண்டாரமமாபெருமாற்கின்பம்
பகருகடல்லகழுமலமாங்கைதொழுதுபாடுமூரே. (ங)

வெங்குருதத்தண்புகலிவேணுபுரஞ்சண்பைவெள்ளங்கொள்ளத்
தொங்கியதோணிபுரமபூந்தராய்தொகுசிரமபுரந்தொல்காழி
தங்குபொழிற்புறவங்கொசசைவயநதலைபணடாண்டமூதூர
கஙையரடைமுடிமேலேற்றுஞ்சுழுமலமாங்கருதுமூரே. (ச)

தொனனீரிறைஞ்சுணிபுரமபுகலிவெங்குருத்துயாதிரகாழி
யினனீரமவேணுபுரங்கரயப்பிரமனூரொழிலாசண்பை
கனனீரப்பூமபுறவங்கொச்சைவயஞ்சிலமபனகராகல்ல
பொன்னீரபுனசடையானபூந்தண்கழுமலமாமபுகழுமூரே. (ஞ)

தணணந்தராய்புகிதாமரையானூராசண்பைதலைமுனைண்ட
வணணனகர்கொச்சைவயந்தண்புறவஞ்சிணியாகாழி
விண்ணியல்சீரவெங்குருநல்வேணுபுரந்தோணிபுரமேலாலேத்து
கண்ணுதலோனமேவியகற்கழுமலமாங்கைதொழுதுகருதுமூரே. (ஙு)

சீராரசிரபுரமுங்கொச்சைவயஞ்சண்பையொடுபுறவல்ல
வாராதராய்பிரமனூர்புகலிவெங்குருவோடதண்காழி
பேராகழுமலமும்வேணுபுரந்தோணிபுரமென்றென்றுள்கிப்
போனெடியவனூரான்முகணுங்காண்பரியபெருமானூரே. (எ)

புரவஞ்சிரபுரமுத்தோணிபுரஞ்சண்பைமிகுபுகலிகாழி
கறவமிகுசோலைக்கொச்சைவயத்தராய்கான்முகன்றனூர்
விறலாயவெங்குருவும்வேணுபுரம்விசயன்மேலம்பெய்து
நிறலாலரக்கனைச்செற்றுன்றன்கழுமலஞ்சேருமூரே. (அ)

சண்பைபிரமபுரத்தண்புகலிவெங்குருநற்காழிசாயாப்
பண்பார்சிரபுரமுங்கொச்சைவயத்தராய்புறவம்பார்மே
ணண்பார்கழுமலஞ்சீர்வேணுபுரந்தோணிபுரநாணிலாத
வெண்பற்சமணரொடுசாக்கியரைவியப்பழித்தவிமலனூரே. (கூ)

செழுமலியபூங்காழிபுறவஞ்சிரபுரஞ்சீர்ப்புகலிசெய்ய
கொழுமலரானன்னகரத்தோணிபுரங்கொச்சைவயஞ்சண்பையாய
விழுமியசீர்வெங்குருவோடோங்குதராய்வேணுபுரமிகுநன்மாடக்
கழுமலமென்றின்னபெயர்பன்னிரண்டுங்கண்ணுதலான்கருதுமூரே. (கo)

கொச்சைவயம்பிரமனூர்புகலிவெங்குருப்புறவங்காழி
நிச்சல்விழுவோவாநீடார்சிரபுரநீள்சண்பைமூதூர்
கச்சினியபூத்தாய்வேணுபுரத்தோணிபுரமாகியமே
லச்சங்கடீர்த்தருளுமம்மான்கழுமலமாமருமூரே. (கக)

காவிமலர்புரையுங்கண்ணார்கழுமலத்தின்பெயராகளூம்
பாவியசீர்ப்பன்னிரண்டுகன்னூலாப்பத்திமையாற்பணிவன்மாலை
காவினிலம்புகழ்சீர்ஞான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
மேவியிசைமொழிவார்விண்ணவரிலென்னுதலிலிருப்புளாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

இது- பாண்டியராஜனுடைய சுரப்பிணிதீர்க்கச்சென்றபோது அந்த ராஜன் சுவாமிகளைநோக்கி எத்தலமொன்று விளவ, நாமின்னவொன்று திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகம்.

திருத்தும்பலா - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வ
நிருத்தவிடம்வினவிலேலங்கமழ்சோலையின்வண்டியாழ்செய்
குருத்தமணகாயுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (க)

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தகம்பானம்மை
யாட்பலவுந்தானுடையவம்மானிடம்போலுமந்தண்சாரற்
கீட்பலவுங்கிண்கிணிகிளிகிளியனமந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்றீங்கனியையாக்கடுவனுண்டுகளுங்குறும்பலாவே. (உ)

வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவிக்கி
யாடலரவசைத்தவம்மானிடம்போலுமந்தண்சாரற்
பாடற்பெடைவண்டுபோதலர்த்தத்தாதவிழ்த்துபசும்பொனுந்திக்
கோடன்மணங்கமழுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (ங)

பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்துபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீலமலர்க்குவளைகண்டிறக்கவண்டாற்றுதெடுதண்சாரற்
கோலமடமஞ்ஞைபேடையோடாட்டயருங்குறும்பலாவே. (உ)

தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கித்தேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலுமுதுவேய்சூழ்ந்த
மலைவாயசும்புபசும்பொன்கொழித்திழியுமல்குசாரற்
குலைவாழைத்தீங்கனியுமாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே. (ஙி)

நீற்றேதுதைத்திலங்குவெண்ணூலர்தண்மதியர்கெற்றிக்கண்ணர்
கூற்றோர்சிதையக்கடந்தாரிடம்போலுங்குளிர்சூழ்வெற்பி
லேற்றேனமேனமிலையோடவைவிரவியிழிபூஞ்சாரற்
கோற்றேனிசைமூரலக்களாக்குயில்பயிலுங்குறும்பலாவே. (கூ)

பொன்றெழுத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்றெழுத்தவார்சடையெம்பெருமானிடம்போலும்பியசந்தாங்கி
மன்றத்துமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுழ்திக்
குன்றத்தருவியலைபுன்றதுமபுக்குறும்பலாவே. (எ)

ஏத்துதிணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடாவூன்றிச்
சாத்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரற்
பூத்தணறுவேங்கைக்கொத்திறுத்துமத்தகத்திற்பொலியவேங்கி
கூத்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. (அ)

ஆரவினையாணுதான்முதலுங்காண்பரியவண்ணல்சென்னி
விரவுமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரல்
மரவமிருகனையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்துமாந்தக்
குரவமுறுவல்செய்யுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (கூ)

மூடியசிவரத்தர்முன்கூறுண்டேறுதலும்பின்கூறுண்டு
காடிதொடுசமணைக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீடியர்வேய்குனியப்பாய்கலெனீள்கழைமேனிருத்தஞ்செய்யக்
கூடியவேடுவர்கள்குயவிழியாக்கைமறிக்குங்குறும்பலாவே. (கஉ)

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ண
னம்பானடிபரவுதான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
வின்பாயபாடலிவைபத்துமல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலுஞ்சிவலோகடளராவண்மே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - குறும்பலாநாதர், தேவியார் - குழன்மொழியம்மை.

இதலை - திருக்குற்றாலம்.

ஆக பதிகம் - ஏக.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருநஞ - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தார்வின்மடவாள்பாகமாகாகம்பூண்டெருதேறி
யத்தாரவணிந்தவம்மானிடம்போலுமத்தண்சாரல்
வத்தார்மடமந்திகூத்தாடவார்பொழிவில்வண்டுபாடச்
செத்தேன்றெளியொளிரத்தேமாக்கனியுதிர்க்குந்திருநணுவே. (க)

காட்டம்பொலிந்திலங்குகெற்றியினன்மற்றொருகையீரேழுமேந்தி
யீட்டுத்துயாறுக்குமெமமானிடமபோலுமிலைசூழ்கானி
லோட்டத்தருமருவிவீழ்மிசைகாட்டமூதாழாசைச்
சேட்டார்மணிகளணியுந்திரைசேர்க்குந்திருநணுவே. (உ)

கன்றுங்கிசைமொழித்துகன்னுதலாள்பாகமாய்ஞாலமேத்த
மின்றுங்குசெஞ்சடையெம்விகிர்தாக்கிடமபோலும்விரைசூழ்வெற்பிற்
குன்றுங்கிவன்றிரைகண்மோதமயிலாலுஞ்சாரறசெவ்வி
சென்றுங்கிவானவர்களேத்தியடிபணியுந்திருநணுவே. (ங)

கையின்மழுவேந்திக்காலிற்சிலம்பணித்துகரித்தோல்கொண்டு
மெய்யின்முழுதணிந்தவிகிர்தாக்கிடமபோலுமிடைத்துவானே
யையவொம்பெருமானருளென்றென்றுரிக்கச்
செய்யகமலம்பொழிதேனளித்தியலுந்திருநணுவே. (ச)

முத்தேர்கையாளிடமாகத்தன்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
வத்தேனளியுண்களியாலிசைமுரல்வாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்விரைதெடுக்குந்திருநணுவே. (ஞ)

வில்லார்வையாகமாகாகணைவேடங்கொண்டு
புல்லார்புரமூன்றெரித்தாக்கிடமபோலும்புலியுமானு
மல்லாதசாதிகளுமங்கமுன்மேற்கைகூப்பவடியார்கூடிச்
செல்லாவருநெறிக்கேசெல்லவருள்புரியுந்திருநணுவே. (கூ)

கானூர்களிற்றுரிவைமேன்மூடியாடரவொன்றைமேற்சாத்தி
யூனூர்தலையோட்டிலுணுகந்தான்றுணுகந்தகோயிலங்கு
கானுவிதத்தால்விரதிகணன்னுமமேயேத்திவாழ்த்தத்
தேனூர்மலர்கொண்டடியாரடிவணங்குந்திருநணுவே. (எ)

மன்னீரிலங்கையர்தங்கோமான்வலிதொலையவிரலாலூன்றி
முந்நீர்க்கடனஞ்சையுண்டார்க்கிடம்போலுமுனைசேர்சிய
மன்னீர்மைகுன்றியழலாவ்வலிகுறையவழியுமுன்றிற்
செந்நீர்பரப்பச்சிறந்துகரியொளிக்குந்திருநணுவே. (அ)

மையார்மணிமிடற்றன்மங்கையோர்பங்குடையான்மனைதோறுங்
கையார்பலியேற்றகள்வனிடம்போலுங்கழல்கணேடிப்
பொய்யாமறையாலும்பூமியளந்தானும்போற்றமன்னிச்
செய்யாரியாமுருவமுறவணங்குந்திருநணுவே. (கூ)

ஆடையொழித்தங்கமணைதிரித்துண்பாரல்லல்பேசி
மூடுருவமுகத்தாருரையகற்றுமூர்த்திகோயி
லோடுநதிசேருநித்திலமுமொய்த்தகிலுங்கையிற்சாரச்
சேடர்சிறந்தேத்தத்தான்றியொளிபெருகுந்திருஞேவே. (கo)

கல்வித்தகத்தாற்றிரைசூழ்கடற்காழிக்கவுணிசிரார்
கல்வித்தகத்தாலினிதுணருஞானசம்பந்தனென்று
சொல்வித்தகத்தாலிறைவன்றிருஞேவேத்துபாடல்
வல்வித்தகத்தாள்மொழிவார்பழியிலரிம்மணணின்மேலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சங்கமுகநாதேசுவரர், தேவியார்-வேதமங்கையம்மை.

இது - பவானியென்னும்நதி - காவிரிநதியுடன்சேருமிடமாதலால், பவானிகூடலெனப் பெயர் வழங்கப்படுகின்றது.

திருச்சக்கரமாற்று - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருமேற்சோலை
வளங்கவருந்தோணிபுரம்பூந்தராய்சிரபுரம்வண்புறவமண்மேற்
களங்கமிலாசண்பைகமழ்காழிவயங்கொச்சைகழுமலமென்றின்ன
விளங்குமரன்றன்னீப்பெற்றிமையவாதம்பகையெறிவித்திறைவனூரே.(க)

திருவளருஞ்சழுமலமேகொச்சைதேவேந்திரனூரயனூர்தெய்வத்
தருவளரும்பொழிற்புறவஞ்சிலம்பனூர்காழிதருசண்பையேண்பா
ருருவளர்வெங்குருப்புகலியோங்குதராய்தோணிபுரமுயர்ததேவர்
வெருவலவர்கடல்விடமதுண்டணிகொள்கண்டத்தோன்விரும்புமூரே. (உ)

வாய்ந்தபுகழ்மறைவளருந்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்வாழு
ரேய்ந்தபுறவஞ்சிகழுஞ்சண்பையெழிற்காழியிறைகொச்சையம்பொன்
வேய்ந்தமதிற்கழுமலம்விண்ணோர்பணியப்பிக்கயனூரமர்கோனூ
ராய்ந்தகலையார்புகலிவெங்குருவதரனுமமருமூரே. (ங)

மாமலியாள்கணவன்மகிழ்வெங்குருமாப்புகலிதராய்தோணிபுரம்வான்
சேமமதில்புடைதிகழுங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூர்சீர்ப்
பூமகனூர்பொலிவுடையபுறவம்விறற்சிலம்பனூர்காழிசண்பை
பாமருவுகலியெட்டெட்டினோர்ந்தவற்றின்பயனுகர்வோர்பரவுமூரே. (ச)

*தனைத்தேவர்பணிசண்பைதமிழ்க்காழிவயங்கொச்சைதயங்குபூமேல்
விசைச்சேருங்கழுமலமெய்யுணர்ந்தயனூர்விண்ணவர்தங்கோனூர்வென்றித்
திசைச்சேரும்புனற்புகலிவெங்குருச்செல்வம்பெருகுதோணிபுரஞ்சி
ருசைச்சேர்பூந்தராய்சிலம்பனூர்புறவமூலகத்திலுயர்ந்தவூரே. (ஞ)

---

* தனைத்தேவர்-பிரமன்.

புண்டரிகத்தார்வயல்சூழ்புறவமிகுசிரபுரம்பூங்காழிசண்பை
யெண்டிசையோரிறைஞ்சியவெங்குருப்புகலிபூந்தராய்தோணிபுரஞ்சீர்
வண்டமரும்பொழின்மல்குகழுமலமற்கொச்சைவானவர்தங்கோனூர்
ரண்டமனூரிவையென்பாருங்கூற்றையுதைத்துகந்தவப்பனூரே. (கூ)

வண்மைவளர்வாசத்தயனூர்வானவர்தங்கோனூர்வண்புகலியிஞ்சி
வெண்மதிசேர்வெங்குருமிக்கோரிறைஞ்சுசண்பையியன்காழிகொச்சை
கண்மகிழுங்கழுமலங்கற்ரூர்புகழுந்தோணிபுரம்பூந்தராய்சீர்ப்
பண்மலியுஞ்சிரபுரம்பார்புகழ்புறவம்பால்வண்ணன்பயிலுமூரே. (எ)

மோடிபுறஞ்சாக்குமூர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்காழிமூதூர்
நீடியலுஞ்சண்பைகழுமலங்கொச்சைவேணுபுரங்கமலநீடு
கூடியயனூர்வளர்வெங்குருப்புகலிதராய்தோணிபுரங்கூடப்போர்
தேடியுழலவுணாபயிரிபுரங்கள்செற்றமலைச்சிலையனூரே. (அ)

இரக்கமுடையிறையவனூர்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்றன்னூர்
நிரக்கவருபுனற்புறவநின்றதவத்தயனூர்சோதிதேவர்கோனூர்
வரக்கரவாப்புகலிவெங்குருமாசிலாச்சண்பைகாழிகொச்சை
யாக்கன்மிறலழித்தருளிகழுமலமந்தணர்வேதமுறையூரே. (கூ)

மேலோதுங்கழுமலமெய்த்தவம்வளருங்கொச்சையிந்திரனூர்மெய்மை
நூலோதுமுன்றனூர்நுண்ணறிவார்குருப்புகலிதராய்தூரீர்மேற்
சேலோடுதோணிபுரத்திகழ்புறவஞ்சிலம்பனூர்செருச்செய்தன்று
மாலோடுமயனறியான்வண்காழிசண்பைமண்ணூர்வாழ்த்துமூரே. (கo)

ஆக்கமர்சீரூர்சண்பைகாழியமர்கொச்சைகழுமலமன்பானூர
சோக்கமுடைத்தோணிபுரம்பூந்தராய்சிரபுரமொண்புறவகண்பா
பூக்கமலத்தோன்மகிழ்பூர்புரத்தனூர்புகலிவெங்குருவுமென்பர்
சாக்கியரோடமண்கையர்தாமறியாவகைநின்றுன்றங்குமூரே. (கக)

அக்காஞ்சேர்தருமனூர்புகலிதராய்தோணிபுரமணிசீர்ப்பொய்கை
புக்காஞ்சேர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்புகழ்க்காழிசண்பைதொல்லூர்
மிக்காஞ்சிர்க்கழுமலமேகொச்சைவயம்வேணுபுரமயனூர்மேலிச்
சக்காஞ்சிர்த்தமிழ்விரகன்றுன்சொன்னதமிழ்தரிப்போர்தவஞ்செய்தோரே.

திருச்சிற்றம்பலம்.

தீருக்கோழந்தீ - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர்புத்தேளுக்கிறைவனூர்குறையிலாப்புகலிபூமேன்
மாமகனூர்வெங்குருகற்ரூணிபுரம்பூந்தராய்வார்த்தலிஞ்சிச்
சேமமிகுசிரபுரஞ்சீர்ப்புறவநிறைபுகழ்ச்சண்பைகாழிகொச்சை
காமனைமுன்காய்ந்தநிற்கண்ணுதனூர்கழுமலமாங்கருதுமூரே. (க)

கருத்துடையமறையவர்சேர்கழுமலமெய்த்தோணிபுரங்கனகமாட
வருத்திகழ்வெங்குருப்புகலியோங்குதராயுலகர்ருங்கொச்சைகாழி

திருத்திகழுஞ்சிரபுரத்தேவெற்றிரணூர்செங்கமலத்தயனூர்தெய்வத்
தருத்திகழும்பொழிற்புறவஞ்சண்பைசடைமுடியண்ணறவ்குமூரே. (உ)

ஊர்மதிலைக்கதுவவுயர்மதிற்சண்பையொளிமருவுகாழிகொச்சை
கார்மலியும்பொழிற்புடைசூழ்கழுமலமெய்த்தோணிபுரங்கற்றேரேத்துஞ்
சீர்மருவுபூந்தராய்சிரபுரமெய்ப்புறவமயனூர்பூங்கற்பத்
தார்மருவுமித்திரனூர்புகலிவெங்குருக்கவ்கைதரித்தோனூரே. (ஙு)

தரித்தமறையாளர்மிகுவெங்குருச்சீர்த்தோணிபுரத்தரியாரிஞ்சி
யெரித்தவன்சேர்கழுமலமேகொச்சைபூந்தராய்புகலியிமையோர்கோனூர்
தெரித்தபுகழ்ச்சிரபுரஞ்சீர்திகழ்காழிசண்பைசெழுமறைகளெல்லாம்
விரித்தபுகழ்ப்புறவம்விளைக்கமலத்தோனூருலகிலவிளங்குமூரே. (ச)

விளங்கயனூர்பூந்தராய்மிகுசண்பைவேணுபுரமேகமேய்க்கு
மிளங்கழுகம்பொழிற்றோணிபுரங்காழியெழிற்புகலிபுறவமேரார்
வளங்கவருமவயற்கொச்சைவெங்குருமாச்சிரபுரம்வனனஞ்சமுண்டு
களங்கமலிகளத்தவன்சீர்க்கழுமலங்காமனுடல்காய்ந்தோனூரே. (டு)

காய்ந்தவருங்காலனையன்றுதைத்தவனூர்கழுமலமாத்தோணிபுரஞ்சி
ரோய்ந்தவெங்குருப்புகலியித்திரனூரிருங்கமலத்தயனூரினபம்
வாய்ந்தபுறவந்திகழுஞ்சிரபுரம்பூந்தராய்கொச்சைகாழிசண்பை
சேர்ந்தனமுன்பயந்தலகிற்றேவர்கடம்பைகெடுத்தோன்றிகழுமூரே. (கு)

திகழ்மாடமலிசண்பைபூந்தராய்பிரமனூர்காழிதேசார்
மிகுதோணிபுரந்திகழுமவேணுபுரம்வயங்கொச்சைபுறவம்விண்ணோர்
புகழ்புகலிகழுமலஞ்சீர்ச்சிரபுரம்வெங்குருவெம்போர்மிடற்செற்று
நிகழ்நீலின்மலன்றன்னடியிணைகள்பணிந்துலகினின்றவூரே. (எ)

றின்றமதில்சூழ்தருவெங்குருத்தோணிபுரங்கழும்வேணுமன்றி
லொன்றுகழுமலங்கொச்சையுபாகாழிசண்பைவளர்புறவமோடி
சென்றுபுறங்காக்குமூர்சிரபுரம்பூந்தராய்புகலிதேவர்கோனூர்
வென்றிமலிபிரமபுரம்பூதங்கடாங்காக்கமிக்கவூரே. (அ)

மிக்கசமலத்தயனூர்விளங்குபுறவஞ்சண்பைகாழிகொச்சை
தொக்கபொழிற்கழுமலத்தோத்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்சேரூர்
மைக்கொள்பொழில்வேணுபுரமதிற்புகலிவெங்குருவல்லரக்கன்றிண்டோ
ளொக்கலிருபதுமுடிகளொருபதுமீடழித்துகந்தவெம்மானூரே. (கூ)

எம்மான்சேர்வெங்குருச்சீர்ச்சிலம்பனூர்கழுமலற்புகலியென்றும்
பொய்ம்மாண்பிலோர்புறவங்கொச்சைபுக்தானூர்றோணிபுரம்போர்க்
கைம்மாவையுரிசெய்தோன்காழியனூர்தராய்சண்பைகாரின்
மெய்ம்மால்பூமகனுணராவகைதழலாய்விளங்கியவெமமிறைவனூரே. (கo)

இறைவனமர்சண்பையெழிற்புறவமயனூரிணையோர்க்கதிபன்சேரூர்
நிறைவில்புகழ்ப்புகலிவெங்குருத்தோணிபுரங்குணமார்பூந்தராய்சீர்ச்

சிறைமுரற்சிரபுஞ்சிர்க்காழிவளர்கொச்சைகழுமலங்தகின்றிப்
பறிதலையோடமண்கையர்சாக்கியர்கள்பரிசறியாலம்மானூரே. (கக)

அம்மான்சேர்கழுமலமாச்சிரபுரம்வெங்குருக்கொச்சைபுறவமஞ்சீர்
மெய்ம்மானத்தொண்புகலிமிகுகாழிமாணிபுரத்தேவர்கோனூர
ரம்மானமன்னுயர்சண்பைதராயபனூர்வழிமுடக்குமாவின்பாசச
தம்மானென்றியஞானசம்பந்தன்தமிழ்கற்போர்தக்கோர்தாமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணியங்குமதிக்கண்ணியான்விரியுஞ்சடைப்
பெண்ணியங்கொடிருமேனியான்பெருமானைநற்
கண்ணியங்கொடிருநெறியானகலிக்காழிபுண்
மணியங்கொண்மறையாளர்தேத்துமலாபபாதனே. (க)

வலியகாலனுயிர்வீட்டினன்மடவாளொடும்
பலிவிரும்பியதோகையினனபரமேட்டியான்
கலியையென்றமறையாளர்தங்கலிக்காழிபு
ணலியவரவினைதீர்த்துகந்தலெம்மபனே. (உ)

சுற்றலாகற்புலித்தோலசைத்தபண்டெண்டிசைத்
துற்றலாயதாருகாளகையான்சுடுநீற்றன்
கற்றல்கேட்டலுடையார்கள்வாழ்கலிக்காழியுண்
மற்றயக்குதிரடோளெம்மைமர்தனவனல்லனே. (ஙு)

பல்லயங்குதலையேகிஞனபடகாணிடை
மல்லயங்குதிரடோளகளாடமாடியுங்
கல்லயங்குதிரைசூழ்நீள்கலிக்காழியுட்
டொல்லயங்குபுகழ்பேணின்றசுடர்வண்ணனே. (ச)

தூயகொடிருமேனியிற்பொடிப்பூசிப்போய்
காயகொண்மறையோதிமாதொருபாகமாக்
கானயங்கொள்புனல்வாசமார்கலிக்காழியுட்
டேனயங்கொண்முடியானேர்தாடியசெல்வனே. (ஞ)

சுழியிலங்கும்புனற்கங்கையாள்சடையாகவே
மொழியிலங்குமடமங்கைபாகமுகந்தவன்
கழியிலங்குங்கடலசூழ்தண்கலிக்காழியுட்
பழியிலங்குத்துயரொனறிலாப்பரமேட்டியே. (ட)

முடியிலங்குமுயர்சிக்தையான்முனிவர்தொழ
வடியிலங்குங்கழலார்க்கவேயனலேந்தியுங்
கடியிலங்கும்பொழில்சூழ்தண்கலிக்காழியுட்
கொடியிலங்கும்மிடையாளொடுங்குடிகொண்டதே. (எ)

வல்லரக்கன்வரைபேர்க்கவந்தவன்றோண்முடி
கல்லரக்கிவ்விறல்வாட்டினன்கலிக்காழியு
ணலலொருக்கியதோர்சிந்தையார்மலர்தூவவே
தொல்லிருக்கும்மறையேத்துகந்துடன்வாழுமே. (அ)

மருவுகான்மறையோனுமாமணிவண்ணனு
மிருவர்கூடியிசைத்தேத்தவேயெரியான்றனூர்
வெருவுறின்றதிரையோதம்வராவியன்முத்தலை
கருவையார்வயற்சங்குசேர்கலிக்காழியே. (கூ)

கன்றிபொன்றுமுணராதவன்சமண்சாக்கிய
ரன்றிபங்கவாசொன்னசொலலவைகொள்கிலான்
கன்றுமேதியிளங்கானலவாழ்கலிக்காழியுள்
வென்றிசேர்விபன்கோயில்கொண்டவிடையாளனே. (கo)

கண்ணுமூன்றுமுடையாதிவாழ்கலிக்காழியு
ளண்ணலத்தண்ணருள்பேணிஞானசம்பந்தன்சொல்
வண்ணமூன்றுந்தமிழிற்றெரிந்திசைபாடுவார்
விண்ணுமண்ணுமவரிகின்றதிதால்புகழாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஅந்தியான்பள்ளி - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடிபவெண்டலைமாலைசூடிமயங்கிரு
ணீடியர்கொள்ளிவிளக்குமாகவிவர்தெரி
யாடிபவெமபெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினாடகிலலையாம்பாவமே. (க)

துன்னங்கொண்டவுடையான்றுதைந்தவெண்ணீற்றினன்
மன்னுங்கான்றைமதமத்தஞ்சூடிமான்மாகத
மன்னுந்தங்குபொழில்சூழகத்தியான்பள்ளியை
யுன்னஞ்செப்பமதத்தார்கடமவினையோடுமே. (உ)

உடித்ததுவும்புலித்தோல்பலிதிரிந்துண்பதுங்
கடித்துவந்தகழற்காலன்றன்னையுங்காலினா
லடித்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
றொடித்ததுவுஞ்சரமுப்புராந்துகளாகவே. (ங)

காய்ந்ததுவுமன்றுகாமனைநெற்றிக்கண்ணினாற்
பாய்ந்ததுவுங்கழற்காலனைப்பண்ணின்மறை
யாய்ந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியா
னேய்ந்ததுவுமிமவான்மகளொருபாகமே. (ச)

போர்த்ததுவுங்கரியின்னுரிபுலித்தோலுடை
கூர்த்ததோர்வெண்மழுவேந்திக்கோளரவம்மரைக்

கார்த்தநவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
பார்த்தநவும்மரணம்படமொரிமூழ்கவே. (இ)

தெரிந்தநவுங்கணையொன்றுமுப்புரஞ்சென்றுட
னெரிந்தநவுமுன்னெழிலார்மலருறைவான்றலை
யரிந்தநவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
புரிந்தநவும்முமையாளொர்பாகம்புனைந்தலே. (சு)

ஓதியெல்லாமுலகுக்கோரொண்பொருளாகிமெய்ச்
சோதியென்றுதொழுவாரவர்துயர்தீர்த்திடு
மாதியெங்கள்பெருமானகத்தியான்பள்ளியை
நீதியினற்றொழுவாரவர்வினைநீங்குமே. (எ)

செறுத்தநவுந்தக்கன்வேள்வியைத்திருந்தார்புர
மொறுத்தநவுமொளிமாமலருறைவான்சிர
மறுத்தநவும்பொழில்சூழகத்தியான்பள்ளியா
னிறுத்தநவுமரக்கனன்றோள்களிருபதே. (அ)

சிரமுங்கல்லமதிமத்தமுந்திகழ்கொன்றையு
மரவமல்குஞ்சடையானகத்தியான்பள்ளியைப்
பிரமனோடுதிருமாலுந்தேடியபெற்றிமை
பரவவல்லாரவர்தங்கண்மேல்வினைபாறுமே. (கூ)

செந்துவராடையினருமம்வெற்றரையேதிரி
புந்தியிலார்களும்பேசும்பேச்சவைபொய்ம்மொழி
யந்தணனெங்கள்பிரானகத்தியான்பள்ளியைச்
சிந்திமினுமவினையானவைசிதைதோடுமே. (கஎ)

ஞாலமல்குந்தமிழ்ஞானசமபந்தன்மாமயிலாலுஞ்
சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுட்
சூலங்கல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கள்மேல்வினைமாயுமே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அகத்தீசுவரர், தேவியார் - மங்கைகாயகியம்மை.

அக பதிகம் - எசு.

திருஅறையணிநல்லூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பீடினற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலா
வீடினுலுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினர்மறைபாடினர்சுடலைநீறணிந்தாரழ
லாடினரறையணிநல்லூரரங்கையாற்றொழுவார்களே. (க)

இலையினர்சூலமேறுகண்டேதறியேயிமையோர்தொழ
நிலையினலொருகாலுறச்சிலையினன்மதிலெய்தவ
னலையினர்புனல்சூடியவண்ணலாரறையணிநல்லூர்
தலையினற்றிருமூடிதாங்குவார்நீங்குவார்தமமோற்றமே. (உ)

என்பினர்கனல்சூலத்தாரிலங்குமாமதியுச்சிய
ரன்பினும்பிறங்குஞ்சடைப்பிஞ்ஞகன்பிறப்பிலியென்று
முனபினர்மூவர்தாந்தொழுமுக்கண்மூர்த்திதன்னுள்களுக்
கன்பினரறையணிநல்லூரங்கையாற்றிருமூடுவார்களே. (ரு)

விரவுநீறுபொன்மார்பினில்விளங்கப்பூசியவேதிய
ருரவுகுஞ்சமுதாகவுண்டுறுதிபேணுவதன்றியு
மரவுசீள்சடைக்கண்ணியாரண்ணலாரறையணிநல்லூர்
பரவுவார்பழிநீங்கிடப்பறையுந்தாஞ்செய்தபாவமே. (ச)

தீயினர்திகழ்மேனியாய்த்தேவர்தாந்தொழுதேவனீ
யாயினுய்கொனறையாயனலங்கையாயறையணிநல்லூர்
மேயினர்தமதொல்வினைவீட்டினுய்வெய்யகாலனைப்
பாயினுயதிர்கழலினுய்பரமனேயடிபணிவனே. (ஞ)

வினையினர்கொன்றைசூடியும்வேதகாகமும்விக்கிய
வனையினரறையணிநல்லூரண்ணலாரழகாயதோர்
நனையினர்விடையூர்தியார்நக்கனர்நறும்போதுசே
ருனையினுலுயர்ந்தார்களுமுனையினுலுயர்ந்தார்களே. (கூ)

வீரமாகியவேதியர்வேகமாகனியாவினை
னீரமாகியவுரிவைபோர்த்தரிவைமேற்சென்றவெம்மிறை
யாரமாகியபாம்பினரண்ணலாரறையணிநல்லூர்
வாரமாய்வினைப்பார்கடம்வலவினையவைமாயுமே. (எ)

தக்கனர்பெருவேள்வியைத்தகர்த்துகந்தவன்றுழ்சடை
முக்கணன்மறைபாடியமுறைமையான்முனிவர்தொழ
வக்கினெடுழிலாமையூணண்ணலாரறையணிநல்லூர்
நக்கனரவர்சார்வலரனல்குசார்விலோகநங்களே. (அ)

வெய்யநோயிலர்தீதிலர்வெறியராய்ப்பிறர்பின்செலார்
செய்வதேயலங்காரமாமிவையிவைதெரியின்புறி
லையமேற்றுணுந்தொழிலராமண்ணலாரறையணிநல்லூர்ச்
சைவனரவர்சார்வலால்யாதுஞ்சார்விலோகநங்களே. (கூ)

வாக்கியஞ்சொலலியாரொடும்வகையலாவகைசெய்யன்மின்
சாக்கியஞ்சமணென்றிவைசாரலும்மரணம்பொடி
யாக்கியமழுவாடபடையண்ணலாரறையணிநல்லூர்ப்
பாக்கியங்குறையுடையிராற்பறையுமாஞ்செய்தபாவமே. (கo)

கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞர்ணசமபந்தனல்லதோர்பண்பினர்
மொழியினுலறையணிகல்லூர்முக்கண்மூர்த்திதன்றிருத்தொழக்
கெழுவினரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஈகோட்டியுள்ளது.

சுவாமிபெயர் - அறைபணிநாதேசுவரர், தேவியார் - அருள்நாயகியம்மை.

நிருவிளனகர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஒளிரிளம்பிறைசென்னிமேலுடையர்கோவணவாடையர்
சுளிரிளம்மழைதவழ்பொழிற்கோலநீர்மல்குகாவிரி
கனிரிளம்புனல்வார்துறைநங்கைகங்கையைகண்ணினர்
மிளிரிளம்பொறியரவினர்மேயதுமவிளனகரதே. (க)

அக்கரவ்வணிகலனெனவதனேடார்த்ததோராமைபூண்
டுக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
புக்கவர்துயர்கெடுகெனப்பூசுவெணைபொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளனகரவர்மேயதே. (உ)

வாளிசேரடங்கார்மதிரெலியமூறியவம்பின்வேய்த்
தோளிபாகமமர்ந்தவருயர்ந்ததொல்கடனஞ்சுடன்
காளமல்கியகண்டத்தர்கதிர்விரிசுடாமுடியினர்
மீளியேறுகந்தேறினர்மேயதுவிளனகரதே. (ங)

கால்விளங்கெரிகழலினர்கையிலங்கியவேலினர்
நூல்விளங்கியமார்பினர்கோயிலார்பிறப்புமிலார்
மால்விளங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினர்
மேல்விளங்குவெண்பிறையினர்மேயதுவிளனகரதே. (ச)

பன்னினர்மறைபாடினர்பாயசீர்ப்பழங்காவிரித்
துன்னுதண்டுறைமுன்னினர்தூநெறிபெறுவானெனச்
சென்னிதிங்களைப்பொங்கராக்கங்கையோடுடன்சோத்தினர்
மின்னுபொன்புரிநூலினர்மேயதுவிளனகரதே. (ஞ)

தேவருமமரர்களுந்திசைகண்மேலுளதெய்வமும்
யாவரும்மறியாததோர்மதியாற்றழலுறிவினர்
மூவருமமவொன்னவுமுதலவரும்மிவரென்னவு
மேவரும்பொருளாயினர்மேயதுவ்விளனகரதே. (ரு)

சொற்றருமறைபாடினர்சுடர்விடுஞ்சடைமுடியினர்
கற்றருவ்வடங்கையினர்காவிரித்துறைகாட்டினர்

மற்றருதிரடோணினர்மாசில்வெண்பொடிப்பூசினர்
விற்றருமணிமிடற்றினர்மேயதுவ்விளனகரதே. (எ)

படர்தரும்சடைமுடியினர்பைங்கழலடிபரவுவா
ரடர்தரும்பிணிகெடுகெனவருளுவாரரவரையினர்
விடர்தரும்மணிமிடற்றினர்மின்னுபொன்புரிநூலினர்
மிடறரும்படைமழுவினர்மேயதுவ்விளனகரதே. (அ)

கையிலங்கியவேலினர்தோலினர்கரிகாலினர்
மெய்யிலங்கரவல்குலான்பாகமாகியபாரமனர்
மையிலங்கொளிமல்கியமாசிலாமணிமிடரினர்
மெய்யிலங்குவெண்ணீற்றினர்மேயதுவ்விளனகரதே. (கூ)

உள்ளதன்றனைக்காண்பன்கீடிலன்றமாமணிவண்ணனும்
உள்ளதன்றனைக்காண்பன்மேலென்றமாமலரண்ணலும்
உள்ளதன்றனைக்கண்டிலாரொளியார்தருஞ்சடைமுடியின்மேல்
உள்ளதன்றனைக்கண்டிலாவொளியார்விளனகர்மேயதே. (கo)

மென்சிறைவண்டியாழ்முரலவிளகுகர்த்துறைமேவிய
கன்பிறைநுதலண்ணலேச்சண்பைஞானசம்பந்தன்சீ
ரினபுறுதமிழார்சொன்னவேத்துவார்வினைநீங்கிப்போய்த்
துன்புறுதுயரம்மிலாதூதெறிபெறுவாகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - துறைகாட்டும்வள்ளனதர், தேவியார் - தோழியம்மை.

நீநவாரர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்காவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சித்தியாபபதைமார்போலநீவெள்கிலையே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (க)

தக்கையார்போயினர்தாயரும்போயினர்தாமும்போவார்
கொக்கவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோவா
ரொக்கநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
யந்தணனூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (உ)

நிணங்குடர்தானரம்பென்புசோராக்கைதானிலாயதன்றற்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கிலையே
வணங்குவார்வானவர்தானவர்வைகலுமணங்கோடேத்து
மணங்கனூரதொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (ங)

நீதியால்வாழ்கிலோகாள்செலாநின்றனிதனேய்கள்
வாதியாவாதலானுநாளின்பமேமருவினையே

சாதிபார்கினனசார்தருமனும்வருணர்களேத்துமுக்க
ணாதிபாரூர்தொழுதுய்யலாமையல்கண்டஞ்சனெஞ்சே. (ச)

பிறவியால்வருவனகேடுளவாதலாற்பெரியவின்பத்
துறவியார்க்கல்லதுதுன்பரீங்காதெனத்தூங்கினையே
மறவனீமார்க்கமேனண்ணினையத்தீர்த்தநீர்மல்குசென்னி
யறவனூர்தொழுதுய்பலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (டு)

செடிகணோயாக்கையம்பாம்பின்வாய்த்தேரைவாயச்சிறுபறவைக்
கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினையே
முடிகளால்வானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்க
ணடிகளாரூர்தொழுதுய்பலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (சு)

ஏறுமாலியானேயெரிவிகையர்தளகமீச்சோபவிவட்டில்
மாறிவாழுடம்பினர்படுவதோர்கடலேக்குமயங்கினையே
மாறிலாவனமூலமங்கையோர்பங்கினாமதியமவைத்த
வாறனூரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (எ)

என்பினாகழிகிரைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலாலுறுதோலபோர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாசலார்குரமபையின்மூழ்கிடாதே
யன்பனூரூதொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (அ)

தந்தைதாய்தனனுடன்தோன்றினர்புத்திராதாரமென்னும
பந்தநீங்காதவாக்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினையே
வெந்தநீறுடியாராதியார்சோதியார்வேதகீத
னொந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (கூ)

நெடியமால்பிரமனுநீண்டமெண்ணிடாதின்னநேடிக்காணுப
படியனாய்பவளம்போலுருவனாய்பனிவளர்மலையாள்பாக
வடிவனாய்மதிபோதுசடையனாமணியணிகண்டத்தெண்டோ
ளடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (கo)

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூர
னல்லவேதல்லவேசொல்லியஞானசமபந்தனூரு
ரொல்லையம்போர்தெரியாடுமெம்மீசனேயேத்துபாடல
சொல்லவேவல்லவர்தீதிலாரோதநீவையகத்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நீதக்கடவூர்மயானம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரியுமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
யெரியம்பதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரேம்பெருமானடிகளே. (க)

மங்கைமணந்தமார்பாமழுவாள்வலனெனேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவா
ரங்கையேறியமறியாரவரொம்பெருமானடிகளே. (உ)

ஈடலிடவமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வா
ராடலரவமுடையாரவரொம்பெருமானடிகளே. (ஊ)

இறைநின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைநின்றிலங்குமொழியாமலையாமனத்தினமிசையார்
கறைநின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரொம்பெருமானடிகளே. (எ)

வெள்ளையெருத்தின்மிசையார்விரிதாடொருகர்திலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடாபொற்சடைகடிலங்கக்
கள்ளகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (ஏ)

பொன்றுதிருமணங்கொள்புனைபூங்கொன்றைபுனைந்தா
ரொன்றுவெள்ளேறுயர்த்தகுடையாரதுவேயூர்வார்
கன்றுவினைஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தா
பின்றுழ்சடையாரொருவரவரொம்பெருமானடிகளே. (ஐ)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீர்க்கொடுப்பாரலங்கலவிடைமேல்வருவா
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரொம்பெருமானடிகளே. (ஒ)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெலவிரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரொம்பெருமானடிகளே. (ஓ)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுனெண்ணப்
பெருமானெனவும்வருவாரவரொம்பெருமானடிகளே. (ஔ)

தூயவிடைமேல்வருவார்தூநீருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரொம்பெருமானடிகளே. (க0)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகா

பரவுமுறையபயிலும்பத்தன்செஞ்சொன்மாலை
யிரவுமபகலும்பரவினினைவாவினைகளிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரீசுவரர், தேவியார் - மலர்க்குழல்மின்னம்மை.

திருவேணுபுரம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின்படையினீர்பூங்கொன்றைத்தாரினீர்
சோதத்தினெலியோடுமும்பர்வானவர்புகழ்ந்து
வேதத்தின்னிசைபாடிவிரைமலர்கள்சொரிந்தேத்தும்
பாதத்தீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (க)

சுடுகாடுமேவினீர்துன்னம்பெய்கோவணத்தீர்
உடைபாயபுலியதளுமையாளொருபாக
மடைபாளைமதுகொண்டீரங்கையினிற்பரசுவெனும்
படையாள்வீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (உ)

கங்கைசாசடைமுடியீரகாலனைமுன்செற்றுகந்தீர்
திங்களோடிளவரவுமதிகழ்சென்னிவைத்துகந்தீர்
மங்கையோர்கூறுடையீரமறையோர்கணிறைந்தேத்தப
பங்கயஞ்சேர்வேணுபுரமபதியாகக்கொண்டீரே. (ங)

நீர்கொண்டசடைமுடிமேனீண்மதியமபாம்பினெடு
மேர்கொண்டகொன்றையினெடுழினமத்தமிலங்கவே
சீர்கொண்டமாளிகைமேற்சேயிழையாரவாழ்த்துரைபபக்
கார்கொண்டவேணுபுரம்பதியாகக்கலந்தீரே. (ச)

ஆலசாதண்கழனிபழகாகறவுணடி
சோலசேர்வண்டிணங்களிசைபாடத்தூமொழியார்
காலையபுகுந்திறைஞ்சிக்கைதொழுமெய்மாதினெடும்
பாலபாழ்வேணுபுரமபதியாகக்கொண்டீரே. (ஞ)

மணிமல்குமால்வரைமேன்மாதினெடுமமிழ்ந்திருந்தீர்
துணிமல்குகோவணத்தீர்சுடுகாட்டிலாட்டுகந்தீர்
பணிமல்குமறையோர்கள்பரிந்திறைஞ்சவேணுபுரத்
தணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (சு)

நீலஞ்சேர்மிடற்றினீர்நீண்டசெஞ்சடையினீர்
கோலஞ்சேர்விடையினீர்கொடுங்காலனைச்செற்றீ
ரார்லஞ்சேர்கழனியழகார்வேணுபுரமமருங்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (எ)

இரைமண்டிச்சங்கேறுங்கடல்சூழ்தென்னிலங்கையர்கோன்
விரைமண்டுமுடிநெரியவிரல்வைத்தீர்வளர்தன்னிற்

கமாமண்டிப்பேரோதங்கலர்தேறுங்கடற்கவினூர்
விமாமண்டுவேணுபுரமேயமர்ந்துமிக்கீரே. (அ)

தீயோம்புமறைவாணர்க்காதியாந்திசைமுகன்மால்
போயோங்கியிழிந்தாரும்போற்றரியதிருவடியீர்
பாயோங்குமரக்கலங்கள்படுதிரையான்மொத்துண்டு
சேயோங்குவேணுபுரஞ்செழும்பதியாத்திகழ்ந்தீரே. (கூ)

கிலையார்ந்தவண்டியினர்நெடுங்குண்டர்சாக்கியர்கள்
புலையாஞரறவுரையைப்போற்றுதுன்பொன்னடியே
கிலையாகப்பேணிநீசரணென்றூர்தமையென்றும்
விலையாகவாட்கொண்டுவேணுபுரம்விரும்பினையே. (கo-கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - அக.

தீருத்தேவூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்
விண்ணிலவானவர்கோன்விமலன்விடையூர்தி
தெண்ணிலாமதிதவழ்தருமாளிகைத்தேவூ
ரணணல்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (க)

ஓதிமண்டலத்தோர்முழுதுய்யவெற்பேறு
சோதிவானவன்றுதிசெயமகிழ்ந்தவன்றூநீர்த்
தீதில்பங்கயந்தெரிவையாமுகமலாதேவூ
ராதிசேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (உ)

மறைகளானமிகவழிபடுமாணியைக்கொலவான்
கறுவுகொண்டவக்காலனைக்காய்ந்தவெங்கடவுள்
செறுவில்வாளைகள்சேலவைபொருவயற்றேவூ
ரறவன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (ங)

முத்தன்சிலபலிக்கூர்தொறுமுறைமுறைதிரியும்
பித்தன்செஞ்சடைபபிஞ்ஞகன்றனனடியார்கள்
சித்தமாளிகைசெழுமதிதவழ்பொழிற்றேவூ
ரத்தன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (சு)

பாவொரிசைபலபொருட்பயனுகந்தன்பாற்
கூவொர்றுனைக்கொண்டதம்பற்றறப்பற்றித்
தேவுவார்பொருளாவனசெறிபொழிற்றேவூ
ராவுவானடியடைந்தனமல்லலொன்றிலமே. (ஞ)

பொங்குபூண்முலைப்புரிகுழல்வரிவளைப்பொருப்பன்
மங்கைபங்கினன்கங்கையையவளர்சடைவைத்தான்

திங்கள்சூடியதிறக்கடவுடென்றேறு
ரங்கணன்றனையடைந்தனமல்லலொன்றிலமே. (சு)

வன்புயத்தவத்தானவர்புரங்களெரியத்
தன்புயத்துறதடவரைவளைத்தவன்றக்க
தெனுறமிழ்க்கலிதெரிந்தவர்பொருந்தியதேறு
ரன்பன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (எ)

தருவுயர்ந்தவெற்பெடுத்தவத்தசமுகனெரிந்து
வெருவவூன்றியதிருவிரனெகிழ்த்துவாள்பணித்தான்
றெருவுதோறுநற்றென்றல்வந்துலவியதேறு
ரரவுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (அ)

முக்திக்கண்ணனுநான்முகனும்மவர்காண
வெக்ததிண்டிறலிருங்களிறுரித்தவெம்பெருமான்
*செந்தினத்திசையறுபதமுரறிருத்தேறு
ரந்திவண்ணனையடைந்தனமல்லலொன்றிலமே. (கூ)

பாறுபுத்தருருதவமணிசமணருமபலநாள்
கூறிவைத்ததோர்குறியினைப்பிழையெனக்கொண்டு
தேறுமிக்கஞ்செஞ்சடைக்கடவுடன்றேறு
ராறுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (கo)

அல்லலின்றிவிண்ணுள்வர்கள்காழியர்க்கதிப
னல்லசெந்தமிழ்வல்லவன்ஞானசம்பந்த
னெல்லியில்புகழ்மல்கியவெழில்வளர்தேறூர்த்
தொல்லோனம்பனைச்சொல்லியபத்தும்வல்லாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - தேவகுருநாதர், தேவியார் - மதுரபாஷிணியம்மை.

தீருக்கோச்சைவயம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமன்மாமிடற்றனிறைவன்சினத்தகெடுமாவுரித்தநிகரில்
சேலனகண்ணிவண்ணமொருசூருருக்கொடிகழ்தேவன்மேவுபதிதான்
வேலனகண்ணிமார்கள்விளையாடுமோசைவிழவோசைவேதவொலியின்
சாலநல்வேலியோசைதருமாடவீதிகொடியாடுகொச்சைவயமே. (க)

விடையுடையப்பமெனப்பினடமாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
சடையிடைவெள்ளெருக்கமலர்கங்கைதிங்கடகவைத்தசோதிபதிதான்
மடையிடையன்னமெங்குநிறையப்பரந்துகமலத்துவைகுமம்பயல்சூழ்ந்தியமே.
கொடையுடைவண்கையாளர்மறையோர்களெனறும்வளர்கின்றகொச்சைவ

படவரவாடுமுன்கையுடையானிடும்பைகளைவிக்குமெங்கள்பரம
னிடமுடைவெண்டலைக்கையலிகொள்ளுமின்பனிடமாயவேர்கொள்பதிதா

னடமிடமஞ்ஞைவண்டுமதுவுண்போதுளிர்சேரலிகொதுகனகக்
குடமிடுகூடமேறிவளர்பூவைநல்லமறையோதுகொச்சைவயமே. (சு)

எண்டிசைபாலனெங்குமிகலிப்புகுந்துமுயல்வித்தசிந்தைமுடுகிப்
பண்டொளிதீபமாலியிடுதூபமோடுபணிவுற்றபாதர்பதிதான்
மண்டியவண்டன்மிண்டிவருநீரபொன்னிவயல்பாயவாளைகுழுமிக்
குண்டகழ்பாயுமோசைபடநீடதென்னவளர்கின்றகொச்சைவயமே. (ச)

பனிவளர்மாமலைக்குமருகன்குபேரனெடுதோழமைக்கொள்பகவ
னினியனவல்லவற்றையினிதாகவல்குமிறைவன்னிடங்கொள்பதிதான்
முனிவர்கடொக்குமிக்கமறையோர்களோமம்வளர்தூமமோடியணவிக்
குனிமதிமூடிநீடுமுயர்வான்மறைத்துநிறைகின்றகொச்சைவயமே. (ஞ)

புலிபதள்கோவணங்களுடையாடையாகவுடையானினைக்குமளவி
னலிதருமுப்புரங்களெரிசெய்தநாதனலமாவிருந்தநகர்தான்
கலிகெடவந்தணாளர்கலிமேவுசிந்தையுடையார்நிறைந்துவளரப்
பொலுதருமண்டபங்களுயர்மாடநீடுவளைமேவுகொச்சைவயமே. (சு-எ)

மழைமுகில்போலுமேனியடல்வாளரக்கன்முடியோடுதோள்களெரியப்
பிழைகெடமாமலர்ப்பொனடிவைத்தபேயோடெனடிமேயபதிதா
னிழைவளரல்குன்மாதரிசைபாடியாடவிடுமீசனன்னகழுகின்
குழைதருகண்ணிவிண்ணில்வருவார்கடங்களடிதேடுகொச்சைவயமே. (அ)

வண்டமர்பங்கயத்துவளர்வானும்வையமுழுதுண்டமாலுமிகலிக்
கண்டிடவொண்ணுமென்றுகிளறிப்பறந்தும்மறியாதசோதிபதிதா
னண்டுணநாளைசெங்கெடுவேயிருந்துவிளைதேரப்போதுமடுவிற்
புண்டரிகங்களோடுகுமுதம்மலர்ந்துவயன்மேவுகொச்சைவயமே. (கூ)

கையினிலுண்டுமேனியுதிர்மாசாகுண்டரிடுசீவரத்தினுடையார்
மெய்யுரையாதவண்ணம்விளையாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
பையுடைநாகவாயிலெயிறுரமிக்கருவம்பயின்றுமலரச்
செய்யினிலேமொட்டுவிளையக்கமழ்ந்துமணநாறுகொச்சைவயமே. (கo)

இறைவனையொப்பிலாதவொளிமேனியானையுலகங்களேழுமுடனே
மறைதருவெள்ளமேறிவளர்கோயின்மன்னியினிதாவிருந்தமணியைக்
குறைவிலஞானமேவுகுளிர்பந்தன்வைத்ததமிழ்மாலைபாடுமவர்போ
யறைகழலீசனுலகுகர்மேவியென்றுமழகாயிருப்பதிவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநனிபள்ளி-பண்-பியந்தைக்காந்தாரம்-பாலைநெய்தல் பாடியருளியது.

திருச்சிற்றம்பலம்.

காலைகள்கூகைமுல்லைகளவாகையீகைபடர்தொடரிகள்ளிகவினிச்
சூலைகள்பம்மிவிம்முசுகோடுமர்ந்தசிவன்மேவுசோலைநகர்தான்
றேலைகளாளைசாயமிதிகொள்ளவாளைகுதிகொள்ளவள்ளைதுவள
காலைகளாரல்வாரவயன்மேதிவைகுளனிப்பள்ளிபோலுமமர்காள். (க)

சடையிடைபுக்கொடுங்கியுட்டங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே
யிடையிடைவைத்ததொக்குமலர்தொத்துமாலையிறைவன்னிடங்கொள்பதி
மடையிடைவாளைபாயமுகிழ்வாய்நெரிந்துமணநாறுநீலமலருந் [தான்
நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளியோ ளுமர்காள். (உ)

பெறுமலர்கொண்டுதொண்டர்வழிபாடுசெய்யலொழிபாடிலாதபெருமான்
கறுமலர்தண்டுமாகவிடமுண்டசாளையிடமாயகாதனகர்தான்
வெறுமலர்தொட்டுவிட்டவிசைபோனகொம்பின்விடுபோதலர்ந்தவிணைசூழ்
நறுமலரல்லிபுல்லியொலிவண்டுறங்குநனிபள்ளியோ ளுமர்காள். (ஊ)

குளிர்தருகங்கைதங்குசடைமாடிலங்குதலைமாலையோடுகுலவி
யொளிர்தருதிங்கள்சூடியுமைபாகமாகவுடையானுகந்தநகர்தான்
குளிர்தருகொம்மலோடுகுயில்பாடல்கேட்டபேடைவண்டுதாளுமுரல
களிர்தருசோலைமாலைநறைகுருகுவைகுநனிபள்ளியோ ளுமர்காள். (எ)

தோடொருகாதனுகியொருகாதிலங்குசுரிசங்கின்றுபுரளக்
காடிடமாகின்றுகனலாடுமெக்கையிடமாயகாதனகர்தான்
வீடுசெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிரலா
னூடனூடுசெம்மையொலிவெள்ளமாருநனிபள்ளியோ ளுமர்காள். (ஏ)

மேகமோடோடுதிங்கண்மலராவணிந்துமலையான்மடந்தைமணிபொன்
னாகமோர்பாகமாகவனலாடுமெக்தைபெருமானமர்ந்தநகர்தா
னாகமோடாடுமந்தியகளஞ்சிலம்பவகிலுந்தியொண்பொனிடறி
காகமோடாரம்வாருபுனல்வந்தலைக்குநனிபள்ளியோ ளுமர்காள். (ஐ)

தகைமலிதண்டுசூலமனலுமிழுநாகங்கொடுகொட்டிவீணைமுரல
வுகைமலிவன்னிகொன்றைமதமத்தம்வைத்தபெருமானுகந்தநகர்தான்
புகைமலிகந்தமாலபுனைவார்கள்பூசல்பணிவார்கள்பாடல்பெருகி
*நகைமலிமுத்திலங்குமணல்சூழ்கிடக்கைநனிபள்ளியோ ளுமர்காள். (ஒ)

வலமிகுவாளன்வேலன்வலைவாளெயிற்றுமதியாவரக்கன்வலியோ
லெலிகுதோள்களொல்கவிரலாலடர்த்தபெருமானுகந்தநகர்தா
னிலமிகுசீருமேனிநிகராதுமில்லையெனநின்றநீதியதனை
நலமிகுதொண்டர்காழிமுடிபரவல்செய்யுநனிபள்ளியோ ளுமர்காள். (ஓ)

நிறைவுறுவொன்றுதோன்றியெரியொன்றிநின்றதொருநீர்மைசீர்மையினையா
றறைவுருவேதனுவனயனேமொலுமறியாதவண்ணநகர்தான்
புறைவுரிமுல்லைமௌவல்குளிர்பிண்டிபுன்னைபுனைகொன்றைதுன்றுபொதுளி
நறைவிரிபோதுதாதுபுதுவாசகாறுநனிபள்ளியோ ளுமர்காள். (ஔ)

அனமிகுசெல்குசோறுகொணர்கென்றுமனையிலிடவண்டுபட்டவமணும்
மணமிகுகஞ்சிமண்டையுநிலுண்டுதொண்டர்குணமின்றினவடிவும்

---

* பாலெய்தல்பாடியது-இந்த நான்காவதுசரணத்தால்வினவுகின்றதுதான்யா தென்னில், முத்துகள்வினவுகு மணல்சூழ்ந்த நிலமென்றதனாலென்க. பாலெய்தல்பா டியதும்-பாம்பழியப்பாடியதும்-என்னுந் திருவெண்பாலுமுணர்க.

வினைமிகுவேதநான்கும்விரிவித்தநாவின்விடையாளுகந்தகர்தா
னனமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளியோனுமர்காள். (கஎ)

கடல்வளையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவ
னிடுமறையொன்றவத்தர்பியன்மேலிருந்தினிசையாலுரைத்தபனுவ
னடுவிருளாடுமொருதைநனிபள்ளியுள்கவினைகெடுதலாணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளி - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனு
ஞியிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
யாசறுகலகலவவைகல்லகல்லவடியாரவர்க்குமிகவே. (க)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனு [தா
*லொன்பதொடொன்றுடெழுபதினெட்டோடாறுமுடனுயநாள்களவை
னன்பொடுகல்லகல்லவவைகலகலவடியாரவர்க்குமிகவே. (உ)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துவுமையொடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுற்
றிருமகள்கலைபதார்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவு
மருநெதிகல்லகல்லவவைகல்லகல்லவடியாரவர்க்குமிகவே. (ங)

மதிதருதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுற்
கொதியுறுகாலனங்கமனைடுதூதர்கொடுநோய்களானபலவு
மதிகுணகல்லகல்லவவைகல்லகல்லவடியாரவர்க்குமிகவே. (ச)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனேடுமிடையேறுமெங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுல்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையு
மஞ்சிடுகல்லகல்லவவைகல்லகல்லவடியாரவர்க்குமிகவே. (ஞ)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனேடுமுடனுய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தவதனுற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுகாகமோடுகரடி
யாளரிகல்லகல்லவவைகல்லகல்லவடியாரவர்க்குமிகவே. (ட)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுல்
வெப்பொடுகுளிரும்வாதமிலைகையானபித்தும்மிகினியானவந்தலியா
லப்படிகல்லகல்லவவைகல்லகல்லவடியாரவர்க்குமிகவே. (எ)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாடனேமுடனுய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனு
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனேமிடரூனவத்தலியா
வாழ்கடனல்லநல்லவனைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (அ)

பலபலவேடமாகும்பரனரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுன்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமானபலவு
மலைகடன்மேருநல்லவனைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (கூ)

கொத்தலர்குழலியோடும்விசயற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியினுகமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுற்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணலிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவனைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (கo)

தேனமர்பொழில்கொளாலிவினைசெங்கெறுன்னிவளர்சொம்பொனெங்குநிக
கான்முகனுதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன்
ரூனுறுகோளுநாளுமடியானைவந்தலியாதவண்ணமுனைசெ
யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தப்பதிகம்-பாண்டியராஜனுடைய சுரவியாதிதீர அருளிச்செய்தது.

* இரண்டாவதுதேவாரம்-மூன்றாவது சரணத்தில்-பிரயாணத்துக்காகாத கூ-நக்ஷத்திரங்களைக்குறித்திருக்கின்றது. விவரம்-நக்ஷத்திரங்களில் முதலுற்பத்தி திருத்திகையாம்-ஆதலாலதனை முதலாகக்கொண்டு பார்க்கில் ஒன்பதாவது நக்ஷத்திரம்-பூரம், ஒன்றென்றது-திருத்திகை, ஏழு-ஆயிலியநக்ஷத்திரம், பதினெட்டு-பூராடம், ஆறுமூடையாள்கள் என்றது-மேற்கூறிய நான்கும் அல்லாத எட்டுநக்ஷத்திரங்களுமாம். பன்னிரண்டுநக்ஷத்திரங்களாவன - பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி, திருத்திகை, சுவாதி, ஆயிலியம், விசாகம், ஆதிரை, சித்திரை என்பனவகளாம்.

தீருநாரையூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உளையினில்வந்தபாவமுணர்நோய்களும்மசெயதீங்குகுற்றமுலகில்
வரையினிலாமைசெய்தவலைதீரும்வண்ணமிகவேத்தினித்தனினமின்
வரைசிலையாகவன்றுமதின்மூன்றெரித்தவளர்கங்குணங்கைவருவத்
திரையொலிநஞ்சமுண்டசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே (க)

ஊனடைகின்றகுற்றமுதலாகியுற்றபிணிதோயொருங்குமையரும்
வானடைகின்றவெள்ளமதிசூடுசென்னிவிதியானவேதவிகிர்தன்
கானிடையாடிபூதப்படையானியங்குவிடையானிலங்குமுடிமேற்
றேனடைவண்டுபாடுசடையண்ணலண்ணுதிருநாரையூர்கைதொழுவே. (உ)

ஊரிடைகின்றுவாழுமுயிர்செற்றகாலன்றுயருற்றதிங்குவிரவிப்
பாரிடைமெள்ளவந்துபழியுற்றவார்த்தையொழியுற்றவண்ணமகலும்

போரிடையன்றுமூன்றுமதிலெய்தனான்றுபுகழ்வானுளோர்கள்புணருந்
தேரிடைன்றவெந்தைபெருமானிருந்ததிருநாரையூர்கைதொழுவே. (கூ)

தீயுறவாயவாக்கையதுபற்றிவாழும்வினைசெற்றவுற்றவுலகின்
ரூயுறுதன்மையாயதலைவன்றனுமனிலையாகின்றுமருவும்
பேயுறவாயகானினடமாடிகோலவிடமுண்டகண்டன்முடிமேற்
றேய்பிறைவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (ச)

வசையபராதமாயவுவரோதநீங்குந்தவமாயதன்மைவருமான்
மிசையவராதியாயதிருமார்விலங்குவிரிநூலர்விண்ணுநிலனு
மிசையவராசிசொல்லவிமையோர்கூளத்தியமையாதகாதலொடுசேர்
திசையவர்போற்றன்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (ஞ)

உறைவளரூனிலாயவுயிர்நிற்கும்வண்ணமுணர்வார்க்குமுண்மையுலகிற்
குறைவுளவாகின்றகுறைதீர்க்குநெஞ்சினிறைவாற்றுநேசம்வளரு
மறைவளர்நாவன்மாவினுரிபோர்த்தமெய்யனரவார்த்தவண்ணல்கழலே
றிறைவளர்தேவாகொண்டினருள்பேணின்றதிருநாரையூர்கைதொழுவே.(சு)

தனம்வருநன்மையாருந்தருதிக்குழந்துவருதிக்குழன்றவுடலி
னினம்வளரைவர்செய்யும்வினையங்கள்செற்றுனினைவொன்றுசிந்தைபெருகு
முனமொருகாலமூன்றுபுரம்வெந்துமங்கச்சரமுன்றொடிந்தவவுணர்
சினமொருகாலழித்தசிவனமேயசெலவத்திருநாரையூர்கைதொழுவே. (எ)

உருவமோகின்றநாளிலுயிர்கொள்ளுங்கூற்றனியஞ்சுமாதலுறநீர்
மருமலர்தூவியென்றும்வழிபாடுசெய்யும்மிழிபாடிலாதகடலி
னருவரைசூழிலங்கையரையன்றன்வீரமழியத்தடக்கைமுடிக
டிருவிரல்வைத்துகந்தசிவன்மேயசெலவத்திருநாரையூர்கைதொழுவே. (அ)

வேறுயர்வாழ்வுதன்மைவினைதுக்கமிக்கபகைதீர்க்குமேயவுடலிற்
றேறியசிந்தைவாய்மைதெளிவிக்கன்றகரவைக்கரந்துதிகழுஞ்
சேறுயர்பூவின்மேயபெருமானுமற்றைத்திருமாலுநேடவரியாய்ச்
சீறியசெம்மையாருசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (கூ)

மிடைபடுதுன்பமின்பமுளதாக்குமுள்ளம்வெளியாக்குமுன்னியுணரும்
படையொருகையிலேந்திப்பலிகொள்ளுமண்ணமொலிபாடியாடிபெருமை
யுடையினைவிட்டுளோருமுடல்போர்த்துளோருமுறைமாயும்வண்ணமழியச்
செடிபடவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே (கo)

எரியொருவண்ணமாயவுருவானையெந்தைபெருமானையுள்கிநினையார்
திரிபுரமன்றுசெற்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதாழுவான்
பொருபுனல்சூழ்ந்தகாழிமறைஞானபந்தனுரைமாலைபத்துமொழிவார்
திருவளர்செம்மையாகியருள்பேறுமிக்கதுளதென்பர்செம்மையினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநறையூர்-பன்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சித்தம்பலம்.

கோரியகுமல்லலெருபா லுமேனியரியான்முனையவொளியா
னீரியல்கா லுமாகிநிறைவானுமாகியுறுதியுமாயநிமல
னூரியல்பிச்சைபேணியுலகங்களேத்தநலகண்டுபண்டுசுடலை
நாரியோர்பாகமாகநடமாடவல்லநறையூரினம்பனவனே. (க)

இடமயிலன்னசாயன்மடமங்கைதன்கையெதிர்நாணிபூணவனையிற்
கடுமையிலம்புகோத்துவெயில்செற்றுகந்துவமரர்க்களித்ததலிவன்
மடமயிலூர்திதாதையெனகின்றுதொண்டர்மனகின்றமைந்தன்மருவுங்
கடமயிலாலகீடுகுயில்கூவுசோலைநறையூரினம்பனவனே. (உ)

சூடகமுன்கைமங்கையொருபாகமாகவருள்காரணங்கள்வருவா
னீடகமானநோக்கியிடுபிச்சைகொண்டுபடுபிச்சர்கின்றுபரவத்
தோடகமாயோர்காதுமொருகாதிலங்குகுழைதாழவேழவுரிய
னுடகமாடவாடிமடவார்கள்பாடுநறையூரினம்பனவனே. (ங)

சாயனன்மாதோர்பாகன்விதியாயசோதிகதியாகின்றகடவுள்
ளாயகமெண்ணுள்வந்தவருளாயசெல்வனிருளாயகண்டனவனித்
தாயெனகின்றுகந்ததலிவன்விரும்புமலியின்கண்வந்துதொழுவார்
நாயகனென்றிறைஞ்சிமறையோர்கள்பேணுநறையூரினம்பனவனே. (ச)

நெதிபடுமெய்யமையகிறைசோலைசுற்றிகிகழம்பலத்தினடுவே
யதிர்படவாடவல்லவமரர்க்கொருத்தனெமர்சுற்றமாயவிறைவன்
மதிபடுசென்னிமன்னுசடைதாழவந்துவிடையேறியில்பலிகொள்வா
னதிபடவந்திவந்துவபல்வாளபாயுநறையூரினம்பனவனே. (ஞ)

கணிகையோர்சென்னிமன்னுமதுவன்னிகொன்றைமலர்துன்றுசெஞ்சடையி
பணிகையின்முன்னிலங்கவருவேடமன்னுபலவாகினின்றபரமன் [னுன்
னணுகியவேதவோசையிகலங்கமாறின்பொருளானவாதியருளா
ளணுகியதொண்டர்கூடிமலர்தூவியேத்துநறையூரினம்பனவனே. (சு)

ஒளிர்தருகின்றமேனியுருவெங்குமங்கமலையாரவாடலரவம்
மிளிர்தருகையிலங்கவனலேந்தியாடும்விகிதன்விடங்கொண்மிடறன்
றுளிதருசோலையாலிதொழின்மேவவேதமுமிழலாரவென்றியருளுந்
கனிர்மதிசேருமாடமடவார்களாருநறையூரினம்பனவனே. (எ)

அடலெருதேறுகந்தவதிருங்கழற்களெதிருஞ்சிலம்பொடிசையக்
கடலிடைநஞ்சமுண்டுகனிவுற்றகண்டன்முனிவுற்றிலங்கையரையன்
னுடலொடுதோளனேத்துமுடிபத்திறுத்தபிழைகேட்டிரங்கியொருவா
ணடலைகளார்த்துகல்கிணைமயாளவல்லநறையூரினம்பனவனே. (அ)

குலமலர்மேவினனுமிகுமாயனுமெதிர்கூடிகேடினினைவுற்
றிலபலவெய்தொணுமையெரியாயுயர்ந்தபெரியானிலங்குசடையன்

சிலபலதொண்டர்கின்றுபெருமைக்கன்பேசவருமைத்திகழ்ந்தபொழிலின்
னலமலர்சிந்தவாசமணநாறுவீதிறையூரினம்பனவனே. (க)

துவருறுகின்றவாடையுடல்போர்த்துழன்றவர்தாழுமல்லசமணுங்
கவருறுசிந்தையாளருரைநீத்துகந்தபெருமான்பிறங்குசடையன்
றவமலிபத்தர்சித்தர்மறையாளர்பேணுறைமாதர்பாடுமருவுந்
நவமணிதுன்றுகோயிலொளிபொன்செய்மாடநறையூரினம்பனவனே. (கo)

கானலுலாவியோதமெதிர்மல்குகாழிமிகுபந்தன்முந்தியுணர
ஞானமுலாவுசிந்தையடிவைத்துகந்தநறையூரினம்பனவனை
யீனமிலாதவண்ணமிசையாலுரைத்ததமிழ்மாலைபத்துமினைவார்
வானநிலாவவல்லர்நிலமெங்குமின்றுவழிபாடுசெய்யுமிகவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நெடுல்வாயில் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டனடமன்னுதுன்னுசுடரோ
னெளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதுவிற்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபோதுந்திருமுல்லைவாயிலிதுவே. (க)

பருவத்தில்வந்துபயனுற்றபண்பனயனேப்படைத்தபரம
னரவத்தொடங்கமலைகட்டியெங்குமரவிக்கநின்றவரனூ
ருருவத்தின்மிக்கவொளிர்சங்கோடிப்பியலையோதமோதவெருவித்
தெருவத்தில்வந்துசெழுமுத்தலைக்கொடிருமுல்லைவாயிலிதுவே. (உ)

வாராதரடன்வருவார்தம்வில்லினுருமெல்கிநாளுமுருகில்
லாராதவின்பனகலாதவன்பனருண்மேவுநின்றவரனூர்
பேராதசோதிபிரியாதமார்பினலர்மேவுபேதைபிரியா
டீராதகாதனெதிரேரீடுதிருமுல்லைவாயிலிதுவே. (ஊ)

ஒன்றொன்றொடொன்றுமொருநான்கொடைந்துமிருமூன்றொடேழுமுடனு
யன்றின்றொடொன்றுமறிவானவர்க்குமறியாமைநின்றவரனூர்[ன்றுசூழுமிச்
சுன்றொன்றொன்றொடொன்றுசுலையொன்றொடொன்றுகொடியொன்றொடொ
சென்றொன்றொன்றொடொன்றுசெறிவாய்நிறைந்ததிருமுல்லைவாயிலிதுவே. (எ)

கொம்பன்னமின்னினிடையாளோர்கூறன்விடைநாளுமேறுகுழக
னம்பன்னெமன்பன்மறைநாவன்வானின்மதியேறுசென்னியரனூ
ரம்பன்னவொண்கணவராடரங்கினணிகோபுரங்களழகார்
செம்பொன்னசெவ்விதருமாடநீடுதிருமுல்லைவாயிலிதுவே. (ஏ)

ஊனேறுவேலினுருவேறுகண்ணியொளியேறுகொண்டவொருவ
னானேறதேறியழகேறுநீறனரவேறுபூணுமவனூர்
மானேறுகொல்லைமயிலேறிவந்துகுயிலேறுசோலைமருவித்
தேனேறுமாவின்வளமேறியாடுதிருமுல்லைவாயிலிதுவே. (ஐ)

நெஞ்சாரநினைவார்தாமுமினியதேயின்றியமல
னஞ்சாடுசென்னியரவாடுகையனனலாடுமேனியரனூர்
மஞ்சாருமாடமனைதோறுமையமுளதென்றுவைகிவரினுஞ்
செஞ்சாலிநெல்வின்வளர்சோறளிக்கொடிருமுல்லைவாயிலிதுவே. (எ)

வளைவந்தெடுத்தவலிவாளரக்கன்முடிபத்துமிற்றுகெரிய
வுளைவந்தபொன்னினுருவந்தமேனியுமைபங்கனெங்கள்பரனூர்
வளைவந்தசந்தோடகிலுந்திவந்துமிளிர்கின்றபொன்னிவடபாற்
றிளைவந்துவந்துசெறிதேறலாடுதிருமுல்லைவாயிலிதுவே. (அ)

மேலோடிநீடுவினையாடன்மேவுவிரிநூலன்வேதமுதல்வன்
பாலாடுமேனிகரியானுமுன்னியவர்தேடகின்றபரனூர்
காலாடுநீலமலர்துன்றிநின்றகதிரேறுசெந்நெல்வயலிற்
சேலோடுவாளைகுதிகொள்ளமல்குதிருமுல்லைவாயிலிதுவே. (கூ)

பனைமல்குதிண்கைமதமாவுரித்தபரமன்னகம்பனடியே
நினைவன்னசிந்தையடையாததேரரமண்மாயநின்றவரனூர்
வனமல்குகைதைவகுளங்களெங்குமுகிளங்களெங்குகெரியச்
சினைமல்குபுன்னைதிகழ்வாசகாறுதிருமுல்லைவாயினிதுவே. (கo)

அணிகொண்டகோதையவணன்றுமேத்தவருள்செய்தவெந்தைமருவார்
திணிகொண்டமூன்றுபுரமெய்தவில்லிதிருமுல்லைவாயிலிதன்மேற்
றணிகொண்டசிந்தையவர்காழிஞானமிகுபந்தனெண்டமிழ்களி
னணிகொண்டபத்துமிசைபாடுபத்தரகல்வானமாள்வர்மிகவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முல்லைவனநாதர், தேவியார் - கோதையம்மை.

நிருக்கோச்சைவயம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

அறையும்பூம்புனலோடுமாடரவச்சடைதன்மேற்
பிறையுஞ்சூடுவர்மார்பிற்பெண்ணொருபாகமமர்ந்தார்
மறையினெல்லொலிவேள்வியோவாமந்திரவேள்வியறாத
குறையிலந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரோ. (க)

சுண்ணத்தர்தோலொடுநூல்சேர்மார்பினர்துன்னியபூதக்
கண்ணத்தர்வெங்கனலேந்திக்கங்குனின்றாடுவர்கேடி
லெண்ணத்தர்கேள்விகல்வேள்வியறாதவர்மாலெரியோம்புங்
வண்ணத்தவந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரோ. (உ)

பாலையன்னவெண்ணீறுபூசுவர்பல்சடைதாழ
மாலையாடுவர்கீதமாமறையாதென்மனிற்பர்
வேலைமால்கடலோதம்வெண்டிரைகணமிசைவினங்குங்
கோலமாமணிசிந்துங்கொச்சைவயமமர்ந்தாரோ. (ஊ)

கடிகொள்கூவிளமத்தங்கமழ்சடைநெடுமுடிக்கணிவர்
பொடிகள்பூசியமார்பிற்புனைவர்கன்மங்கையோர்பங்கர்
கடிகொணீடொலிசங்கினெலியொடுகலியொலிதுதைந்து
கொடிகளோங்கியமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (எ)

ஆடன்மாமதியுடையாராயினபாரிடஞ்சூழ
வாடல்வெண்டலையேந்திவையகமிடுபலிக்குழல்வ
ராடன்மாமடமஞ்ஞையணிதிகழ்பேடையோடாடிக்
கூடுதண்பொழில்சூழ்ந்தகொச்சைவயமமர்ந்தாரே. (ஙி)

மண்டுகங்கையுமரவுமல்கியவளர்சடைதன்மேற்
றுண்டவெண்பிறையணிவர்தொல்வனைவில்லதுவாக
விண்டதானவரரணம்வெவ்வழலெரிகொளவிடைமேற்
கொண்டகோலமதுடையார்கொச்சைவயமமர்ந்தாரே. (சு-எ)

அன்றவானிழலமர்ந்துவறவுனைகால்வர்க்கருளிப்
பொன்றினாதலையோட்டிலுண்பதுபொருகடலிலங்கை
வென்றிவேந்தனையொல்கவூன்றியவிரலினர்வான்றோய்
குன்றமன்னபொன்மாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (அ)

சீர்கொண்மாமலராளுஞ்செங்கண்மாலென்றிவர்தேத்த
வேர்கொள்வெவ்வழலாகியெங்குமுறைகிமிர்ந்தாரும்
பார்கொள்விண்ணழல்கானீர்ப்பண்பினர்பான்மொழியோடுங்
கூர்கொள்வேல்வலனேந்திக்கொச்சைவயமமர்ந்தாரே. (கூ)

குண்டர்வண்டுவராடைபோர்த்ததோர்கொள்கையினர்கண்
மிண்டர்பேசியபேச்சுமெய்பலமையணிகண்டன்
பண்டைநம்வினைதீர்க்கும்பண்பினரொண்கொடியோடுங்
கொண்டல்சேர்மணிமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (கo)

கொந்தணிபொழில்சூழ்ந்தகொச்சைவயநகர்மேய
வந்தணனடியேத்துமருமறைஞானசம்பந்தன்
சந்தமார்ந்தழகாயதண்டமிழ்மாலைவல்லோர்போய்
முந்திவானவரோடும்புகவலர்மூனெடவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயில் திருஅரத்துறை - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (க)

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சித்தர்கடொழச்செல்வதன்றால்

வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகைமே
லாருஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (உ)

* பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகடொழச்செல்வதன்முன்
மணிகலந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகைமே
லணிகலந்தசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஊ)

துன்னவாடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
யுன்னிசைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்முற்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனனிவாமல்குகைமே
லன்னமாருசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (எ)

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
யுருகிசைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்முன்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிவாவக்
தருகுரிஞ்சுசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஏ)

உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவிசைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்முற்
குரவுநீயர்சோலைக்குளிர்புனனிவாமல்குகைமே
லரவமாருசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஐ)

நீலமாமணிமிடற்றுநீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்முற்
கோலமாமலருந்திக்குளிர்புனனிவாமல்குகைமே
லாலுஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஒ)

செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலற
வழுந்தவூன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனனிவாமல்குகைமே
லழுந்துஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஓ)

நுணங்குநூலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்கிசைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்முன்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகைமே
லணங்குஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஔ)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகடொழச்செல்வதன்முற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனனிவாமல்குகைமே
லார்க்குஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கஅ)

கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளே

---

* பிணி - கட்டுதல்.

முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைபாட்டினைபத்தும்வல்லார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அரத்துறைநாதர், தேவியார் - ஆனந்தநாயகியம்மை,

சிவாவென்பது ஒருநதி—புனல்-சிவாவெனப் பதம்பிரிக்க;

இது - முத்துச்சிவிகை - முத்துச்சின்னமுதலியவை பெற்றபோதருளிச்செய்தது.

திருமறைக்காடு - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாந்
திங்கள்சூடினரோனுந்திரிபுரமெரித்தனரோனு
மெங்குமெங்கள்பிரானர்புகழலதிகழ்பழியிலரே. (க)

கூனிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
யானிலங்கிளைகதுமாடுவர்பூண்பதுமரவங்
கானலங்கழியோதங்கரையொடுகதிர்மணிதumbபத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. (உ)

நுண்ணிதாய்வெளிதாகிநூல்கிடந்திலங்குபொன்மார்பிற்
பண்ணியாழெனமுரலும்பனிமொழியுமையொருபாகன்
றண்ணிதாயவெள்ளருவிசலசலதுரைமணிதumbபக்
கண்ணிதானுமோர்பிறையார்கலிமறைக்காடமர்ந்தாரே. (ங)

ஏழைவெண்குருகையேலெயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புலருந்தண்மறைக்காடமர்ந்தார்தா
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியின்
வீழலேசரணுகினேபவர்வினைகலிலரே. (ச)

அரவம்வீக்கியவரையுமதிர்கழறழுவியவடியும்
பரவரஞ்செய்தபாவம்பறைதரவருளுவர்பதிதான்
மரவமீயாசோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும்பகலுமேத்துதல்குணமெனலாமே. (ஞ)

பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதே
ரல்லல்வாழ்க்கையரோனுமழகியதறிவெம்மடிகள்
புல்லமேறுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமா
மல்குவெண்டிரைமோதமாமறைக்காடதுதானே. (சு)

காகந்தான்கயிறுகவரிர்வனையதற்குமத்தாகப்
பாகந்தேவரோடசுரர்படுகடலளறெழுக்கடைய

வேகஞ்செழுவாங்கேவெருவொடுமிரிந்தெங்குமோட
வாகத்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே. (எ)

தக்கன்வேள்வியைத்தகர்த்தான்றனதொருபெருமையையோரான்
மிக்குமேற்சென்றுமலையையெடுத்தலுமலமகணடுங்க
நக்குத்தன்திருவிரலாலூன்றலுநடுங்கெடுத்தரக்கன்
பக்கவாயும்விட்டலறப்பரிந்தவன்பதிமறைக்காடே. (அ)

வீண்டமாமலரோனும்விளங்கொளியரவணையானும்
பண்டுங்காண்பரிதாயபரிசினனவனுறைபதிதான்
கண்டலங்கழியோதங்கனையொடுகதிர்மணிதரும்ப
வண்டலங்கமழ்சோலைமாமறைக்காடதுதானே. (கூ)

பெரியவாகியபருடையும்பீலியுமவைவெயிற்கரவாக்
கரியமண்டகையேந்திக்கல்லெனவழிதருங்கழுக்க
ளரியவாகவுண்டோதுமவர்திறமொழிந்தரம்மடிகள்
பெரியசீர்மறைக்காடேபேணுமின்மனமுடையீரே. (கo)

மையுலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாரைக்
கையினற்றொழுதெழுவான்காழியுண்ஞானசம்பந்தன்
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிந்தையுட்சேர்க்கவல்லார்போய்ப்
பொய்யில்வானவரோடும்புகவலர்கொளவலர்புகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டம்பாணிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டங்களிருளாடுகதனர்கவின்றுறைகோயில்
புட்டன்பேடையோடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. (க)

முயல்வளாவியதிங்கள்வாண்முகத்தரிவையிற்றெரிவை
யியல்வளாவியதுடையவின்னமிர்தெந்தையெம்பெருமான்
கபல்வளாவியகழனிக்கருநிறக்குவளைகண்மலரும்
வயல்வளாவிபுகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (உ)

தொண்டர்தண்கயமூழ்கித்தூமணியலுஞ்சாந்தமும்புகையுங்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறிமுருகன்செய்கோலங்
கண்டுகண்டுகண்குளிரக்களிபரந்தொளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (ங)

பண்ணவண்ணத்தராகிப்பாடலோடாடலுற்ற
விண்ணவண்ணத்தராயவிரிபுகலூரரோசார்பாகம்

பெண்ணவண்ணத்தராகும்பெற்றியோடாணிணைபிணைந்த
வண்ணவண்ணத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (சு)

ஈசனேறமர்கடவுளின்னமிர்தெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரின்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல்
வாசமார்மலருடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (கூ)

தளிரிளங்கொடிவளரத்தண்கயமிரியவண்டேறிக்
கிளரிளம்முழைமுழையக்கிழிதருபூம்புகலூரி
லுளரினஞ்சுமனமலருமொளிதருசடைமுடியதன்மேல்
வளரிளமபிறையுடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (கூ)

தென்சொல்விஞ்சமர்வடசொற்றிசைமொழியெழினரம்பெடுத்துத்
துஞ்சுகஞ்சிருணீங்கத்தொழுதெழுதொல்புகலூரி
லஞ்சனமபிதிர்ந்தனையவலைகடல்கடையவன்றெழுந்த
வஞ்சனஞ்சணிகண்டர்வர்த்தமானீச்சரத்தாரே. (எ)

சாமவேதமோர்கீதமோதியத்தசமுகன்பரவு
காமதேயமதுடையார்கன்குணர்ந்தடிகளென்றேத்தக்
காமதேவனவேவக்கனலெரிகொளுவியகண்ணர்
வாமதேவர்தண்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (அ)

சீரணங்குநின்றசெருவுறுதிசைமுகனோடு
காரணன்கருத்தழியகைசெய்தசடைமுடிநம்ப
ராரணங்குறுமுமையையஞ்சுவித்தருளுதல்பொருட்டால்
வாரணத்துரிபோர்த்தார்வர்த்தமானீச்சரத்தாரே. (கூ)

கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையினூற்றம்
மெய்யைப்பேர்த்துழல்வாருமுரைப்பனமெய்யெனவிரும்பேற்
செய்யில்வாளைகளோடுசெங்கயல்குதிகொளும்புகலூர்
மையகொள்கண்டத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (கo)

பொங்குதண்புனல்சூழ்ந்தபோதணிபொழிற்புகலூரின்
மங்குன்மாமதிதவழுமவர்த்தமானீச்சரத்தானைத்
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்றண்டமிழ்பத்து
மெங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிராப்பள்ளி.

சுவாமிபெயர் - வர்த்தமானீசுவரர், தேவியார் - கருந்தார்குழலியம்மை.

ஆக பதிகம் - கூ.

திருத்தெங்கூர்ப்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

புனைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கனைசெய்மால்கடனஞ்சையுண்டவர்கருதலர்புரங்க

வினைசெய்தாரழலூட்டியுழல்பவரிடுபலிக்கெழில்சேர்
விளைசெய்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (க)

சித்தந்தன்னடிநினைவார்செடிபடுகொடுவினை தீர்க்குங்
கொத்தின்றுழ்சடைமுடிமேற்கோளெயிற்றரவொடுபிறையன்
பத்தர்தாம்பணிந்தேத்தும்பரம்பரன்பைம்புனல்பதித்த
வித்தன்றுழ்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (உ)

அடையும்வல்வினையகலவருள்பவரனலுடைமழுவாட்
படையர்பாய்புலித்தோலர்பைம்புனற்கொன்றையர்படர்புன்
சடையில்வெண்பிறைசூடித்தார்மணியணிதருதறுகண்
விடையர்வீங்கெழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ங)

பண்டுநான்செய்தவினைகள்பறையவோர்நெறியருள்பயப்பார்
கொண்டல்வான்மதிசூடிக்குரைகடல்விடமணிகண்டர்
வண்டுமாமலருந்திமதுவுணவிதழ்மறிவெய்தி
விண்டவர்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ச)

சுழித்தவார்புனர்கங்கைசூடியோர்காலனைக்காலாற்
றெழித்துவானவரேங்கச்செற்றவாசிறையணிபறவை
கழித்தவெண்டலையேந்திக்காமனதுடல்பொடியாக
விழித்தவர்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ஞ)

தொல்லைவல்வினைதீர்ப்பார்சுடலைவெண்பொடியணிசுவண்ட
ரெல்லிசூடினின்றுடுமிறையவரிமையவரேத்தச்
சில்லைமால்விடையேறித்திரிபுரந்தீயெழச்செற்ற
வில்லினர்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ட)

நெறிகொள்சிந்தையராகினினைபவர்வினைகெடநின்றூர்
முறிகொண்மேனிமுக்கண்ணர்முளைமதிநடுநடுத்திலங்கப்
பொறிகொள்வாளரவணிந்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
வெறிகொள்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ண)

எண்ணிலாவிறலரக்கனெழிறிகழ்மால்வரையெடுக்கக்
கண்ணிலாம்பொடிந்தலறக்கால்விரலூன்றியகருத்தர்
தண்ணிலாம்புனற்கண்ணிதயங்கியசடைமுடிச்சதுரர்
விண்ணிலாம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (அ)

தேடித்தானயன்மாலுந்திருமுடியடியினைகாணர்
பாடத்தான்பலபூதப்படையினர்சுடலையிற்பலகா
லாடத்தான்மிகவல்லரருச்சுனற்கருள்செயக்கருதும்
வேடத்தார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (கூ)

சடங்கொள்வேரப்போர்வைச்சாக்கியர்சமணர்சொற்றவிர
விடங்கொள்வல்வினைதீர்க்குமேத்துமினிருமருப்பொருகைக்

கடங்கொண்மால்களிற்றுரியர்கடல்கடைந்திடக்கனன்றெழுந்த
விடங்கொள்கண்டத்தர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (கo)

வெந்தசீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரைக்
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடற்றண்டமிழ்ப்பத்தும்வல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதறேறுதல்பயனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வெள்ளிமலையீஸ்வரர், தேவியார் - பெரியாம்பிகையம்மை.

திருவாழ்கொளிபுத்தூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சாகையாயிரமுடையார்சாமமுமோதுவதுடையார்
நீகையார்கடைநோக்கியிரப்பதும்பலபலவுடையார்
தோகைமாமயிலனையதுடியிடைபாகமுமுடையார்
வாகைதண்பொழிவீழிசும்வாழ்கொளிபுத்தூருளாரே. (க)

எண்ணிலீரமுமுடையாரெத்தனையோரிவரறங்கள்
கண்ணுமாயிரமுடையார்கையுமோராயிரமுடையார்
பெண்ணுமாயிரமுடையார்பெருமையோராயிரமுடையார்
வண்ணமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (உ)

கொடியோராயிரமுடையார்தண்ணியராமவர்நோக்கும்
வடிவுமாயிரமுடையாரவண்ணமுமாயிரமுடையார்
முடியுமாயிரமுடையார்மொய்குழலாளையுமுடையார்
வடிவுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ங)

பஞ்சிதண்டுகிலன்னமைபங்கமுற்சேவடியுடையார்
குஞ்சிமேகலையுடையாகொந்தணிவேலவலனுடையார
ரஞ்சுமென்றலர்க்கணியாரானையினீருரியுடையார்
வஞ்சிதண்ணிடையுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ச)

பரவுவானாயுமுடையார்பழித்திகழ்வானாயுமுடையார
விரவுவானாயுமுடையார்வெண்டலைப்பலிகொள்வதுடையார
ரரவம்பூண்பதுமுடையாராயிரம்போமிகவுடையார்
வரமுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ஞ)

தண்டுந்தாளமுங்குழலுந்தண்ணுமைக்கருவியும்புறவிற்
கொண்டபூதமுமுடையார்கோலமும்பலபலவுடையார்
கண்டுகோடலுமரியார்காட்சியுமரியதோர்கரந்தை
வண்டுவாழ்பதியுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ரு)

மானவாழ்க்கையதுடையார்மலைந்தவர்மதிற்பரிசுத்தார்
தானவாழ்க்கையதுடையார்தவத்தொடுநோம்புகழ்ந்தேத்த

ஞானவாழ்க்கையதுடையாரஞ்ஞெருண்மகளிர்கின்றேத்த
வானவாழ்க்கையதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (எ)

ஏழுமூன்றுமோர்தலைகளுடையவனிடர்படலடர்த்து
வேழஞ்செற்றதும்விரும்பிவிருப்பவர்பலபலவுடையார்
கேழல்வெண்பிறையன்னகெழுமணிமிடறுகின்றிலங்க
வாழிசாந்தமுமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (அ)

வென்றிமாமலரோனும்விரிகடற்றுயின்றவன்றானு
மென்றுமேத்துகையுடையாரிமையவர்துதிசெயவிரும்பி
முன்றின்மாமலர்வாசமுந்துமிதவழ்பொழிற்றில்லை
மன்றிலாடலதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (கூ)

மண்டைகொண்டுழறேரார்மாசுடைமேனிவன்சமணர்
குண்டர்பேசியபேச்சுக்கொள்ளன்மின்றிகழொளிகல்ல
துண்டவெண்பிறைசூடிச்சுண்ணவெண்பொடியணிந்தெங்கும்
வண்டுவாழ்பொழில்சூழ்ந்தவாழ்கொளிபுத்தூருளாரே. (கo)

கலங்கொள்பூம்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
வலங்கொள்வெண்மழுவாளன்வாழ்கொளிபுத்தூருளானை
யிலங்குவெண்பிறையானையேத்தியதமிழிவைவல்லார்
கலங்கொள்சிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாணிக்கவண்ணநாதர், தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

நீருஅரைசிலி - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல்வண்டறைகொன்றைபான்மதிபாய்புனற்கங்கை
கோடல்கூவிளமாலமத்தமுஞ்செஞ்சடைக்குலவி
வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியன்தோண்மே
லாடன்மாசுணமசைத்தவடிகளுக்கிடமாசிலியே. (க)

ஏறுபேணியதேறியிளமதக்களிற்றினையெற்றி
வேறுசெய்ததனுரிவைவெண்புலால்கலக்கமெய்போர்த்த
ஆறுதேனவனும்பர்க்கொருவனல்லொளிகொளொண்சுடரா
மாறுசேர்தருசென்னியடிகளுக்கிடமாசிலியே. (உ)

கங்கைசேர்சடைமேலதமிக்கதிரிளவனமென்
கோங்கையாளொருபாகமருவியகொல்லிவெள்ளேற்றன்
சங்கையாய்த்திரியாமேதன்னடியார்க்கருள்செய்து
வங்கையாலனலேந்துமடிகளுக்கிடமாசிலியே. (ங)

மிக்ககாலனைவீட்டிமெய்கெடக்காமனைவிழித்துப
புக்கவூரிடுபிச்சையுண்பதுபொன்றிகழ்கொன்றை

தக்கநூறிகழ்மார்பிற்றவளவெண்ணீறணிந்தாமை
யக்கினரமும்பூண்டவடிகளுக்கிடமாசிலியே. (ச)

மானஞ்சும்மடநோக்கிமலைமகள்பாகமுமருவித்
தானஞ்சாவரண்மூன்றுந்தழலெழச்சரமதுதூரந்து
வானஞ்சும்பெருவிடத்தையுண்டவன்மாமறையோதி
யானஞ்சாடியசென்னியடிகளுக்கிடமாசிலியே. (ஞ)

பரியமாசுணங்கயிறுப்பருப்பதமதற்குமத்தாகப்
பெரியவேலையைக்கலங்கப்பேணியவானவர்கடையக்
கரியநஞ்சதுதோன்றக்கலங்கியவவர்தமைக்கண்டு
வரியவாரமிர்தாக்குமடிகளுக்கிடமாசிலியே. (சு-எ)

வண்ணமால்வரைதன்னைமறித்திடலுற்றவல்லரக்கன்
கண்ணுந்தோளுநல்வாயுநெரிதரக்காலிரலூன்றிப்
பண்ணின்பாடல்கைகரம்பாற்பாடியபாடலைக்கேட்டு
அண்ணலாரருள்செய்தவடிகளுக்கிடமாசிலியே. (அ)

குறியமானுருவாகிக்குவலயமளந்தவன்றானும்
வெறிகொடாமரைமேலேவிரும்பியமெய்த்தவத்தோனுஞ்
செறிவொணவகையெங்குந்தேடியுந்திருவடிகாண
வறிவொணவுருவத்தெம்மடிகளுக்கிடமாசிலியே. (கூ)

குருவேயெய்தியமடவார்நிற்பவேகுஞ்சியைப்பறித்துங்
திரவேகையிலுண்பவருந்தேரருஞ்சொல்லியதேற்றப்
பொருவேப்பொய்யிலிமெய்யெனாதனைப்பொன்னடிவணங்கு
மருவேயார்தரநல்குமடிகளுக்கிடமாசிலியே. (கo)

அல்லிநீள்வயல்சூழ்ந்தவரைசிலியடிகளைக்காழி
நல்லஞானசம்பந்தனற்றமிழ்பத்திவைநாவுஞ்
சொல்லவல்லவாதம்மைச்சூழ்ந்தமரர்தொழுதேத்த
வல்லவானுலகெய்திவைகலுமகிழ்ந்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அனாசிலிநாதர், தேவியார் - பெரியம்மை.

ஸ்ரீசீகாழி - பண் - பியநீதைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்புரிவளரும்பொற்புடைமார்பனெம்பெருமான்
செங்கணுடரவாட்டுஞ்செல்வனெஞ்சிவனுறைகோயில்
பங்கமில்பலமறைகள்வல்லவர்பத்தர்கள்பரவுந்
தங்குவெண்டிரைக்கானற்றண்வயற்காழிநன்னகரே. (க)

தேவர்தானவர்பரந்துதிண்வரைமால்கடனிறுவி
நாவதாயமிர்துண்ணநயந்தவரிரிந்திடக்கண்டு

ஆவவென்றருணஞ்சமுண்டவனமர்தருமூதூர்
காவலார்மதில்சூழ்ந்தகடிபொழிற்காழிநன்னகரே. (உ)

கரியின்மாமுகமுடையகணபதிதாதைபல்பூதக்
கிரியவில்பலிக்கேகுஞ்செழுஞ்சுடர்சேர்தருமூதூர்
சரியின்முன்கைநன்மாதர்சதிர்படமாநடமாடி
யுரியராமங்களேத்துமொலிபுனற்காழிநன்னகரே. (ஊ)

சங்கவெண்குழைச்செவியன்றண்மதிசூடியசென்னி
யங்கம்பூணெனவுடையவப்பனுக்கழகியவூராந்
துங்கமாளிகையுயர்ந்ததொகுகொடிவானிடைமிடைந்து
அங்கவாண்மதிதடவுமணிபொழிற்காழிநன்னகரே. (எ)

மங்கைகூறமர்மெய்யான்மான்மறியேந்தியகையா
னெங்களீசனென்றெழுவாரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந்தாஞ்செய்ததகுதியின்மிக்க
கங்கைநாடுவர்கீர்த்திமறையவர்காழிநன்னகரே. (ஏ)

காறுகூவிளமத்தகாகமுஞ்சூடியகம்ப
னேறுமேறியவீசனிருந்தினிதமர்தருமூதூர்
நீறுபூசியவுருவர்நெஞ்சினுள்வஞ்சமொன்றின்றித்
தேறுவார்கள்சென்றேத்துஞ்சீர்திகழ்காழிநன்னகரே. (ஐ)

நடமதாடியநாதனந்திதன்முழவிடைக்காட்டில்
விடமமர்ந்தொருகாலம்விரித்தறமுரைத்தவற்கூரா
மிடமதாமறைபயில்வாரிருந்தவர்திருந்தியம்போதிற்
குடமதார்மணிமாடங்குலாவியகாழிநன்னகரே. (ஒ)

கார்கொண்மேனியவ்வரக்கன்றன்கடுந்திறலினைக்கருதி
யோர்கொண்மங்கையுமஞ்சவெழின்மலையெடுத்தவனெரியச்
சீர்கொள்பாதத்தோர்விரலாற்செறுத்தவெஞ்சிவனுறைகோயி
லூர்கொள்வண்டினஞ்சூழ்ந்ததண்வயற்காழிநன்னகரே. (ஓ)

மாலுமாமலரானுமருவினின்றியலியமனத்தாற்
பாலுங்காண்பரிதாயபரஞ்சுடர்தன்பதியாகுஞ்
சேலும்வாளையுங்கயலுஞ்செறிந்துதன்கிளையொடுமேய
வாலுஞ்சாலிநற்கதிர்களணிவயற்காழிநன்னகரே. (கூ)

புத்தர்பொய்மிகுசமணர்பொலிகழலடியிணைகாணுஞ்
சித்தமற்றவர்க்கிலாமைத்திகழ்ந்தகற்செழுஞ்சுடர்க்கூராஞ்
சித்தரோடொல்லைமார்செறிந்தண்மாமலர்கொண்டு
முத்தனேயருளென்றுமுறைமைசெய்காழிநன்னகரே. (கூ)

ஊழியானவைபலவுமொழித்திடுங்காலத்திலோங்கு. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - திருவிராகம் - பண் - நட்டராகம்.
திருச்சிற்றம்பலம்.

நம்பொருணமக்களென்றுச்சியிச்சைசெய்துநீ
ரம்பரமவடந்துசாலவல்லலுய்ப்பதன்முனம
மும்பர்நாதனுத்தமனெனினம்மிகுத்தசெஞ்சட
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. (க)

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலும்
பேவமானசெய்கூசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுசூர்திருந்துகாழிசேர்மினே. (உ)

சோறுகூறையின்றியேதுவண்டுதூரமாய்நுமக்
கேறுசுற்றமெல்கவேயிடுக்கணுய்ப்பதன்முன
மாறுமோர்சடையினனுதியானசெற்றவ
னூறுதேன்மலர்ப்பொழினலங்கொள்காழிசேர்மினே. (ங)

கச்சிநீர்பிறன்கடைநடந்துசெல்லநாளையு
முச்சிமேனும்மூனையுமுணர்ந்துகேட்பதன்முனம்
பிச்சர்நச்சரவனைப்பெரியசோதிபேணுவா
ரிச்சைசெய்யுமெம்பிரானெழில்கொள்காழிசேர்மினே. (ச)

கண்கள்காண்பொழிந்துமேனிகன்றியொன்றலாதநோ
யுண்கிலாதசெய்துநும்மையுய்த்தழிப்பதன்முனம்
விண்குலாவுதேவருய்யவேலநஞ்சமுதுசெய்
கண்கண்மூன்றுடையவெங்கருத்தர்காழிசேர்மினே. (ஞ)

அல்லல்வாழ்க்கையுய்ப்பதற்கவத்தமேபிறந்துநீ
ரொல்லையில்லிணக்கினிற்கிடந்திடாதெழும்மினே
பல்லில்வெண்டலையினிற்பலிக்கியங்குபாள்ளையான்
கொல்லியேறதேறுவான்கோலக்காழிசேர்மினே. (கூ-எ)

பொய்மிகுத்தவாயராய்ப்பொருமையோடுசொல்லுநீ
மைமிகுத்தகண்டராயடித்துரைப்பதன்முன
மைமிகுத்தமேனிவாளரக்கனெரித்தவன
பைமிகுத்தபாடலைப்பரமர்காழிசேர்மினே. (அ)

காலினோடுகைகளுத்தனார்துகாமகோய்தனு
வேலவார்குழலினாரிகழ்ந்துரைப்பதன்முன
மாலினோடுநான்முகன்மதித்தவர்கள்காண்கிலா
நீலமேவுகண்டனார்நிகழ்ந்தகாழிசேர்மினே. (கூ)

நிலவெறுத்தநெஞ்சமோடுநேசமில்புதல்வர்கண்
முலவெறுத்தபேர்தொடங்கியேமுனிவதன்முனங்

தலைபறித்தகையர்தேரர்தாந்தரிப்பரியவன்
சிலைபிடித்தெயிலெய்தான்றிருத்துருகாழிசேர்மினே. (கஅ)

தக்கனுர்தலையரிந்தசங்கரன்றனதரை
யக்கினேடரவசைத்தவர்திவண்ணர்காழியை
யொக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர்
மிக்கவின்பமெய்திவீற்றிருந்துவாழ்தன்மெய்மையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி - திருவிராகம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வளைத்தலைப்பசும்பொனேடருங்கலன்களுந்திவந்
திளைத்தலைச்சுடர்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பதேகருத்தினு
யுரைத்தலைப்பொலிந்தனக்குணர்த்துமாறுவல்லமே. (க)

அடித்தடித்தகத்தியோடவன்னிகொன்றைகூவிளந்
தொடுத்துடன்சடைப்பெய்தாய்துருத்தியாயோர்காலனைக்
கடித்தடிப்புறத்தினுனிறத்துதைத்தகாரண
மெடுத்தெடுத்துரைக்குமாறுவல்லமாகினல்லமே. (உ)

கங்குல்கொண்டதிங்களோடுகங்கைதங்குசெஞ்சடைச்
சங்கிலங்குவெண்குழைசரிந்திலங்குகாதினாய்
பொங்கிலங்குபூணநூலுருத்திராதுருத்திபுக்
கெங்குமின்னிடங்களாவடங்கிவாழ்வதென்கொலோ. (ஈ)

கருத்தினுலோர்காணியில்விருத்தியில்லைதொண்டர்த
மருத்தியாற்றம்வல்லசொல்வியையமேற்பதன்றியும்
மொருத்திபால்பொருத்திவைத்துடம்புவிட்டியோகியா
யிருத்திநீதுருத்திபுக்கிதென்னமாயமென்பதே. (ச)

துறக்குமாசொலப்படாய்துருத்தியாய்திருந்தடி
மறக்குமாறிலாதவென்னைமையல்செய்திமண்ணின்மேற்
பிறக்குமாறுகாட்டினுய்பிணிப்படுமுடம்புவிட்
டிறக்குமாறுகாட்டினுய்க்கிழுக்குகின்றதென்னையே. (ஙி)

வெயிற்கெதிர்ந்திடங்கொடாதகங்குளிர்ந்தபைம்பொழிற்
றுயிற்கெதிர்ந்தபுள்ளினங்கண்மல்குதண்டுருத்தியாய்
மயிற்கெதிர்ந்தணங்குசாயன்மாதொர்பாகமாகமூ
வெயிற்கெதிர்ந்தோரம்பினுலெரித்தவில்லியல்லையே. (சு)

கணிச்சியம்படைச்செல்வர்கழிந்தவர்க்கொழிந்தசீர்
துணிச்சிரக்கிரந்தையாய்காந்தையாய்துருத்தியா

யணிப்படுந்தனிப்பிறைப்பனிக்கதிக்கவாவுநன்
மணிப்படும்பைஈகமீகிழ்ந்தவண்ணலல்லலேயே. (எ)

சுடப்பொடிந்துடம்பிழந்தனங்கனையமன்மத
னிடர்ப்படக்கடந்திடந்துருத்தியாகவெண்ணினுய்
கடற்படையுடையவக்கடனிலங்கைமன்னனை
யடற்படவடுக்கலிலடர்த்தவண்ணலல்லலேயே. (அ)

களங்குளிர்ந்திலங்குபோதுகாதலானுமாலுமாய்
வளங்கிளம்பொனங்கழல்வணங்கிவந்துகாண்கிலார்
துளங்கிளம்பிறைச்சனித்துருத்தியாய்திருந்தடி
யுளங்குளிர்ந்தபோதெலாமுகந்துகருதுரைப்பனே. (கூ)

புத்தர்தத்துவமிலாச்சமணுரைத்தபொய்தனை
யுத்தமமெனக்கொளாதுகருதெழுந்துவண்டினங்
குத்தகின்றுபண்செயுஞ்சுழ்பொழிற்றுருத்தியெம்
பித்தன்பித்தனைத்தொழப்பிறப்பறுதல்பெற்றியே. (கo)

கற்றுமுற்றினர்தொழுங்கழுமலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினனவன்பகர்ந்தசொற்களாற்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வருதல்கூடுமே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வேதேசுவரர், தேவியார் - முகிழாம்பிகையம்மை.

ஆக பதிகம் - கூக.

நீநக்கோடிகாத் - நிநயிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றெனின்றவிச்சையாற்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. (க)

அல்லன்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நலலதோரெறியினோடுதுங்கடம்மினே
வில்லையன்னவாணுதல்வெள்ளையோர்பாகமாங்
கொலலிவெள்ளையேற்றினன்கோடிகாவுசேர்மினே. (உ)

துக்கமிக்கவாழ்க்கையின்சோர்வினைத்துறந்துநீர்
தக்கதோர்நெறியினைச்சார்தல்செய்யப்போதுமி
னக்கணித்தைமிசையாறணிந்தசென்னிமேற்
கொக்கிறகணிந்தவன்கோடிகாவுசேர்மினே. (ங)

பண்டுசெய்தவல்வினைபற்றறக்கெடும்வகை
யுண்டுமக்குரைப்பனெனல்லைநீழுமினே

மண்டுகங்கைசெஞ்சடைவைத்துமாதோர்பாகமாக்
கொண்டுகந்தமார்பினன்கோடிகாவுசேர்மினே. (சு)

முன்னைநீர்செய்பாவத்தான்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையின்மூழ்கிநீரொழும்மினே
பொன்னைவென்றகொன்றையான்பூதம்பாடவாடலான்
கொன்னவிலும்வேலினன்கோடிகாவுசேர்மினே. (ரு)

ஏவமிக்கசிந்தையோடின்பமெய்தலாமெனப்
பாவமெத்தனையுநீர்செய்தொருபயனிலைக்
காவன்மிக்கமாகடர்காய்ந்துவெங்கனல்படக்
கோவமிக்கசெற்றியான்கோடிகாவுசேர்மினே. (சு)

ஏணழித்தவாழ்க்கையையின்பமென்றிருந்துநீர்
மாணழித்தமூப்பினல்லவருந்தன்முன்னம்மினே
பூணல்வெள்ளெலும்பினன்பொன்றிகழ்சடைமுடிக்
கோணல்வெண்பிறையினன்கோடிகாவுசேர்மினே. (எ)

மற்றிவாழ்க்கைமெய்யெனும்மருத்தினைத்தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின்சேவடிபணிந்துவந்தெழுமினே
வெற்றிகொடசமுகன்விறல்கெடவிருந்ததோர்
குற்றமில்வலியினன்கோடிகாவுசேர்மினே. (அ)

மங்குலோயுறும்பிணிமாயும்வண்ணஞ்சொல்லுவன்
செங்கண்மாறிசைமுகனென்றளந்துங்காண்கிலா
வெங்கண்மால்விடையுடைவேதியன்விரும்புமூர்
கொங்குலாம்வளம்பொழிற்கோடிகாவுசேர்மினே. (கூ)

தட்டொடுதழைமயிற்பீலிகொள்சமணரும்
பட்டுடைவிரிதுகிலினர்கள்சொற்பயனிலை
விட்டபுன்சடையினன்மேதகுமுழவொடு
கொட்டமைந்தவாடலான்கோடிகாவுசேர்மினே. (கo)

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
யந்தணாபுகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கோடீசுவரர், தேவியார் - வடிவாம்பிகை.

தீருக்கோவலூர்வீரட்டம் - தீருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்க
ணிடைகொள்வாரொமக்கிலையெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன்மூதாதைகுழகன்கோவலூர்தனுள்
விடையதேறுங்கொடியினன்வீரட்டானஞ்சேர்துமே. (க)

காவலாளர்தம்மேனக்கடைகடோறுங்கானிமிர்த்
திரவலாழிநெஞ்சமேயினியதெய்தவேண்டினீர்
குரவமேறிவண்டினங்குழலோடியாழ்செய்கோவலூர்
விரவிகாறுகொன்றையான்வீரட்டானஞ்சேர்துமே. (உ)

உள்ளத்தீரோபோதுமின்னுறுதியானதறிதிரோ
ளள்ளற்சேற்றிற்காலிட்டங்கவலத்துள்ளழுந்தாதே
கொள்ளபாபாடுகீதத்தான்குழகன்கோவலூர்தனில
வெள்ளந்தங்குசடையினன்வீரட்டானஞ்சேர்துமே. (ஊ)

கனகொளிருமல்சூலைநோய்கம்பதாளிகுன்மமு
மினையபலவுமூப்பிலேயெய்திவருதுகலியாமுன்
பினகளுலவுபம்பைபொழிற்பழனஞ்சூழ்ந்தகோவலூர்
வினையைவென்றவேடத்தான்வீரட்டானஞ்சேர்துமே. (எ)

உளங்கொள்போகமுய்த்திடாருடம்பிழந்தபோதின்கட்
டளங்கிகின்றுகாடொறுந்துயரலாழிநெஞ்சமே
வளங்கொள்பெண்ணைவந்துலாவயற்கள்சூழ்ந்தகோவலூர்
விளங்குகோவணத்தினன்வீரட்டானஞ்சேர்துமே. (ஏ)

கேடிமூப்புச்சாக்காடுகெழுமிவருதுகாடொறு
மாடுபோனசைகளாயாக்கைபோக்கதனறியுங்
கூடின்றுபம்பொழிற்குழகனகோவலூர்தனுள்
வீடுகாட்டுதெறியினன்வீரட்டானஞ்சேர்துமே. (ஐ)

உரைபுரம்பாடுநாளர்வெப்புறியுடம்புமூத்தபோதின்க
ணரைபுநிரைபுங்கண்டெள்கிநருவாநமர்களாதலால்
வரைகொள்பெண்ணைவந்துலாவயலகள்சூழ்ந்தகோவலூர்
விரைகொள்சோவெண்ணீற்றினன்வீரட்டானஞ்சேர்துமே. (ஒ)

ஏதமிக்கமூப்பிடுமிடருமலீனமென்றிவை
யூதலாக்கைபோமபுவீருறுதிபாவதறிதிரோற்
போதில்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வேதமோதுநெறியினன்வீரட்டானஞ்சேர்துமே. (ஓ)

ஆறுபட்டபுன்சடையழகனையிழைக்கொரு
கூறுபடடமேனிபான்குழகனகோவலூர்தனி
னீறுபட்டகோலத்தானீலகண்டனிருவர்க்கும்
வேறுபட்டசிந்தையான்வீரட்டானஞ்சேர்துமே. (க)

குறிகொளாழிநெஞ்சமேகூறைதுவரிட்டார்களும்
மறிவிலாதவமணர்சொல்லவத்தமாவதறிதிரோற்
பொறிகொள்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனில்
வெறிகொள்கங்கைதாங்கினன்வீரட்டானஞ்சேர்துமே. (கo)

கழியோடலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
பழிகடீரச்சொன்னசொற்பாவநாசமாதலா
லழிவிலீர்கொண்டேத்துமினந்தண்கோவலூர்தனில்
விழிகொள்பூதப்படையினன்வீரட்டானஞ்சேர்துமே. (கக)

நகோட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர், தேவியார் - சிவானந்தவல்லியம்மை.

திருவாரூர்த்-திருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானமத்தகத்தரிக்குலத்துகிர்ப்புகர்
நெருக்கிவாயிலிலங்கிரக்குநீள்பொருப்பனூர்
கருக்கொள்சோலைசூழ்நீடுமோடமாளிகைக்கொடி
யருக்கன்மண்டலத்தணவுமந்தணரூரென்பதே. (க)

விண்டவெள்ளெருக்கலர்ந்தவன்னிகொன்றைமத்தமு
மிண்டைகொண்டசெஞ்சடைமுடிச்சிவனிருந்தவூர்
கெண்டைகொண்டலர்ந்தகண்ணினார்கள்கீதவோசைபோ
யண்டரண்டமூடறுக்குமந்தணரூரென்பதே. (உ)

கறுத்தகஞ்சமுண்டிருண்டகண்டர்காலனின்னுயிர்
மறுத்தமாணிதன்றனக்கம்வண்மைசெய்தமைந்தனூர்
வெறித்துமேதியோடிமூசுவள்ளைவெள்ளைநீள்கொடி
யறுத்துமண்டியாவிபாயுமந்தணரூரென்பதே. (ங)

அஞ்சுமொன்றியாறுவீசிநீறுபூசுமேனியிற்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னிமன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைதுண்ணிடை
யஞ்சொலாரரங்கெடுக்குமந்தணரூரென்பதே. (ச)

சங்குலாவுதிங்கள்சூடிதன்னையுனனுவாமருத்
தங்குலாவினின்றவெங்களாதிதேவன்மன்னுமூர்
தெங்குலாவுசோலைநீடுதேனுலாவுசெண்பக
மங்குலாவியண்டநாறுமந்தணரூரென்பதே. (ஞ)

கள்ளநெஞ்சவஞ்சகக்கருத்தைவிட்டருத்தியோ
டுள்ளமொன்றியுள்குவாருளத்துளானுகந்தவூர்
துள்ளிவாளைபாய்வயற்சுரும்புலாவுநெய்தல்வா
யள்ளனையாரல்வாருமந்தணரூரென்பதே. (சு)

கங்கைபொங்குசெஞ்சடைக்கரந்தகண்டர்காமனை
மங்கவெங்கணல்விழித்தமங்கைபங்கன்மன்னுமூர்
தெங்கினூடுபோகிவாழைகொத்திறுத்துமாவின்மே
லங்கண்மந்திமூந்தியேறுமந்தணரூரென்பதே. (எ)

வனைத்தலமெடுத்தவன்முடித்தலம்முரத்தொடு
நெரித்தவன்புரத்தைமுன்னெரித்தவனிருந்தவூர்
நினைத்தமாளிகைத்திருவினேரனூர்கள்வெண்ணகை
யரத்தவாய்மடந்தைமார்களாடுமோரூரொன்பதே. (அ)

இருந்தவன்கிடந்தவனிடந்துவிண்பரந்துமெய்
வருந்தியுமளப்பொணாதவானவன்மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல்புன்னைவன்னிசெண்பகஞ்செழுங்குரா
வரும்புசோலைவாசநாறுமந்தணூரொன்பதே. (கூ)

பறித்தவெண்டலைக்கடுப்படித்தமேனியார்தவம்
வெறித்தவேடன்வேலைஞ்சமுண்டகண்டன்மேவுமூர்
மறித்துமண்டுவண்டல்வாரிமிண்டுநீர்வயற்செநெ
லறுத்துவாயசும்புபாயுமந்தணூரொன்பதே. (கo)

வல்லிசோலைசூதநீமென்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தவந்தணூராதியை
நல்லசொல்லுஞானசம்பந்தனுவிலின்னுரை
வல்லதொண்டர்வானமாளவல்லர்வாய்மையாகவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராபுரம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமென்னடையிளையோடினிதுறையமரர்தம்பெருமானூர்
மின்னுசெஞ்சடைவெள்ளெருக்கம்மலர்வைத்தவர்வேதந்தாம
பன்னுநன்பொருள்பயந்தவர்பருமதிற்சிராபுரத்தார்சீரார்
பொன்னின்மாமலரடிதொழுமடியவர்வினையொடும்பொருந்தாவே. (க)

கோலமாகரியுரித்தவரரவொடுமேனகக்கொம்பிளவாமை
சாலப்பூண்டுதண்மதிபதுசூடியசங்கரனூர்தம்மைப்
போலத்தம்மடியாராக்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிராபுரந்தொழவினைநில்லாவே. (உ)

மானத்திண்புவரிசிலைப்பார்த்தனேத்தவங்கெடமதித்தன்று
கானத்தேதிரிவேடனையமர்செயக்கண்டருள்புரிந்தாபூந்
தேனைத்தேர்ந்துசேர்வண்டுகடிதரஞ்சிராபுரத்துறையெங்கள்
கோனைக்கும்பிடுமடியரைக்கொடுவினைகுற்றங்கள்குறுகாவே. (ங)

மாணிதன்னுயிர்மதித்துணவந்தவக்காலனையுதைசெய்தார்
பேணியுள்குமெய்யடியவர்பெருந்துயர்ப்பிணக்கறுத்தருள்செய்வார்
வேணிவெண்பிறையுடையவர்வியன்புகழ்ச்சிராபுரத்தமர்கின்ற
வாணிப்பொன்னினையடிதொழுமடியவர்க்கருவினையடையாவே. (ச)

பாருநீரொடுபல்கதிரவியும்பனிமதியாகாசம்
மோரும்வாயுவும்மொண்கனல்வேள்வியிற்றலைவனுமாய்நின்றார்

சேருஞ்சந்தனமகிலொடுவெந்திழிசெழும்புனற்கோட்டாறு
வாருந்தண்புனல்சூழ்சிரபுரந்தொழுமடியவர்வருந்தாரே. (ரு)

ஊழியந்தத்திலொலிகடலோட்டந்திவ்வுலகங்களவைமூட
வாழியெந்தையென்றமரர்கள்சரண்புகவந்தரத்துயர்ந்தார்த்தாம்
யாழினேர்மொழியேழையோடினிதுறையின்பனெம்பெருமானூர்
வாழிமாநகர்ச்சிரபுரந்தொழுதெழவல்வினையடையாவே. (ரூ)

பேய்கள்பாடப்பல்பூதங்கடிதிசெயப்பிணமிடுசுடுகாட்டில்
வேய்கொடோளிதான்வெள்கிடமாநடமாடும்வித்தகனூரொண்
சாய்கடானமிகவுடையதண்மறையவர்தருசிரபுரத்தார்தாம்
தாய்களாயினர்பல்லுயிர்க்குந்தமைத்தொழுமவர்தளராரோ. (ஏ)

இலங்குபூண்வனமார்புடையிராவணனெழில்கொள்வெற்பெடுத்தன்று
கலங்கச்செய்தலுங்கண்டுதங்கழலடிகெரியவைத்தருள்செய்தார
புலங்கொள்செங்கழுநீர்மலர்த்தென்றன்மன்றதனிடைப்புகுந்தாரும்
குலங்கொண்மாமறையவர்சிரபுரந்தொழுதெழவினைகுறுகாவே. (அ)

வண்டுசென்றணைமலர்மிசைநான்முகன்மாயனென்றிவரன்று
கண்டுகொள்ளவோரானமோடன்னமாய்க்கிளர்தியும்பறந்துந்தாம்
பண்டுகண்டதுகாணவேவீண்டவெம்பசுபதிபரமேட்டி
கொண்டசெல்வத்துச்சிரபுரந்தொழுதெழவினையவைகூடாவே. (கூ)

பறித்தபுன்றலைக்குண்டிகைச்சமணரும்பார்மிசைத்துவர்தோய்ந்த
செறித்தசீவரத்தேரருந்தேர்கிலாத்தேவர்கள்பெருமானூர்
முறித்துமேதிகள்கரும்புதின்றுவியின்மூழ்கிடவிளவாளை
வெறித்துப்பாய்வயற்சிரபுரந்தொழுவினைவிட்டிடுமிகத்தானே. (கo)

பரசுபாணியைப்பத்தர்களத்தனைப்பையரவோடக்கு
நிரைசெய்பூண்டிருமார்புடைநிமலனைநித்திலபெருந்தொத்தை
விரைசெய்பூம்பொழிற்சிரபுரத்தண்ணலைவிண்ணவாபெருமானை
பரவுசம்பந்தன்செந்தமிழ்வல்லவர்பரமனைப்பணிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்த்திருமாகாளம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

புல்குபொன்னிறம்புரிசடைநெடுமுடிப்போழிளமதிசூடிப்
பில்குதேனுடைநறுமலர்க்கொன்றையும்பிணையல்செய்தவர்மேய
மல்குதண்டுறையரிசிலின்வடகரைவருபுனன்மாகாள
மல்லுநண்பகலுந்தொழுமடியவர்க்கருவினையடையாவே. (க)

அரவமாட்டுவரந்துகில்புலியதளங்கையிலனலேந்தி
யிரவுமாடுவரிவையிவர்சரிதைகளிசைவனபல்பூத
மரவநீள்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பரவியும்பணிந்தேத்தவல்லாரவர்பயன்றலைப்படுவாரே. (உ)

குணங்கள்சூதியுங்குற்றங்கள்பரவியுங்குரைகழலடிசேரக்
கணங்கள்பாடவுங்கண்டவர்பரவவுங்கருத்தமிந்தவர்மேய
மணங்கொள்பூம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
வணங்குமுள்ளமோடணையவல்லார்களைவலவினையடையாவே. (சு)

எங்குமேதுமோர்பிணியிலர்கேடிலரிழைவளர்நறுங்கொன்றை
தங்குதாங்கலுந்தாமமுங்கண்ணியுந்தாமசிழ்ந்தவர்மேய
மங்குல்தீர்ப்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கங்குலுமபகலுந்தொழுமடியவர்காதன்மையுடையாரே. (சு)

நெதியமென்னுளபோகமற்றென்னுளநிலமிசைநலமாய
கதியமென்னுளவானவரென்னுளர்கருதியபொருள்சூடின்
மதியநன்றாய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
புதியபூவொடுசாந்தமும்புகையுங்கொண்டேத்துதல்புரிந்தோர்க்கே. (சு)

கண்ணுலாவியகதிரொளிமுடிமிசைக்கனல்விடுசுடர்நாகந்
தெண்ணிலாவொடுதிலதமுநகுதலைதிகழவைத்தவர்மேய
மண்ணுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாள
முண்ணிலாநினைப்புடையவரியாவரிவ்வுலகினிலுயாவாரே. (சு)

தூசுதானைத்தோலுடைக்கண்ணிபஞ்சுடர்விடுநறுங்கொன்றை
பூசுவெண்பொடிபூசுவதன்றியும்புகழ்புரிந்தவர்மேய
மாசுலாமபொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பேசுநீர்மையரியாவரிவ்வுலகினிற்பெருமையைப்பெறுவாரே. (எ)

பௌவமார்கடலிலங்கையர்கோன்றனைப்பருவரைக்கீழ்ந்நி
லெவ்வந்தீரவன்றிமையவர்க்கருள்செய்தவிறையவனுறைகோயின்
மவ்வன்றோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கவ்வையாற்றொழுமடியவர்மேல்வினைகளிடைச்செதிளன்றே. (அ)

உய்யுங்காரணமுண்டென்றுகருதுமினெளிகிளர்மலரோனும்
பைகொள்பாம்பணைப்பள்ளிகொளண்ணலும்பரவுகின்றவர்மேய
மையலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கையினாற்றொழுதவலமும்பிணியுந்தங்கவலையுங்களைவாரே. (க)

பிண்டிபாலருமண்டைகொடேரரும்பீலிகொண்டுழல்வாருங்
கண்டனூலருங்கடுந்தொழிலாளருங்கழறுகின்றவர்மேய
வண்டலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பண்டுநாஞ்செய்தபாவங்கள்பற்றறப்பரவுதல்செய்வோமே. (கo)

மாறுதன்னெடுமண்மிசையில்லதுவருபுனன்மாகாளத்
தீறுமாதியுமாகியசோதியையேறமர்பெருமானை
நாறுபூமபொழிற்காழியுண்ஞானசம்பந்தனதமிழ்மாலை
கூறுவாரையுங்கேட்கவல்லாரையுங்குற்றங்கள்குறுகாவே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கரளகண்டேசுவரர், தேவியார் - பசுங்தாயகி.

ஆக பதிகம் - கoச.

திருக்கடிக்குளம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொண்மேனிவெண்ணூலினர்தோலினர்புலியுரியதளாடை
கொடிகொளேற்றினர்மணிகிணினெனவருகுரைகழல்சிலம்பார்க்கக்
கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தைத்தம்
முடிகள்சாய்த்தடிவீழ்தருமடியரைமுன்வினைமூடாவே. (க)

விண்களார்தொழும்விளக்கினைத்துளக்கிலாவிகிர்தனைவிழவாரு
மண்களார்துதித்தனபராயின்புறும்வள்ளலைமருவித்தங்
கண்களார்தரக்கண்டுநங்கடிக்குளத்துறைகருகற்பகத்தைப்
பண்களார்தரப்பாடுவார்கேடிலர்பழியிலர்புகழாமே. (உ)

பொங்குநற்கரியுரியதுபோர்ப்பதுபுலியதளழகுகந்
தங்கமங்கையைப்பாகமதுடையவாதழல்புரைதிருமேனிக்
கங்கைசேர்தருசடையினர்கடிக்குளத்துறைதருகற்பகத்தை
யெங்குமேத்தினின்றின்புறுமடியரையிடும்பைவந்தடையாவே. (ங)

நீர்கொணீள்சடைமுடியனைத்திலத்தொத்தினைநிகரில்லாப்
பார்கொள்பாரிடத்தவாதொழும்பவளத்தைப்பசுமபொனவிசும்பாருங்
கார்கொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தன்னைச்
சீர்கொள்செலவங்களேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. (ச)

சுரும்புசேர்சடைமுடியினன்மதியொடுதுன்னியதழலுகை
மரும்புதாதவிழ்ந்தலர்தனமலர்பலகொண்டடியவர்போற்றக்
கரும்புகார்மலிகொடிமிடைகடிக்குளத்துறைதருகற்பகத்தை
விரும்புவேட்கையோடுளமகிழ்ந்துரைப்பவர்விதியுடையவர்தாமே. (ஞ)

மாதிலங்கியபாகத்தன்மதியமொடலைபுனலழகுகம்
போதிலங்கியகொன்றையுமத்தமும்புரிசடைக்கழகாகக்
காதிலங்கியகுழையினன்கடிக்குளத்துறைதருகற்பகத்தின்
பாதங்கைதொழுதேத்தவல்லார்வினைபற்றறக்கெடுபன்றே. (சு)

குலவுகோலத்தகொடிகெடுமாடங்கள்குழாம்பலகுளிர்பொய்கை
யுலவுபுள்ளினமன்னுங்களாவிடுமபூவைசேருங்கூந்தற்
கலவைசேர்தருகண்ணிபன்கடிக்குளத்துறையுங்கற்பகத்தைச்சீர்
நிலவிநின்றுநின்றேத்துவார்மேல்வினைநிற்கநில்லாதானே. (எ)

மடித்தவாளரக்கன்னவன்மலைதன்மேன்மதியிலாமையிலோடி
யெடுத்தலுமுடிதோள்கரநெரிந்திறவிறையவன்விரலூன்றக்
கடுத்துவாயொடுகையெடுத்தலறிடக்கடிக்குளதனின்மேவிக்
கொடுத்தபேரருட்கூத்தனையேத்துவார்குணமுடையவர்தாமே. (அ)

நீரினார்கடற்றுயின்றவனயனெடுங்கழுடிமுடிகாணார்
பாரினார்விசும்புறப்பரந்தெழுந்ததோர்பவளத்தின்படியாகிக்
காரினார்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தின்றன்
சீரினார்கழலேத்தவல்லார்களைத்தீவினையடையாவே. (கூ)

குண்டர் தம்மொடுசாக்கியர்சமணருங்குறியினெறிநில்லா
மிண்டர் மிண்டுரைகேட்டவைமெய்யெனக்கொள்ளன்மின்விடமுண்ட
கண்டர் முண்டநன்மேனியர்கடிக்குளத்துறைதருமெம்மீசர்
தொண்டர்தொண்டரைத்தொழுதடிபணிமின்கடுநெறியெளிதாமே. (கo)

தனமலிபுகழ்தயங்குபூந்தராயவர்மன்னனற்சம்பந்தன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகண்மாலதாய்மகிழ்வோடுங்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
யினமலிந்திசைபாடவல்லார்கள்போயிறைவனேடுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கற்பகேசுவரர், தேவியார் - சவுந்தரநாயகியம்மை.

தீருக்கீழ்வேளூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவியசடையினர்விடையினர்மிளிர்தருபரவோடும்
பன்னுலாவியமறையொலிநாவினர்கறையணிகண்டத்தர்
பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளூர்
ருன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே. (க)

நீருலாவியசடையிடையரவொடுமதிசிரநிலமாலை
வாருலாவியவனமுலையவளொடுமணிசிலம்பவையார்க்க
வேருலாவியவிறைவனதுறைவிடமெழிறிகழ்கீழ்வேளூர்
சீருலாவியசிந்தைசெய்தணைபவர்பிணியொடுவினைபோமே. (உ)

வெண்ணிலாமிகுவிரிசடையரவொடுவெள்ளெருக்கலர்மத்தம்
பண்ணிலாவியபாடலோடாடலர்பயில்வுறுகீழ்வேளூர்ப்
பெண்ணிலாவியபாகனைப்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
யுண்ணிலாவிநின்றுள்கியசிந்தையாருலகினிலுள்ளாரே. (ங)

சேடுலாவியகங்கையைச்சடையிடைத்தொங்கவைத்தழகாக
நாடுலாவியபலிகொளுநாதனூர்நலமிகுதீழ்வேளூர்ப்
பீடுலாவியபெருமையர்பெருந்திருக்கோயிலுட்பிரியாது
நீடுலாவியநிமலனைப்பணிபவர்நிலமிசைப்பெறுவாரே. (ச)

தூன்றுவார்சடைச்சுடர்மதிநகுதலைவடமணிசிரமாலை
மன்றுலாவியமாதவரினிதியன்மணிமிகுகீழ்வேளூர்
கின்றுறீடியபெருந்திருக்கோயிலினிமலனைநினைவோடுஞ்
சென்றுலாவிநின்றேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. (ஞ)

கொத்துலாவியகுழறிகழ்சடையனைக்கூத்தனைமகிழ்ந்துள்கித்
தொத்துலாவியநூலணிமார்பினர்தொழுதெழுகீழ்வேளூர்ப்
பித்துலாவியபத்தர்கள்பேணியபெருந்திருக்கோயின்மன்னு
முத்துலாவியவித்தினையேத்துமின்முடியியவிடர்போமே. (சு)

பிறைநிலாவியசடையிடைப்பின்னலும்வன்னியுந்துன்னருங்
கறைநிலாவியகண்டமொண்டோளினார்காதல்செய்கீழ்வேளூர்
மறையுலாவியவந்தணர்மலிதருபெருந்திருக்கோயின்மன்னு
நிறையுலாவியவீசனேசத்தானினைபவர்வினைபோமே. (எ)

மலைநிலாவியமைந்தனம்மலையினையெடுத்தலுமரக்கன்ற
றலையெலாநெரிந்தலறிடவூன்றினனுறைதருகீழ்வேளூர்க்
கலைநிலாவியஞானனர்காதல்செய்பெருந்திருக்கோயிலுண்
ணிலைநிலாவியவீசனேசத்தானினையவல்வினைபோமே. (அ)

மஞ்சுலாவியகடற்கிடந்தவனெடுமலரவன்காண்பொண்ணுப்
பஞ்சுலாவியமெல்லடிப்பார்ப்பதிபாகனைப்பரிவோடுஞ்
செஞ்சொலார்பலர்பரவியதொல்புகழ்மல்கியகீழ்வேளூர்
நஞ்சுலாவியகண்டனைநணுகுமின்னடலேகணணுகாவே. (ஙு)

சீறுலாவியதலையினர்நிலையிலாவமணர்கள்சீவரத்தார்
வீறிலாதவெஞ்சொற்பலவிரும்பன்மின்சுரும்பமர்கீழ்வேளூர்
தோறுலாவியகொடியனையேதமில்பெருந்திருக்கோயின்மனனு
பேறுலாவியபெருமையன்றிருவடிபேணுமின்றவமாமே. (கo)

குருண்டவார்குழற்சடையுடைக்குழகனையழகமர்கீழ்வேளூர்த்
திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
யிருண்டமேதியினினமிகுவயன்மல்குபுகலிமன்சம்பந்தன்
றெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவதுதிடமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அக்ஷயலிங்கநாதர், தேவியார் - வனமுலைநாயகியம்மை.

திருவலஞ்சுழி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

என்னபுண்ணியஞ்செய்தனெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனேவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. (க)

விண்டொழிந்தனநம்முடைவல்வினைவிரிகடல்வருநஞ்ச
முண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியவிறைவனேயுலகத்தில்
வண்டுவார்குழன்மங்கையோர்பங்கனேவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாலே. (உ)

திருந்தலார்புரந்தீயெழச்செறுவனவிறலின்கணடியாரைப்
பரிந்துகாப்பனபத்தியில்வருவனமத்தமாம்பிணிநோய்க்கு
மருந்துமாவனமந்திரமாவனவலஞ்சுழியிடமாக
விருந்தகாயகனிமையவரேத்தியவினையடித்தலந்தானே. (ங)

கறைகொள்கண்டத்தர்காய்கதிர்நிறத்தினரறத்திறமுனிவர்க்கன்
றிறைவராவிடைநீழலிலிருந்துகந்தினிதருள்பெருமானூர்
மறைகளோதுவர்வருபுனல்வலஞ்சுழியிடமகிழ்ந்தருங்கானத்
தறைகழல்சிலம்பார்க்கின்றுடியவற்புதமறியோமே. (சு)

மண்ணர்நீர்விண்காற்றினராற்றலாமெரியுருவொருபாகம்
பெண்ணராணெனத்தெரிவரும்வடிவினர்பெருங்கடற்பவளம்போல்
வண்ணராகிலும்வலஞ்சுழிபிரிகிலார்பரிபவர்மனம்புக்க
வெண்ணராகிலுமெனைப்பலவியம்புவரினையடிதொழுவாரே. (டு)

ஒருவராலுவமிப்பதையரியதோர்மேனியர்மடமாத
ரிருவராதரிப்பார்பலபூதமும்பேய்களுமடையாள
மருவராததோர்வெண்டலைகைப்பிடித்தகந்தொறும்பலிக்கென்று
வருவதோலவர்வலஞ்சுழியடிகளேவரிவளைகவர்ந்தாரே. (சு)

குன்றியூர்குடமூக்கிடம்வலம்புரங்குலவியநெய்த்தான
மென்றிவ்வூர்களிலோமென்றுமியம்புவரிமையவர்பணிகேட்பா
ரன்றியூர்தமக்குள்ளனவறிகிலோம்வலஞ்சுழியரனூர்பாற்
சென்றவூர்தனிற்றலைப்படலாமென்றுசேயிழைதளர்வாமே. (எ)

குயிலினேர்மொழிக்கொடியிடைவெருவுறக்குலவரைபார்ப்பாய
கயிலையைப்பிடித்தெடுத்தவன்கதிர்முடிதோளிருபதுமூன்றி
மயிலினேரனசாயலோடமர்ந்தவன்வலஞ்சுழியெம்மானைப்
பயிலவல்லவர்பரகதிகாண்பவரல்லவாகாணுமே. (அ)

அழலதோம்பியவலர்மிசையண்ணலுமரவணைத்துயின்றனுங்
கழலுஞ்சென்னியுங்காண்பரிதாயவர்மாண்பமர்தடக்கையின்
மழலைவீணையாமகிழ்திருவலஞ்சுழிவலங்கொடுபாதத்தாற்
சுழலுமாந்தர்கடொல்வினையதனெடுதுன்பங்களேவாரே. (கூ)

அறிவிலாதவன்சமணர்கள்சாக்கியர்தவம்புரிந்தவஞ்செய்வார்
நெறியலாதனகூறுவர்மற்றவைநேறன்மின்மாறுநீர்
பறியுலாந்திரைக்காவிரிவலஞ்சுழிமருவியபெருமானைப்
பிறிவிலாதவர்பெறுகதிபேசிடிலளவறுப்பொண்ணுதே. (கo)

மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்மலிற்றியதமிழ்மாலை
யாதரித்திசைகற்றுவல்லார்சொலக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சித்தீசுரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

திருஞானசம்பந்தசுவாமிகள்அருளிச்செய்த

திருக்கேதீச்சரம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருதகுன்றமாமேருவிஞ்ணரவாவனலெரியம்பாற்
பொருதமூவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதியெங்காளுங்
கருதுகின்றவூர்களனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டங்
கருதிநின்றகேதீச்சரங்கைதொழக்கடவினையடையாவே. (க)

பாடல்வீணையர்பலபலசரிதையபொருதுகைத்தருநட்ட
மாடல்பேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்த
ரீடமாவதுவிருங்கடற்கையினிலெழிறிகழ்மாதோட்டங்
கேடிலாதகேதீச்சரந்தொழுதெழக்கெடுமிடர்வினைதானே. (உ)

பெண்ணெர்பாகத்தர்பிறைதவழ்சடையினரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர்பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையிலுழல்பவருயர்தருமாதோட்டத்
தண்ணனண்ணுகேதீச்சரமடைபவர்க்கருவினையடையாவே. (ங)

பொடிகொண்மேனியர்புலியதளையினர்விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலைவேலினர்நூலினர்மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம்பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடிபேணவல்லார்தம்மேன்மொய்த்தெழும்வினைபோமே. (சு)

நல்லராற்றவுஞானநன்குடையர்தம்மடைந்தவர்க்கருளிய
வல்லர்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லியில்புகழெந்தைகேதீச்சரமிராப்பகனினைந்தேத்தி
யல்லலாசறுத்தரனடியிணைதொழுமன்பராமடியாரே. (ஞ)

பேழைவார்சடைப்பெருந்திருமகடனைப்பொருந்தவைத்தொருபாக
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழின்மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தவீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே. (ரு)

[illegible]க்கறமுறைத்தருள்பபலலுலகினலுயிர்வாழ்க்கை
கண்டுகாதனர்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழின்மஞ்ஞைநடமிடுமாதோட்டந்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே. (எ)

தென்னிலங்கையர்குலபதிமலைகலிக்கெடுத்தவன்முடிதிண்டோ
ளுன்னலங்கெடவடர்த்தவற்கருள்செய்ததலிலவனூர்கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளுமபொருந்தியமாதோட்டத்
தன்னியன்பொடுமெடியவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே. (அ)

பூவுளானுமப்பிபொருகடல்வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிதன்னடியிணைகாண்கிலாவித்தகமென்னுகு

மாவும்பூகமுங்கதலியுநெருங்குமாதோட்டாண்ணகர்மன்னித்
தேவிதன்னெடுந்திருக்குகேதீச்சரத்திருந்தவெம்பெருமானே. (௬)

புத்தராய்ச்சிலபூனதுகிலுடையவர்புறனுரைச்சமணுத
மொத்தராகிநின்றுண்பவரியம்பியவேழைமைகேளேண்மின்
மத்தயானையைமறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதீச்சரமடைமின்னே. (௭0)

மாடெலாமணமுரைசெனக்கடலின்றொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி
நாடளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலை
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. (௭௧)

திருச்சிற்றம்பலம்.

ஈழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கேதீச்சுவரர், தேவியார்-கௌரிநாயகியம்மை.

திருவிற்குடிவீரட்டானம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர்வானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த
கடிகொள்கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையதேறுமம்மானமர்ந்தினிதுறைவிற்குடிவீரட்ட
மடியராகிநின்றேத்தவல்லார்தமையருவினையடையாவே. (௧)

களங்கொள்கொன்றையுங்கதிர்விரிமதியமுங்கடிகமழ்சடைக்கேற்றி
யுளங்கொள்பத்தர்பாலருளியபெருமையர்பொருகரியுரிபோர்த்து
விளங்குமேனியரெம்பெருமானுறைவிற்குடிவீரட்டம்
வளங்கொண்மாமலரானினைந்தேத்துவார்வருத்தமதறியாரே. (௨)

கரியகண்டத்தர்வெளியவெண்பொடியணிமார்பினர்வலங்கையி
லெரியர்புன்சடையிடம்பெறக்காட்டகத்தாடியவேடத்தர்
விரியுமாமலர்ப்பொய்கைசூழ்மதுமலிவிற்குடிவீரட்டம்
பிரிவிலாதவர்பெருந்தவத்தோனெப்பேணுவருலகத்தே. (௩)

பூதஞ்சேர்ந்திசைபாடலராடலர்பொலிதராதலமார்ந்த
பாதஞ்சேரிணைச்சிலம்பினர்கலம்பெறுகடலெழுவிடமுண்டார்
வேதமோதியநாவுடையானிடம்விற்குடிவீரட்டஞ்
சேருநெஞ்சினர்க்கல்லதுண்டோபிணிதீவினைதெமுமாறே. (௪)

கடியவேற்றினர்கனலனமேனியரனலெழுவூர்மூன்று
மிடியமால்வரைகால்வளைத்தான்றனதடியவர்மேலுள்ள
வெடியவல்வினைவீட்டுவிப்பானுறைவிற்குடிவீரட்டம்
படியதாகவேபரவுமின்பரவிநற்பற்றறுமருணோயே. (௫)

பெண்ணினார்கூறினர்பெருமையர்சிறுமதிக்கையினர்மெய்யார்ந்த
வண்ணலன்புசெய்வாரவர்க்கெளியவரரியவரல்லார்க்கு

விண்ணிலார்பொழின்மல்கியமலர்விரிவிற்குடிவீரட்ட
மெண்ணிலாவியசிந்தையினர்தமக்கிடர்கள்வந்தடையாவே. (சு-எ)

இடங்கொண்மால்கடலிலங்கையர்கோன்றனையிகலழிதரவூன்று
திடங்கொண்மால்வையாளுனையார்தருபொருளினிருளர்ந்த
விடங்கொண்மாமிடறுடையவனுறைதிருவிற்குடிவீரட்டந்
தொடங்குமாறிசைபாடிநின்றூர்தமைத்துன்பநோயடையாவே. (அ)

செங்கண்மாலொடுநான்முகன்றேடியுந்திருவடியறியாமை
யெங்குமாரியாகியவிறைவனீயறைபுனன்முடியார்ந்த
வெங்கண்மால்வரைக்கரியுரித்துகந்தவன்விற்குடிவீரட்டந்
தங்கையாற்றொழுதேத்தவல்லாரவர்தவமல்குகுணத்தாரே. (சு)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரிதுவராடையரவர்வார்த்தை
பண்டுமின்றுமோர்பொருளெனக்கருதன்மின்பரிவுறுவீர்கேண்மின்
விண்டமாமலர்ச்சடையவனிடமெனில்விற்குடிவீரட்டங்
கண்டுகொண்டடிகாதல்செய்வாரவர்கருத்தறுங்குணத்தாரே. (க0)

விலங்கலேசிலையிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத்
திலங்குசோதியையெம்பெருமானறனையெழிறிகழ்கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கான்மற்றதுவரமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டானேசுவரர், தேவியார்-மைவார்குழலியம்மை.

ஆபதிகம் - க0க.

நீநக்கோட்டீர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமார்தருகண்டனேநெற்றியோர்கண்ணனேயொற்றைவிடைச்
சூலமார்தருகையனேதுன்றுபைம்பொழில்கள்சூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டீர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலவீளகலத்திடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே. (க)

பங்கயம்மலர்ச்சீறடிப்பஞ்சுறுமெல்விரலரவல்குன்
மங்கைமார்பலர்மயில்குயில்கிளியெனமிழற்றியமொழியார்மென்
கொங்கையார்குழாங்குணலைசெய்கோட்டீர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சங்கையொன்றிலராகின்றசங்கரன்றிருவருள்பெறலெளிதாமே. (உ)

தம்புனற்கலமலர்கொடுதொழுதெழுமடியவர்தமக்கெல்லாஞ்
செம்பொனார்தருமெழிறிகழ்முலையவர்செல்வமல்கியநல்ல
கொம்பனார்தொழுதாடியகோட்டீர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ளம்பொனார்தருமுலகினிலமரரோடமர்ந்தினிதிருப்பாரே. (ங)

பலவுநீள்பொழிற்றீங்கனிதேன்பலாமாங்கனிபயில்வாய
கலவமஞ்ஞைகணிலவுசொற்கின்னைகளன்னஞ்சேர்ந்தழகாய
குலவுநீள்வயற்கயலுகள்கோட்டீர்ந்கொழுந்தேயென்றெழுவார்க
ணிலவுசெல்வத்தராகிநீணிலத்திடைநீடியபுகழாரே. (ச)

உருகுவாருள்ளத்தொண்சுடர்தனக்கென்றுமன்பராமடியார்கள்
பருகுமாரமுதெனநின்றுபரிவொடுபத்திசெய்தெத்திசையுங்
குருகுவாழ்வயல்சூழ்தருகோட்டீர்ந்கொழுந்தேயென்றெழுவார்க
ளருகுசேர்தருவினைகளுமகலும்போயவனருள்பெறலாமே. (டு)

துன்றுசீர்சடைத்தூமதிமத்தமுந்துன்னெருக்கார்வன்னி
பொன்றினுந்தலைகலனெடுபரிகலம்புலியுரியுடையாடை
கொன்றைபொன்னெனமலர்தருகோட்டீர்ந்கொழுந்தேயென்றெழுவாரை
யென்றுமேத்துவார்க்கிடரிலைகேடிலையேதம்வந்தடையாவே. (சு)

மாடமாளிகைகோபுரங்கூடங்கண்மணியரங்கணிசாலை
பாடுசூழ்மதிற்பைம்பொன்செய்மண்டபம்பரிசொடுபயில்வாய
கூடுபூம்பொழில்சூழ்தருகோட்டீர்ந்கொழுந்தேயென்றெழுவார்கள்
கேடுதான்றிலராகிநல்லுலகினில்கெழுவுவர்புகழாலே. (எ)

ஒளிகொள்வாளெயிற்றரக்கனவ்வுயர்வரையெடுத்தலுமுமையஞ்சிச்
சுளியவூன்றலுஞ்சோர்ந்திடவாளொடுகொளவற்கருள்செய்த
குளிர்கொள்பூம்பொழில்சூழ்தருகோட்டீர்ந்கொழுந்தினைத்தொழுவார்க
டளிர்கொண்டாமனைப்பாதங்களருள்பெறுந்தவமுடையவர்தாமே. (அ)

பாடியாடுமெய்ப்பத்தர்கட்கருள்செயுமுத்தினைப்பவளத்வதத்
தேடிமாலயன்காணவொண்ணுதவத்திருவினைத்தெரிவைமார்
கூடியாடவர்கைதொழுகோட்டீர்ந்கொழுந்தேயென்றெழுவார்க
ணீடுசெல்வத்தராகியிவ்வுலகினினிகழ்தருபுகழாரே. (கூ)

கோணல்வெண்பிறைச்சடையனைக்கோட்டீர்ந்கொழுந்தினைச்செழுந்திரள்
பூணல்செய்தடிபோற்றுமின்பொய்யிலாமெய்யனல்லருளென்றுங் [ப்
காணலொன்றிலாக்காரமண்டேரர்குண்டரக்கர்சொற்கருதாதே
பேணல்செய்தரனைத்தொழுமடியவர்பெருமையைப்பெறுவாரே. (கo)

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாருங்
கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டீர்ந்கொழுந்தினைச்செழும்பவளம்
வந்துலாவியகாழியுண்ஞானசம்பந்தன்வாய்ந்துரைசெய்த
சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர்தாங்குவர்புகழாலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கொழுந்தீசுவரர், தேவியார்-மதுரவசனியம்மை.

திருமாந்துறைப் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செம்பொனார்தருவேங்கையுமாழலுஞ்செருந்திசெண்பகமானைக்
கொம்புமாரமுமாதவிசுரபுனைகுருந்தலர்போந்துந்தி
யம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற
வெம்பிரானிமையோர்தொழுபைங்கழலேத்துதல்செய்வோமே. (க)

விளவுதேனெடுசாதியின்பலங்களும்வேய்மணிநிரந்துந்தி
யளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானத்
துளவமான்மகனிங்கணைக்காமனைச்சுடவிழித்தவனெற்றி
யளகவாணுதலரிவைதன்பங்கனையன்றிமற்றறியோமே. (உ)

கோடுதேன்சொரிகுன்றிடைப்பூகமுங்கூந்தலின்குலைவாரி
யோடுநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைநம்பன்
வாடினார்தலையிற்பலிகொள்பவன்வானவர்மகிழ்ந்தேத்துங்
கேடிலாமணியைத்தொழலல்லதுகெழுமுதலறியோமே. (ங)

இலவநாழலுமீஞ்சொடுசுரபுன்னையிளமருதிலவங்கங்
கலவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகண்ட
னலிகொள்வார்புனலம்புலிமத்தமுமாடரவுடன்வைத்த
மலையைவானவராகொழுந்தினையல்லதுவணங்குதலறியோமே. (ச)

கோங்குசெண்பகங்குருந்தொடுபொதிருரவிடமலருந்தி
யோங்குநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானப்
பாங்கினலிடுந்தூபமுந்தீபமும்பாட்டுமிம்மலர்சேர்த்தித்
தாங்குவாரவரானமங்கணைவினிற்றலைப்படுந்தவத்தோரே. (ஞ)

பெருகுசந்தனங்காரகிற்பீலியும்பெருமரமிழிந்துந்திப்
பொருதுகாவிரிவடகரைமாந்துறைப்புனிதனெம்பெருமானைப்
பரிவினலிருந்திரவியுமதியமும்பாமன்னர்பணிந்தேத்த
மருதவானவர்வழிபடுமலரடிவணங்குதல்செய்வோமே. (சு)

நறவமல்லிகைமுல்லையுமெளவலுநாண்மலரவைவாரி
யிறவில்வந்தெறிகாவிரிவடகரைமாந்துறையிறையன்றங்
கறவனகிபகூற்றினைச்சாடியவந்தணன்வனைவில்லா
னிறையவாங்கிவலித்தெயிலெய்தவலிகைகழல்பணிவோமே. (எ)

மந்தமாரப்பொழின்மாங்கனிமாந்திடமந்திகண்மாணிக்க
முந்திநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானை
நிந்தியாவெடுத்தார்த்தவல்லரக்கனைநெரித்திடுவிரலானைச்
சிந்தியாமநத்தாரவர்சேர்வதுதீநெறியதுதானே. (அ)

நீலமாமணிநித்திலத்தொத்தொடுநிமைமலர்நிரந்துந்தி
யாலிபாவருகாவிரிவடகரைமாந்துறையமர்வானை
மாலுநான்முகன்றேடியுங்காண்கிலாமலரடியிணைநாளும்
கோலமேத்தினின்றுமின்பாடுமின்கூற்றுவனலியானே. (கூ)

கின்றுணுஞ்சமண்டேரருமிலையிலர்நெடுங்கழைநறவேல
நன்றுமாங்கனிகதலியின்பலங்களுகாணலினுரைவாரி
யொன்றிநேர்தருகாவிரிவடகரைமாந்துறையொருகால
மன்றியுள்ளழிந்தெழும்பரிசழகிதுவதுவவர்க்கிடமாமே. (கo)

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவ
னரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பரவிநின்தொழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஐராவணேசுவரர், தேவியார்-அழகாயமர்ந்தநாயகியம்மை.

திருவாய்மூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளனெனவுமைபாடத்தாளமிடவோர்தழல்வீசிக்
கிளரிளமணியரவையார்த்தாடும்வேடக்கிறிமையார்
விளரிளமுலையவர்க்கருணல்கிவெண்ணீறணிந்தேர்செல்நெறிமேல்
வளரிளமதியமொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (க)

வெந்தழல்வடிவினர்பொடிப்பூசிவிரிதருகோவணவுடைமேலோர்
பந்தஞ்செய்தரவசைத்தாலிபாடிப்பலபலகடைதொறும்பலிதேர்வார்
சிந்தனைபுகுந்தெனக்கருணல்கிச்செஞ்சுடர்வண்ணர்தம்மடிபரவ
வந்தனைபலசெய்வினவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (உ)

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுமுணராதஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகிலுடனுவா
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (ங)

எரிகிளர்மதியமொடெழினுதன்மேலெரிபொதியரவினெடாறுமூழ்க
விரிகிளர்சடையினர்விடையேறிவெருவவந்திடர்செய்தவிகிர்தனர்
பொரிகிளர்பொடியணிதிருவகலம்பொன்செய்தவாய்மையர்பொன்மிளிரும்
வரியரவரைக்கசைத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (ச)

அஞ்சனமணிவனமெழினிறமாவகமிடறணிகொளவுடறிமில
ரஞ்சினையமரர்களுதமெனநண்ணியாறுநினதலுமைநடுங்க
வெஞ்சினமால்களியானையின்றோல்வெருவுறப்போர்த்ததனிறமுமஃதே
வஞ்சனைவடிவினெடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (ஞ)

அல்லியமலர்புல்குவிரிகுழலார்கழலிணையடிநிழலவைபரவ
வெல்லியம்போதுகொண்டெரியேந்தியெழிலொடுதாழிலவையிசையவல
சொல்லியவருமறையினைபாடிச்சூடினமதியினர்தோடுபெய்து [லார்
வல்லியந்தோலுடுத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (ஈ)

கடிபடுகொன்றைநன்மலர்திகழ்கண்ணியர்விண்ணவர்கனமணிசேர்
முடிபில்குபிறையவர்மறுகினல்லார்முறைமுறைபலியெயமுறுவல்செய்வார்
பொடியணிவடிவொடுதிருவகலம்பொன்னெனமிளிர்வதோரரவினெடும்
வடிதனம்முழவினெடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (எ)

கட்டிணைபுதுமலர்க்கமழ்கொன்றைக்கண்ணியர்வீணையர்தாமமஃதே
எட்டிணைசாந்தமோடுமைதுணையாவிறைவனுருறைவதோரிடம்வினவிற்
பட்டிணையகலல்குல்விரிகுழார்பாவையர்பலியெதிர்கொணர்ந்துபெய்ய
வட்டணையாடலொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (அ)

ஏனமருப்பினெடிழிலாமையிசையப்பூண்டோரேறதிக்
கானமதிடமாவுறைகின்றகள்வர்கனவிற்றுயர்செய்து
தேனுணமலர்களுந்திவிம்மித்திகழ்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வானநன்மதியினெடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (கூ)

சூடல்வெண்பிறையினர்சுடர்முடியர்சுண்ணவெண்ணீற்றினர்சுடர்மழுவர்[க்
பாடல்வண்டிசைமுரல்கொன்றையந்தார்பாம்பொடுநூலவைபசைந்திலங்க
கோடனன்முகிழ்விரல்கூப்பிகல்லார்குறையுறுபலியெதிர்கொணர்ந்துபெய்ய
வாடல்வெண்டலைபிடித்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (கo)

திங்களோடருவனைப்பொழிற்சோலைத்தேனலங்கானலந்திருவாய்மூ
ரங்கமோடருமறையொலிபாடலழனிறவண்ணர்தம்மடிபரவி
நங்கடம்வினைகெடமொழியவல்லஞானசம்பந்தன்றமிழ்மாலை
தங்கியமனத்தினற்றெழுதெழுவார்தவநெறியுலகுக்கோர்தவநெறியே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வாய்மூரீசுவரர், தேவியார் - பாலினுநன்மொழியம்மை.

நீருடானை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந்தேறதேறிய, வாதியானுறையாடானைப்
போதினற்புனைந்தேத்தவல்லார்தமை, வாதியாவினைமாயுமே. (க)

வாடல்வெண்டலையங்கையேந்தினின், றுடலானுறையாடானைத்
தோடலாமலர்தூவிக்கைதொழ, வீடுறுங்கள்வினைகளே. (உ)

மங்கைகூறினன்மான்மறியுடை, யங்கையானுறையாடானைத்
தங்கையாற்றெழுதேத்தவல்லவர், மங்குநோய்பிணிமாயுமே. (ங)

சுண்ணநீறணிமார்பிற்றோல்புனை, யண்ணலானுறையாடானை
வண்ணமாமலர்தூவிக்கைதொழ, வெண்ணுவாரிடரோகுமே. (ச)

கொய்யணிம்மலர்க்கொன்றைசூடிய, வையன்மேவியவாடானை
கையணிமலரால்வணங்கிட, வெய்யவல்வினைவீடுமே. (ஞ)

வானிளம்மதிமல்குவார்சடை, யானஞ்சாடலானுடானை
தேனணிம்மலர்சேர்த்தமுன்செய்த, ஞானமுள்ளவொழியுமே. (சு)

துலங்குவெண்மழுவேந்திச்சூழ்சடை, யிலங்கலானுறையாடானை
நலங்கொண்மாமலர்தூவிநாடொறும், வலங்கொள்வார்வினைமாயுமே. (எ)

வெந்தநீறணிமார்பிற்றோல்புனை, யந்தமில்லவனுடானை
கந்தமாமலர்தூவிக்கைதொழுஞ், சிந்தையார்வினைதேயுமே. (அ)

மறைவல்லாரொடுவானவர்தொழு, தறையுந்தண்புனலாடானை
யுறையுமீசனையேத்தத்தீவினை, பறையுநல்வினைபற்றுமே. (கூ)

மாயனும்மலரானுங்கைதொழ, வாயவர்தணைடானை
தூயமாமலர்தூவிக்கைதொழத், தீயவல்வினைதீருமே. (கo)

வீடினர்மலிவெங்கடத்துறின், றுடலானுறையாடானை
காடிஞானசம்பந்தன்செந்தமிழ், பாடநோய்பிணிபாறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆதிரத்தினேசுவரர், தேவியார் - அம்பாயிரவல்லியம்மை.

சீகாழி - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடியிலங்குத்திருமேனியாளர்புலியதளின
ரடியிலங்குங்கழலார்க்கவாடும்மடிகள்ளிட
மிடியிலங்குங்குரலோதமல்கவ்வெறிவார்திரைக்
கடியிலங்கும்புனன்முத்தலைக்குங்கடற்காழியே. (க)

மயலிலங்குத்துயர்மாசறுப்பானருந்தொண்டர்க
ளயலிலங்கப்பணிசெய்யநின்றவடிகள்ளிடம்
புயலிலங்குங்கொடையாளரேத்தத்தொலிபொலியவே
கயலிலங்கும்வயற்கழனிசூழுங்கடற்காழியே. (உ)

கூர்விலங்குத்திருசூலர்வேலர்குழைக்காதினர்
மார்விலங்கும்புரிநூலுகந்தமணவாளனூர்
சேர்விலங்கல்லனதிரைகண்மோதங்கெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல்லெனக்கலந்தொழுகுங்கடற்காழியே. (ங)

குற்றமில்லார்குறைபாடுசெய்வார்பழிதீர்பவர்
பெற்றநல்லகொடிமுன்னுயர்த்தபெருமானிட
மற்றுநல்லார்மறத்தாரினியார்மறைகலியெலாங்
கற்றுநல்லார்பிழைதெரிந்தளிக்குங்கடற்காழியே. (ச)

விருதிலங்குஞ்சரிதைத்தொழிலார்விரிசடையினு
ளொருதிலங்கப்பொலிந்தேறுமெந்தைக்கிடமாவது
பெரிதிலங்கும்மறைகிளைஞரோதப்பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக்குலந்தெரித்துதீர்க்குங்கடற்காழியே. (ஞ)

தோடிலங்குங்குழைக்காதர்வேதர்சுரும்பார்மலர்ப்
பீடிலங்குஞ்சடைப்பெருமையாளர்க்கிடமாவது

கோடிலங்கும்பெரும்பொழில்கண்மல்கப்பெருஞ்செந்நெலின்
காடிலங்கும்வயல்பயிலுமந்தண்கடற்காழியே. (சு)

மலையிலங்குஞ்சிலையாகவேகம்மதின்மூன்றெரித்
தலையிலங்கும்புனற்கங்கைவைத்தவடிகட்கிட
மிலையிலங்கும்மலர்க்கைதைகண்டல்வெறிவிரவலாற்
கலையிலங்குங்கணத்தினம்பொலியுங்கடற்காழியே. (எ)

முழுதிலங்கும்பெரும்பாருள்வாழும்முரணிலங்கைக்கோ
னழுதிரங்கச்சிரமூரமொடுங்கவ்வடர்த்தாங்கவன்
றெழுதிரங்கத்துயர்தீர்த்துகந்தார்க்கிடமாவது
கழுதும்புள்ளுமதிற்புறமதாருங்கடற்காழியே. (அ)

பூவினனும்விரிபோதின்மல்குந்திருமகடனே
மேவினனும்வியற்கேத்தநீண்டாரழலாய்நிறைந்
தோவியங்கேயவர்க்கருள்புரிந்தவ்வொருவர்க்கிடங்
காவியங்கண்மடமங்கையர்சேர்கடற்காழியே. (கூ)

உடைகவின்றுருடைவிட்டுழல்வாரிருந்தவத்தார்
முடைகவின்றம்மொழியொழித்துகந்தம்முதல்வன்னிட
மடைகவின்றபுனற்கெண்டைபாயும்வயன்மலிதரக்
கடைகவின்றனெடுமாடமோங்குங்கடற்காழியே. (கo)

கருகுமுண்கீர்திரையோதமாருங்கடற்காழியு
ரகமாருஞ்சடையடிகடம்பாலுணர்ந்துறுதலாற்
பெருகமல்கும்புகழ்பேணுந்தொண்டர்க்கிசையார்தமிழ்
விரகன்சொன்னவிவைபாடியாடக்கெடும்வினைகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நீர்க்கேதாரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சுங்களிறும்மடக்கிச்சுரும்பார்மல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யும்மிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவ்வரி
கெண்டைபாயச்சுனீலமொட்டலருங்கேதாரமே. (க)

பாதம்விண்ணோர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும்விரித்தார்க்கிடம்
தாதுவிண்டம்மதுவுண்டுமிண்டிவ்வருவண்டினங்
கீதம்பாடம்மடமந்திகேட்கெழுங்கேதாரமே. (உ)

மூந்திவந்துபுரோதாயமூழ்கிம்முனிகள்பல
ரெந்தைபெம்மானெனநின்றிறைஞ்சும்மிடமென்பரான்
மந்திபாயச்சரோலச்சொரிந்தும்மூரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ்சடையெந்தைகேதாரமே. (ங)

உள்ளமிக்கார்குதிரைம்முகத்தாரொருகாலர்க
ளெள்கலில்லாவிமையோர்கள்சேரும்மிடமென்பராற்
பிள்ளைதுள்ளிக்கிள்ளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்ப்பெய்யுங்கேதாரமே. (சு)

ஊழிபூழியுணர்வார்கள்வேதத்தினெண்பொருள்களால்
வாழியெந்தையெனவந்திறைஞ்சும்மிடமென்பரான்
மேழிதாங்கியுழுவார்கள்போலவ்விரைதேரிய
கேழல்பூழ்திதிளைக்கமணிசிந்துங்கேதாரமே. (டு)

நீறுபூசினிலத்துண்டுநீர்மூழ்கிநீள்வரைதன்மேற்
றேறுசிந்தையுடையார்கள்சேரும்மிடமென்பரா
லேறிமாவின்கனியும்பலாவின்னிருஞ்சுளைகளுங்
கீறிநாளுமுசுக்கிளையோடுண்டுகளுங்கேதாரமே. (சு)

மடந்தைபாகத்தடக்கிம்மறையோதிவானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல்வினைதீர்க்கநின்றூர்க்கிடமென்பரா
லுடைந்தகாற்றுக்குயர்வேங்கைபூத்துதிரக்கல்லறைகண்மேற்
கிடந்தவேங்கைசினமாமுகஞ்செய்யுங்கேதாரமே. (எ)

அரவமுந்நீரணியிலங்கைக்கோனையருவரைதனல்
வெருவவூன்றிவிரலாலடர்த்தார்க்கிடமென்பராற்
குரவங்கோங்கங்குளிர்பிண்டிநாழல்சுரபுன்னைமேற்
கிரமமாகவரிவண்டுபண்செய்யுங்கேதாரமே. (அ)

ஆழ்ந்துகாணரியர்த்தெய்தகிலலாரலமந்தவர்
தாழ்ந்துதந்தம்முடிசாயநின்றூர்க்கிடமென்பரால்
வீழ்ந்துசெற்றுநிழற்கிறங்கும்வேழத்தின்வெண்மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே. (கூ)

கடுக்கடின்றுகழிமீன்கவர்வார்கண்மாசுடம்பின
ரிடுக்கணுய்ப்பாரவரொய்தவொண்ணுவிடமென்பரா
லடுக்கல்கின்றவ்வறவுரைகள்கேட்டாங்கவாவினைகளைக்
கெடுக்கல்கின்றபெருமானுறைகின்றகேதாரமே. (கo)

வாய்ந்தசெந்நெல்வினைகழனிமல்கும்வயற்காழியா
னேய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
யாய்ந்துசொன்னவருந்தமிழ்கள்பத்தும்மிசைவலலவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது.

சுவாமிபெயர் - கேதாரேசுவரர், தேவியார் - கௌரியம்மை.

ஆக பதிகம் - ககடு.

திருப்புகலூர் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முகுழலினீயராடவ்வெறிவிரவுநீர்ப்
பொங்குசெங்கட்கருங்கயல்கள்பாயும்புகலூர்தனுட்
டிங்கள்சூடித்திரிபுரமோரம்பாலெரியூட்டிய
வெங்கள்பெம்மானடிபரவநாளும்மிடர்கழியுமே. (க)

வாழ்ந்தநாளுமினிவாழுநாளும்மிவையறிதிரோல்
வீழ்ந்தநாளெம்பெருமானேயெத்தாவிதியில்லிகாள்
போழ்ந்ததிங்கட்புரிசடையினன்றன்புகலூரையே
சூழ்ந்தவுள்ளமுடையீர்களுங்கடியர்திருமே. (உ)

மடையினெய்தல்கருங்குவளீசெய்யமலர்த்தாமரை
புடைகொள்செங்கெல்வீளைகழனிமல்கும்புகலூர்தனுட்
டொடைகொள்கொன்றைபுனைந்தானோடாகமதிசூடிய
யடையவல்லாரமருலகமாளப்பெறுவார்களே. (ங)

பூவுநீரும்பலியுஞ்சுமந்துபுகலூரையே
நாவினாலநவின்றேத்தலோவாச்செவித்துளைகளால்
யாவுங்கேளாரவன்பெருமையல்லாலடியாகடா
மேவுநாளும்முணர்வொழிந்தநாளென்றுள்ளங்கொள்ளவே. (ச)

அன்னங்கன்னிப்பெடைபுல்கியொல்கியணிகடையவாய்ப்
பொன்னங்காஞ்சிம்மலர்ச்சின்னமாலும்புகலூர்தனுண்
முன்னம்மூன்றும்மதிலெரித்தமூர்த்திதிறங்கருதுங்கா
லின்னதென்னப்பெரிதரியதேத்தச்சிறிதெளியரே. (ஞ)

குலவராகக்குலமிலருமாகக்குணம்புகழுங்கா
லுலகினல்லகதிபெறுவரோனுமலரூறுதேன்
புலவமெல்லாம்வெறிகமழுமந்தண்புகலூர்தனு
ணிலவமல்குசடையடிகள்பாதந்நினைவார்களே. (சு)

ஆணும்பெண்ணுமெனநிற்பரோனும்மரவாரமாப்
பூணுமேனும்புகலூர்தனக்கோர்பொருளாயினு
நாணுமூராரிடுபிச்சையேற்றுண்டுடைகோவணம்
பேணுமேனும்பிரானென்பராலெம்பெருமானையே. (எ)

உய்யவேண்டிலெழுபோதநெஞ்சேயுயரிலங்கைக்கோன்
கைகளொல்லக்கருவரையெடுத்தானையோர்விரலினூற்
செய்கைதோன்றச்சிதைத்தருளவல்லசிவன்மேயபூம்
பொய்கைசூழ்ந்தபுகலூர்புகழப்பொருளாகுமே. (அ)

நேமிபானுமுகநான்குடைப்நெறியண்ணலு
மாமிதன்றுதகைத்தந்தபோயாரழலாயினன்

சாமிதாதைசரணுகுமென்றுதலைசாய்மினே
பூமியெல்லாம்புகழ்செல்வமல்கும்புகலூரையே. (கூ)

வேர்த்தமெய்யருருவத்துடைவிட்டுழல்வார்களும்
போர்த்தகூறைப்பிடாதிநீழலாரும்புகலூர்தனுட்
டூர்த்தமெல்லாஞ்சடைக்கரந்தேதவன்றிறங்கருதுங்கா
லோர்த்துமெய்யென்றுணராதுபாதந்தொழுதுய்மினே. (கo)

புந்தியார்ந்தபெரியோர்களேத்தும்புகலூர்தனுள்
வெந்தசாம்பற்பொடிப்பூசவல்லவிடையூர்தியை
யந்தமில்லாவனலாடலானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடியாடக்கெடும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூரைக்காரோணம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றமெடுவெண்ணிலா
வேனற்பூத்தமமாரங்கோதையோடுமவிராவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடவூரைக்காரோணமே. (க)

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டினு
னிலங்குகண்டத்தெழிலாரைபூண்டாற்கிடமாவது
மலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடற்
கலங்களோதங்கழிசூழ்கடவூரைக்காரோணமே. (உ)

வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழின்
முறிகொணழன்மூடப்புன்னைமுல்லைமுகைவெண்மலர்
நறைகொள்கொன்றைநயந்தேதங்குநாதற்கிடமாவது
கறைகளோதங்கழிசூழ்கடவூரைக்காரோணமே. (ங)

வண்டுபாடல்வளர்கொன்றைமாலைமதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குசுருட்குஞ்சியு
ளுண்டுபோலுமெனவைத்துகந்தவொருவற்கிடங்
கண்டல்வேலிகழிசூழ்கடவூரைக்காரோணமே. (ச)

வார்கொள்கோலமுலைமங்கைகல்லாரமிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைதெடுவெண்டிங்கணிகழ்வெய்தவே
போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதங்கழிசூழ்கடவூரைக்காரோணமே. (ஞ)

விடையதேறிவ்விடவரவசைத்தவிகிர்தரவர்
படைகொள்பூதம்பலபாடவாடும்பரமாயவ
ருடைகொள்வெங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடவூரைக்காரோணமே. (ரு)

பொய்துவாழ்வார்மனம்பாழ்படுக்கும்மலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையா
லெய்தவாழ்வாரெழினக்கரெம்மாற்கிடமாவது
கைதல்வேலிகழிசூழ்கடனுகைக்காரோணமே. (எ)

பத்திரட்டிதிரடோளுடையான்முடிபத்திற
வத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
மைத்திரட்டிவ்வருவெண்டிரைமல்கியவார்கடல்
கைத்திரட்டுங்கழிசூழ்கடனுகைக்காரோணமே. (அ)

கல்லதோதிலுறைவானுமாலுந்நடுக்கத்தினு
லல்லராவனெனின்றபெம்மாற்கிடமாவது
மல்லலோங்கிவ்வருவெண்டிரைமல்கியமால்கடல்
கல்லலோதங்கழிசூழ்கடனுகைக்காரோணமே. (கூ)

உயர்ந்தபோதின்னுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பியர்ந்தமண்டையிடுபிண்டமாவுண்டுழல்வார்களுந்
நயந்துகாணுவகைகின்றநாதர்க்கிடமாவது
கபங்களோதங்கழிசூழ்கடனுகைக்காரோணமே. (கo)

மல்குதண்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியா
னல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
வலலவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவாக்கும்மிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நீநெடுநம்பைமாகாளம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

மண்டுகங்கைசடையிற்கரந்தும்மதிசூடிமான்
கொண்டகைபாற்புரமூன்றெரித்தகுழகன்னிட
மெண்டிசைபும்புகழ்போய்விளங்குமிரும்பைதனுள்
வண்டுதேம்முரல்பொழில்சுலாகின்றமாகாளமே. (உ)

வேதவித்தாயவெள்ளைநீறுபூசிவினையாயின
கோதுவித்தாயநீறெழக்கொடிமாமதிலாயின
வேதவித்தாயினதீர்க்கும்மிடம்மிரும்பைதனுண்
மாதவத்தோர்மறையோர்தொழுகின்றமாகாளமே. (உ)

வெந்தநீறுமெலும்பும்மணிந்தவ்விடையூர்தியா
னெந்தைபெம்மானிடமெழில்கொள்சேலுயிரும்பைதனுட்
கந்தமாயபலவின்கனிகள்கமழும்பொழின்
மந்தியேறிக்கொணர்ந்துண்டுகள்கின்றமாகாளமே. (ரு)

நஞ்சுகண்டத்தடக்கிநடுங்கும்மலையான்மக
ளஞ்சவேழம்முரித்தபெருமானமரும்மிட

மெஞ்சலில்லாப்புகழ்போல்விளங்குமிருமைபதனுண்
மஞ்சிலோங்கும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (சு)

பூசுமாசில்பொடியான்விடையான்பொருப்பன்மகள்
கூசவானையுரித்தபெருமான்குறைவெண்மதி
யீசனெங்கள்ளிறையனனிடம்போலிரும்பைதனுண்
மாசிலோர்கண்மலர்கொண்டணிகின்றமாகாளமே. (கூ)

குறைவதாயகுளிர்திங்கள்சூடக்குனித்தான்விரி
பறைவதாக்கும்பரமன்பகவன்பரந்தசடை
யிறைவனெங்கள்பெருமானிடம்போலிரும்பைதனுண்
மறைகள்வல்லார்வணங்கித்தொழுகின்றமாகாளமே. (சூ)

பொங்குசெங்கண்ணரவும்மதியும்புரிபுன்சடைத்
தங்கவைத்தபெருமானெனநின்றவர்தாழ்விட
மெங்குமிச்சையமர்ந்தானிடம்போலிரும்பைதனுண்
மங்குலுயும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (எ)

கட்டத்தோடுகரியாடுகானத்தரியாடுவா
னட்டமூர்த்தியழல்போலுருவன்னழகாகவே
யிட்டமாகவிருக்குமிடம்போலிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்துபணிவார்பிணிதீர்க்குமாகாளமே. (அ)

அட்டகாலன்றனவவ்வினைவ்வரக்கன்முடி
யெட்டுமற்றுமிருபத்திரண்டும்மிறவூன்றினை
னிட்டமாகவிருப்பானவன்போலிரும்பைதனுண்
மட்டுவார்ந்தபொழில்சூழ்ந்தெழிலாருமாகாளமே. (கூ)

அரவமார்த்தன்றனலங்கையேந்தியடியும்முடி
பிரமன்மாலும்மறியாமைநின்றபெரியோனிடங்
குரவமாரும்பொழிற்குயில்கள்சேருமிரும்பைதனுண்
மருவிவானோமறையோர்தொழுகின்றமாகாளமே. (கo)

எத்தையெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுண்
மத்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தி
லத்தமில்லாவனலாடுவானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடவல்லார்பழிபோகுமே. (கக)

தொண்டைநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மாகாளேசுவரர், தேவியார் - குயிலம்மை.

திருத்தில்லைத்திருப்பதி - மதிழத்தம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகள்பூசிப்பலதொண்டர்கூடிப்புலர்காலையே
யடிகளாரத்தொழுதேத்தநின்றவழகன்னிடங்
கொடிகளோங்கிக்குலவும்விழவார்தில்லைத்திருப்பதி
வடிகொள்சோலம்மலிமணங்கமழுமதிறுத்தமே. (க)

தொண்டர்மிண்டிப்புகைவிம்முசாந்துங்கமழ்துணையலுங்
கொண்டுகண்டார்குறிப்புணரின்றகுழகன்னிடங்
தெண்டிரைப்பூம்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
வண்டுகொண்டுற்றிசைபயிலுஞ்சோலையதிமுத்தமே. (உ)

அடலுளேறுயர்த்துகந்தானடியாரமார்தொழக்
கடலுணஞ்சமுதாகவுண்டகடவுள்னிடங்
திடலடங்கச்செழுங்கழனிசூழ்ந்ததிலதைப்பதி
மடலுள்வாழைக்கனிதின்பிலிற்றுமதிமுத்தமே. (ஙு)

கங்கைதிங்கள்வன்னிதுன்னெருக்கிணைடுகூவிளம்
வெங்கணாகம்விரிசடையில்வைத்தவிகிர்தன்னிடஞ்
செங்கயல்பாய்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
மங்குறையும்பொழில்சூழ்ந்தழகார்மதிமுத்தமே. (ச)

புரவியேழும்மணிபூண்டியங்குங்கொடித்தேரினன்
பரவிநின்றுவழிபாடுசெய்யும்பரமேட்டியூர்
விரவிநாழலவிரிகோங்குவேங்கைசுரபுன்னைகண்
மரவமல்வனமலருந்திலதைமமதிமுத்தமே. (ஞ)

விண்ணாவெதம்விரித்தோதவல்லாரொருபாகமும்
பெண்ணொணணுரையில்செற்றுகந்தபெருமானிடங்
தெண்ணிலாவின்னெளிதீண்டுசோலைத்திலதைப்பதி
மண்ணுளார்வந்தருள்பேணிநின்றமதிமுத்தமே. (சு)

ஆறுசூடியடையார்புரஞ்செற்றவர்பொற்றொடி
கூறுசேருமுருவர்க்கிடமாவதுகூறுங்காற்
றேறலாரும்பொழில்சூழ்ந்தழகார்திலதைப்பதி
மாறிலாவண்புனலரிசில்சூழ்ந்தமதிமுத்தமே. (எ)

கடித்துவந்தகனன்மேனியினன்கருவரைதனை
யெடுத்தவன்றன்முடிதோளடர்த்தார்க்கிடமாவது
புடைக்கொள்பூகத்தினம்பாளைபுல்கும்மதுப்பாயவாய்
மடுத்துமந்தியுகளுந்திலதைமதிமுத்தமே. (அ)

பாடங்கொணைகத்தலைபானும்பைந்தாமரையின்மிசை
இடங்கொணல்வேதனுமேத்தநின்றவிறைவன்னிடங்
திடங்கொணவின்னிசைதொண்டர்பாடுந்திலதைப்பதி
மடங்கல்வருவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (கூ)

புத்தர்தேரர்பொறியில்சமணர்களும்வீமிலாப்
பித்தர்சொன்னம்மொழிகேட்கிலாதபெருமானிடம்
பத்தர்சித்தர்பணிவுற்றிறைஞ்சுந்திலதைப்பதி
மத்தயானைவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (கo)

மந்தமாரும்பொழில்சூழ்திலதைமதிமுத்தமேற்
கந்தமாருங்கடற்காழியுளான்றமிழ்ஞானசம்
பந்தன்மாலைபழிதீரநின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வாசிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மதிமுத்தநாதேசுவரர், தேவியார் - பொற்கொடியம்மை.

திருநாகேச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தழைகொள்சந்தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நிழலிலவானேர்தொழநல்குசீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவலலார்க்கழகாகுமே. (க)

பெண்ணேர்பாகம்மடையச்சடையிற்புனல்பேணிய
வண்ணமானபெருமான்மருவும்மிடமண்ணுளார்
நண்ணினாளுநதொழுதேத்திநனகெய்துநாகேச்சரங்
கண்ணினற்காணவலலாரவாகண்ணுடையாகளே. (உ)

குறவர்கொலைப்புனங்கொள்ளைகொண்டும்மணிகுலவுநீர்
பறவையாலப்பறக்கும்பழங்காவிரித்தென்கரை
நறவைநாறும்பொழிலசூழ்நதழகாயநாகேச்சரத்
திறைவாபாதநதொழுதேத்தவல்லாக்கிடரிலலையே. (ங)

கூசநோக்காதுமுன்சொன்னபொய்கொடுவினைகுற்றமுந்
நாசமாக்குமமநதார்கள்வநதாடுநாகேச்சரந்
தேசமாக்குந்திருக்கோயிலாக்கொணடசெலவன்கழ
னேசமாக்குந்திறத்தாரறத்தாநெறிபபாலரே. (ச)

வம்புநாறும்மலருமமலைபபணடமுங்கொணடுநீர
பைம்பொன்வாரிக்கொழிக்குமபழநகாவிரித்தெனகரை
நமபாநாளுமமாகின்றநாகேச்சரநண்ணுவா
ரும்பர்வானோதொழச்சென றுடனுவதுமுண்மையே. (ஞ)

காளமேகநிறக்காலனேடநதகன்கருடனு
ளீளமாய்கின்றெய்தகாமனுமபட்டனனினைவுறி
னுளுந்நாதனமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுநதியேவனுநன்காங்குறிக்கொண்மினே. (ட)

வேயுதிர்முத்தொடுமெத்தயானமருப்புமிராய்ப்ப
பாய்புனல்வநதலைக்கும்பழங்காவிரித்தென்கரை
நாயிறுந்திங்களுநகூடிவந்தாடுநாகேச்சர
மேயவன்றன்னடிபோற்றியென்பார்வினைவீடுமே. (எ)

இலங்கைவேந்தன்சிரம்பத்திரட்டியெழிற்றோள்களும்
மலங்கிவீழம்மலையாலடர்த்தானிடமல்கிய
நலங்கொள்சிந்தையவர்நாடொறுநண்ணுநாகேச்சரம்
வலங்கொள்சிந்தையுடையாரிடராயினமாயுமே. (அ)

கரியமாலும்மயனும்மடியும்முடிகாண்பொணா
வெரியதாகிநிமிர்ந்தானமரும்மிடமீண்டுகா
விரியினீர்வந்தலைக்குங்கரைமேவுநாகேச்சரம்
பிரியிலாதவ்வடியார்கள்வானிற்பிரியார்களே. (கூ)

தட்டிடுக்கியுறிதூக்கியகையினர்சாக்கியர்
கட்டுரைக்கும்மொழிகொள்ளலும்வெள்ளிலங்காட்டிடை
நட்டிருட்கண்ணடமாடியநாதனாகேச்சர
மட்டிருக்கும்மலரிட்டடிவீழ்வதுவாய்மையே. (கஎ)

கந்தமாறும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுதன்
னந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேன்ஞானசம்
பந்தனுரைப்பனுவல்லிவைபத்தும்வல்லார்கள்போ
யெந்தையீசன்னிருக்கும்முலகெய்தவல்லார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆடதிகம் - கூ0.

நிருழக்கிச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையோடாடியகாரண
மாய்ந்துகொண்டாங்கறியங்கிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே. (க)

வெண்டலையோர்கலனப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்துமையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே. (உ)

மருவலார்தம்மதிலெய்ததுவும்மான்மதலையை
யுருவிலாரவ்வெரியூட்டியதும்முலகுண்டதாற்
செருவிலாரும்புலிசெங்கயலானையினன்செய்த
பொருவின்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்யும்பூசலே. (ங)

அன்னமன்னநடைச்சாயலாளோடழகெய்தவே
மின்னையன்னசடைக்கங்கையான்மேவியகாரணந்
தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினன்
